காலம் பதிமூன்று கவிதைச் சாவியும்



கலைஞர் மு. கருணாநிதி

காலப் பேழையும்
கவிதைச் சாவியும்



கலைஞர் மு. கருணாநிதி

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108

தொலைபேசி : 25267543

பதிப்பாளர் : **தமிழ்க்கனி பதிப்பகம்**
முதற்பதிப்பு : ஜூன், 2006
உரிமை : ஆசிரியர்க்கே

விலை. ரூ. **120/-**

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

காலப் பேழையும் கவிதைச் சாவியும்



காலப் பேழையும்

கவிதைச் சாவியும் – என

கவிதை தீட்டுகிறேன் ;

கதை எழுதுகிறேன் –

கற்கண்டுச் சுவையென

சொற்கொண்டு ஓவியம் பல

வரைந்து வழங்கிய நிலையொட்டி

வையம் உதிப்பதற்கு முன்னும் ; அது

வாழத் தொடங்கியதற்குப் பின்னும்

வகைப்படுத்தா வாழ்க்கை முதல்

நெறி வகுத்து மக்களின்

நேற்று, இன்று, நாளைய வாழ்வுவரை

அறிவதற்கு அவ்வப்போது

காலப் பேழையைக் கவிதைச் சாவி திறக்கும்.

மு. க.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பொது உலகம்	9
2.	படிமுறை வளர்ச்சி	11
3.	'காந்தக்கல்' கதையொன்று!	15
4.	அன்றிருந்த கற்காலம் - இனி அமையாவிடின் நற்காலம்!	19
5.	தங்க மனம் வேண்டும்; அது தந்திடும் அன்பு வேண்டும்!	24
6.	கத்தி பகைவருடையது; இரத்தம் நாம் தருவது! ...	28
7.	வரலாற்றுக் காலத்தின் கோலம்!	34
8.	நெற்றி வியர்வை உதிர; நெஞ்செலும்பு ஒடிய! ...	39
9.	உரையாடல் உணர்த்திடும் உண்மை என்ன? ...	43
10.	பழந்தமிழர் பன்னாட்டுத் தொடர்பு!	49
11.	ஆங்காங்கு அடையாள முத்திரைகள்!	53
12.	வரலாற்றுப் பூங்காவில் வள்ளித் திருமணம்!	57
13.	காரவேலன் கண்டு நடுங்கிய கட்டுக்குலையாக் கூட்டணி!	63
14.	கனக விஜயர் கல் சுமந்த வரலாறு!	67
15.	பருகிடலாம் இந்த "ஆறிய" தேநீரை!	77
16.	சுளையில் ஒன்றியிருக்கும் சுவையாக!	81
17.	உலக வரலாறு எங்கிருந்து வரைவது?	87
18.	தேய்ந்ததுபோக மிச்சத்தைத் தேடுகின்றோம்! ...	95
19.	வருந்தத்தக்க வரலாற்று நிகழ்ச்சி!	98

		பக்கம்
20.	விழினும் அவன் வெற்றித் திருமகனே!	102
21.	பண்பாட்டுக்கு ஊனம் எனில் பார்க்கவும் விரும்பார்! ...	106
22.	பிறகேன் வினா? என்பதே என் வினா!	111
23.	பெண்ணியத்தின் திண்மை கூறும் குண்டலகேசி! ...	116
24.	ஈராயிரம் ஆண்டின் முன்னே இந்தத் தமிழ் நிலம்! ...	119
25.	கலாச்சாரத்தின்மீது கண்ணகி காட்டிய அழுத்தம்! ...	123
26.	விழித்தெழுக; இதோ, செம்மொழி விடியல்!	127
27.	வழிகாட்டும் வண்ணம்; திறக்கப்படுவது திண்ணம்! ...	131
28.	பார் முழுதும் பரவிய பழம்பெரும் நாகரிகம்! ...	135
29.	தாயே, தந்திடு எமக்கு தன்மானச் செல்வங்களை ஈன்று! ...	139
30.	ஆற்றலின் அளவுகோல்; அவன் செங்கோல்!	144
31.	மாண்பு நிறை தாயும், மாசற்ற மகனும்!	147
32.	கோவூரார் கேள்வியும் குனிந்திடும் தலையும்! ...	151
33.	"செருப்பாழி எறிந்த" என்பது சிறப்புப் பட்டமா? ...	156
34.	மறையவில்லை; மறுமலர்ச்சி பெற்றது!	160
35.	உயிரினும் மேலான உயர்ந்த நட்பு!	166
36.	இளையவள்; அவள் ஒரு தமிழ் மகள்!	172
37.	அன்பால் அவனை விலை கொள்ள முடியுமா? ...	178
38.	நன்றியுடையோர் நெஞ்சில் வாழ்வோன்!	185
39.	தானாக வந்தவரல்ல; தளபதியால் கொண்டுவரப்பட்டவர்! ...	190
40.	காஞ்சி மண் காட்டிய கனிவும் கருணையும்!... ...	194
41.	பாதுகாப்போம்; பல்லவர் தலைநகரம்!	199
42.	பட்டயங்கள், பறைசாற்றுகின்றன!	203
43.	திராவிட இனத்தின் தமிழர் மரபு!	206

பக்கம்

44. இரும்புத் தூணும், ஈக்களின் இறகும்! 210

45. தந்தை இராசராசனும், சிந்தை கவர்ந்த செல்வனும்! ... 215

46. முன்மாதிரியாகத் திகழ்ந்த மும்முடிச் சோழன் 219

47. அந்த வருங்காலமே; அருங்காலமாகும்! 225

48. அழியாத சிற்பக் கலையும், அழகிய
ஓவியக் கலையும்! ... 235

49. களம் பல கண்டனர்; கடற்போரிலும் வென்றனர்! ... 240

50. குருதிக் களமே! கொலு மண்டபம் ஆனது! 245

51. திருமணங்களாலும் வருவதுண்டு திருப்பம்! 251

52. படையெடுப்பை முன்கூட்டியே
அறிவிக்கும் பண்பாடு! ... 256

53. கடற்கோளில் தப்பிய தமிழ்; கடைச் சங்கம்
கண்டது! 262

54. தலையாலங்கானத்துச் செரு வென்றான்! 270

55. நெடுஞ்செழியனும் நெடுநல்வாடையும்! 276

56. பற்று கடந்தால், பற்றி எரியும் வெறியே! 284

57. உவமை அழகுக்கு உரிய பரிசு என்னவாம்! 288

58. பகை வாள் முனை மழுங்க; நாள்
எல்லாம் உழைப்போம் ... 295

காலப் பேழையும்,
கவிதைச் சாவியும்

– கலைஞர் மு. கருணாநிதி

பொது உலகம்

வெளி! வெளி! வெளி!
யாரும் பார்க்காமல் –

பார்க்க முடியாமல் ;
பார்த்திட யாருமே இல்லாமல்

பரவிக் கிடக்கும் வெளி!
ஒளி வந்தது முதலில் –

எந்தத் திசையில் ?
தெரியாது ; தெரியவே தெரியாது.

வந்த திசைக்குத்தான் வழங்கினோம் பெயரை!
வணங்குகிறோம் திசையை!

வெளியையும் கண்டதில்லை
ஒளியையும் பார்த்ததில்லை

நாமே இல்லாத போது
நமக்கேது பார்க்கும் சக்தி ?

பாழ் வெளியில் பற்பல ஒலிகள்!
பற்பல நேரங்களில்!

யாரும் கேட்காமல் ;
கேட்க முடியாமல்

கேட்க யாருமே இல்லாமல்!

பல கோடி இடிகள்
ஒரு கோடியில் இடித்திட

சிவப்புக் கோள்
நெருப்புப் பந்துகள்

சீறிப் பாய்ந்து
சிதறிப் பறந்தன.

ஒன்பது பத்து கோள் இருக்குமென்பார்
ஒன்றிரண்டு கூடவும் இருக்கலாம்

உலகம், அவற்றில் ஒன்றென உற்பத்தியானது ;
கலகமும் பிறகே ஆரம்பமானது!

இது எதுவுமே அப்போது தெரியாது ;
எத்தனையோ கோடி ஆண்டு கழித்தே ;

தண்ணீர் கேட்டது தாகமெடுத்த உலகம்!
கண்ணீர் கொட்டியது 'இல்லை' என இயற்கை

மழை அதுவென பெயர் மாற்றிச் சொல்லி
மன ஆறுதல் பெற்றது பூமி!

உடற் கொதிப்பை ஆற்றிக் கொண்டு
கடற் பரப்பாய் மழை நீரும் தேக்கியது.

நீர், நிலம், காற்று, விண்வெளி
நெருப்பு – ஐம்பெரும் பூதங்களிடையே ;

நித்தமும் பகையாம் ; நிலையான உறவாம்.
முத்தமிடாமலே உயிரினம் புதுப் புது வரவாம்

அதிலும் மாறுதல் அவற்றுள் மாறுதல்
புதிதாய்க் கண்டு புணர்வும் கொண்டு

புழு, பூச்சி, புள்ளினப் பெருக்கம்
பொல்லா விலங்குக் கூட்டம் –
பொறுமை நிறை வீட்டுப் பிராணிகள் கோட்டம்
பொலிவு மிகும் பரிணாம வளர்ச்சியில் நாட்டம்.

குரங்கிலிருந்து மெதுவா மெதுவா குதித்த மனிதர் நாம் –
அரங்கில் நின்று கொள்கைக் குரல் கொடுத்திடுவோம் ;

"உடைமை பொது – உரிமை பொது ;
உலகம் தனியார் சொத்து எனல் தீது!"

படிமுறை வளர்ச்சி

வாழும் இந்த உலகின் வயது
அய்நூறு கோடி ஆண்டுகளாம்

நாகரிக வளர்ச்சி அடிப்படையிலும்
நானில உயிர் இனப் படிமுறைக் கணக்கிலும்

அய்ந்து லட்சம் ஆண்டு முதல்
அதனையொட்டிப் பத்தாயிரம் ஆண்டு வரை

கி.மு. காலம் எனப் பிரித்துப் பார்த்து ;
கிழப் புலிகள் நம் முன்னோர்கள்

இதனைத் தான் இலெமூரியா காலமென்றார்...
எஞ்சிய காலந்தான் குமரிக் கண்டம்,

தோற்றுவித்த நாகரிகத்துடன்
சிந்துப் பெருவெளியில் மக்கள்

ஏற்றிருந்த சிறப்புமிகு நாகரிகக் காலமாகும்.
மாற்றுக் கருத்தேதும் இல்லாத காரணத்தால் – பத்தரை

மாற்றுக் கருத்து இதுதான் என
மனத்தில் பதித்துக் கொண்டால் ;

எண்பது கோடி ஆண்டுக்கு முன்பு
இவ்வுலகில் உயிர் தோன்றியதையும்

நாற்பது லட்சம் ஆண்டின் முன்னே
நடந்தான் தரையில் நம் குரங்கு மனிதன் என்பதையும்

வரைந்து காட்டும் வரலாற்றுப் பேரறிஞர் குறிப்புக்களை
வரிக்கு வரி ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

அய்ந்து லட்சம் ஆண்டின் முன்னே
அவதரித்த காலமே முதற் கற்காலம்!

அய்ம்பதினாயிரம் ஆண்டுக்கு முன்பே
அழகிய ; குமரி கண்ட நாகரிகம் ;

அதுதான் குமரிக் கண்ட நாகரிகம்!
அரும்பியது அங்கே – எனினும்

ஐயாயிரம் ஆண்டுக்கு முன்பு வரை அது ;
சிரித்துச் செழித்திருந்தது சிந்து வெளியில்!

இலெமூரியா கண்டமென
இனிய நம் குமரிக் கண்டத்துக்கு ;

இன்னொரு பெயர் வாய்த்த காரணம் என்னே ?
இரவில் இரை தேடக் கிளம்பும் இலமூர் குரங்கினம் ;

இக்கண்டத்தில் எங்கும் நிறைந்திருந்த காட்சி கண்டு
இரவில் திரியும் பேய் என்பதற்கு இலத்தீன் மொழியில்

‘இலமூர்’ என்றும் பெயர் இருந்ததாலே
இப்பெயராலே ‘கிளேட்டர்’ என்பவர் கிண்டலாய் அழைத்தார்.

ஒருவேளை உருமாறிச் சீரழியும் அளவுக்குப்
பெருங்குமரிக் கண்டத்தைப் பேயாட்டம் நடத்திக் குறுக்கி

நிலம் புடை பெயர்த்ததாலே நீலியே இனி உனக்கு
இலெமூரியா எனும் பெயரே ஏகப் பொருத்தமென

இட்டனரோ வரலாற்றுப் பேராசிரியப் பெருமக்கள் ;
எனவோர் ஐயப்பாடும் எனக்கு உண்டு என்பேன்!

இவற்றையெல்லாம் இன உணர்வுப் பாவாணர்
தேவநேயர் தெளிந்துரைத்த வரலாற்று வழி நின்று

இனிய நண்பர் பன்மொழி அறிஞர் இரா. மதிவாணர்
எழுபத்தி ஐந்தாம் ஆண்டு எனக்கென வழங்கிய
“இலெமூரியா முதல் அரப்பா வரை” என்ற
ஏற்றமிகு புத்தகத்தின் துணைக் கொண்டும் – இராகுல

சாங்கிருத்தியாயன் எழுத்துக்களின் பின்னணியுடனும் ;
சரித்திரப் புதையல்கள் பலவற்றை ஆய்ந்தறிந்தும் –

சாறு பிழிந்து தருகின்றேன் கவிதை நடைத் தொடர் காவியம்
மாறுபடும் கருத்துடையோர் மடல் மூலம் தெரிவித்திடின்
மகிழ்வேன் ; புகழ்வேன் !

மாற்றம் எதுவும் மறுநாள் விடிந்ததும் வந்திடவில்லை
மாந்தக் குரங்கினம் எழுந்து நிற்கவே ;

மாமங்க காலம் ஒன்றிரண்டு பல கோடி வரவேண்டியிருந்தது.
மனிதனாய்க் குரங்கு மாறிட மாநாடு போட்டுத் தீர்மானம்
நிறைவேற்றினால் போதுமா ?

பரிணாம வளர்ச்சி என்பது பல்லாயிரம் ஆண்டுகள்
பட்டறையில் வைத்து உளியொன்றை உடை வாளாக்குவதன்றோ ?

இலெமூர் குரங்குகளுக்கு பற்கள் முப்பத்தி ஆறு
இதற்கடுத்துத் தோன்றிய குரங்கிற்கு முப்பத்தி நாலு –

மணிக் கணக்கில் மாறி விட்ட பல் எண்ணிக்கையல்ல – அந்த
எண்ணிக்கை மாற்றத்துக்கே இடையில் எத்தனையோ
நூற்றாண்டு !

கற்கால மனிதர்க்கு பற்கள் முப்பத்தி இரண்டென முளைத்துளதும் ;
பிற்காலத்தில் இருபத்தி எட்டேதான் என மாறிவிடும் என்கின்றார்.

வாலுான்றி நின்ற வானரப் பிராணி
காலுான்றி நிற்பதற்கும் நடப்பதற்கும்

ஒலிம்பிக் தட களத்தில் ஓடுகின்ற
மனிதப் பிராணி ஆவதற்கும்

இடையில் ஓடியது ; எத்தனை ஆயிரம் நூற்றாண்டு –
இதற்குப் பெயர்தானே படிமுறை வளர்ச்சி என்றும்,
பரிணாம வளர்ச்சி என்றும் பகிர்ந்திடுவர்.

(படிமுறை வளர்ச்சி = **Evolution**)

'காந்தக்கல்' கதையொன்று!

பழம் பெரும் நாகரிகத்தின்
தொட்டில்கள் என சுட்டிக் காட்டப்படும்

எகிப்து, மாயா, மொசபதேமியா
அவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு

எடுத்த எடுப்பிலேயே
சிந்துவெளி நாகரிகம்

கண் சிமிட்டிக் கவருவதால்
கருநிலை அதற்கெங்கே யென்று

கடும் ஆய்வு நடத்தியவர்கள்
கடலுள் மூழ்கிய குமரிக் கண்டப் பகுதியைக்

கண்டு பிடித்துக் 'கருவூர்' அதுதான் எனக்
கழறுகின்றார் ; நாமும் காணுகின்றோம்.

மலைப்பு விளைக்கும் கேள்வியொன்றை
மதிவாணர் எழுப்பி விடையும் கூறுகின்றார்.

குரங்கிலிருந்து மாந்தன் தோன்றியதாய்ப்
பரிணாம வளர்ச்சி பகர்கிறதே ;

இன்றுள்ள குரங்குகள் ஏன்
அன்று போல் மாந்தராய் மாறவில்லை ?

சிறிய செடி பெருமரமாய் வளரும்போது
உச்சக் கிளை மட்டுமே உயர்ந்து கொண்டே போகும்

பக்கக் கிளைகள் நாம் பார்த்த இடத்திலேயே
நிற்கும் நிலை போலவே

படி முறை யெனும்
பரிணாம வளர்ச்சியும்

பாடமாய் அமைகிறது
பகுத்தறிந்து பதில் தருகிறது.

மிதித்துக் குழைத்த சேறு ; நாம்
மதித்துக் காத்திடும் சுவராய் மாறுது!

குழைத்த இடத்தில் கிடக்கும் சேறு ;
குட்டிச் சுவரென்றுகூடப் பெறுவதில்லை பேறு –

குரங்கினமும் அப்படித்தான்
கொலுவேறிக் குந்துகின்ற

மனித இனமாக ஒரு பக்கம் உயர்ந்தாலும்
மண்ணிலே குழைத்த சேறு மிச்சமாக

மண் மீதே கிடப்பது போல
மனிதரிடை மாந்தக் குரங்கும் இருக்கும்.

மாளிகை யொன்றை எழுப்புதற்கு முன்பு
மண் குடைந்து அடித்தளம் அமைத்திடல் வேண்டுமன்றோ!

அறிஞர் இராகுல சாங்கிருத்தியாயன்
அப்படித் திட்டமிட்டு ஆதிகாலத்து வரலாற்றை

அரிச்சுவடியில் துவங்காமல் ; ஆறாயிரம்
ஆண்டுக்கு முன்பிருந்து துவங்கியதே

வால்காவிலிருந்து கங்கை வரை எனும்
இருபது கதைகளடங்கிய எண்ணக் கருவூலமாம்.

இப்படிப் பலரும் எழுதிய கருத்துகள், கதைகள்,
ஒப்பிலாக் கற்பனைகள் ஒன்றாகத் தொகுத்தளிக்கும்

முயற்சியிலே முனைந்து நின்று முந்தை நாள் தொட்டு ; சில
முத்தாரக் கதைகள் சொல்லி ;

அயர்ச்சியிலே உமை ஆழ்த்தாமல்
அழைத்துச் செல்கின்றேன் என்னோடு பயணம் வாரீர்!

காலடி பெயர்ந்தவுடன் அடுத்த நொடியில்
காலப் பேழை கண்ணுக்குத் தெரியுமென்றும்

கவிதைச் சாவியிட்டுத் திறந்து பார்க்கலாமென்றும்
கனவில் மிதந்து கொண்டு என்னோடு வாராதீர் –

அள்ளிப் பருகி ஆட்டம் போடலாம் கங்கை காவிரி நீரையென்று
துள்ளிக் குதிக்காதீர் – பின்னர் துவண்டு போகாதீர்!

நாகரிகம் நடை பயிலத் தொடங்கிய தாழ்வாரம்
நமது குமரிக் கண்டமென்பதற்கு உண்டு பல ஆதாரம்!

அதனால்தான் இந்திய நாட்டு வரலாற்றைக் கூட
கங்கைக் கரையிலிருந்து எழுதாமல் ;

காவிரிக் கரையில் தொடங்குவதே பொருத்தமென
வின்சென்ட் ஸ்மித் சொன்னதை விளக்கிக் காட்டிய அண்ணா

“ஆற்றோரம்” என்ற தலைப்பில் ஆற்றிய உரையின்
அழகை மட்டும் சுவைத்தால் போதுமா ? அந்தச்

சூடும் சொரணையும் அகலாதிருக்கத் தமிழனுக்குச்
சுயமரியாதை உணர்வு தலை தூக்கிட வேண்டாமா ?

காட்டுமிராண்டியாக மனிதன் வாழ்ந்தது உண்டு –
காட்டுவது தவறென்று தெரியாமல் முழு உடலைக் காட்டியே

ஆண் பெண் இருபாலார் வாழ்ந்த கற்காலம் இருந்ததும் உண்டு –
அபிநய மூலமே அவரவர் எண்ணம் அறிவித்ததும் கண்டு –

ஆதி மனிதனின் ஆரம்ப மொழி நாடக மொழி யென்றும்
அடுத்த கட்டம் அவன் இசை மொழி பேசத்
தொடங்கினானென்றும்

இயல் என்பது இவற்றுக்கு அடுத்ததே யென்றும்
இன்றைக்கு இயல் இசை நாடகமெனப் பட்டியலிட்டாலும் ;

அன்றைக்கு நாடகமே முதலிடம் பெற்று எண்ணத்தை வெளியிட்டு
என்றைக்கும் இசைக்கு இரண்டாம் இடமேயென வரிசை பெற்று
இயல் என்பது முந்திக் கொண்டு முதலிடம் பெற்றதே மொழி
வரலாறாகும்!
இதில் கூத்து மொழி மட்டுமே இருந்த காலமாம் –

இருண்டகாலமாய்த் திகழ்ந்த ;
கடந்த காலமாம் கற்காலத்து

மாந்தர் நிலை மறைக்காமல் தொடர்ந்து
‘காந்தக் கல்’ கதையொன்று சொல்லுகின்றேன்.

அன்றிருந்த கற்காலம் -
இனி அமையாவிடின் நற்காலம்!

“மாந்தக் குரங்கு
குரங்கு மாந்தன் என

மாறி வரும் பரிணாம வளர்ச்சி வழியில்
மகிழ்ச்சியுடன் வரவேற்கும் மாறுதலாய்

நிமிர்ந்து நடந்த குரங்கு மனிதன்
நியாண்டர்தால் மாந்தன் என

நீண்ட வரலாற்றில் நெடிய தொலைவு
தாண்டி வந்தவனைத் தரம் பிரித்துக்

கற்கால மனிதன், பொற்கால மனிதன்,
செம்புக்கால, வெண்கலக் கால மனிதன் – என

இனம் வகுத்துச் சீர்படுத்தி
இரும்புக் கால மனிதன் வரை

இட்டுக் கட்டி எழுதலாம் பல கதைகள்!
இருப்பதை வைத்துத் தான்,

மறைப்பதை முடிந்த வரை மறைத்து நான் –
மன்றத்தில் ஆட வந்துள்ளேன் ; பேனா நர்த்தனம்”

பேசிக் கொண்டே இவ்வாறு பீடு நடைபோட்டுப்
பெருமிதம் பொங்கிடப் பேனாவின் மூடி திறந்தார்.

சொக்க வைக்கும் எழுத்துக்குச் சொந்தக்காரர்
சொன்மழை பொழிகின்றார் நனையுங்கள்!

காலம் கி.மு. ஆறாயிரம் என்று கணக்கிட்டுக் கொண்டு – அன்று,
ஞாலம் பெற்றிருந்த நாகரிக ஞானம் கருதிப் பார்ப்போம்!

"வால்கா" எனும் வரலாற்றுப் பின்னணியின் முதல் கதையில்
வாய் திறந்து பேசுகின்ற பாத்திரங்கள் ; என் கதையினில்
பேசமாட்டார் –
காரணம் ; கற்காலத்து மனிதர்கள் பேச்சாற்றல் பெறவில்லை
என்பதுதான்!
காலம் பல கடந்தால்தான் கடுகளவுப் பேசிப் பின்னர் கடல்
அளவுமுழங்கிடுவர்!

இதயங் கவர் எழுத்தாளர் இராகுலர் கண்ட
உதய சூரியனைத்தான் நானும் கண்டேன்

நான் பெறும் இன்பம் என் நண்பனும் பெற்றிட
நடந்திடுக நண்பா என்னோ டென்றேன்.

இருவருமே இணைந்து சென்றோம் ;
எதிர்வரும் ஒரு பெண்ணைக் கண்டோம்.

புதிர் ஒன்றும் நான் போடவில்லை ;
புடவையேதும் அவள் உடலில் இல்லை.

புலித் தோலோ, நரித்தோலோ கூட – அவள்
பொன் மேனி மறைக்கவில்லை.

கிளி மூக்கு அவளுக்கு ;
கிலி நோக்கு எங்களுக்கு!

உடையேதும் அணியாத தேன்?
தடையேதும் விதித்ததோ இடை?

நடை வேகம் காட்டுகின்ற பெண்ணே
விடை யென்ன சொல்லுவாய் கண்ணே – என

வினவிடத்தான் விரைந்து சென்றேன் ; அவள்
சினமுற்று சிலையொன்று செல்வதுபோல் சென்று விட்டாள்.

சென்றவளைப் பின்தொடர்ந்து
செங்குத்தாய் நின்ற பாறை யொன்றில்

ஒளிந்திருந்து உற்றுப் பார்த்தோம்
ஓடு வேயாத் திறந்த வீடு

ஒரு மறைவு மில்லாமல் வாழும் கூடு
திரை மறைவு கட்டக் கூடத் தெரியாத குப்பைக்காடு!

வளைந்து செல்லும் வீதியிலே குமரி ; அவ்வீடு நுழைந்து
குனிந்து நிமிர்ந்தாள் கூர் மார்பு குலுங்கி நிற்க!

விளைந்து வந்த கரும்புக்குத் துதிக்கை நீட்டி, மிக
விரைவாகப் பசி தீர்த்துக் கொள்ள பதற்றம் காட்டி,

ஆனைகள் மூன்று வாய் பிளந்து நிற்கின்ற விதமாக,
ஆடவர் மூவர் அவளைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்.

பாவையின் பரட்டைத் தலையைப்
பாசமுடன் தடவிக் கொடுத்தான் ஒருவன்! தடவிக்

கொடுத்தவனைத் தடுத்து நிறுத்திக்
கெடுத்து விடாதே கிடைத்த வாய்ப்பை யெனக் –

கோபத்தைச் சைகையால் உணர்த்தி ; இப்போதென்
தாபத்தைத் தீரடியென்று அவளிடம் வலியுறுத்தி ;

இஞ்சி இடுப்பழகை இறுகப் பற்றி அணைத்துக் கொண்டான்
வஞ்சி அவளும் துவண்டு கொடுத்தாள் அல்லித் தண்டாக!

வாழைப் பூ மொட்டுதனை வலியக் கொடுத்துவிட்டு ; அதனைக்
கோழையின் கையில் கொடுத்தகூர்வாளென ஆக்கிவிட்டாள்

வகை தெரியா மண்டூகமென அவனை சைகையினால் ஏசி விட்டு ;
வகையறிந்த மூன்றாமவன் ; அவனை விரட்டி விட்டு,

அவளையும் வேட்டையாடி விளையாடித் தீர்த்து விட்டான்.....
அத்தனையும் நண்பர் இருவரும் வேடிக்கை பார்த்திருந்தோம்...

காட்டுமிராண்டித்தனமான காட்சிதான் எனினும் ;
கற்புக்குப் புனித இலக்கணம் சொல்கின்ற இந்தக் காலத்திலும்

கற்கால நாகரிகத்தைக் கடைப்பிடிப்போர் உண்டு ; அவரெல்லாம்
கடைவாய்ப் பற்களைப் போல் ஒளிந்திருந்து காரியம் சாதிப்போர்.

பச்சையாக எதுவும் பேசுவோராயினும் ;
பதுங்கிப் பாய்ந்து பலனடையும் பேர்வழிகளாயினும் ;

மிச்சம் சிறிது மனச்சாட்சி வைத்திருந்தால்
அச்சமின்றி அவை நடுவே ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார் –

ஆறாயிரம் ஆண்டின் முன்னே அமைந்திருந்த கற்காலம்
அடுத்து வரும் ஆண்டிலேயும் அமையாதிருப்பதே நற்காலம்!

முத்தனைய பெண்மணியுடன் மூவருலா
எத்தனை முறை நடந்ததெனக் கணக்கில்லை
சத்தெல்லாம் இழந்து மங்கை சவமாக ஆவதற்கும் வழக்கில்லை
சமுதாயத்தில் அதற்கும் ஒப்புதல் சான்றிதழ் தருவதாலே ;
கண்ணியம் கெடுவதற்குக் கணக்கு வழக்கே இல்லை!
புண்ணியம் உண்டு உமக்கு ; புழு புழுத்தப் ‘‘புரட்சிப்’’
பேச்செல்லாம் இங்கு வேண்டாமே!

கற்பு நிலை இருபாலார்க்கும் பொதுவில் வைக்கும் புத்தி
பெறுவோமே ;
அற்பரென்று மக்கள் நினைத்திட யாரும் கத்தி தீட்ட வேண்டாமே!

பெரியாரும் அண்ணாவும் பாரதியும்
பெண்ணுக்குப் பேசப்படும் கற்பு

ஆணுக்கும் பேசப்பட வேண்டுமெனப்
பெரும் புயலாய் வீசினரே தவிர ;

கற்பைப் பற்றி இரு பாலாரும்
கவலைப்படக் கூடாதென்றா கட்டளை பிறப்பித்தார்கள் ?

இப்படிக்
கருத்தாய்வு நடத்திய இரு நண்பர்களும் ;
கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்

ஆண் பெண் சமத்துவமென்றால்
ஆலகால விஷத்தில் இருவர்க்கும் சம பங்கு அளிப்பதல்ல ;

அமுதத்தைத்தான் அப்படிப் பகிர்ந்து கொள்ள வேண்டும்
அமரர்க்கு அமுதமும் ; அசுரர்க்கு விஷமும் எனும் தீர்ப்பு ;

புராண காலத்துப் பொருந்தாத் தீர்ப்பு ; அந்தத்
தீர்ப்பை அறவே ஏற்காது புரட்சியில் பூத்த புதிய வார்ப்பு!

விவாதமெல்லாம் முடிந்து திரும்புகையில்
இரு நண்பரில் ஒரு நண்பன் கேட்டான் ;

“ஆமாம் ; அந்தப் பெண்ணின் பெயரென்ன ?”

“அவள்தான் பேசாதவளாயிற்றே
நடந்த தெல்லாம் நாடக மொழிதானே நண்பா – நம்

ஆசைக்காக ஒரு பெயரை வைத்துக் கொள்ளலாம்
கற்காலத்து நாடகம் நாம் கண்டதாலே ; ஆண்களைக்

கவர்ந்து அவள் இழுத்துக் கொண்டதாலே
இரும்புக் காலம்தான் இனி வரப் போகிறதென்பதாலே – இரும்பை
இழுத்துக் கொள்ளும் “காந்தக்கல்’’ என்று இவளுக்குப்
பெயரிடுவோம் ; முதலில் இந்த இடம் விட்டுப்
பெயர்ந்திடுவோம்’’ என்றான் அந்த நண்பன்!

(நியாண்டர்தால் பள்ளத்தாக்கில் வாழ்ந்தவன் நியாண்டர்தால் மாந்தன் என்று அழைக்கப்பட்டான்)

தங்க மனம் வேண்டும்;
அது தந்திடும் அன்பு வேண்டும்!

இன்றைக்கு ஏடெடுத்து
எழுதுகோலில் மை நிறைத்து

அன்றைக்கு ஆறாயிரம் ஆண்டின் முன்னே
ஆதி மனிதன் வாழ்ந்த நிலை

அவன் உண்டது, உறங்கியது, உய்த்தது அத்தனையும்
அற்புதமாய்த் தீட்டிக் காட்டுகின்றோம்.

ஆயிரம் வசதி வாய்ப்புகளைத் துணையாக
அழைத்துக் கொண்டு ஆய்வு செய்கின்றோம் ;

அதன் முடிவுகளை எளிதாக அறிவித்து விடுகின்றோம்.
ஆனால் அய்யன் வள்ளுவர்க்கு மூத்த தொல்காப்பியர்

இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பே
இயற்றியது தொல்காப்பியத்தை எழுத்தாணி கொண்டன்றோ ?

ஓலையில் படைத்திட்ட ஒப்பற்ற அந்த வாழ்க்கை இலக்கணம்
ஓரறிவுள்ள உயிர், உடம்பினால் அறியுமெனத் தொடங்கி,

ஆறறிவு என்பது மனத்தால் அறியக் கூடியது என முடித்து –
அத்தனை வகை உயிர்களையும் எத்தனை அறிவு படைத்தவை
என விளக்கும்

மகத்தான காவியத்தை வாழ்விலக்கண ஓவியத்தை
மரஞ்செடி கொடி துவங்கி மனித வரலாறு கூறும் பாவியத்தை –
இந்த

மண்ணிலோர் மலை ; மலையிலோர் சிகரம் ; என
மாசு மருவற்ற மரபிலக்கணம் தந்தவரை,

மண்டியிட்டுத் தொழுது வணங்குவது ; மனித வரலாறு வரைதற்கு மத்தியிலே ஆற்ற வேண்டிய மாபெருங் கடமை என்பேன் !

ஆறாயிரம் ஆண்டின் முன்னே மனிதன் ஆடையின்றி,
அறுசுவை உணவு தயாரிக்கும் ஆற்றலின்றி,
அன்பு காதல் பாசம் கடமை என்ற உணர்வின்றி,
என்புதோல் போர்த்த உடம்புகளிடை உறவு முறையின்றி,

பண்பு, ஒழுக்கமிவை பற்றி யெண்ணிடும் பழக்கமின்றி
கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்

காடுமேடு சுற்றித் திரிந்தான்
ஆடு மாடு நட்பும் கொண்டான்.

பசியெடுக்கும் போதெல்லாம் பாதையில் பார்த்ததைப்
பறிப்பதும் – பறித்ததைப் புசிப்பதும் – பழகிக் கொண்டது போல்
‘காந்தக் கல்லை’ அவன் கண்டாலும், அந்தக் கல்லே
பாந்தமுடன் அவன் பக்கம் வந்தாலும்

ஆந்தையும் கோட்டானும் போல்
ஆனமட்டும் அவரவர் இரையை அவரவர் தேடிக் கொள்வர்.

அதன் பின்னர் இவர் யாரோ ? அவர் யாரோ ? .....
அவதரிக்கப் போவதற்கு யார் பாடுவார் ஆராரோ ? .....

அப்படித்தான் இராகுல சாங்கிருத்தியாயன் கதையொன்றில்
அழகு மோகினி திவாவும், ஆசைக் காதலன் சூர் என்பானும்
அணைத்து மகிழ்ந்து இதழ் கடித்து தமை மறந்து கிடக்கும்போது ;
அன்பனே ; நீ என் அன்னையின் மகன் ! அப்படியிருந்தும் உன்னை நான்

இதுவரை நெருங்காமல் இருந்தமைக்கு மன்னித்து விடு என்கிறாள்.
இனி நீ என்பால் வெட்கப்படாதிரு, போதுமென்கிறான் ; பின்னர் அவர்கள்

வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய்
வீணையும் நாதமும் ஆகி விட்டார் –

விலகிச் சென்று பிறகு வேறு வேறு
வீணை மீட்ட இருவரும் ஓடிவிட்டார் –

வரை முறையின்றி வழுக்கிடும் வாழ்க்கை
வாய் மொழியில்லா சைகைக் காலத்து வாடிக்கை –

வேண்டாம் என்பதையும் கூடாது என்பதையும்
விரும்பிட முடியாதென்பதையும் முகக்குறியால் காட்டுகின்ற

அபிநயக் கூத்துமொழியே அந்நாள் பேச்சுமொழியாம்
அதன் பின்னர் வார்த்தை மொழி ஒலியெழுப்ப ஒரு வரலாறே
உண்டு

அடிபட்டால் "ஆ!" "ஊ!" என்று கத்துவதும் –
அதி தொலைவில் இருப்பவரை "வா" என்று அழைப்பதுமே ;

அச்சத்தில் பதறிப் போய் 'அய்யோ' என்றலறுவதும் –
ஆனந்த மிகுதியால் "ஆவ்" என்று சிரிப்பதுமே –

இரண்டாம் இடத்தைப் பெற்று, இசை ஒலி ஆயிற்றென்றால்
இயல், இசை, கூத்துதானே அனைத்துமொழிக்கும் அடிப்படை
இலக்கணமாம்.

அடி நாக்கின் ஆதிக்கம் தான் நாளடைவில்
அபிநய மொழியினையும் துறையில்லா அமைச்சராக்கி

'யாகா வாராயினும் நா காக்க' எனும் அய்யன் ஆணைக்கேற்ப
அதிபராம் நாவரசுக்கு அதிரடிப்படை காவல் அமைத்ததாம் –

நாகரீக மேன்மைக்கு வழிவகுத்த நா பேசத் தொடங்கிடவே
நாற்பதாயிரம் ஆண்டுக்கு முன் விளைந்த முன்னேற்றந்தான்
காரணமாம்.

பச்சையாக இறைச்சியினைப் பசி போக்கத் தின்ற மனிதன் –
சுவைத்துண்ண
இச்சை கொண்டு சமைத்துண்ணத் தீ மூட்டக் கற்றுக்
கொண்டான்.

வேட்டையாடி விலங்குகளைக் கொன்றால்தானே வயிற்றுப்
பாட்டை சமாளிக்க வழி காண முடியும் – அந்த வேட்டையிலும்

போட்டி, பொறாமை, போர் என்று புதுப்புது பிரச்சினைகள் – நம்
பாட்டி, முப்பாட்டி காலத்தில் முளைத்த இம்மோதுதல்கள் – இன்று
பேத்தி, பேரர் காலத்திலும் நின்றபாடில்லை....
ஆத்தி சூடி கூறும் 'ஆறுவது சினம்' என்ற

அறிவுரை எவர் காதிலும் ஏறுவதில்லை ;
அது ஏனோ தெரியவுமில்லை.

பகை வாழ்க்கையைப் பழகி விட்ட
இக்கால மனிதர்களை விடவும் ;

குகை வாழ்க்கையில் நாகரிகமற்று நடமாடிய
அக்கால மனிதர்கள் எவ்வளவோ மேல் என்று ;

எண்ணுகின்ற நிலைமை
ஏற்படாதிருப்பதற்கு ;

மண்ணுக்கு இருக்கின்ற தங்கமனம்
பெண்ணுக்கும் ஆணுக்கும்

பெரிதாய் வேண்டும் ; அது
அரிதாய்க் கிடைக்கும்.

அன்பைப் படைக்கும் –
அமைதியை விளைக்கும்!

அடுத்தொரு கதை கிளைக்கும் ;
அதற்கான விதை நாளை முளைக்கும்!

கத்தி பகைவருடையது ; இரத்தம் நாம் தருவது !

கற்காலத்து மனிதன், புதிது புதிதாகப் பலவற்றைக்
கற்க விரும்பினானோ இல்லையோ ;

தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டி விடுவது போல்
தானே முன்வந்து இயற்கை ; அவனுக்குப் பலவற்றைக் கற்றுத்
தந்தது.

உணவுக்காக மிருகத்தைக் கொன்று அதன் இறைச்சியைத் தின்று
உரித்த தோலை ஆடையாக மனிதன் உடுத்திக் கொண்டது ;

உண்மையில் அவன் மூளை விடுத்த ஆணையின் விளைவு தானே!
வண்மையுடன் அவன் வாழ்வதற்குரிய கருவிகள் செய்து
கொள்ள ;

இரும்பையும் கல்லையும் எடுத்துக் கொள் என்றதும் இயற்கையின்
கனிவுதானே! ஒரு
துரும்பையும் கிள்ளிப் போடாமல், தொந்தியைப் பெருக்க வைத்து,

வரும்படி கொட்டிக் கொண்டு வாழ்கின்ற நில ஆதிக்க சொர்க்கம் –
அழும்படி ஆக்குதற்கு ஆர்த்தெழும் ஏழைத் தொழிலாளர் வர்க்கம் ;

அன்றில்லை இன்றுண்டென்றால் அதற்குக் காரணம் ; இங்கு
அடிமை நிலை தகர்க்கின்ற அறிவுப் புரட்சி முழக்கம்
ஒலிப்பதன்றோ!

ஏன் ? எதற்காக ? எப்படி ? எனக்கேட்ட ஏழைபாழையிடம் ;
எல்லாமே கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்ட மீதிலே –

கடவுள் என்ற கட்டறுத்துத் தொழிலுளாரை ஏவுக எனக்
கவி மன்னாதி மன்னன் பாரதிதாசன் படை முரசு கொட்டியதால் ;

கனிவும் பணிவும் காணுகிறோம் கனதனவான்கள் மாளிகையில்!
கருணையும் பண்பாடும் கற்காலத் தொடக்கத்தில் காணமுடியாக்
காரணத்தால் ;

களம் அமைத்துப் போரிட்டார் ; காடுகளில், மலை மேடுகளில்!
பொற்காலம் மேலென்றாலும் பொல்லாத சீமான்கள் பூமான்கள்
ஆதரவை,

பூதக் கண்ணாடி கொண்டுதான் பார்க்க வேண்டும் ; அதிலும்
வேதக் கண்ணாடி அணிந்தோர் விழிகளுக்கு
வியர்வைத் துளிகள் மட்டும் தெரியவே தெரியாது.

விழாக்கள், வேடிக்கைகள், விதவிதமான கேளிக்கைகள் என்று
வேற்றுமையில் ஒற்றுமை கண்டிருந்த நிலை மாறி,

வேறுபாடும் மாறுபாடும் வேகமாக வளர்ந்து விட்டபடியால்
விரோத உணர்வு வேர் விட்டு விஷத் தருவாய் விழுதும் விட்டு

வெட்டிக் கொண்டும், கற்களால் முட்டிக் கொண்டும்
பட்டியல்படி நூற்றுக் கணக்கில் பலியாகி – இரு தரப்பு

உடைமைகள் அனைத்துமே பயன்படுத்த வழியின்றிப் பாழாகிப்
'போனதங்கே
மடைமை இருளில் இரு தரப்பு வீரர்களில் எஞ்சி நின்றோர் ;

மரண விளக்கு ஏற்றி வைத்து மண்டியிட்டு மண்ணைத் தொட்டு
மவுன அஞ்சலி செலுத்தலானார் வீர மரணத் தியாகிகளுக்கு!

இதனை நான் எழுதிக் கொண்டிருக்கும்போது
பல முறையும் படித்த பண்டித நேருவின்

உலக சரித்திரப் புத்தகத்தின் ஒரு பகுதி ;
நெஞ்சில் நிழலாடி பல நினைவுகளைத் தூண்டியது.

இதோ ; நேரு கூறுகிறார் :–

"சரித்திரத்தைக் கூர்ந்து கவனித்தால்
இவ்வுலகம் ;
"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்'' – வளர்ந்து மாறி வருகிற
பரிணாம வளர்ச்சி முறையை அறியலாம்''

மாணிக்க வாசகரின் திருவாசகத்தையே ஆதாரம் காட்டி
அழைத்திடுகிறார் சாட்சிக்கு ;

ஆசியாவின் ஜோதி – பண்டித நேரு – என்பதுடன்
அவரே மனிதனின் பகுத்தறிவு வல்லமையைப்
பாராட்டி விட்டு ; அதே நூலில்,

"உலக யுத்தத்தில் கண்டது போல்
ஒன்றுபட்ட சகோதரர்கள் ஒருவரை
யொருவர் அழித்துக் கொள்வதே
முன்னேற்றமென்றால் அந்த
முன்னேற்றத்தில் அடிப்படைத் தவறு
ஏதோ இருக்கிறது'' – என்று
கூறிடும் அவர்போன்றார் கவலை தீர்க்க
என்னதான் மருந்து?''

மருந்துக் கிண்ணம் எடுத்துக் கொண்டு
மங்கை யொருத்தி அங்கே வந்தாள் –

கறாராகச் சொல்ல முடியும் ; அவள் அந்தக்
'காந்தக்கல்' அழகு மோகினியல்ல!

கண்ணை அகல விரித்துக் கொண்டு
காயமுற்றுக் கிடந்தோர் பக்கம்

இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்க
மெல்ல நடந்தாள்.....மிக மெல்ல நடந்தாள்.

உடல்கள் ஒன்றிரண்டைப் புரட்டிப் பார்த்தாள்
ஓடிப்போன வீரர்கள் உடல் தவிர ;

மற்றவர்கள் மரணத்தை வரவேற்கும்
மானமிகு வீரர்களாய்ச் சாய்ந்து கிடந்தார்

மருந்துக் கிண்ணமுடன் மங்கை நடந்தநடை ; நிமிர்ந்த நடை –
ஏனந்தப் பீடு நடை பெருமித நடை என்பீரேல் ;

பலருக்கும் பட்டா பதிவாகியிருந்த அந்தப்
பகுதி நிலம் அத்தனையும் பாவி அந்தப் பண்ணைக்காரர் ;

பணம் நிரம்பப் பெற்றுக் கொண்டு
பகிர்ந்து கொடுத்து ஏப்பம் விட்டு விட்டார்.

செய்த பாபத்தை மறைப்பதற்குச்
செய்திடுவேன் யாக யோக மென்றும்,

ஜெயித்திடுவேன் பயமில்லை யென்றும்
பயித்தியம் போல் பேசலானார் ;

உரிமையுடையோர்க்கு உடைமையாக்கிட வேண்டியதை
நரிக்குணத்தார் தமக்கே உரிமையாக்கிக் கொண்டு

நல்லவர் பலரை நடுத்தெருவில் விட்டு விட்டாரே
நாசமாய்ப் போக எனச் சபித்தவாறு,

ஊரே கொதித்தெழுந்தது ;
உதயசூரியனும் உதித்தெழுந்தான்.

தூணொன்று கிடப்பது போலத் துறையிலே
துணி துவைக்கும் கல்லொன்று கிடைத்து,

தொத்திக் கொண்டாள் தோகை ; அதன் மேலே
“தோழர்களே ; காது கொடுத்துக் கேளுங்கள் ;

நான் சொல்லும் கருத்துக்களை!
நாமோ சிலர் ; நடுக்காட்டில் வசிப்பவர்கள்!

நம்மீது எரிச்சலும் பொறாமையும் கொண்டோர் ;
நம்மைப் போலவே சிலர்!

எரிச்சலைக் கண்டு எரிச்சல் அடைந்தால் மேலும்
எரிச்சல்தான் மிகுந்து ; நம் சாம்பலே மிஞ்சும்.

தூண்டி விட்டு இரு தரப்பை மோத வைக்கத்
துளிக்கூட புத்திசாலித் தனம் தேவையில்லை.

பண்ணையார் படுத்துறங்கிக் கொண்டிருக்கிறார் – கட்டிலறையில்!
பாடுபடும் பாமரர்கள் நாமேதான் பயணம் போகிறோம் கல்லறைக்கு!

கற்கால மனிதர்களாயிருந்து
கால மாறுதலால்

படிப்படியாய் பண்பட்டு வருகின்றோம்.
பகுத்தறிவும் பெற்றோம் என்பதற்கு

அடையாளமாய் அனைவரும்
ஒன்று சேர்வோம் ; முதலில்

ஏற்றத் தாழ்வை நமக்குள்ளேயிருந்து
எடுத்தெறிவோம் குப்பைத் தொட்டியிலே! அதன் பின்னர்

எல்லாவற்றையும் தலைகீழாய் மாற்றுதற்கு
ஏற்றிடுவோம் புரட்சிக் கொடி! கிளம்பிடு கிளர்ச்சி நடத்த!”

மளமளவென மடை திறந்தாற் போல
மங்கையவள் பேசக் கண்டு –

காயம் பட்டோர் படாதோர் எல்லாம்
வாயைப் பிளந்து கொண்டு, வந்து நின்று ;

அடேடே அதிசயமாயிருக்கிறதே –
அழகாகப் பேசுகிறாயே –

அதெப்படி முடிகிறதுன்னால் என்று

அத்தனைபேரும் கேட்க ;
அவள் பதில் சொன்னாள் –

“நான் எனக்காக மட்டும் பேசவில்லை –
எல்லோருக்கும் பேசக் கற்றுக் கொடுக்கவே
நான் பேசக் கற்றுக் கொண்டேன்” என்றாள்.

அதுவரையில் இருள் மறைவில்
அசையாமல் படுத்திருந்த

விழுப்புண் நெஞ்சினிலே பெற்ற வீரனொருவன்
விழித்துக் கொண்டு கேட்டான் ; “என்னைத் தெரிகிறதா மங்கை ?”

“ஏன் தெரியவில்லை? என்னவனல்லவா நீ!
எதிரியின் முகாமில் ஏன் சேர்ந்தாய்?

துரோகிகளைக் காண்பதே துரோகம்’’ எனத்
தொலைவிற் சென்றாள்!

“மங்கை நீ என்னை மன்னித்தருள்க –
எதிரிகளை இனம் புரிந்து கொண்டு ; பிறகு
இங்கேயே வந்து விட்டேன் ; தெரியாதா உனக்கு?
இப்போது நான் இறந்து கொண்டிருப்பது
பகைவனின் கணை என் நெஞ்சிலே
பாய்ந்திருப்பதால்தான் ; பாரடி கண்ணே!” என்றான்.

“அய்யோ’’ என்றலறி அவன் உடலை
அணைத்துக் கொண்டாள்!

சாவு முனையில் அவன் கேட்டான் – “என்
சந்தனச் சிலையே! புரட்சி என்றாயே எப்போது?
கிளர்ச்சி என்றாயே எப்படி?’’ என்று!

“கண்ணா ; நான் சொன்னது
கலகம் விளைக்கும் புரட்சியல்ல ;
கலாச்சாரப் புரட்சி!
சண்டை நடத்தும் கிளர்ச்சியல்ல ;
சமூக நீதிக் கிளர்ச்சி!
எல்லாமே அறவழியில்தான்!” என்றாள்.

செத்துக் கொண்டிருந்தவன் சிரித்துக் கொண்டே ;
“கத்தியின்றி ரத்தமின்றி ஒரு யுத்தம் ; அப்படித்தானே?’’ என்றான்.

“ஆமாம் ; கத்தி பகைவன் கொண்டு வருவது ;
இரத்தம் நாம் தருவது –
அதுதான் அறப்போர்!’’ என்றாள்.

அவளை அணைத்தவாறே
அணைந்தது அவன் உயிர்!

வரலாற்றுக் காலத்தின் கோலம்!

பண்ணையார் கூலிப்படை திரட்டிப் போர் நடத்தி
பண்புநிறை 'மங்கை'யவள் காதலனைத் தீர்த்துக் கட்டி

கடைசி மூச்சினைக் காதலன், காதலியின் மடியில் விடுத்தபோது ;
களங் காணும் உரிமைப் போர் அற வழியில் நடக்கட்டுமென்றும்,

தொல்லைகள் நீங்கும் வரை தொய்வின்றித் தொடரட்டுமென்றும்
சொல்லி விட்டுக் கண் மூடினானே ; அதைச் சொல்லப் போனால் ;

அதற்கு முன்பிருந்தே அநாகரிகத்தின் உறைவிடமாக
அந்த வட்டாரம் விளங்கியதும், விலங்குகளுக்கிருந்த
வீரியமும் வேட்டையாடும் வல்லமையுமின்றி ; அவற்றின்
வயிற்றுக்குத் தீனியானார் வரிசையாக என்ற வரலாறும்தான்,

நம் முன்னால் நிற்கும் ; நமது நம்பிக்கையைக் குலைக்கும்.
எடுத்துக்காட்டாக சிலவற்றை இயம்பிட வேண்டுமெனில் ;

மரத்தின் அழுத்தமான வேர் என்று நினைத்து ஒரு
மண்டுக மனிதன் பாதி வெளிச்சத்தில்
மலைப்பாம்பு ஒன்றின் மீது உட்கார்ந்து விட்டான், அந்த
மனிதக் கனம் தாங்காமல் மலைப்பாம்பு நெளிந்தவுடன்

வீராதி வீரன் ''வீல்'' என்று கத்தித் துடித்திட அப்போதே
வெடித்து விட்டது அவனிதயமென்று வீட்டாரும் ஊராரும்

அழுது தொலைத்தார்கள் ; அப்படியொரு ''பகாசூரப்
பயந்தாங்குளி!''
அது போல ஒன்றா இரண்டா ; அன்றாடம் தொடர் கதைதான்!

காளியாத்தாவுக்குப் படையல் போட்டுக் காட்டு வழி ஆட்டுக்குட்டி
காவு கொடுக்க வேண்டுமெனக் கால்நடைப் பயணம் போனவரை ;

மத யானை வழி மறித்துக் காலால் மிதித்து அவர்கள்
சாவூர் செல்லும் வரை விடவில்லை எனும் சேதி ;

காட்டுக்குள் நுழைய நினைப்போரை கதி கலங்க வைத்த சேதி ;
வீட்டுக்குள் கிடக்கும் மனிதரையும் கொட்டிக் கொல்லுகிற
குளவிகளால் பெரும் பீதி!

என் செய்வது ? .....
கற்காலத்து அடுத்த கட்டமாக

விலங்கினம் / மனித இனத்துக்கிடையேதான்
வெங்கொடுமைச் சாக்காட்டை விளைவிக்கின்ற போராட்டங்கள்!

அதற்கும் அடுத்த கட்டங்களாகத்தான் மனிதரிடம்
விலங்குகளே விரோதம் பாராட்டாவிடினும் ;

மனிதர்களுக்குள்ளாகவே மாறி மாறி
விலங்கினம் மனித இனப் போராட்டம் என வகுத்துக் கொண்டு

நடைபெறத் தொடங்கிவிட ;
விலங்கு யார் ? மனிதன் யார் ? என்று

வித்தியாசம் காண முடியாத நிலையில் ; அந்தப்
போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டு தானே இருந்தன!

அதன் விளைவாகக்
கண்ட விபத்துகளில் ஒரு விபத்தாகக்

கவிதைச் சாவியிட்டுக் காலப் பேழையினைக்
கவனமாகத் திறப்போர் ; காண வேண்டிய

காட்சியென ஒன்றைக் காட்டுகின்றேன், அந்தோ
கற்காலத்து ஓவியங்கள், கண்ணீர்க் காவியங்கள்!

புதிய தம்பதியாய் ஆனவர்க்கு
மதிய உணவு முதலைக்கறி விருந்து என – நெஞ்சில்

பதிய வைத்த பாசமுடன்
மனைவியும் சொன்னாள் மற்றவரும் சொன்னார்கள்.

“ ஆற்றுக்குப் போய் அண்ணன் தம்பி நாலு பேரும்
அலைந்துதேடி அகப்பட்ட முதலையுடன் வந்துள்ளார்.
அதையறுத்துத்தான் கறி சமைக்கப் போகின்றேன் –
அமிர்தம் போல் ருசிக்கும் தன் கைப்பக்குவம்!’’ என்று

அத்தானை அழைத்து வர அலமு என்பாள்
அனுப்பிவைத்தாள் அண்ணன்மாரை!

அப்படியே இப்பொழுதே அவரோடு வருகின்றேன் என்று
அண்ணன்களில் ஒருவன் பறந்து சென்றவன்,

அயர்ந்து திரும்பி தங்கை முன் வந்து நின்றான் ;
அழுதான், புலம்பினான், ‘அய்யோ’ என்று கத்தினான்!

“ என்ன அண்ணே ? எங்கே அவர் ?’’ கேட்டாள் தங்கை!
எங்கு தேடியும் இந்த ஊரில் கிடைக்கவில்லை என்று கலங்கினான்.

“வருந்துவது எதற்காக ? வெளியூர் சென்றுள்ளார் ; வந்துவிடுவார்
இப்போது!
வாருங்கள் முதலில் முதலையை வெட்டிக் கறி சமைத்து ;

விருந்தைப் பரிமாறி வைக்கலாம் – அவரும்
விரைந்து வந்து அருந்துவார், பாருங்கள்’’ என்றாள்!

“ வெட்டுதற்கு முதலையை அரிவாள் கொடு முதலில்’’ என்று,
பட்டு மேனிப் பாவை அலமுவிடம் அண்ணன் கேட்க ;

அவளும் பளபளக்கும் அரிவாள் எடுத்துக் கொடுத்தவாறு ;
“ அண்ணே ; பக்குவமாய் வெட்டிக் கொடு’’ என்று கூற,

அண்ணன் தம்பிகள் ஆளுக்கொரு பக்கமாகப் பிடித்து
அந்த முதலையை வெட்ட அரிவாளை ஓங்கிப் போடவே ;

இரு கூறாகப் பிளந்தது முதலை ;
இமாலய ஆச்சரியம் எல்லோரும் அதிர்ந்து விட்டார்!

அலமுவோ அலறியடித்து மூர்ச்சித்து வீழ்ந்து விட்டாள்
அந்த முதலை வயிற்றுக்குள் இருந்தது அவள் கணவன் உடல்!

ஆம் ; உயிரற்ற உடல்!
அய்யகோ ; அதிகாலை நேரம் –

ஆற்றோரம் சென்றவனை
முதலை விழுங்கிற்று!

அப்போதங்கே ; கோடையிடி முழக்கம் போல
“ஆ’’ “ஊ’’ என்று கத்திக் கொண்டு

பத்துப் பேர் ; காட்டில் வாழ் – காண்டாமிருகத் தோற்றத்தார்
மனித உருவில் மலையொத்த மாமிச வடிவத்தார்

மாட்டுக் கொம்புகளைத் தலையில் மாட்டிக் கொண்டு
மன்னர் கிரீடம் அவை தான் என எண்ணிக் கொண்டு

எருமை மாட்டுத் தோலால் ஆன ஆடையினைப்
பெருமை பொங்க அணிந்து கொண்டு

சூலமும்
சுமந்திருக்கும் கைகளை ஓங்கிக் கொண்டு

பற்களைக் கடித்து பல குரல் எழுப்பி
கற்களை வீசிக் கொண்டு –

சாவு வீட்டு அழுகுரலை நல்ல
சங்கீதம் போல் ரசித்துக் கொண்டு

குத்துவோம் கொம்புகளால்
கொலை செய்வோம் ; உலை வைப்போம் உங்கள் உயிர்களுக்கு

என்ற பிளிறலுடன்
நுழைந்து விட்டார் – அந்த வீட்டுக்குள்

எதிர்க்க முடியாமல்
எல்லோரும் ஓடி விட்டார் –

வந்த கூட்டம் –
வாய்களைக் குகைகளாக்கி

பச்சையாக முதலை மாமிசத்தை
இச்சையுட ன் தின்று முடித்து

முதலை வயிற்றுக்குள் இருந்த
முதிரா வயதுடை ஆணழகன் – அலமுவின்

அத்தானவன் அங்கங்களையும்
உண்டு களித்து

ஊருக்குள்
நடனமாடிச் சென்றார்கள் –

நாகரிகப் பண்பாடு ஒரு புறம் ஒளிரவும்
நாசகாலத்தின் வெளிப்பாடு மறுபுறம் வளரவுமான

வரலாற்றுக்
காலத்தின் கோலமிது!

நெற்றி வியர்வை உதிர;
நெஞ்செலும்பு ஒடிய!

சாங்கிருத்தியாயன் தீட்டிய
சரித்திரப் பின்னணிச் சிறுகதைத்

தொகுப்பில் – "வால்காவிலிருந்து
கங்கை வரையில்" ; 'அமிர்தாஸ்வன்' எனும்

தலைப்பில் அந்தக் கால வாழ்க்கைத்
துணைவியர்க் கென்றே வகுத்துள்ள

தனி இலக்கணத்தை அந்நூலில்
அண்மையில் நான் 54ஆம் பக்கத்தில்

வாசித்தறிந்த நினைவுடன் எழுதுகிறேன் ;
வரலாற்றறிஞர் 'இராகுலன்' வரைந்துளார் :

" அதிதிகள், நண்பர்கள் வீட்டுக்கு வந்தால்
அவர்க்கு விருந்தளித்து மகிழ்விப்பதுடன்,

தற்காலிகமாகத் தங்கள் மனைவியரையும்
தந்து கௌரவிப்பது ஆச்சாரமாக இருந்தது" என்கின்றார்.

கணவாய் வழி இப்படிக் காலடி வைத்து வந்த
கலாச்சாரம்தான் கடவுள் அவதாரம் என்று

காட்டிக் கொண்டு வந்த அதிதி ஒருவருக்கு
இயற்பகை நாயனார் தனது இல்லத்தரசியை

கட்டிலறைக்கு அனுப்பி வைத்த கதை யென்ற
இழிவுரு எடுத்தது போலும்.

இருப்பதைத் தான் எடுத்தியம்புகின்றேன், இதனைப்
பொறுப்பதும், பொறுத்திடாது என்னை வெறுப்பதும்

புத்தகம் இரண்டையும் படித்த பிறகு – நீவிர்
தீர்க்கமாகத் தீர்மானிக்க வேண்டியதாகும்.

ஆரியர்கள் வருகை என்றும் ஆதி முதல் வாழுகின்ற
திராவிடருடன் மோதல் என்றும் 'அசுரர்' எனும்
திராவிடருக்கும் – அமரர் எனும் 'தேவர்'கட்கும்
ஆண்டு பதினெட்டு அயராமல் யுத்தம் நடந்ததென்றும் ;

அறிஞர் பெருமக்களாம் அய்யர், அய்யங்கார்கள்,
சர்மா, சாஸ்திரியார்கள் அன்றே எழுதினர் சரித்திரங்கள்!

இராமாயண யுத்தமே ஆரிய, திராவிடப் போராட்டம் தானென்று
இந்தியப் பிரதமர் ஆவதற்கு முன்பே எழுதியவர் நேருபிரான்.

இத்தினையையும் உள் வாங்கிக் கொண்டு
வடிவெடுத்ததுதான்

வால்காவிலிருந்து எனும்
வரலாற்றுப் பனுவல்!

வளைக்கவில்லை அதனை என் போக்கிற்கு ;
வானத்தைப் பூமியெனச் சொல்ல எனக்கென்ன பைத்தியமா ?

வற்றாத ஜீவ நதி கங்கையைப் போல்
வளம் பெருக்க வேண்டும் காவிரியும்

தமிழகத்துக்கென்று ; வரம் கேட்டுத்
தவம் இருப்பேனே தவிர,

வறண்ட பேயாறு கங்கையெனக் கூறும்
வடிகட்டிய பொய்யனாக வேடம் கட்டி வருவேனா ?

அப்படித்தான் அடித்துச் சொல்லுகிறேன்
எப்பொழுதும் ஆதார பூர்வமாக

ஆரியக் கலாச்சாரம் திராவிடக் கலாச்சாரத்தை
விழுங்கிடவும் வீழ்த்திடவும் வந்த கதை!

மூவாயிரம் ஆண்டுக்கு முன்பே
முற்றுகை யிட்ட கலாச்சாரத்தினால்

மூண்டு விட்ட தீயின் கொடுமையைத்தான்
ஆண்டு பலவாக அனுபவித்து வருகின்றோம்.

ஆயிரமாயிரம் ஏக்கர் நிலம்
ஆலயத்துக்கு என்றும் ஆதீனத்துக்கென்றும்

அந்த நிலங்களிலே நித்தமுழைத்து
நெற்றி வியர்வை முத்து முத்தாக உதிர உதிர

நெஞ்செலும்பு ஓடிய ஓடிய – வயிறு
பற்றியெரியும் பசியுடனே பயிர் வளர்த்துப்

பாடுபடும் பாட்டாளியாம் ஏழை விவசாயிக்கு – ஒரு
பருக்கை சோறு ஆக்குதற்கு வசதியில்லை, வாய்ப்புமில்லை.

வினா எழுப்பி 'ஏன்?' என்று கேட்டால்
விடையளிக்க யாருமில்லை!

கனாக் கண்டும் பயனில்லை ;
கடவுளும் அரசும் நம்மைக்

கவனிக்கப் போவதுமில்லை.
கவலை மேற் கவலையாக இக்கவலை

கவண் கற்களாக நமைக் குறி பார்த்துத்
தாக்கினாலும் – தாங்கிக் கொண்டு

கடவுளையே எழுப்பிப் பார்ப்போம் –
காலை, மாலை, இரவு மூன்று வேளை

உனக்கும் உன் குடும்பத்துக்குமாக
உணவுக்கு ஆகும் செலவு போக

நாள்தோறும் மிச்சமாகும் பணத்தையெல்லாம்
நல்ல நல்ல வங்கிகளில் சேமித்து வட்டி சேர்த்து

ஆண்டவனே உன் பிள்ளைகள் ஆரோக்யம் பெறுவதற்கும்
அறிவார்ந்த கல்வியிலே அடுக்கடுக்காய் உயர்வதற்கும்

அன்றாடம் செலவு செய்தால் நன்றாக முன்னேறும் நமது நாடு
என்போம்.
இன்றோடு குறுகிய நோக்கங்களைக் குழி தோண்டிப் புதைத்து
விட்டு – புகழ்க்

குன்றேறி நாம் நிற்பதற்குப் புதுப் புது சிந்தனைகள் வேண்டும்.
குறிக்கோள் நிறைவேறுதற்குச் செயலாற்றும் திறனும் வேண்டும்.

திறன் பெற்றுச் செயலாற்றத் திக்கெட்டும் பார்வை செலுத்த
வேண்டும்.
உரமாக அதற்கமைய நம் பழம் பெரும் வரலாற்றை உணர
வேண்டும் –
வாளும் கேடயமுமாய் வரலாறு கையில் இருந்தால்தான்
வந்து மோதும் பகைப்புலத்தைச் சந்திக்க இயலும் என்பதால்

வையத்துப் பெருவிளக்காய் – திருவிளக்காய் – நம் சரிதம்
ஒளிர்வதற்கு ;
அய்யத்துக்கிடமின்றி அனைத்திலுமே தெளிவாகத் திகழ்தல்
வேண்டும்.

காலப்பேழை அதற்குத் துணை நிற்கும் என்பதால் இன்னும் சில
கவிதை வடிவக் கதைகள் தொடர்ந்து சொல்லுகிறேன், என்
கற்பனையில்!
பழங்கதைப் பேசுவதால் பலனில்லை என்றறிவேன் – நம்
பாட்டன் பூட்டன் கதை பழைய வரலாற்றுக் கதை பேசுவதால் ;

கேட்டை விலக்கலாம் சமுதாயத்தில் –
கடந்த காலச் சரித்திர நிகழ்வுகளில்

கழிக்க வேண்டியது என்ன ?
அந்த நினைவுகளில் மறக்க வேண்டியது என்ன ?

அவற்றில் எதையும் அழிக்க வேண்டியது இல்லை –
வரலாற்றுச் சின்னங்களை ; வாழ விட்டால் தான்
நல்லவைக்கும் தீயவைக்கும்
நமக்கு வழி காட்டப் பயன்படும் –

நல்லவை உணர்ந்து மேலும் நடக்கலாம் –
தீயவை எனிலோ ; உடனே திரும்பலாம்!
திருந்தவும் செய்யலாம்!

உரையாடல் உணர்த்திடும் உண்மை என்ன?

கடந்த நாள் காலப் பேழை
சற்று நெடி அதிகமோ என்ற
சந்தேகம் எனக்கே எழுந்ததுண்டு
சரித்திரத்தைச் சொல்லும்பொழுது
சரியான வழியில் தானே செல்ல வேண்டும்.
அய்ந்தும் மூன்றும் எட்டு என்பதை
மூன்றும் அய்ந்தும் எனக் கூட்டினாலும்
கூட்டிய முறையில் வேறுபாடே தவிர ;
கூட்டுத் தொகைக் கணக்கில்
முரண்பாடொன்றும் வருவதில்லையே!

சான்றாக சாங்கிருத்தியாயனின்
சரித்திரப் பின்னணிக் கதைகளில்
கி.மு. 2000 எனும் காலக் கணக்கைத்
திரையாய்க் கொண்டு தீட்டப்பட்ட
'புருதானன்' ஓவியத்தைக் காண வாரீர் எனக்
கை கூப்பி அழைக்கின்றேன்
கருணை புரிந்திடுக ; கண்ட பிறகும் நும்
கருத்தைப் பொழிந்திடுக!

உயர்ந்த நூல்களின் வரிசையில் உள்ள
"வால்காவிலிருந்து கங்கை வரையில்"
வரையப்பட்டுள்ள உரையாடல் ஒன்றைக்
காட்டுகிறேன் உமக்கு ; அக்கடமை எனக்கு!
ஆரியர்கள் இருவருக்கிடையே
அமைந்த உரையாடல் ; அதனை
அப்படியே தருகிறேன்

கூட்டவோ, குறைக்கவோ இன்றி, அவர்
தீட்டியதைத் திருத்தவும் செய்யாமல்
காட்டிடும் என் பணி மதித்திடுவீர்!

அந்த நூலில் உள்ள ஆரியர் இருவரின் உரையாடல்.
(புத்தகம் – பக்கங்கள் 101, 118, 119, 120)

“இந்திர பதவியை நாங்கள் எடுத்து விட்டோம்”

“எடுத்து விட்டீர்களா ?”

“ஆம் ; தென் பிரதேச ஆரியர்களாகிய எங்களுக்கு
இந்தப் பதவி பயத்தைக் கொடுக்க ஆரம்பித்தது”

“பயப்படுவானேன் ?”

“சேனைக்கு நாயகனையே நாம் இந்திரன் என்று
அழைக்கிறோமல்லவா ?”

“ஆம்”

“ஆம் ; சேனாதிபதியைத் தங்களுடைய சகல காரியங்–
களுக்கும் நாயகனாக ஆரியர்கள் மதிப்பதில்லை.
யுத்த காலத்தில் அவனுடைய உத்திரவை நாம்
அப்படியே ஏற்று நடக்கிறோம் என்பது உண்மையே.
ஆனால் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மனம்
விட்டுச் சொல்வதற்கு அதிகாரமுள்ள சமூகச்
சபையைத்தான் ஆரியர்களாகிய நாம் சகலத்துக்கும்
மேலானதாகக் கருதுவோம்”

“ஆம், ஆம்.”

“ஆனால், இதற்கு நேர்மாறான கொள்கை அசுரர்களுடையது.
அசுரர்களின் இந்திரன் அல்லது ராஜாவே சகல அதிகாரங்–
களும் உடையவன். அவனுக்கு மேலாக எந்த ஒரு சமூகச்
சபையையும் அவன் அங்கீகரிப்பது கிடையாது. அசுர ராஜாவின்
வாயிலிருந்து வெளி வரும் வார்த்தைகள் எல்லாம்
சட்டம். அதை ஒவ்வொரு அசுரனும் அப்படியே ஒப்புக்
கொள்ள வேண்டும். மீறுபவர்களுக்கு தண்டனை மரணம்தான்”

“ ஆம், நானும் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய புரோகிதர்கள் அசுரர்களைக் கழுதைகளாக ஆக்கி வைத்திருக்கிறார்கள்”

“ ஆம், கழுதைகளுக்கும் இழிவாக, அசுரர்கள் லிங்க பூஜை செய்கிறார்கள். ஆண் குறி, பெண் குறியில் சேர்ந்திருப்பது போன்றது அந்த லிங்க வடிவம். ஆண், பெண் உறவின் இன்பத்திற்கு அவைகள் சாதனமென்பதையும், அந்த உறவின் மூலம் நமது எதிர்கால சந்ததி வளர்கிறது என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மண்ணிலோ அல்லது கல்லிலோ அந்த வடிவத்தைச் செய்து வைத்துக் கொண்டு வணங்குவது பெரிய முட்டாள் தனமாக இருக்கிறது அல்லவா?”

“ ஆம் ; அதிலென்ன சந்தேகம்?”

“ அந்த அசுர அரசன், இந்த லிங்க தெய்வத்தின் பெரிய பக்தன். ஆனால் இதுவும் ஒரு வேஷம் என்றே நான் நினைக்கிறேன். அந்த அசுர அரசனும், அவனுடைய புரோகிதர்களும் முட்டாள்களல்ல. ஆரியர்களாகிய நம்மைப் பார்க்கிலும் அவர்கள் கெட்டிக்காரர்கள். அவர்களுடைய நகரங்களைப் போல நகரங்கள் அமைப்பதற்கு நாம் கற்றுக் கொள்ள நீண்ட நாட்கள் பிடிக்கும். அவர்களுடைய கடை வீதி, தாமரை மலர் நிறைந்திருக்கும் தடாகங்கள், அதன் உயர்ந்த படிக் கட்டுகள், அகன்ற ராஜவீதிகள் போன்ற அமைப்புகளை நம் ஆரிய பூமியில் காணவே முடியாது”

ஏறத்தாழ இன்றைக்கு நாலாயிரம் ஆண்டின் முன்னே ;
கி. மு. இரண்டாயிரம் ஆண்டின் காலப்பேழைதான் நீவிர் காண்பது!
அந்நாளில் அசுரர்கள் வழிபட்ட லிங்க வடிவத்தின் தத்துவத்தை
அநாகரிகத்தின் உச்சமென்றும் அடி முட்டாள்தன மென்றும்
ஆரியர்கள் கருதியதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது
அன்பர் இராகுலனாரின் வால்காவிலிருந்து கங்கை வரையில்!

நாலாயிரம் ஆண்டுக்கு முன்னே நாம் கண்ட கடவுள் வடிவம் ;
அசுரர் எனும் திராவிடரின் கலாச்சார உருவாயிருந்து இன்றைக்கு
ஆலயங்கள்தோறும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்றால் ;
அசுரர் கண்டுபிடித்த கடவுள் வடிவத் தத்துவத்தை
ஆரியக் கலாச்சாரம் ஆமோதித்து விட்டதாக அர்த்தமா ?
ஆவுடையார் லிங்க இணைப்பு இப்போது மட்டும் பொருத்தமா ?
திண்தோளும் வண்கண்ணும் திரண்டிருக்கும் பெரு மீசைகளும்
திடுக்கிட வைத்திடும் கொடும் உருவும் கொண்ட தேவதைகள்,
திராவிட அசுரர்களுக்கென கொண்டாடும் தெய்வங்களாக ;
தீவட்டிராயன் என்றும், தீரன் மதுரை வீரன், காத்தவராயன்,
முனீஸ்வரன், சனீஸ்வரன், காடன், மாடன், கடுமைமிகு இடும்பன்
எனத்
துஷ்ட தேவதைகளையே குல தெய்வங்களாகக் கொண்டாடும்
குலம், அசுர குலம் என்பதற்கு அடையாளமாகத்தான்
கோயில் குளங்கள் அவர்கள் பெயரால் அமைந்துள்ள
நிலைமைதனை
அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் காண்கின்றோம் –
பாடல் பெற்ற ஸ்தலங்களிலும் பார்த்துக் களிக்கின்றோம்.
பல்லாயிர முறை தரிசித்தாலும் ஒரு முறையேனும் நாம்
படித்த கதை நினைத்து அதைப் பார்த்து முகத்தைச்
சுளித்தோமா ?

கடவுள்களைக் கேலி செய்யும் நோக்கமல்ல ; காசினியில்
கலாச்சாரம்கூட கடவுள் பிரச்சினையிலும் தனித் தனிதான்
என்பதையே மெய்ப்பிக்கும் எடுத்துக்காட்டன்றோ ; இஃது ?
இறைவனை வடிப்பதில் கூட இரு வேறு கலாச்சாரம் ;
இலிங்க உருவம் அசுரர்க்குரிய தென்றும் –
இதனை ஆரியர்கள் ஏற்கவில்லை யென்றும் ;
நாலாயிரம் ஆண்டின் முன்னே நாகரிகமல்ல வென்றுரைத்தவர்கள்
நாடு முழுதும் இன்றைக்கு அவ்வடிவுக்கு நாமாவளி பாடுவதேன் ?

கலாச்சாரங்கள் வேறு வேறு – கடவுளை ரசிப்பதிலும் மாறுபாடு
ஆரியர்க்கும் அசுரராம் திராவிடர்க்கும் அதில் இல்லை உடன்பாடு

என்றிருந்த நிலைமை இன்று மாறி விட்டதா? இல்லையேல்
'சாங்கிருத்தியாயன்' தான் கலாச்சார வேறுபாட்டை
சரிவரக் கவனிக்கத் தவறி விட்டாரா?
ஆரியர்கள் கேலி செய்த அந்த லிங்கம் இல்லா
ஆலயங்கள் இன்று எங்கேனும் உண்டா?
ஆழித் தேர்களிலே – ஆலயக் கோபுரங்களிலே
அந்தக் கடவுள் சின்னங்களை அமைத்திட
ஆத்திகப் பெரியோர்கள் யார் மறந்தார்?
துஷ்ட தெய்வ வழிபாட்டுக் கோயில்களில்
துணிந்து லிங்க வடிவில் சிலை எவர் வைக்க முன்வந்தார்?

கடவுளர் சிலை அமைப்பதிலேயே
கலாச்சார வேறுபாடு –
ஆரியர்க்கும் அசுரர் எனும் திராவிடர்க்கும்
அதுவும் வட பகுதி தேசத்திலே ஒரு விதம்
தென் பகுதி தேசத்திலே வேறு விதம் –
அங்கு ஆண் பெண் அடையாளம் காட்டும் லிங்கம்;
ஆரியர் அகராதியில்.....
அறிவீனம், முட்டாள்தனம்!

இங்கு ஆலயங்கள் ஒவ்வொன்றிலும்
அதுவேதான் அம்மையப்பன் வடிவமாகும்.
வணங்குதற்குரிய உருவமாகும்
வழிபட வேண்டிய தெய்வமாகும்.
வாரிச் சுருட்டி எழுந்து என்பால்
வம்புக்கு வருதல் வேண்டாம்.
தாவிக் குதித்துத் தாண்டி; எனைப்
பாவி என ஏசவும் கூடாது –

ஆரியர் இருவரிடை நிகழ்ந்த
ஆண்டவன் வடிவு பற்றிய உரையாடல்;
அசுரர் எனும் திராவிடர் கலாச்சாரத்தை –
அதனைக் கடவுள் வடிவிலே கூட
ஆரியர் ஏற்கவில்லை; என்பதை
அப்பட்டமாகவே அறிவித்து –

அவர்கள் வடக்கில் ஒரு விதம்
தெற்கில் ஒரு விதமாக
அன்றைக்கே பிரிந்து நின்றதையும்
ஆராய்ந்து பார்க்கும்போது ;
சந்தர்ப்பத்துக் கேற்றவாறு
தங்களை மாற்றிக் கொள்வதில்
ஆரியர்கள் அசகாய சூரர்கள் என்பதை
அறிஞர் சாங்கிருத்தியாயன்
அவருக்கேயுரிய முறையில்
அறிவுறுத்தி விட்டார் என்பதும்
‘‘வால்காவிலிருந்து கங்கை வரை’’ மட்டுமல்ல ;
வரலாறு என ஒன்று இந்த வையத்தில் இருக்கும்வரை
வாழ்ந்து கொண்டிருக்கும் உண்மை என்பதும் ;
உறுதி! உறுதி! உறுதி!

முத்தமிழ் வளர்த்தத் தொடர்பு

ஆதாரம் ஏதுமில்லாமலோ ;
அறிஞர்கள் கருத்தின்
அருந்துணை தவிர்த்தோ ;
அடியேன் எதனையும்
பிடிவாதமாக வலியுறுத்தித்
திமிர்வாதம் நடத்திப் பழக்கமில்லை.

அதிலும் ;
தமிழ் மொழி, தமிழர்கள்
தமிழக வரலாறு எனும்போது
தான்தோன்றித்தனமாகத்
தத்துபித்தென்று
தக்கோர் முன்னிலையில்
தருக்குடன் நடந்திடும்
வழக்கமுமில்லை.

அதனால் தான் ;
தக்க சான்றுகள் திரட்டி
அந்நாள் தமிழர்கள்
அருங்கலம் செலுத்தி
திறன்பல விளைத்து
திரை கடலோடித்
திரவியம் திரட்டிய
தித்திக்கும் சரிதம் ;
தீட்டிட முனைந்துளேன்.

உலக நாகரீக வளர்ச்சிக்கும்
உறவு நாடுகள் தொடர்புக்கும்
உறுதி நல்கும் பெரு முயற்சி

பெருங்கடல் கலம் விடுத்து ; அது
தரும் புகழ் முதலில் பெற்றவன்
தமிழன் என்பது நமது
தகுதிக்குற்ற தனிச் சிறப்பாகும்.

நாணயங்கள் பொற்காசுகள்
நன்முத்துப் பவள அணி மணிகள்
நான்கு திசையிலிருந்தும்
நன்கு குவிவதற்கு மட்டுமல்ல ;
நாகரிகமென நாம் கடைப்பிடித்த
நற்பண்புப் பண்டமாற்றுக்கும்
நல்லவிதமாய்ப் பயன்படுமே
நாவாய்கள் மூலம் நடத்துகின்ற
நானிலம் புகழ்
வாணிபப் பயணம்!

வட அமெரிக்காவில் வாஞ்சையுடன்
வரவேற்கும் மெக்சிகோவின்
அன்புநிறை 'அசுதெக்' மக்களும்,
அவர் போலவே 'மாயா'வின் பிரஜைகளும்
மற்றும் அங்குவாழ் பெரு நாட்டவரும்
மனத்தால் நம் மீது பிரியங்கொண்டு ;
வெள்ளையர் காலத்துக்கும்
வெகு காலத்திற்கு முன்பே –
நாகரிகம் பெற்று
நல்வாழ்வு நடத்துவோரன்றோ! அந்த
மாயா மெக்சிகோ நாகரிகத்தின்
தாயாய் விளங்குவது திராவிடர் நாகரிகமன்றோ ?

திறம் பெற்ற வரலாற்று ஆய்வாளர்
திடமாக உரைக்கின்றார் – அவற்றைத்
தெளிவாகத் தொகுத்துள்ளார் ; தமிழ்த்
திருவாளர் மதிவாணர் – என்பதைத்
தெரிவித்து மகிழ்கின்றேன்.

மற்றொரு செய்தியும் உண்டு ; நாம்
மலைத்து, மகிழ்ந்திடுமளவுக்கு!
என்ன அது ?

எகிப்தில் கிடைத்ததாம் பழங்காலப் 'பாபிரசு' சுருள் ஓலையொன்று ;
எதற்காக இதுவென்று வீசி எறிந்து விடாமல்,
எழுத்தறிந்து ருஷ்ய அறிஞர்களால் படிக்கப்பட்டு
எல்லோர்க்கும் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

மரக்கலத்தில் மனத்துணிவுடை இளைஞன் ஒருவன்,
தாங்கொணாப் புயற் காற்றில் கடலில் தனியாக சிக்கிக்
கொண்டான்.

கடல் நடுவே கலம் கவிழ்ந்து
அலைக் கரத்தால் அள்ளி எறியப்படவே ;
அப்போதும் அவன் அச்சமின்றி –
அருகில் மிதந்த அனாதைக் கட்டையொன்றை
அழுத்தமாகப் பிடித்தணைத்துக் கொண்டு,
அலைகடலின் கரையை அடைந்தான்.

அங்குற்ற காய்கனிகள் பறித்துண்டு
அரும்பசியாற்றிக் கொண்டு
அந்த அயல் நாட்டை ஆளுகின்ற
அரசனைக் காணச் சென்றான்.

பண்புடனே அவ்வேந்தன் அன்பு காட்டி,
பரிவுடனே இளைஞனையும் பாராட்டி ; விலை உயர்ந்த
பல பொருள்கள் பரிசாய் வழங்கி,
விடை கொடுத்து வேறு கலத்தில் அனுப்பிவைத்தான்.

அந்தப் 'பாபிரசு' ஓலைச் சுருளில் குறிப்பிட்ட
பரந்த இந்து மாக்கடலின் தென் பகுதியில்
இருக்கின்ற நாடுதான் "நாக நாடு" என்றும் ; அது
தமிழ்நாட்டுக்குத் தொடர்புடைய நாடென்று
கடைச் சங்கத் தமிழ் இலக்கியங்கள்

கண்டறிந்து நவில்கின்றன என்றும் ; அந்த
நாக நாட்டு இளவரசி 'பீலிவளை' என்பாளை
நமது சோழ நாட்டு இளவரசன் மணந்தான் என்றும்
பழைய கதையல்ல ;
வரலாறே உண்டு என அறியும்போது,
களிப்புக்கோர் எல்லை தான் உண்டோ ?

பாபிரசுச் சுருள் ஓலை என்பது ; எகிப்தியரின்
பழம் பெரும் நாகரிகச் சான்று என்பதால் ;
கி.மு. 4000க்கு முன்பிருந்தே சுமேரியாவுடனும் ;
கி.மு. 3000க்கு முன்பிருந்தே எகிப்துடனும் ;
கி.மு. 1200க்கு முன்பிருந்தே சீனத்துடனும் ;
வாணிபத் தொடர்பு, தமிழர்க்கு வாய்த்திருந்ததை ;
வரலாறு விளக்கிக் காட்டுகின்றதாம்!

''நாவாய்கர்'' என்பதே 'நாய்கர்' எனத் திரிந்த சொல் என்றும்
நவில்வர் நமது நாவலந்தீவின் வரலாறுணர்ந்த நற்றமிழறிஞர்!
அரேபிய, எகிப்து, கிரேக்க, உரோம நாடுகள் மற்றும்
அதற்கப்பாலும் உள்ள ஆழ்கடலில் கப்பல் ஓட்டியவர் நம்மவர்
என்பதும்
அதுவும் அய்யாயிரம் ஆண்டுக்கு முன்பே என்பதும்
அன்றைக்கே நாடுகள் பல அறிந்துள்ள நமது நாகரிகப்
பெருமையன்றோ ?

பாபிரசு = பாபிரசு என்ற நீர்த்தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் காகிதத்திலான சுவடி.

ஆங்காங்கு அடையாள முத்திரைகள்!

நடுக்கடலில் தத்தளித்துத் துடித்தும்
நடுக்கம் ஏதும் கொள்ளாமல்
கடும்புயல் சூறாவளியில் கவலை சிறிதுமின்றி
கட்டையொன்றின் துணைக் கொண்டு
காளையொருவன் கரை சேர்ந்த பின்னர்
நாக நாட்டு மன்னன் தந்த பரிசுப் பொருளும்
நல் உள்ளப் பாராட்டும் பெற்றுச் சென்றான் எனப்
பழங்கால வரலாற்றுச் செய்தியொன்றை ;
காலப் பேழையிலே சுட்டிக்காட்டியிருந்தேன்.

நாக நாடு என நினைத்ததுமே
பீலிவளை எனும் பெண்மணியின் பெயர்
சோழ மன்னன் நெடுமுடிக்கிள்ளிப் பெயரோடு
வரலாற்றுப் பெரு வீதியிலே
வலம் வந்த காரணத்தால்
சாத்தனார் தீட்டிய மணிமேகலைக் காப்பியத்தில்
சான்று ஏதேனும் உண்டா என்று
சல்லடையிட்டுத் தேடிப் பார்த்தேன்
சங்கடமின்றிச் சடுதியில் கிடைத்தது சாட்சியம்.

“நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன்தேவி
வாச மயிலை வயிற்றுள் தோன்றிய
பீலிவளை யென்போள் பிறந்த அந்நாள்
இரவிகுலத் தொருவ னிணைமுலை தோயக்
கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தனள்”

‘ஆபுத்திரன் நாட டைந்த காதை’ அமைந்த
அக்காப்பியத்துச் சான்றாக ; நாக நிலத்து
அரசன் வளைவணன் தேவிக்குப் பிறக்கும்
அழகுமயில் பீலிவளை என்பாள் ;
சோழர் குல இளவலுடன் காதல் சொர்க்கம் புகுந்து
சுமந்து வருவாள் கருவினையெனச் சோதிட முரைத்தனர்.

கணவன் மனைவி ஆன பின்னர்

கருவுறுவதற்குச் சோதிடமா கணித்தல் வேண்டும் ?
இந்நாளில் நம் நாட்டுக்குக்
குழந்தைக் கட்டுப்பாடுதானே குடும்பத்தில் வேண்டும்!
இல்லையேல்,
கடலைத் தூர்த்தன்றோ ; நிலமாக மாற்ற வேண்டும்!

பாணர் மகள் சீர்த்தி என்பாளை மணந்த
பாசமிகு கணவன் கீர்த்தி பெற்ற சோழன்
நெடுமுடிக் கிள்ளி யென்பான் ;
வெகு நாள் ஆசை பூம்புகார் விழாக் காண வேண்டுமென!

திரு நாள் அது காணத் தந்தை நாகனுடன் ;
ஒரு நாள் வருகை தந்துவிட்டாள் பீலிவளையும்!
மறு நாளே விழாவில் ஒருவரையொருவர் கண்டுவிட்டார் –
இருவரும் அவரவர் இதயம் கொள்ளை கொண்டுவிட்டார்.

பூம்புகார் விழாக் காண வந்த பீலிவளை ;
வீண்புகார் எழுவது பற்றிக் கவலையின்றி,
வீழ்ந்து விட்டாள் சோழன்
மடிதனிலே மயக்கம் கொண்டு!
ஆழ்ந்து விட்டாள் அவன் காதல்
பிடியினிலே சிக்கிக் கொண்டு!

கடுகளவு ஆதாரம்தான் கிடைத்தது எனக்கு ; ஆனால்
கதைத் தொடர் எழுத இந்த ஆதாரம் போதுமென்று,
கவிஞர் கோவி. மணிசேகரன், என் நண்பர்
கவர்ச்சிமிகு ஓவியமொன்றை உரைநடையில் தீட்டியுள்ளார்.

நானதில் பழைய வரலாறும் படித்து
நமக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு
நாலாயிரம் ஆண்டின் முன்னே பூம்புகார்த் தமிழகம்,
நாக நாட்டுடனே பூண்டிருந்த உறவுதனை –

வியப்பு மேலிட எண்ணிப் பார்க்கின்றேன்.
விழா காண வந்த விழியழகிப் பீலிவளையின்
விழியோடு விழி கலந்து விழி மூடும் காதல் வெறியால்
வேந்தர் குல விளக்கிரண்டும் இணைந்ததாலே

நட்ட விதைக்குப் பலனாக நாகன் மகளுக்கு உடனடியாக,
சோழர் குலக் கொடியாக இளந்திரையன் கருவில் வந்தான்.
கருவுற்ற பிறகோர் கட்டழகு கூடிய பீலிவளை ; நாகன்
கட்டளையேற்று நாடு திரும்பலுற்றாள் ; கவலையுடன் –
கண்ணீருடன்!

மகன் பிறந்து மழலையாய்த் தாயின்மடி தவழ்ந்த போது ; அவனைத்
தனது கணவனிடம் சேர்க்குமாறு கப்பலொன்றில் ; பீலிவளை
காவிரிப்பூம்பட்டினம் அனுப்பி வைத்தாள் ; பெருங்காவலுடன்!
நல்லவேளையாக ; கடற்கோளில் சிக்குண்ட அக்குழந்தை ;

கப்பலோடு அனைவரும் கவிழ்ந்தும்கூட
தப்பி விட்டதாம் தான் மட்டும் உயிர் பிழைத்து, ஆம் ;
தொண்டைக் கொடி சுற்றியபடி கரையொன்றில்
கண்டெடுத்த காரணத்தால் தொண்டைமான் ஆனான் என்பர்!

தொண்டை மண்டலத் தலைநகராம் காஞ்சிக்கும் அதிபனாகி ;
தொல் பழங்கால வரலாற்றுத் தொடர் புகழையேந்தி –
தொண்டைமான் இளந்திரையனும் அவனே ஆனான் ; இந்தப்
பண்டை நாள் வரலாறு விளக்குவதுதான் என்ன ?

கடற்கோளுக்கிரையான குமரிக் கண்ட முதல்
காவிரியாற்றுத் தீரமாம் சோழப் பெருமண்டலமும் ;
இயற்கையின் சீற்றத்துக்குப் பலியாகி மறைந்து போன
இனவழி நாகர்க்கு உரிமையான பெரும் பரப்பும்,
நாகரிகப் பண்பாட்டின் உறைவிடமாய்

இருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தான்
இன்றைக்கும் "நாகர்கோயில்" வட்டாரம் காண்கிறோம்.
"நாகப்பட்டினம்", "திருநாகேசுவரம்" எனவும்,
"நாகலூர்" எனவும், அடையாள முத்திரைகள்
ஆங்காங்கு காணுகின்றோம்.

வருடக் கணக்கு கி.மு. நாலாயிரத்துக்கு முன்பே யென்று
வரையறுத்துக் கூறப்படும்பொழுது – இன்னமும் கி.பி.
இரண்டாயிரத்தையும் கூட்டிப் பார்த்தால்

ஆறாயிரம் ஆண்டின் முன்னிருந்த ஆதிகாலத்து நாகரிகம் –
அயல் நாடுகளுடன் தொடர்பு – கடல் வாணிப உறவு –
காதங்கள் பல கடந்து கடல் கடந்தும் வாழ்ந்த காதல் –
அத்தனையும் தொடங்கிய தொல் பழங்காலத்திற்கு
'அகர' மெனும் முதல் எழுத்தாய் இருப்பது
அருமை மிகு தென்னகம்தான் என்பதையும் ;

அதனாலே வரலாறு எழுதத் தொடங்கிடுவோர்
அங்கு இங்கு என அலைந்து திரியாமல் – பன
நுங்கு போல் பல ஆதாரங்கள் அகழ்ந்து தருவதற்கு –
சங்க இலக்கியங்களும் உண்டு ; எனவே அதற்குப்
பங்களிக்கும் பெரும் பொறுப்பும் நமக்கு உண்டு!

வரலாற்றுப் பூங்காவில் வள்ளித் திருமணம்

ஆவுடையார் வடிவம்தான் அம்மையென்றும்
இலிங்க வடிவமே அப்பன் என்றும் ;

அந்தக் கடவுள் வடிவம் அசுரர் கலாச்சாரமென
ஆரியர் இருவர் கதைத்திடும் நிகழ்ச்சியை

அறிஞர் சாங்கிருத்தியாயன் எடுத்துக் காட்டுவதை
அன்னார் நூலிலேயே நான் குறித்துக்காட்டி,

அன்றைக்கு நான் எழுதியிருந்ததை
அறிவீர் நன்கு!

அப்படிப் பிரிவினை செய்து ; ஆரியக் கலாச்சாரம் வேறு ;
அசுரராம் திராவிடர்கள் கலாச்சாரம் வேறு எனப்

பிரித்துக் காட்டிப் பேதம் விளைக்க முயன்று ; அந்நாளில்
சிரித்துக் காட்டியே நம் பண்பாடு சீரழிக்கத் திட்டமிட்டோர் ;

செல்லாக் காசாகிவிடும் அந்தச் சித்தாந்தம் எனக் கண்டவுடன்,
சிவனும் அரியும் ஒன்றுதான் எனச் சிந்து பாடி ;

அசுரர்க்கும் ஆரியர்க்கும் அக்கடவுள் வடிவே பொதுவென –
அணுகுமுறை மாற்றிக் கொண்ட அபேதவாதிகளன்றோ
அவ்வினத்தோர் ?

அன்று முதல் அந்த லிங்க வடிவங்களுக்கு,
ஆலய பூஜைகளும் அரிய திருவிழாக்களும் கூட

ஆரிய முறைப்படிதான் அக்காரியவாதிகள் ஆற்றுகின்றார்!
அவ்வடிவ லிங்கம் அநாகரிகமெனக் கேலி புரிந்தோர் –

அடி முட்டாள்தனமென ஆத்திரமுற்றோர்
அதையே பின்னர் ஆமோதித்து ஏற்றுக் கொண்டார்.

'அது தான் ஆரியம்'
என்பார் அறிஞர் அண்ணா.

அய்யன் வள்ளுவரை அறிவுலக மேதையென்றும்,
பொய்யாமொழி யுரைத்தப் பெருஞான வள்ளல் என்றும் –

அனைத்துலகும் புகழத் தொடங்கிய பின்னர்,
அவரும் ஆரிய "பகவன்" புதல்வர்தான் என்று

அந்த முத்திரையைக் குத்திய கூட்டமாயிற்றே!
அறிவாளி என்றெவரை அடையாளம் காட்டினாலும்,

அதிதீரர் வீரர் என்று அவனி பாராட்ட முற்பட்டாலும் –
அவர்க்கெலாம் 'ஆரிய வருணம்' பூசி, அவர் ஆளாய்
ஆக்கிடுவர் –
இப்படி எத்தனையோ ஆடாத ஆட்டமெலாம்
தப்படி போட்டு ஆடியுள்ளார் தாசர்களாக நமை ஆக்கி!

இன்னுமோர் உதாரணம் இதோ உரைக்கின்றேன் ;
இறைவனாகக் காட்டப்படும்

இடைவிடாது போற்றிப் பாடுகின்றார் –
இங்கிருந்து வேல் தூக்கி ஓடுகின்றார் –

இடையிலோர் குரல் அடிக்கடி முழங்கியதே ;
இந்த முருகன்தான் தமிழ்க் கடவுள் என்று

தவத்திரு அடிகளார் முதல், தமிழ்த் திரு வாரியார் வரையில்
தடம் பிறழா தொலி யெழுப்பத் தவறவில்லை!

அந்த முருகனையும் மெல்ல இடம் பெயர்த்து,
அம்மை பார்வதிக்கு அருகில் உட்கார் என்று ;

அழகிய தமிழ்ப் பெயர் முருகன் என்பதை
ஆரிய சுப்பிரமணியன் ஸ்கந்தன் எனப்

பழகிட வடமொழியில் பக்தி ரசப்
பயிற்சியளித்து விட்டார்.

ஆய மகன் கண்ணனை 'அரே கிருஷ்ணா' என்றார்.
அந்தத் திருமாலையே 'மகாவிஷ்ணு' எனத்திரித்து
அழைத்திட்டார் வடமொழியில்!
மொழிவழியில் நம் கலாச்சாரத்துக்கு
முழுக்குப் போட்டால்தானே ; நம்மை
மொட்டையடித்துச் சிறு
குட்டையினத்தார் வாழ முடியும்?

வேல் தாங்கி வில் தாங்கி
வேட்டையாடி விலங்கு கொன்று
காடகத்தே குடில் அமைத்து
காலம் ஓட்டுகின்ற வேட்டுவர்கள்
மேற்பாடி வள்ளிமலைச் சீறூரில்
ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில்
நம்பிராஜன் என்பவரைத்
தலைவராகத் தேர்ந்தெடுத்து ; இனி
தம் மன்னர் அவரே என அறிவித்தார்.

தொண்டை நன்னாட்டில் நம்பிராஜன்
தொண்டைப் பாராட்டாதார் இல்லை.....அந்த
'நம்பிராஜன்' பெற்றெடுத்த நங்கை வள்ளி ;
நற்றாய் 'கொடிச்சி' என்பாளின்
பாலருந்தி வளர்ந்த பருவப் பாவை,
வேடர் குலத் தருவின் விழுது போன்றாள் ;
தேடக் கிடைக்காத தேனில் பிசைந்த தினைமா –
அவளைத் தான் நம்பியும் கொடிச்சியும்
அங்குள்ள தினைப்புனத்துக் காவலுக்கு நியமித்து
உழைக்கும் குல மக்களின் வியர்வையிலே விளைந்த பயிர்
ஒருக்கணமும் உறங்காமல் காத்திட வேண்டுமெனக்
கண்டிப்புக் கட்டளையிட்டார்!

வள்ளியோ தன்னை வட்டமிடும் தோழியருடன்
வகுத்துக்கொண்டாள் தினைப்புனம் காத்திடும் திட்டம்!

பரண் ஒன்றை உயரமாக அமைத்துக் கொண்டு
உரம் வாய்ந்த நெஞ்சுடனே தட்டை, குளிர், தழல் ஆகிய
கருவிதனை ஏந்தி, காடை, கிளி,
கவுதாரியாம் பறவைகளை ஓட்டியும் ;
மான், மரை, இரலை, யானை, பன்றி முதலிய விலங்குகளை
கவண் கல் வீசித் துரத்தியும்,
“பூவைகாள்! புறவங்காள்!
மயில்காள்! மணிக்கிளிகாள்!
குயில்காள்! குருகுகாள்!”
‘ ஆலோலம்! ஆலோலம்!’ எனப் பாடி
அவற்றையெல்லாம்
விரட்டியடித்தாள் வள்ளியென்று ; பனியில்
புரட்டியெடுத்த குளிர்த் தமிழால் கூறுகின்ற வாரியாரின்
கூற்றினைக் கூர்ந்து நோக்கின் –
காற்றிலே போய் விடாத காலப்பேழையின் கருத்துக்களைக்
கூட்டிப் பார்த்தால் – அன்று நம்
காட்டிடை கிடைத்த பறவையினம், விலங்கினம்
பட்டியல் மட்டுமல்ல ;
பசியாறப் பயன்படும் உணவின் பட்டியலும்
தரப்பட்டுத் தமிழ் நிலத்தின்
வனவளமன்றோ, அவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள
பாங்கினைக் காணுகின்றோம் ;
பரவசம் அடைகின்றோம்!

பரண் மீது நின்று பாதுகாப்பு செய்தவளின் – மன
அரண் மீது தாக்குதல் நடத்த வருவான்
ஒருவன் எனத் தெரியாது – வந்து விட்டான் முருகன்,
தந்துவிட்டாள் தனது நெஞ்சத்தைத்
தன்னை அறியாது வள்ளி!
அப்படி என்ன நடந்தது அங்கே ?

வகுத்தளித்த வேலையை வள்ளி நிறைவேற்றிக்
கொண்டிருந்தபோது
வனவேடன் ஒருவன் கன வேகமாய் ஓடிவந்து ;

“யாரடி கள்ளி? என் மீது கல் எறிந்து காயப்படுத்தியது?
பாரடி பச்சை ரத்தம் பாய்ந்தோடும் காட்சியினை” என்று;
தலையில் பட்டிருந்த கல் விளைத்த காயத்தைக் காட்டி நின்றான்.
வலையில் பறவை யொன்று வீழ்வது போல்
வள்ளி அவன் வடிவழகில் வீழ்ந்து விட்டாள்.
பின்னர் “யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும் –
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே” எனும்
சங்கப் பாடல் ஆதிக்கம் செலுத்தியது அங்கே –
தங்கத் தலைவன் நம்பிராஜன்; பொங்கி எழுந்து
பொன் மகள் வள்ளியைக் கடிந்து கொண்டு; நீ
என் மகளாயின் முருகனை மறந்து விடு என்றான்.

சுற்றுமுற்றும் சுழன்று பார்த்து விட்டு
சொன்னாள் வள்ளி தந்தையிடம் –
அப்பா; அந்த முருகன் என்னைக் கேட்டார்;
அஞ்சுவது எதைப் பார்த்து என்று!

ஆனையைக் கண்டால்தான் பயம் என்றேன்;
அதற்கவர்; “அது பரவாயில்லை – ஆனையைக்
கண்டு நீ அஞ்சிடுவாய் – இயற்கை அது! சில பேர்
பூனை குறுக்கிட்டாலே பயந்து நடுங்குகின்றார்”
எனக் கேலி செய்தார் என்றாள் –

“அதற்கென்ன இப்போது?
ஆணையிடுகிறேன் என்கிறேன் நான்; நீயோ
ஆனையையும் பூனையையும் பற்றி
அளக்கின்றாய் இங்கே!”

நம்பிராஜனுக்கு நங்கை வள்ளி
விளக்கம் சொன்னாள் –
“ஆனை பூனை எனும்
அடுக்குச் சொற்களல்ல
அவர் கூறி, எனைக் கவர்ந்த சொற்கள்!

ஆனைக்குக் கூட அஞ்சாமல் ; குறுக்கே போகும்
பூனைக்கு அஞ்சுகிற மனிதர்களின்
அறியாமையைக் கேலி செய்யும்
அறிவுச் சுடரொளியாய் அவர் திகழுகின்றார்.
அந்தப் பகுத்தறிவுப் பேரொளிக்கு என்னையே
பரிசாகத் தருவதில் என்னப்பா தவறு ?'' என்றாள் வள்ளி!

"தவறேதுமில்லை'' என்றுரைத்த தாயும், தந்தையும்
"ஒன்று கேள் ; வள்ளி!
உன்னையே முருகனுக்குப் பரிசாகத் தந்து விட்டதாக
உரைத்திட்டாய் ; அது பெருந் தவறு!
பண்டமாற்று செய்து கொள்க, இதயங்களை!
அப்போதுதான் ; ஆண் பெண் சமத்துவமெனும்,
சம உரிமைச் சங்கொலி முழங்கும்!''
தம்பதியர் சம்மதமென்றனர் ;
தாயும் தந்தையும் வாழ்த்தி மகிழ்ந்தனர்!

தட்டை = மூங்கில்
குளிர் = கவண் கல்
தழல் = கோல்
மரை = மானில் ஒரு வகை
குருகு = நாரை

"யாயும் ஞாயும் யாராகியரோ ?'' – குறுந்தொகை (சங்க இலக்கியம்)

காரவேலன் கண்டு நடுங்கிய கட்டுக்குலையாக் கூட்டணி !

கற்காலம் பொற்காலமெனக் காலங்கள் வகுத்து – அக்
காலங்களில் நாகரிக வளர்ச்சி, பண்பாடு, பழக்கவழக்கம்
நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் எவ்வாறு என
வரலாறு வரையப்பட்டதுண்டு – அந்த
வரிசையில் வந்ததே மகத்தான வழிகாட்டும் நூலான
'வால்காவிலிருந்து கங்கை வரையில்'!

அந்நூலில் அதன் ஆசிரியர், அக்கால நிலையில் – அந்தந்தப்
பகுதிக்கேற்பக் கதாபாத்திரங்களென அறிமுகப்படுத்தி,
கதை சொல்லும் பாணியினைக் கடைப்பிடித்துள்ளார் – நான்
எழுதும்
காலப்பேழையின் நோக்கமும் அதுதான் எனினும் ;

இலக்கியத்தில், சரித்திரத்தில், பழம்புராணத்தில்
இடம்பெற்று அறிமுகமானவர்களை அறவே ஒதுக்கிடாமல்,
படிப்படியாக பல துறைகளிலும் முன்னேறிடும்
இந்திய வரலாற்றில் திராவிட இனத் தமிழர்க்குரிய
பங்களிப்பு விட்டுப் போகாமலிருப்பதற்காக
அடையாளம் காட்டும் வகையில்
அவர் அனைவரையும் இணைத்திட இயலாவிடினும்
சிலரையாவது சேர்த்து வழங்குகின்றேன் ;
சீரான வரலாறு எனும் சிறப்பு
சிதைந்து விடாமல் இருப்பதற்காக!

இதோ ;
தமிழர்க்கு வாய்த்திருந்த தொல் பழங்காலம் ;
தங்கக் காலமாய்த் திகழ்ந்தது என்பதற்கு
இங்கு சில கவிதை வரிகளை
எடுத்தியம்புகின்றேன் –

இவற்றுக்கு ஆதாரமாகப் பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் எழுதியுள்ள குறிப்புகளையும் கூறிட விரும்புகின்றேன் –

"தமிழ் மூவேந்தரும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு இமயத்தில் வில், கயல், புலிக்கொடிகள் பொறித்தனர் என்று சங்க நூல்கள் பலகாலும் பகர்கின்றன. இவை வெறும் புனைந்துரைகளென்று பல புலவரும் பெரும்பாலான வரலாற்றா சிரியர்களும் கொள்கின்றனர். வரலாற்று வான விளிம்பில் உள்ள தெற்கு வடக்குத் தொடர்புகளையும் தமிழிலக்கியத்தில் தமிழர் கடற்போர், தொலைவடவர் போர் பற்றியும் ஆரியருடன் போர் செய்து பெற்ற வெற்றிகள் பற்றியும் வரும் மிகப் பலவான குறிப்புக்கள் புனைந்துரைகளாகக் கொள்ளுதற்கு இடந்தராதவை."

"நெடுஞ்சேரலாதனே இமயம் முதல் குமரி வரை ஆண்டதாகப் பத்துப்பாட்டுக் கூறுகிறது.

" ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியோடாயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே!"

இது நேரடியாட்சியாகவோ, எல்லா அரசராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலுரிமையாகவோ, அல்லது மாநிலமெங்கும் ஆற்றிய வெற்றி உலாவாகவோ நிகழ்ந்திருக்கலாம்."

"சோழருள் ஓரரசன் ஆரியரைத் தஞ்சையடுத்த வல்லம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் முறியடித்ததாகப் பாவைக் கொட்டிலார் என்னும் புலவர் தெரிவிக்கிறார்.

"மாரியம் பின் மழைத்தோல் சோழர் வென்வேல்வில்
ஆரியர் படையின் உடைக என்
நேரிறை முன்கை வீங்கிய வளையே!" (அகம் 336)

காதலி, காதலனிடம் உள்ள கோபத்தைச் சுழலும் வளையல் மீது செலுத்தி, வல்லத்துப் போரில் உடைந்த ஆரியர் படை போல் என் வளை உடையட்டும் என்கிறாள்!"

"வட ஆரியர் படை கடந்து
தென் தமிழ்நாடு ஒருங்கு காணப்

புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்''
(சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம் இறுதிக்கட்டுரை)

இந்தச் சான்றுகள் ;
இரு பெரும் இனங்கள் ஆரியர் – திராவிடர் என
இருந்ததை விளக்கும்
இந்திய நாட்டு நிலவரமல்லவா ?

மேலும் ;

காரவேலனாம் கலிங்கப் பேரரசனை இந்தக்
காலப் பேழையில் கவிதைச் சாவி கொண்டு
திறந்து காட்டுவது சிறந்த சரித்திரக் குறிப்பாக
அமையும் என்பதும் ; அசோகனையும்
அவன் பெற்றிருந்த வெற்றிகளையும்,
இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டு
முதலிடத்துக்குத் தன் பெயரைக் கொண்டு வரவும்,
அரசு நிலைக்கவும், ஆட்சிப் பரப்பு விரிந்திடவும்,
ஆற்ற வேண்டிய அரசியல் சூழ்ச்சிகள் அனைத்தையும்
ஆற்றிப் பார்த்தவன் அவன் என்பதும் –

அவன் புகழ் பெற்றிருந்த கால கட்டம்
கி.மு. 163க்கும் கி.மு. 153க்கும் இடைப்பட்டது
அதாவது இப்போதைக்கு 2158 ஆண்டுக்கு முற்பட்டது ; எனினும் ;
தான் பெற்றிடாத வெற்றிச் சாதனைகளைக் கூடத்
தானே பெற்றதாகக் கல்வெட்டுகள் வைப்பதிலே
கை தேர்ந்த மன்னாதி மன்னன் என்பதும் –

கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்காக எனக் கேட்பது போல்
கல்வெட்டுக்களே சாட்சிகளாக நிற்பதாகக் கற்றறிந்தோர் பலர்
கூறியுமிருக்கின்றனர், கைப்பட எழுதியுமிருக்கின்றனர்.
கதையல்ல ; கற்பனையுமல்ல ;
கண்ணுக்கு மெய்யாக காட்டிடும் சான்றாக ;

''113 ஆண்டுகளாக நிலவி வந்துள்ள
தமிழரசர்களின் கூட்டணியை சிதைத்து விட்டதாகக்
காரவேலன் ஒரு கல்வெட்டில் குறிக்கிறான்''
என்கிறார் பன்மொழிப் புலவர்.

புவி மெச்சிட வாழ்ந்த அசோக மன்னன் புத்த சமயத்தை
பூமிப் பந்தில் பரப்பிட முனைந்ததைப் போல ; அதற்குப் போட்டியாக
காரவேலன் சமண சமயத்தைப் பரப்பிட முன்வந்து,
"சமண சமய அசோகன்" என்று பட்டமும் சூட்டப் பெற்றான்.
அப்படிச் சூட்டுவதற்கென்றே அரசனைச் சுற்றி
ஆயிரம் பேர் இருப்பார்களே!
மௌரியர் என்றுமே ; தமிழகத்தின் மீது போர் தொடுத்து
மோதிடாத அளவுக்கு ; அவன் மோதிட முன்வந்தான்.
முரசு கொட்டி முன்னேறியது அவன் படை ;
மேலும் ; அப்படையின் நுழைவினால் ; தமிழ் நிலம்
மோசமாகாமல் தடுத்து நிறுத்திட – அவன்
முடுக்கி விடும் போர்களினால் ;
தடுக்கி விழாமல் தமிழ் இனத்தைக் காத்திட –
மூவேந்தர்களும், வேளிர்குல மன்னர்களும்,
நெருப்புப் பொறியென செருப்பாழி கடந்த இளஞ்சேட் சென்னியும்
காரவேலனைக் கடுமையாய் எதிர்த்துக்
களத்தில் சந்திக்கப் போர்க் கூட்டணி யொன்று கண்டு ;
கூர் தீட்டினர் வாளுக்கும் வேலுக்கும்!
அந்தக் கூட்டணியைக் குழி தோண்டிப் புதைப்பதாகக் காரவேலன்
கண்ட கனவு பலிக்காமற் போயிற்று என்பதைத்தான்
"தற்பெருமை கொள்ளுகிறான் கல்வெட்டு வாயிலாக" என்று
தமிழறிஞர் அப்பாதுரையார் "தென்னாட்டுப் போர்க்கள" நூலில்
எடுத்துக் காட்டுகிறார் – அதை நாம் கூர்மையாகப்
படித்துப் பார்த்தால் ஆணவ ஆட்சிக்குக்
கூற்றுவனாய் அமைகின்ற கூட்டணி கண்டு – எப்படிக்
குதிக்கிறார்கள், குமுறுகிறார்கள் கோலேந்திகள் என்பது
நேற்று இன்று புரிகின்ற உண்மையல்ல ;
காற்று வாக்கில் வரும் செய்தியுமல்ல!
கலிங்க மன்னன் காரவேலன், தனக்குற்ற
எதிர்ப்பு கண்டு ; கொண்ட கோலம் எதுவென ;
எச்சரிக்கிறது வரலாறு ;
எடுத்துரைப்பதே என் கடமை!

செருப்பாழி = போர்க்களப் பாசறை.

கனக விஜயர்
கல் சுமந்த வரலாறு!

பழங்காலத் தமிழக வரலாறு
பட்டுத் துணி எனினும் நமக்கு
ஒட்டுத் துணியாகத்தான்
படிக்கவும் நடிக்கவும்
கிடைத்துளது என்பதை – இன்று
மறைப்பதில் பயனில்லை ; எஞ்சி
இருப்பதை மட்டும்
எடுத்துச் சொன்னாலே – நமது
எழிலார் தோற்றம் தெரியும் – உலகில்
எல்லோர்க்கும் நாம் மூத்தவர்கள் ;
இலக்கியத்தில், இலக்கணத்தில்
இயலிசை நாடகமென இனித்திடும்
மொழிவளத்தில் நம்
முழு வடிவம் புரியும்!

திட்டவட்டமாகவும் தெளிவாகவும் –
தீட்டி வைக்கவில்லை யாரும் ;
தென்னக வரலாற்றுக் குறிப்புகளை!
எனவே தான் இலக்கியங்கள் துணையுடனும் –
இங்கங்கு காணுகின்ற கல்வெட்டுகள் ; உதவியுடனும்
வடிகட்டி வழங்கிய உண்மைகளை ;
வரலாறு எனத் தொகுத்தளித்து வருகின்றோம்.

நெடியோன் எனும் பாண்டிய மன்னன்
நிலந் தரு திருவிற் பாண்டியன் என்றும்
தொல்காப்பியர் காலத்துடன்
தொடர்புடைய காலத்தினன் என்றும்,
மூவாயிரம் ஆண்டுக்கு முன்னிருந்தவன் என்றும்,
ஏறத்தாழவென ஒரு காலத்தைச் சுட்டிக்காட்டும் நம் வரலாறு!

கரிகாலன் எனும் சோழ மன்னன் – வீரம்
சரியாமல் ஆண்டவன் என –
சரித்திரம் புகழ் சாற்றும் எனினும் ;
இமயம் வரை படையெடுத்துச் சென்ற கரிகாலன் ;
இரண்டாம் கரிகாலனே என்பர் ஆய்வாளர் –
இருமுறை வடதிசை சென்றவன்
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன்
இணையற்ற வீரன் செங்குட்டுவன் –
இவன் தம்பி இளங்கோவே அரசாள்வான் என

ஆரூடம் சொன்ன நிமித்திகன் வாக்கைப் பொய்யாக்கி
அத்தம்பி அறநெறித் துறவியாக மாறிக் கொண்டு ; அருந்தமிழ்க்
கண்ணகியின் காவியம் தந்தான் ; அந்தக்
கற்பரசி சிலையெடுக்க அண்ணன் சென்றவன் ;
கனக விஜயன் முடி நொறுங்கக்
கல்தூக்கி வரச் செய்த கதை ; காணீர் ;
ஓரங்க நாடகமாக!

காட்சி 1

கங்கைக் கரை கனக விஜயர் மாளிகை.

தீராதி தீர தீன தயாபர தெய்வீக புருஷ வேதாந்த சாகர வேந்தர் குல திலக உத்திரதேசத்து மன்னாதி மன்னர்கள் கடவுள் அவதார கனக விஜயர் பராக்! பராக்!

மன்னர்கள் : நமஸ்கார்!
கனகர் : நமஸ்கார்!
விஜயர் : நமஸ்கார்!
கனகர் : சுயம்வரத்துச்
சுந்தரிக்காகக் காத்துக்
கொண்டிருக்கிறீர்கள்
போலும் ஹி! ஹி!...
மன்னர்கள் : ஆமாம், நீங்கள் இருவருமே
வந்து விட்டீர்களே! சுயம்வரப் போட்டியில் உங்களில் ஒருவர்

ஜெயித்து விட்டால், அந்தப்
பெண்ணை நீங்கள் இருவரும்
எப்படிப் பங்கு போட்டுக்
கொள்வது ?

தமிழ்நாட்டுப் புலவர் : பிறகு பாரதந்தான்....

விஜயர் : யாரப்பா நீ ? என்ன பேசுகிறாய் ?

புலவர் : தமிழ்! செந்தமிழ்! உலகத்
தோடு பிறந்த தமிழ்!
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தே முன் தோன்றிய மூத்த
தமிழ்!

விஜயர் : சுயம்வர மண்டபத்தில்
உனக்கென்ன வேலை ?

புலவர் : உம் ; விசித்திரமான கேள்வி வேந்தரே!
சுயம்வர மண்டபத்தில் வயதான
உங்களுக்குத்தான் வேலை ;
வாலிபர்களாகிய என்
போன்றவர்களுக்கு வேலை
இல்லை என்பது....

விஜயர் : குறும்பு தேவையில்லை. நீ யார்
என்று கூறு!

புலவர் : நானோர் தமிழ்ப் புலவன் –
வட நாட்டுப் பயணம் வந்தேன்....

கனகர் : புலவனா ? கவிதை புனையத்
தெரியுமா உனக்கு ?

புலவர் : கவிதை புனையத் தெரியாத புலவன் –
கத்தி தூக்கத் தெரியாத வீரன் –
இவர்களைத் தமிழகம் இதுவரை
கண்டதே இல்லை.....

கனகர் : அதையும் பார்த்து விடுவோம்.
எங்கே, உடனே, ஒரு கவிதை சொல்லு!

புலவர் : கங்கை நதி தீரத்திலே
போராடினான்–தமிழன்
காவிரியின் ஓரத்திலே புகழ்
காலத்திலே வந்து போராடினால்
காலை ஒடித்திடுவோம் ஜாக்கிரதை.....

மன்னர்கள் : ஹா! ஹா! ஹா!

விஜயர் : கனகர் சொன்னது அட்சரம்
லட்சம் பெறும் ; புலவனே!
இமயத்தின் நெற்றியிலே உம்
மன்னர் புலி – வில் – கயல்
சின்னங்களைப் பொறித்த போது
எம்போலும் மன்னர் ஈங்கில்லை
போலும்!

புலவர் : ஏன் ? காலில் விழுந்து
காணிக்கை செலுத்தவா ?
பித்து மனம் கொண்டவரே ;
கேளீர்! இன்றே
தென்னாடு திரும்புகிறேன்.
காவா நாவிற் கனகனும் விஜயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமிழாற்றல் அறிந்திலராகிச்
செப்பியமொழிகளைச் சேரனுக்குணர்த்
துவேன். மதோன்மத்தர்களே!
மாண்டுவிடவில்லை தமிழர் வீரம்!
ஆரிய மன்னர்காள்! மீண்டும்
சந்திப்போம். ஆண்டு கொண்டிருப்பவன்
சேரன் செங்குட்டுவன்!
சேரன் செங்குட்டுவன்!!

காட்சி 2.

சேரன் கொலுமண்டபம்

சேரன் : வாளேந்தி தமிழகத்தில் புகழேந்தி
வாழும் வேங்கைப் புலிகளே!
வந்து விட்டது உங்களுக்கு
எல்லாம் அழைப்பு!
வட நாட்டிலே மீண்டும் ஓர் முறை
நம் வீரத்தை நிலைநாட்ட
நல்லதோர் வாய்ப்பு! இமயத்திலே
பொறித்திருக்கும் நம் சின்னங்களை
பழித்தார்களாம், சிறுமதி கொண்
டோர் சிலர் – புலியைக் கேலி
செய்தான் போர்முனை காணாப்
புல்லன். வில்லை இகழ்ந்தான்
வீரத்தை விலை கேட்கும் வீணன் –
கயலைப் பழித்தான் களம் புகு
கதைகளைக் கேட்டறியாக் கசடன்.
உத்திரனாம் – விசித்திரனாம் –
சித்தரனாம் – சிவேதனாம் –
பைரவனாம்! விழிக்காதீர்கள்!
மனிதர்களின் பெயர்கள்தான்
இவைகள்! இந்த மண்டூக மன்னர்
களுக்குத் தலைவர்களாம்
கனகனாம் விஜயனாம் கங்கைக்
கரை வாழ் காவலர்கள் காவிரிக்
கரைக்கு அறைகூவல் விடுத்தார்
களாம்! புத்தி புகட்டுவோம்
அவர்களுக்கு – புறப்படுங்கள்!

ஓர் அமைச்சர் : சோழனுக்கும் பாண்டியனுக்கும்
இல்லாத ஆத்திரம் தங்களுக்கு
மட்டும் ஏன் மன்னவா?

சேரன் : தமிழன் என்பதால் – தன்மான
உணர்ச்சி குன்றாததால்!
சோழனோ பாண்டியனோ
என்னுடைய பகைவனாக இருக்க
லாம், அதற்காக வடநாட்டு ஆரிய
மன்னர்கள் வாலாட்ட விட
மாட்டேன் என் உயிருள்ள வரையில்!
என் தமிழை அல்லவா இகழ்ந்தார்கள் ;
தருக்கர்கள்! ஆ.....குறள்
தந்த கோமானே, வள்ளுவனே!
உன்னை இகழ்ந்தார்கள்....
அத்தாணி மண்டபத்தில் சத்தான
கருத்துரைக்கும் சாத்தனாரே!
அரங்கின் அண்ணலே!
உம்மை இகழ்ந்தார்கள்!
முத்துக்கடலே, முல்லைக்
கொல்லையே, உன்னை
இகழ்ந்தார்கள்! எட்டுத் திக்கும்
முரசு கொட்டி வாழும் சிங்கத்
திருவிடமே, உன்னை இகழ்ந்தார்கள்.
அன்னை நற்சோணையே,
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின்
மகன் செங்குட்டுவனின் வெற்றியை
இகழ்ந்தார்கள்.
இளங்கோ! ஆசைத் தம்பி!
உன்னை இகழ்ந்தார்கள்!
நீதிக்கு உயிர் தந்த பாண்டியனே!
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழி
யனே! உன்னை இகழ்ந்தார்கள்!
செந்தமிழ் வளங் குறையா சிங்க
ஏறுகளே! அறிஞரே! கவிஞரே!
கலைவாணரே! உம்மையெல்லாம்
இகழ்ந்தார்கள்!
இகழ்ந்தார்கள்,

இகழ்ந்தவர்கள், இன்னும்
உயிரோடு இருக்கிறார்கள்,
வட நாட்டில் மன்னர்களாய்!
பொருணை நதியும், பொழிலும்
சூழ்ந்த எழில்மிகு வஞ்சித்
தலைநகரே, உன்னை
இகழ்ந்தார்கள்! இகழ்ந்தார்கள்!
இழிகுணம் படைத்தோர்
இகழ்ந்தார்கள் ; அமைச்சர்
அழும்பில் வேள் இருக்க
வீரன் வில்லவன் கோதை
தளபதியாயிருக்க – உங்கள்
திரண்ட தோள்களில் எல்லாம்
வலிமை வளர் பிறையாயிருக்க –
ஆற்றோரத்தில் மந்திரம்
ஜெபித்துக் கொண்டிருக்க
வேண்டிய சிலதுகள்,
ஆவேசக் கூச்சலிட்டதாம் –
வீரர்களே! பார்ப்போம் ஒரு கை!
அந்த நா காக்கத் தெரியாத
நாடோடிகளை! தும்பி வாடி,
தோரணங்கற்பட்டு, வேட்ட
மங்கலம் கோட்டைகளிலுள்ள
வீரரெல்லாம் கிளம்பட்டும்!
காளையரே, காதலியருக்கு
கடைசி முத்தம் இதுவாக
இருக்கலாம் என்று கூறி விட்டுப்
புறப்படுங்கள்! நாமென்ன
சாகப் பயப்படும் சமுதாயமா?
சமருக்கஞ்சும் இனத்தவரா,
அந்தச் சாமரமேந்திகளிடம்
சரணடைய! இல்லை! இல்லை!
களத்திலே நமது தலைகள்
பறி போகலாம்! ஆனால் கனல்

கக்கும் கண்களோடு அவை
கொய்யப்படட்டும். தசைகள்
கிழித்தெறியப்படலாம்!
ஆனால் சுயமரியாதை
இரத்தத்தின் சூடு தணியாமல்
அவை கிழிக்கப்படட்டும்,
முரசு தட்டுங்கள்! இமயத்தை
முட்டுங்கள்! தமிழன் தோற்ற
தில்லை! தோற்றதில்லை!
புறப்படுங்கள்!"

கா ட் சி 3

குயிலாலுவம்.

(சேரன் செங்குட்டுவனுக்கும், கனக விஜயருக்கும் நடைபெற்ற போரில் செங்குட்டுவன் வெற்றி பெறுகிறான்)

சேரன் : வில்லவா! வெற்றி முழங்கும் இந்த
இடத்திற்குப் பெயர் என்ன ?

வில்லவன் : குயிலாலுவம்.

சேரன் : குயிலாலுவம், குறித்துக் கொள்!
இந்தப் பாறைகள் அனைத்தும்
பைந்தமிழ் வீரம் தீட்டிய ஏடுகள்!
வெற்றி மட்டும் போதாது வில்லவா,
அந்த வீணர்களை விடக் கூடாது.

வில்லவன் : காஷாய உடையிலே ரிஷிகளைப்
போல் எங்கோ ஓடிவிட்டார்களாம்
கனக விஜயர்கள்....

சேரன் : புதுமையல்ல....
அவர்களுக்கு உரியதான ஒரே
பழக்கம் அதுதான்!
(கனக விஜயர்கள் சாமியார்
உடையில் கொண்டு வரப்படுகிறார்கள்)

சேரன் : யார் இவர்கள் ?
வில்லவன் : கனக விஜயர்.
சேரன் : கனக விஜயர். கனக விஜயர்....
வீராதி வீரர்களே! நன்றாக
இருக்கிறது போர்த் திறமை!
முதுகு காட்டுவது – முக்காடு
போடுவது – மறைந்திருந்து
தாக்குவது – மகானாய் மாறுவது,
முனிவர்
வேடத்தில் இருக்கிறீர்களே,
இதற்குப் பதில் சொல்லுங்கள்...
புராணத்திலே தேவாசுர யுத்தம்
எவ்வளவு நாள் நடந்தது ?

கனகர் : பதினெட்டு ஆண்டுகள்!

சேரன் : ராம ராவணப் போர் ?.....

கனகர் : பதினெட்டு மாதங்கள்!

சேரன் : பாரதப் போர் ?

கனகர் : பதினெட்டு நாட்கள்!

சேரன் : வீரர்களே, நினைவிருக்கட்டும்.
சேரன் செங்குட்டுவன்
கனக விஜயருடன்
நடத்திய போர், பதினெட்டே
நாழிகையில் முடிந்து விட்டது.

கனகர் : மன்னவா, மண்டியிடுகிறோம்....
மன்னித்து விடுங்கள்!

சேரன் : மன்னிப்பதா ? நான் மன்னிப்பதா ?
தமிழ்நாட்டு மண்ணில் வந்து
மண்டியிடுங்கள், அது உங்களை
மன்னிக்கட்டும்.....

வில்லவன் : மன்னவா, தமிழகம் திரும்ப
வேண்டாமா ? புறப்பட்டு
முப்பத்திரண்டு திங்கள்
ஆகின்றனவே.....

சேரன் : புறப்படுவோம் – வில்லவா.
அதற்குள் கண்ணகிக்குச் சிலை
நாட்ட இங்கு கல் எடுக்க வேண்டு
மல்லவா ?

வில்லவன் : ஆமாம்....

சேரன் : அந்தக் கல்லைச் சுமப்பதற்குச்
சரியான எருதுகள் கிடைத்துவிட்டன.
கனக – விஜயா, தமிழரின்
வீரத்தின் மீது வீசினாய் ஒரு
சொல் – இப்போது தூக்கு கல்!

தமிழறிஞர்களும், தகுதி மிக்க ஆய்வாளர்களும்,
தன்மானப் புலவர்களும், உண்மை வரலாறு ;
உணர்ந்திடத் துடிக்கும் ஆர்வலர்களுமன்றோ ;
அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அலைந்து தேடி ;
மறைக்கப்பட்ட மணிக் குலத்தைக் கொண்டு வந்து
மகுடத்தில் பொருத்த வேண்டியுளது.

பருகிடலாம் இந்த "ஆறிய" தேநீரை!

கண்ணகி சிலை வடிக்கக் கல் எடுத்திட
கங்கைக் கரையில் சேரன் களம் காண்பதற்கு முன்பே

அந்த நதியில் அவன் அன்னை நீராடச் செல்வதற்கு ;
அருந்துணையாக பெரும்படையுடன் அவனும் சென்றான்.

முதல் தடவையாக சென்ற போதே – அவனை
முற்றுகையிட்ட ஆரிய மன்னர்களை

முறியடித்து வெற்றி கொண்டான்
முழுமதியாய் அன்னை முகம் மலர வைத்தான்!

“கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எம் கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர்
ஒரு நீயாகிய செரு வெங்கோலம்
கண் விழித்துக் கண்டது கருங்கட் கூற்றம்!”

(சிலப்பதிகாரம்)

காலப் பேழையினைத் திறந்து வைத்து
கதைகள், கவிதைகள் வாயிலாக

கடந்த கால வரலாறு இவ்வாறு கூறும் பொழுது ;
கண்ணுக்குத் தெரியாமல் இதுவரையில்

திறம்பட உண்மைகளை மறைத்திருந்த பெருந்
திரைகளை விலக்கிக் காட்டி ;

‘திராவிடர்’ எனவோர் இனம் இத்திருநாட்டில்
இராவிடம் இல்லையென்பதை எடுத்துச் சொல்வது ;

மறந்து போன இனப்பகை யுணர்வை மீண்டும் எழுப்பிடத்
தொடர்ந்து நடத்தும் ‘துஷ்டச் செயல்’ எனத் தூற்றிச் சிலர்

எழுதுகின்றார் கடிதம் – ஏசுகின்றார் மறைவில்
எதையும் தாங்கும் இதயம் உண்டு எனினும் ;

எதிர்ப்புக் குரலுக்கோர் மறுப்புக் குரல் அல்ல ;
இதமான விளக்கக் குரல் கொடுக்க எண்ணுகின்றேன் ;

எனவேதான் இதனை எழுதுகின்றேன்
காலை நடைப் பயிற்சியின் போதோ ;

கடும் வேக ஓட்டப் பந்தயத்திலோ ;
காலில் சிறு கல்லோ, முள்ளோ

தட்டுப்பட்டு விட்டால் ; அது நம்மை அறவே
தடுத்து விடாதென்றாலும் – தயங்கி நின்று ;

தடை நீக்கிக் கொண்டுதானே மேலும் செல்வோம் –
எதிர்க் கருத்துக்களையும் அப்படித்தான் நினைத்துக் கொண்டு

என் பயணம் தொடரும் நிலையில் –
இங்கே சற்று நிற்கின்றேன் ; அடுத்து

மிடுக்குடன் பயணம் மீண்டும் தொடங்கும்.
தடுத்திட முனைவோர்க்குத் தரும் விளக்கம் இதுதான்!

“ ஆரியம், திராவிடம் என்று ஆறிப் போன தேநீரை
காரியம் இப்போதென்ன சாதிப்பதற்கென்று ;

அடுப்பில் வைத்துச் சூடேற்றப் பார்க்கின்றீர் ?” என
துடுக்குமிகுக் கேள்வி யொன்றால் துளைக்கின்றார் சில பேர் ;

என் செய்வது ; ஏழை வீட்டில் அதுதான் “தேவாமிர்தம்!”
நன்செய் புன்செய் நாலாயிரம் ஏக்கர் நிலக்கிழார் எனில் ;

இனம், மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, நாடு பற்றிக்
கவலையின்றி –

பணமேடு, செல்வக் குன்று, பொன்மலை, வைர வைடூர்ய
பர்வதங்கள் காண்பதிலே

காலத்தைச் செலவிடுவர்! காபியோ, தேநீரோ, வேறெந்த
பானமோ – அது
காலங் கடந்திடாத சரக்காக இருக்கும் அவர் மாளிகையில் சூடு
மாறாமல்!

ஆரியர், திராவிடர் என்றதும் ஆத்திரப்பட்டு அடியேன்மீது
அர்ச்சனை நடத்துகின்றீர் – இல்லாததை நான் சொன்னது போலப்

பொல்லாத கோபம் வருகின்றதே ஏன்?
புதைந்து கிடக்கும் மண்டையோடு எலும்பெடுத்து

வாழ்ந்த இன வரலாறுகளை வகைப்படுத்தி முறைப்படுத்தி
ஆழ்ந்து செய்யும் அகழ்வாராய்ச்சி சாட்சி கொண்டு

அய்யர், அய்யங்கார்கள், சர்மா, சாஸ்திரிகள் என
அறிஞர்களாம் வரலாற்று வல்லுநர்கள் வெளியிட்டுள்ள

கருத்துக்கள் கூட கண்ணிருந்தும் காண மறுப்போர்க்கு
காதிருந்தும் கேட்க விரும்பாதோர்க்கு –

உணர்விருந்தும் உணர மாட்டோம் என்போர்க்கு
உரிய இடம் எதுவோ ; அதுதானே கிடைக்கும்!

இந்த மேதைகள் எல்லாம் ; என்ன பதில் அளிப்பர் ;
இதோ – இவர்களின் கூற்றுக்கு? எனக் கேட்கின்றேன்.

“தமிழர், தமிழகத்தின் பழங்குடியினர் மட்டுமல்ல ;
உலகத்தின் ஆதி மக்களும் அவர்களாகவே இருந்திருக்கலாம்”

இதனைக் கூறியவர் “தமிழர் சரித்திரம்” எனும் நூலில்
திரு. பி.டி. சீனிவாச அய்யங்கார் எனத் தெரிவிக்கின்றேன்.

“ஆரியர் நாகரிகத்தை விடத் தமிழர் நாகரிகம் மிகப்
பழைமையானது” எனப் பகருகின்றார் ;

“திராவிட இந்தியா” எனும் நூலில்
திருவாளர் சேஷ அய்யங்கார் –

“ ஆரியர் தமிழகம் வந்தது
தமிழர் நன்மைக்கோ தீமைக்கோ

என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து கொள்க’’
என “தமிழ் மொழி வரலாறு’’
எனும் நூலில் பரிதிமாற் கலைஞராம் –
சூரிய நாராயண சாஸ்திரிகள் சொல்லியுள்ளார் –

காரண காரிய விளக்கமுடன்
கடந்த கால முதல் இந்நாள் வரை

உலக வரலாறு நான் உரைக்கின்ற போது
உண்மை வரலாறு மறைக்காத நிலையில்

காலப் பேழையைத் திறப்பதினாலே ; புதிய
கலாம் ஒன்றும் விளையாது ;
பிறப்பினால் உயர்வு தாழ்வு எனும் –
பழைய நினைவு பட்டுப் போனாலே போதுமானது – அதனால்

குறுகிய எண்ணம் கொள்ளாமல்
பருகிடலாம் இந்த “ஆறிய’’ தேநீரை!

16

சுளையில் ஒன்றியிருக்கும் சுவையாக!

தரணியின் வரலாறு எழுத முன்வருவோர் யாராயினும்,
தற்காலத் தேவையான தாளே இல்லாமல் எழுதலாம் ;

தரமான ஓலையில்லாமல் எழுதலாம் ; விஞ்ஞானத்
திறம் காட்டும் கணினியின் தயவில்லாமல் எழுதலாம் –

ஆனால் ;
தமிழகம் பற்றிய குறிப்பின்றி எழுத இயலுமா எனில் ;
தலை நிமிர்த்தி அறைகூவல் விடுத்திடலாம் –

எழுதலாம் ; எழுதினால் அது –
முழுமையாக இருக்காது, மூளியாகத்தானிருக்கும்!

'உரோமாபுரிப் பாண்டியன்' எனுந் தொடர் ஓவியமாக
ஒரு வரலாற்றுப் புதினம் எழுதும் வாய்ப்புப் பெற்றேன் – அதனை

வெளியிட்டுப் பயன்மிக்க உரை வழங்கியவர்
வீரத் தமிழ்ப் பேராசான்
விழியின் ஒளி போன்றார் – விரிவான் அனையர்
மொழிஞாயிறு தேவநேயப் பாவாணராவார்.

தகுதியெலாம் பெற்ற நீதியரசர்
தக்கோர் போற்றும் நேர்மையாளர்
அன்பு கமழ் அனந்த நாராயணன்
அற்புத உரையாற்றி அகமகிழ்ந்தார்.

நூலின் முதற்படி பெற்றுக் கொண்டு
பாலில் தேன் கலந்த பாராட்டு வழங்கியவர் –
தோளில் கை போட்டுப் பழகிய தோழர் – தமிழர்க்குத்
தொகை தொகையாய்க் கவிதை தந்த கண்ணதாசன்.

அந்நூலில் அறிமுக உரையெனும் பகுதியில்
அடியேன் அளித்திருக்கும் ஆதாரங்கள் ;

இன்றைக்கு இந்தக் 'காலப் பேழை'யில் என்றல்ல –
என்றைக்கும் வரலாற்றுக் கணக்கில் வரவு வைக்க வேண்டியதே!

அன்று நான் எழுதி வெளிவந்த
அந்த நூலுக்கான அறிமுக உரையை ;

அப்போதிருந்த வடிவத்திலேயே
இப்போது தருகின்றேன் –

"உரோமாபுரியின் முதலாவது மன்னர் மன்னனாக மணி மகுடம் அணிந்து கொண்டான் ஆக்டேவியஸ்! "மகிமை பொருந்திய மகாவீரன்'' என்ற வீர வாசகத்தின் சுருக்கமான பெயராக "அகஸ்டஸ்'' என்ற பட்டத்தை உரோமாபுரிப் பாராளுமன்றம் ஆக்டேவியசுக்குப் பூரிப்போடு சூட்டி மகிழ்ந்தது.

அந்தக் காலத்திலேதான் நமது பழம் பெரும் தமிழகத்தின் முப்பேரரசுகளின் கொடி நிழலில் கொற்றம் தழைத்துக் கொண்டிருந்தது எனவும், சோழ மண்டிலத்தில் திருமாவளவன் இரண்டாம் கரிகாற் பெருவளத்தான் ஆண்டு கொண்டிருந்தான் எனவும் வரலாற்றுப் பெரியவர்கள் வரையறுத்துள்ளார்கள். இந்தக் கரிகாலனின் காலம் கி.மு. 60 முதல், கி.மு. 10 வரை என்பதாகத் தமிழ்ச் சான்றோர் குறிப்பிடுகின்றனர்.

உரோமாபுரியிலே கோலோச்சிய அகஸ்டஸ் சீசரின்பால் பாண்டிய மன்னன் தனது தூதுவரை அனுப்பியிருந்தான் என்றும், அது கி. மு. 20 என்றும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அங்ஙனமாயின் அந்தத் தூதுவரை உரோமாபுரி அகஸ்டஸ் மன்னனிடம் அனுப்பி வைத்த பாண்டிய அரசன் யார்?

கரிகாலச் சோழனைப் பற்றிய புறப்பாட்டு ஒன்றைப் பாடிய காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் எனும் புலவர், அந்தப் பாட்டில் பாண்டிய மன்னன் ஒருவனையும் இணைத்துப் பாடியிருக்கிறார். அந்த மன்னனின் பெயர் பெருவழுதி.

"நீ அறந்தங்கும் உறையூரின்கண் அரசன்; இவனோ தமிழ் குலுங்கும் மதுரையில் குளிர்ந்த செங்கோலையுடைய வேந்தன்! நீ, தண்புனல் காவிரிக்கு உரியவன்; இவனோ போரின்கண் மாட்சிமைப்பட்ட பாண்டியர் குடியில் ஏறு போன்றவன்; பொதிகை மலைச் சந்தனமும் திரை கடல் முத்தும் மும்முரசமும் கொண்டவன். நீவிர் இரு பெருந் தெய்வங்கள் ஒருங்கு நின்றாற்போல் காட்சி தருகின்றீர்! இன்றுபோல் என்றும் நிலைத்திடுக நுமது நட்பு! வென்று வென்று போர்க்களத்தில் மேம்படுக உமது வேல்! புலி, கயல் பொறித்து, உம் வெற்றியைப் பிற நாட்டுக் குன்றுகளில் செதுக்கிடுவீராக!"

புறம் ஐம்பத்தெட்டாவது பாடலில் இந்த அழகிய கருத்தினைத் தந்து காரிக்கண்ணனார், சோழன் கரிகாலனையும், பாண்டியன் பெருவழுதியையும் ஒரு சேர வாழ்த்துகிறார்.

இதனைக் கொண்டு கரிகாலன் காலத்துப் பாண்டியன், பெருவழுதியென்று முடிவு கட்டுகிறோம். கரிகாலன் காலமோ கி.மு. 60 முதல் கி.மு. 10 வரையில்.

அந்தக் காலத்திலேதான் உரோமாபுரியில் அகஸ்டஸ் சீசர் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறான். அதாவது கி.மு. 39 முதல் கி.பி. 14 வரையில்.

இந்தக் காலக் கணக்கை ஆராய்வதிலிருந்து அகஸ்டஸ் சீசருடன் நட்புறவு கொண்டு தூதுவரை அனுப்பி வைத்த பாண்டியன் பெருவழுதியாகத் தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியவர்களாகிறோம்.

கிரேக்கரையும், உரோமானியரையும் யவனர்கள் என்ற பெயரால் அழைத்து, அந்த யவனர்களைத் தங்கள் அரண்மனை களில் காவல் வீரர்களாக வைத்திருந்தனர் தமிழ் மன்னர்கள் என்பதற்கு இலக்கியங்கள் சாட்சி கூறுகின்றன. "கடிமதில் வாயிற் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்" என்ற சிலப்பதிகாரப் பாட்டு தக்க எடுத்துக்காட்டாகும்.

நக்கீரனார் பாடிய ஐம்பத்தாறாவது புறப்பாட்டில் "யவனர், நன் கலம் தந்த தண்கமழ் தேறல்" எனக் காணும் வரி, யவனர்கள்

தமிழகத்தில் மது வகைகளைக் கொணர்ந்து விற்று வந்தனர் என்பதை உணர்த்துவதாகும்.

தென்னகத்திலிருந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் மிக முக்கியமானது மிளகு. அலாரிக் என்பவன் ஒரு காலத்தில் ரோமை வெற்றி கண்டபோது, நஷ்ட ஈட்டுத் தொகையில் மூவாயிரம் பவுண்டு தமிழ்நாட்டு மிளகும் தரவேண்டுமென்று உடன்படிக்கை செய்து கொண்டானாம்.

பாண்டி நாட்டுக் கொற்கைப் பெருந்துறைக்கு அருகில் முத்துக்களும், சங்குகளும் மிக அதிகமாகக் கிடைத்து, அவைகள் உலகில் எல்லாப் பகுதியினராலும் பாராட்டுப் பெற்றன.

கொற்கை முத்துக்கு
“மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையும் பெருந்துறை முத்து”

என்ற அகப்பாட்டு அழகுற விளக்குகிறது.

முத்தும், நுண்ணிய பருத்தி ஆடைகளும், எலி மயிராலும் பட்டாலும் நெய்யப்பட்ட உடைகளும், உரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து குதிரைகளும் மது வகைகளும், கண்ணாடிச் சாமான்களும் கொற்கைப் பெருந் துறையில் வந்து இறங்கிய வண்ணமிருந்தன.

அழகான கப்பல்களில் தங்கத்தை ஏற்றிக் கொண்டு யவனர்கள் வருவார்களாம். பிறகு மிளகை ஏற்றிக் கொண்டு திரும்புவார்களாம். முசிறித் துறை முழுவதும் அந்தக் கப்பல்களின் பேரொலி கேட்கும் என்று சங்க இலக்கியங்கள் பெருமை பேசுகின்றன.

புகார் துறைமுகத்தில் எல்லா நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும், மாலுமிகளும் வந்திறங்குவார்கள் ; அவர்கள் எல்லாரும் ஒரே இனத்தவர் போல ஒற்றுமையாகப் பழகி வாழ்வார்கள் என்று தமிழிலக்கியம் கூறுகிறது. யவனர்கள் பலர் தமிழ் மன்னர்களின் மெய்க் காப்பாளர்களாகவும் இருந்திருக் கின்றனர் என்ற செய்தியொன்றே இரு சாராரிடையிருந்த நல்லெண்ணத்தை விளக்கும் கண்ணாடியாகும்.

இத்தகைய தொடர்புகளை இன்று மெய்ப்பித்துக் காட்டுவது போலப் புதுவை மாநகருக்குப் பக்கத்தில் "அரிக்கமேடு" என்னுமிடத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் உரோமானியருக்குரிய பலவகைப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்திலே குவியல் குவியலாக ரோமர் நாணயங்கள் கிடைப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தார்கள். கிழக்குக் கடற்கரையிலிருந்து உரோமாபுரிக்கு மேற்கு கடற்கரை வழியாகப் பொருள்களை அனுப்ப வேண்டுமானால் ஒன்று கன்யாகுமரியைச் சுற்றிக் கொண்டு போகவேண்டும் அல்லது கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்தித்து வழி விட்டிருக்கும் குறுக்குப்பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். இன்று அதிக அளவில் அந்தப் பகுதியில் காணப்படும் நாணயக் குவியல்களுக்கு அதையும் ஒரு காரணம் காட்டுவோரும் உளர்.

ரோம் நாட்டுத் தங்க நாணயங்கள் இந்தியா, பாகிஸ்தான் உட்பட அறுபத்தெட்டு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த அறுபத்தெட்டு இடங்களில் ஐம்பத்தேழு இடங்கள் விந்தியத் திற்குத் தெற்கே இருக்கின்றன என்பதைக் கேட்கும் போது ரோமுக்கும், தென்னகத்திற்கும் இருந்து வந்த பழைய தொடர்பை எண்ணி எண்ணிப் பெரு மூச்செறிகிறோம் நாம்."

அந்தப் பெருமூச்சுத் தான் இன்னும் அடங்காமல்
இந்தக் காலப் பேழையிலும் வெளிப்படுதல் காண்கின்றீர்.

அகழ்ந்து கண்டுபிடிக்கப்படுகின்ற
அந்தக் கால வரலாற்றுச் சுவடுகள்,

இகழ்ந்து தள்ளுதற்குரியவைகளாய்
இருட்டடிப்பு செய்வோர்க்குத் தெரியலாம் – அவை

புகழ்ந்து போற்றுதற்குரியவை மட்டுமல்ல ;
மகிழ்ந்து உலகமன்றில் கொலு வீற்றிட வேண்டியவை.

தவழ்ந்து தவழ்ந்து தட்டுத் தடுமாறி
தாழ்வாரத்தில் தத்தித் தவித்திடும்

தமிழக வரலாறு எனும் குழந்தையை
தாய் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொள்ளும்,

காலம் வந்தால்தான் கணக்குச் சரியாகும் ;
பாலம் அமையும் ; பல்வேறு தேசிய இனங்களுக்கிடையே!

'உலக வரலாறு' எனும் இனிய கனியின்
உள்ளிருக்கும் சுளைகளில் ஒன்றாயிருப்பது, இந்திய வரலாறு ;

அந்தச் சுளையில் சுவையாக ஒன்றியிருப்பது ;
இந்தத் தமிழக வரலாறு!

உலக வரலாறு எங்கிருந்து வரைவது?

கோடி – கோடி – கோடி –
எத்தனை கோடி ஆண்டுகளுக்கு
முன்போ ; ஓராண்டு – ஒரு திங்கள் –
ஒருநாள், ஒரு நாழிகை, ஒரு நொடி –
எதிரே இருப்பது எதுவென்றோ ;
எவரென்றோ எதுவும் தெரியாத
இருள் – இருள் – இருள் –
அந்த இருளின் நிறம் ;
இப்போது தெரிகிறது,
கறுப்பு என்று! ஆனால்
அப்போது தெரியாது – காரணம் ;
கண்டதில்லை ; எந்த வண்ணத்தையும்!
கறுப்பு, சிகப்பு, பச்சை, மஞ்சள்,
நீலம். வெள்ளை இப்படியெல்லாம்
ஒவ்வொரு நிறமாகப் பெயர் சூட்ட
அந்த நிறமும் எம்முன்னால்
தனித்து வந்ததில்லை.
அன்று நாம் கண்டதெல்லாம் ;
கறுப்பு நிறம் ஒன்றுதான் என
இன்று உணருகிறோம்
அதற்கு அப்போது
வெள்ளை என்று பெயர் வைத்திருந்தால் ;
இப்போது இருட்டின் நிறம் ;
வெள்ளை – வெள்ளையேதான்!

யாரோ உரசிக் கொண்டு
சென்றது போலவோ ; அருகில்
நின்றது போலவோ ; உணர்வு!

யார் அது ? ஆதாம் – ஏவாளா ?
அல்லது நாமேதானா ?
விடை காண்பதின் முன்பே
வெடித்தது எதுவோ ?
சிதறியது என்னவோ ?
பதறியது இதயம் !
அத்தனை பெரிய ஒலியை
பிரமாண்டங்கள் ஆயிரத்தை
அடுக்கி வைத்து ; அந்தப்
பிரமாண்டத்திற்கெல்லாம்
பெரிய பிரமாண்டம் வீழ்ந்த ஒலியை ;
காது செவிடுபடுவதற்கு முன்னால்
கேட்டிருக்கலாம் அல்லவா ?
ஆனால் கேட்கவுமில்லை, பார்க்கவுமில்லை.
அந்த ஒலி பதிவானதற்கு
அடையாளம் மட்டுமே
கோடு கிழித்தாற் போல
ஆரம்பத்தில் சொன்னபடி
கோடி – கோடி – கோடி
ஆண்டுகளுக்குப் பிறகு தெரிந்தது !
கோழிக் குஞ்சுகளை அடைத்து வைத்துள்ள
கூடைக்குள்ளிருந்து கிளம்பிடும் சப்தம் ;
இப்போது கேட்கிறது –
இதே சப்தம்தான்
பக்கத்திலிருந்தும் கேட்டது –
நமக்கு மேலும் கீழும்
நன்றாகவே கேட்டது !
அந்தக் கூடைகள் அன்றும் இன்றும் ;
ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன !
நாமிருக்கும் கூடையும் கூடத்தான் !
அதோ ஒரு கூடை ; அது ஏன்
நம்மைச் சுற்றுகிறது ?
இல்லை – இல்லை – நாம்தான் அதைச்
சுற்றுகிறோம் – சுற்றிக் கொண்டிருக்கிறோம் !

அடடே ; நமக்கு நாமே
சுற்றிக் கொண்டிருக்கிறோமே ;
நமக்குத் தொலைவில் தோன்றி
தொடர்ந்து சுற்றிக் கொண்டிருப்பன வெல்லாம் ;
நம்மைப் போல் கோழிக் குஞ்சுக் கூடைகளா ?
எல்லாக் கூடைகளும் சுற்றுகின்றனவா ?
நமக்கு எப்படித் தெரியும் ?
நாம்தான் இருட்டுக்குள்
இருட்டின் நிறமே எதுவென்று
தெரியாமல்,
குருட்டு நிலையில் கிடக்கிறோமே –
நம்மை நாமே சுற்றிக் கொள்கிறோம் –
அது நமக்குத் தெரியாத அசைவு!
அதற்கு யாரும் நம்மிடம் பெற்றதில்லை இசைவு!
நம்மைப் போல் வெடித்து
பிளவுபட்டதுகள் – நம்மைப் போலவே
பிரபஞ்சம் என்ற பெயரில்
சுழல்கின்றனவா ? வேறு எதனையும்
அல்லது யாரையும் சுற்றி வருகின்றனவா ?
நாம் மட்டும்தான் பிரபஞ்சமா ? எல்லாமே
சேர்ந்து பிரபஞ்சமா ?
எதுவோ இருந்து தொலைக்கட்டும் ;
இப்போது நமது பணி என்ன ?
நமக்கிடப்பட்ட கட்டளை என்ன ?
பணியோ ; கட்டளையோ – நாம்
நிறைவேற்ற முன்வராவிடினும்
நிறைவேற்றத் தொடங்காமல்
கிடப்பிலேயே போடப்பட்டு விடாமல்
இயங்குகிறது! இயங்குகிறது!
இயங்கிக் கொண்டே இருக்கின்றது.
எத்தனை கோடியோ ; அத்தனை கோடி
ஆண்டுகளாக ; அந்த ‘‘இயங்குதல்’’
தொடர்கிறது – இடை இடையே
ஏதோ அதிர்வுகளால் என்னவோ ; என்னென்னவோ

மாறி மாறி நடைபெறுகின்றன –
அதை நாம் பிறகுதான்
அறிந்து கொள்ள முடிகிறது–
முன்னாலே அறிந்து கொண்டாலும்
அதனைத் தடுத்திடும் வலிமை நமக்கு
வழங்கப்படவில்லை –
வழங்குவதற்கென்று யாரும்
இல்லாதபோது ; எப்படி வழங்கப்படும் ?
யார் வழங்குவார்கள் ?
நான், நீ உட்பட – அதாவது நாம்,
கோடானுகோடி
ஆண்டுக்கு முன் வெடித்துச் சிதறிய
ஒரு கூடைக்குள் குஞ்சுகளாய் இருந்தோம், இருக்கிறோம் ;
நமது கூடையைப் போல!
இதோ உவமையே
சொல்லுகிறேன் –
சில்லென்று மென் காற்று வீசும் கடற்கரையில்
காற்றுக் கொப்புளங்களைச் சிறுவர்கள்
ஊதி ஊதிப் பறக்க விடுகிறார்களே ; அவைகளும்
வெடிக்கும் வரையில் பறக்கின்றனவே ;
பலூன்களைப் போல!
அவற்றில் ஒன்றுதான் நாம் ஏறியிருக்கும் –
ஏற்றப் பட்டிருக்கும் – ஆகாயக் கூடை –
அந்தக் கூடையைக் காற்று அலைக்கழித்து ;
கடல் நீர் மோதிக் குலைத்து, கடற்கோள் –
புயல், சூறாவளி யென இயற்கையின் சண்ட மாருத
எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து நிலைத்தது
போக எஞ்சிய துண்டு துணுக்குகளை
எட்டிப் பிடித்துக் கொண்டு தான்
தொங்குகிறோம் –
அந்தத் தொங்கலில் நம்மைத்
தற்காலிகமாகத் தாங்கிப்
பிடித்துக் கொண்டிருப்பதும் ;
தாக்கித் தகர்த்துக்

கொண்டிருப்பதும் ;
நம்மால் அறியப்பட்டுள்ள
இயற்கையேதான் –
அதன் படைப்பில்தான்
அன்றும் – இன்றும் – நாம்
உருவானோம் – நமது கூடுகள் ; ஆம் –
கோழிக் குஞ்சுக் கூடுகள் ;
குக்! குக்! குக்! என்ற
கோரஸ் ஒலியோடு கூடிய கூடுகள்!
அவற்றில் முதல் கூடு ; குமரிக் கண்டமா ?
ஆப்பிரிக்க நிலமா ? வேறு ஏதாவதா ?
கண்டு பிடித்த காலம் எது ? –
கற்காலமா ? பொற்காலமா ?
மனிதனே ; அதாவது நானும் நீயுமே
தோன்றாத – நாம் தோன்றாத
காலத்தில் கற்காலமாவது பொற்காலமாவது ?
நாம் தோன்றியதுதான் எப்படி ? –
குஞ்சு, கோழியாயிற்று!
கோழி ; முட்டையிட்டது!
முட்டையிலிருந்து குஞ்சு, வந்தது!
எது முதலில் ? முட்டையா ? கோழியா ?
இதற்கான விளக்கம் ;
பரிணாம வளர்ச்சி என்பதுதான் விரித்துரைக்க வல்லது!
தாவர வித்துக்களும் ஒரு வகையில் முட்டைகள் தானே!
முட்டையென ஒன்று உருவாகிறது முதலில் –
முட்டைக்குள் கோழி மட்டுமல்ல ;
மனிதன் கூட முட்டைக்குள்ளேதான் உருவாகிறான் –
முட்டையென்பது கோழி முட்டை மட்டுமல்ல ;
அது போலப் பறவைகளிடும் முட்டையுமல்ல ;
விந்தின் ஒவ்வொரு துளியிலும் எத்தனையோ
இலட்சக் கணக்கான முட்டைகள் –
அவற்றில் தேவையான முட்டைகளை மட்டுமே
பயன்படுத்திக் கொண்டுதான்,

எந்தவொரு கருவும் உருவாகிறது –
உருவான இடத்துக்குத் தக்க ;
பரிணாம வளர்ச்சி அடிப்படையில்
பறவையாகவோ, விலங்கினமாகவோ,
ஊர்வனவாகவோ, மனிதனாகவோ உருப்பெறுகிறது!
குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றால் ;
படிமுறை வளர்ச்சியெனப்படும்
பரிணாம வளர்ச்சியில் வந்தான் என்று
கொள்ள வேண்டுமே யல்லாது ;
இப்போது காணப்படும் குரங்குகள் ஏன்
மனிதராக மாறவில்லை என்று கேட்க முடியுமா ?
நான் முன்பே ஒரு முறை குறிப்பிட்டது போல –
சுவர் எழுப்பிட சேறு குழைக்கிறோம்–
குழைக்கப்பட்ட சேறு கொண்டு
சுவர் எழுப்பியது போக ; எஞ்சியுள்ள சேறு ;
சேறாகத் தானே இருக்க முடியும் –
அந்தச் சேறு சுவரென
அழைக்கப்பட முடியாதல்லவா ? –
சரி ;
முட்டை கோழியாகிறது என்றால்
முட்டை எப்படி உருவாகிறது ? இதற்குப் பதில் ;
சேறு எப்படி உருவாகிறதோ ; அப்படித்தான்
முட்டையும் உருவாகிறது என்பதாகும்.
களி மண் – அல்லது சுவர் மண் – தண்ணீர்
இவை கலந்தால் சேறு உருவாவது போல –
முட்டை உருவாவதற்கும்
சில கலப்புகள் தேவைப்படுகின்றன.
முட்டையிலிருந்து முட்டைக்குத் தேவைப்படுகிற ;
முட்டையை உருவாக்கக் கூடிய
சத்துகள் உதவி புரிகின்றன –
அந்த முட்டையிலிருந்துதான் கோழி –
அது போலத்தான் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியில்
மனிதனாக வளர்ந்தவனுமாவான்!
அவன் தோன்றியது குமரிக் கண்டமா ?

ஆப்பிரிக்காவா ? – இது
மனித வரலாற்றுக்குத் தேவையான
கேள்வி மட்டுமல்ல ;
உலக வரலாற்றுக்கும் தேவையான கேள்வி!

‘‘இந்தியா தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றை உள்ளடக்கிய பெருங்கண்டமாம் இலெமூரியாவில் தோன்றிய மனிதன்தான் முதலில் நாகரிகம் பெற்ற மனிதன்’’ என்று 1974 ஆம் ஆண்டு கோந்தர ராவ் எனும் சோவியத் அறிஞர் ‘‘மூன்று கடல் புதிர்’’ (The Riddles of three oceans) என்ற நூலில் கூறியுள்ளார் எனினும் ; ‘இலெமூரியா’’க் கண்டம் உடைந்து இன்றைய கண்டங்கள் ஏறத்தாழ இன்றுள்ள நிலையில் ஒரு கோடி ஆண்டுக்கு முன்னரே உருவாகிவிட்டமையால், இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் (பனியூழியில்) கடல் மட்டம் தாழ்வாக இருந்தபொழுது குமரிக்குத் தெற்கே நிலப்பகுதியாக இருந்த கடல் கொண்ட தென்னாடே (குமரி கண்டமே) மாந்தன் பிறந்தகம் அல்லது மாந்தன் மொழி, நாகரிகம் பிறந்தகம் என்பது பொருத்தமான முடிவாகும் என்பதே ஆய்வின் முடிவாக’’ அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,
நதிகளின் உற்பத்தி இடத்தையும்
அவை ஓடுகின்ற தடத்தையும் –
கடலையும் – நகரையும்
மாற்றி அமைத்திடும் மகத்தான வலிமையை ;
பூகம்பக் கரத்தினாலும், புயல் வேகத்தினாலும் ;
கடற்கோளினாலும் காட்டுகின்ற
இயற்கையை எதிர்த்து நின்றுதான்
இத்தனை காலமாக மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.
மனித இன நாகரிக வளர்ச்சி உலகில் ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் – சீராக அமைந்திட முடியாது – அதையொட்டித் தான் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்,
‘தொழில் திறனும், திருத்தமான மொழி பேசும் ஆற்றலும், குமரி நாட்டு மாந்தரிடையே வளர்ந்த போது ; முறையே வேளாண்மைப்

பெருக்கமும், வாணிபப் பெருக்கமும் , நகரமைப்புக் கலைகளும் மேன்மையுற்றன'' என்றும்,

'மொழி செம்மையாகப் பேசப்பட்ட நாகரிக வளர்ச்சிக் காலமான இக்கால எல்லையில் சித்தியரின் முன்னோரும், சுமேரியரின் முன்னோரும், குமரி நாட்டிலிருந்து பிரிந்து போயிருக்கக் கூடும்'' என்றும் குறிப்பிடுகிறார்.

குமரிக் கண்டம் ; மனிதன் முதலில் தோன்றிய இடம் மட்டுமல்ல ; மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் விளங்கியது என்பதையும் – படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்த அடிப்படையில்தான் வின்சென்ட் ஸ்மித், பேராசிரியர் சுந்தரனார் போன்ற அறிஞர் பெருமக்கள் இந்திய வரலாறு வடக்கேயிருந்தல்ல ; தெற்கே தமிழகத்திலிருந்து எழுதப்பட வேண்டுமென்று கூறினார்கள்.

இப்போது அதையும் சற்று மாற்றிக் கொண்டு இந்திய வரலாறு மட்டுமல்ல "மனிதன்தோன்றி இந்நாள் வரை" யிலான உலக வரலாறே – மனித குல வரலாறே தெற்கேயிருந்துதான் எழுதப்பட வேண்டுமென்ற கருத்து உறுதிப்படுகிறது என்றுதான் கூற வேண்டியுள்ளது. இதற்கேற்பவே

"காலப் பேழை" யை "கவிதைச் சாவி"

கொண்டு திறந்து காட்டி வருகிறேன்.

தேய்ந்தது போக மிச்சத்தைத் தேடுகின்றோம்!

வகைப்படுத்தி வரலாறு தொகுத்து
வழங்குதற்கு வல்லுநர் யாரும் ; தமிழர்க்கு
வாய்க்காத காரணத்தால் ;
கல் வெட்டுக்களும், காவிய காப்பியங்களும்
காலமாகாத இலக்கியச் சான்றுகளுமே,
அந்நாள் தொட்டு இந்நாள் வரையிலான
அருந்தமிழர் வரலாறாய் அமைந்த தன்றோ!
எல்லார்க்கும் முற்பட்ட
எழுச்சி மிகு பாண்டிய மன்னன்
நெடியோன் என்போனும்,
மேருமலை உச்சி வரையில்
ஏறு நடை போட்ட சோழன்
கரிகால் பெருவளத்தானும்,
கண்ணகி சிலைக்குக்
கல் எடுக்க இமயம் சென்று,
கனக விஜய மன்னர்களை வென்ற
சேரனாம் செங்குட்டுவனும்,
மூவாயிரம் ஆண்டின் முன்னே – நம்
மூதாதையர் எனும் சரித்திர
முத்திரை பெற்றவர்களாம்.
கங்கை, வங்கம், கலிங்கமெனக்
களம் பல கண்டு பகை வென்றவர்களாம் – நம்
கண் மூடினும் – அவர் பெயரை
மண் மூடாதெனும்
வரலாற்று நாயகர்கள்! அவர்தம்
வழித் தோன்றல்கள் ; எத்தனையோ
சேர, சோழ, பாண்டியர்களாம்!

“விண்ணை இடிக்கும் தலை இமயம் – எனும்
வெற்பை அடக்கும் திறலுடையார் – சமர்
பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார் – தமிழ்ப்
பார்த்திபர் நின்ற தமிழ்நாடு” என்றும்,

“சிங்களம், புட்பகம், சாவகம் – ஆகிய
தீவு பலவினும் சென்றேறி – அங்கே
தங்கள் புலிக்கொடி, மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்ட தமிழ்நாடு” என்றும்,

“சீனம், மிசிரம், யவனரகம் – இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக் – கலை
ஞானம், படைத்தொழில், வாணிகமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு” என்றும்,
பாரதி பாடியுள்ளவை கவிதைகள் மட்டுமல்ல ; தமிழர்
வீரம், விவேகம், வாணிபம், கலைஞானம் – இவை
ஆழ்கடல் தாண்டியும் ஆதிக்கம் செலுத்தியவை என்பதற்கு
அசைக்க வொண்ணா ஆதார விதைகளுமாம்!

இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின்,
இன்னும் அமெரிக்கப் பகுதிகளிலும்
ஏலம், சுமேர், எகிப்தியர்களுடனும்
நாகரிகத் தொடர்பு நம் திராவிடர்க்கு உண்டு – என
எவர்தான் மறுத்து வென்றுள்ளார்?

கருப்பு வைரம் என்று நாம் இங்கே
விருப்பமுடன் இரும்பினைப் புகழ்வது போல்
மெக்சிகோ வாழ்ந்த மக்கள் இனம் ;
‘மாயன்’ நாகரிகத்தைப் போற்றித்
திராவிட நாகரிகம் அதுவென ஏற்றி – அவர்தம்
திடமான கருப்பே அழகு திகழ் நிறமென்கின்றார்.

“நிக்ரிதோ சிந்தோ” என்றால் அவர் மொழியில்
‘கருப்புதான் கவின் மிகு நிறம்’ எனப் பொருளாம்.

எழுத்தும் நாகரிகமும் எகிப்தியர் கற்றது
குமரிக் கண்டத் தமிழர் வழங்கிய கொடையாகும்.
மெசபடோமியா நாகரிகம் மேன்மையுற்றதும்
எலாமியர் என்போர் ஏற்றம் பெற்றதும்
அழிந்த குமரிக் கண்டம் அழிவதற்கு முன்பு
பொழிந்த நாகரிக நறுமலர்ப் பெருமழையே,
காரணம் என்பர் வரலாற்றாய்வு கற்றறிந்த
கள்ளமிலா நல்லறிவாளராம் நடுநிலையாளர்!

"மத்திய தரைக்கடல், குமரிக் கண்டம், சிந்து வெளி,
எகிப்து, சுமேரியா, எங்கணும் பரவியது ;
தமிழர் நாகரிகமே" என்று, தக்க சான்று பகருகின்றார்.
தகுதி மிகு இராமச்சந்திர தீட்சிதர் என்பார் ;
"தமிழர் தோற்றமும் பரவியதும்" என்ற நூலில்!

திராவிட இனத் தமிழர் நாகரிகம் பண்பாடு
திக்கெட்டும் பரவியிருந்ததற்கும் – அவர்
திறப்பாடு ஓங்கி வளர்ந்துள்ளதற்கும்
தெளிவுமிக்க சான்றுகள் இருந்த போதும் –

தேய்த்தரைத்த சந்தனத்தை யாரோ எவரோ
தேகமெல்லாம் பூசிக் கொண்டு ; திருவிழா கொண்டாடவும்
தேய்ப்பதற்குப் பயன்பட்ட சந்தனக் கட்டையில்
தேய்ந்தது போக மிச்சத்தையாவது – நம்
தமிழர்க்குப் பயன்படுத்த
தேடுகின்றோம் ; தேடியலைகின்றோம்!
அதுதான் இந்தக் காலப் பேழை!

வருந்தத்தக்க வரலாற்று நிகழ்ச்சி!

சேரலாதன் பெற்றெடுத்த செல்வன்
செங்குட்டுவன் என்பதும் – அவன் தாய்

கரிகால் சோழன் மகள் நற்சோணை என்பதும்
சிலப்பதிகாரம் செப்புகின்ற செய்தியாகும்.

பதிற்றுப் பத்துப் பதிகம் பகருவது என்னவெனில் ; அந்தப்
பாவையின் பெயர் சோழ மகள் மணக்கிள்ளி என்பதாம்!

இரு பெயர் ஒருவர்க்கிருப்பது இயல்பே ஆனதால்,
இதனைப் பெரிதுபடுத்திக் குழப்பமுறத் தேவையில்லை.

இதைவிடப் பெரிய குழப்பங்கள் தமிழக வரலாற்றில் தலை காட்டும்.
முதலாம், இரண்டாம், மூன்றாம் கரிகாலர்கள் என மூவர் உண்டு ;

அந்த மூவர் பெற்ற வெற்றிகளும் ஒன்றோடொன்று மோதி
எதிலே யார் பெற்ற வெற்றி என்றறிய முடியாமல் திணறுவதும்
உண்டு!
வேறொரு குட்டுவன் போல 'வேல்கெழுகுட்டுவன்' என்பர் ; அவன்
வேறு யாருமல்ல ; சேரன் செங்குட்டுவனுக்கே மாறு பெயர்
என்றுரைப்பர்!

இங்கிலாந்தில் முதலாம் ஹென்றி தொடங்கி, எட்டாம் ஹென்றி
வரை ;
எத்தனை ஹென்றிகள் வரினும் ; காலமும் வரலாறும்
கச்சிதமாயிருக்கும்.

இங்கு நமக்கு இலக்கியமும் கல்வெட்டுந்தான் வரலாறாக
வாய்த்ததினால் ;
இயன்ற அளவே ஆய்வு செய்து, காலத்தை அறுதியிட்டுக் கூற
முடிந்ததென்பேன்!

இமயம் சென்று வென்ற இணையற்ற வீரன் ;
சமயம் வாய்த்த போதெல்லாம் தமிழர்க்குப் புகழ்சேர்க்கும் சேரன் ;

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்ட மாமன்னன்
மாமலையென நின்றே தன் இனம் காக்கும் மறத்தமிழன்

இவனை வெல்வார் யாருமில்லை ; என்ற பேச்சும் – எதிர்த்து
எவர் வரினும் வீழ்வார் என்ற சொல் வீச்சும்

எங்கும் நிறை நாதமாகி செங்குட்டுவன் புகழ் பரவக் கண்டு ;
பொங்குற்றார் பொறாமையினால் புவியாளும் மன்னர் சிலர்!

தணல் அனையப் பொறாமையும், தாங்க முடியா எரிச்சலும் ;
தமிழன் பெருமை கண்டு, தமிழனுக்குத்தானே ஏற்படும் ;

அந்த மன்னரில் ஒருவனாய் முளைத்தவனே மோகூர் பழையன்.
பழையன், பகை முடித்துச் சேரனைப் புதைகுழிக்கு அனுப்பிட ;
புதிய திட்டங்கள் வகுத்தான் – பொல்லாச் சதிகள் புரிந்தான்
போருக்கும் ஆயத்தமானான் ; போர் முரசும் கொட்டிவிட்டான்.

அவன் நாட்டு எல்லையிலே ஒரு தலைவன் அருகன் என்போன்
அதுவே நேரமென்று சேரனுக்குத் துணையாகப் பழையன் மீது
பாய்ந்தான்.

சேரன் மீது கொண்ட சினம் போல் ஆயிரம் மடங்கு மிகையாக
அருகன் மேல் சினம் கொண்ட பழையன், அவனை அழித்திட
எழுந்தான் முதலில் –

அந்தத் தாக்குதலுக்குத் தப்பிய தலைவன் அருகன் ;
பழையனை வீழ்த்தவும் ; மறக்க முடியாத பாடமாக

அவன் மானத்திற்கு அறைகூவல் விடுக்கவும் துணிந்து
சேரன் படையில் சேர்ந்துகொண்டு உடைத்தான் பழையன்
கோட்டையை!

செருமுனையில் சிங்க ஏறாகக் காட்சி தந்த
செங்குட்டுவன் ; மோகூரைச் சிதைத்துச் சீரழித்து

எங்குற்ற போதிலும் உனை விட மாட்டேன் என்று
பொங்குற்றெழுந்து பழையனையும் சிறை பிடித்து

மோகூரான் காவல் மரமாம் வேம்பினை
முற்றாக வெட்டிச் சாய்த்து ;

வெட்டுண்ட மரத்தை இழுத்து வர தன் ஆட்சிக்குக்
கட்டுண்ட மோகூரின் யானைகளை ஏவி விட்டு அந்தத்

தன்னேரிலாத் தமிழ் மன்னன் தனது
தலைநகர் திரும்பிச் சென்றான்.

அவன் திரும்பியவுடனே அருகன் ; தான் விரும்பியதை
நிறைவேற்றிக் கொள்ள – பழையனை பழி தீர்க்கக்

காவல் மரத்தைக் கட்டி இழுப்பதற்குத் தோதான வடமாகத் தன்
ஏவல் கேட்கும் வீரரை அழைத்து ;

பழையன் அரண்மனைப் பெண்டிரின் கூந்தலை அறுத்து
வடக் கயிறாகத் திரிக்கச் செய்தான் – அக்

கயிறுகள் கொண்டு காவல் மரத்தைக்
கட்டி இழுக்கச் சொன்னான் –

அது கேட்டுச் சேரன் ; தான் பெற்ற வெற்றியில்
கறை படிந்ததே எனக் கனல் கக்கினான் – அருகன் மீது!

“என் துணையைப் பயன்படுத்தி – அருகனே
உன் பகையைத் தீர்த்துக் கொண்டாய் ;

பழையன் மீது உனக்கிருந்த ஆத்திரத்தைக் காட்டுதற்கு –
படையனுப்பிப்
பழி தீர்த்துக் கொண்டாய் எனினும் ; நம்

பகை நாட்டுக் காவல் மரத்தைக் கட்டியிழுக்கப்
பண்பாட்டுக் கெதிராக ;

பழையன் குடும்பப் பெண்கள் கூந்தலை அறுக்கச் சொன்னது
பழி வாங்கும் செயல் என்பாய் ;

இல்லை! இல்லை!
இழி செயல்!
இழி செயல் என்பேன் நான்!”
என்றான் சேரன்.

பெரியார்-நூலகம் நூலகம் ★ அப்பத்தூர், சே.எண்.....

கவலை மிகக் கொண்டான் –
காவல் மரத்தை மட்டுமல்ல ;

காவலிலிருந்து பழையனையும்
விடுவித்துக் கவலை தீர்த்துக் கொண்டான்.

திராவிட இனத் தமிழரிடம் வீரம் இருந்தது, விவேகம் இருந்தது,
திக்கெட்டும் புகழ் மணக்கும் திறன் இருந்தது –

போரில் புலி என்கிற புய வலிமை இருந்தது ; பகைவனிடம்
புறமுதுகிடா மான உணர்வு மண்டிக் கிடந்தது!

நெஞ்சில் வேல்தாங்கி களச்சாவை சந்திக்கும்
அஞ்சாமை அணுப்பொழுதும் அகலாமல் இருந்தது

கலை ஆர்வத்தின் சிகரம் என்ற நிலை ; அலைகடல் தாண்டி
இருந்தது –
நிலை குலையாக் கொள்கை உரம் இருந்தது –

ஆனால்
ஆனால்
அந்தோ ; தமிழரிடையே
இன ஒற்றுமை என்ற
அந்த ஒன்றுதான் இல்லை என்பதற்கு
இந்த வரலாற்று நிகழ்ச்சி நம்மை
மிக வருந்தச் செய்யும் நிகழ்ச்சியன்றோ!

வீழினும் அவன் வெற்றித் திருமகனே!

வீரம், மானம் இரண்டுக்கும்
எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்ற

வெண்ணிப் போர் பற்றி
எண்ணிப் பார்த்திடில் – மீட்டிய

வீணையின் நரம்புகள் போல
வீரரின் நரம்புகளும் அதிரும் –

இதயம் விம்மும் –
இருவிழி, அருவிகள் ஆகும் –

பெருவீரன் கரிகால் சோழனுக்கும்
சேரலாதன் எனும் மன்னனுக்கும்

தஞ்சைக்கடுத்த தமிழ்ராம் – கோயில்
வெண்ணியில் நடைபெற்ற போர்

எண்ணிலடங்காப் பிணங்கள் வீழ்ந்து ;
திண்ணியராம் சேரர் சோழர் நேருக்கு நேர் நின்று

இருவருமே வேலும் வாளுமேந்தி
பொருதினர் அந்தக் குருதிக் களத்தில்!

கரிகாலன் எறிந்த வேல், பாய்ந்து சென்று
கண் மூடித் திறப்பதற்குள்

சேரனின் மார்பைத் துளைத்து
செங்குருதிச் சேற்றில் குளித்து – அவன்

முதுகுப் புறம் எட்டிப் பார்த்து
முடித்தது வீரவேந்தன் வாழ்வை!

மரணமடைந்தான் சேர மன்னன் என்று
மனமாரக் கூற மாட்டேன் – மானம்

உடைந்தது என்று பதைத்துப் போய் – தமிழர்
வழக்கிற்கு விதிவிலக்கு கோராமல்

‘வடக்கிருந்து’ உயிர் விடுவதற்குச் சேரன்
முடிவெடுத்ததால் மொழிந்தேன் அவ்வாறு!

வேல் கம்பும் வாளும் எடுத்துக் கொண்டு
விரைந்து செல்வேன் ‘வடக்கிருக்க’ என்றான் –

போரில் புறமுதுகிட்டு வந்த காயமல்ல – முதுகுப்
புறத்தே வேல் முனை வெளிப்பட்ட காயம் கூட

போரில் தனக்குற்ற அவமானமெனக் கற்பித்துக் கொண்டு
விழுப்புண்தான் என்று ஆறுதலோ, அகமகிழ்வோ கொள்ளாமல் ;

வீழ்ந்து விட்டான் சேரன் சாவில் ; வடக்கிருந்து – புகழ்
பூண்டு விட்டான் என்று புலவர் கழாத்தலையார் பாடினார்.

என்ன பாடல் அது ?

“முரசு ஒலிக்க மறந்தது –
யாழ் இசைக்க மறந்தது –
வட்டில்கள் பாலின்றி வறண்டு கிடக்கின்றன –
தேனைத் தீண்டுவாரில்லை –
உழவர் யாரும் கழனிக்குச் செல்லவில்லை –
ஊர்ப்புற வெளிகள் அனைத்தும்
வெறிச்சோடி விட்டன –
எங்கள் சேர மன்னன், மானம் காக்க
வடக்கிருந்து உயிர் விடச் சென்றதாலே!”

★

“மண்முழா மறப்ப, பண்யாழ் மறப்ப,
இருங்கட் குழிசி அவிழ்ந்து இழுது மறப்ப,
சுரும்பார் தேறல் சுற்றம் மறப்ப,

உழவர் ஓதை மறப்ப, விழவும்
அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப,
புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன்”

(புறம் 65) (கழாத்தலையார்)

கழாத் தலையார் இரங்கற் கவிதை இப்படிப் பாட
களம் அமைந்த வெண்ணியில் பிறந்த பெண்பாற்புலவர்

வெண்ணிக் குயத்தியார் என்பார் ;
கரிகாலன் வெற்றியைப் போற்றிப் பாடும்போது கூட ;

“நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே,
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலக மெய்திப்
புறப்புண் நாணி வடக்குஇருந் தோனே!”

(புறம் 66) (வெண்ணிக்குயத்தியார்)

எனக் குறிப்பிடும் குயத்தியார் ;
கரிகாலன் வெற்றி பெற்றுப் புகழ் பெற்றான்

சேரலாதனோ வடக்கிருந்து மானங்காத்தான் – என்று
கவிதை முத்தாரம் இருவருக்கும் அணிவிக்கின்றார்.

தீப் போல் இந்தச் செய்தி
திருநாடு முழுதும் பரவிடவே

திக்கெட்டுமிருந்து
திரண்டனர் சான்றோர்.

சிங்கமெனப் போரிட்டு வீழ்ந்த
சேரமானுடன் சேர்ந்தமர்ந்து

வடக்கிருந்து வாழ்வு துறக்கும்
விருப்பமுடன் விரைந்தனர் அவர்கள் –

“கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும் பெறலுலகத் தவனோடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு!”

(அகம் 55) (மாமூலனார்)

கரிகாலன் வெற்றிக்கான மகிழ்ச்சியொரு புறம்
சேரமான் வடக்கிருக்க முடிவு செய்த
மான உணர்வு கண்டு மனத்துயர் ஒரு புறம் –

போரில் வீழ்ந்தவரும் – வெற்றி கண்டவரும்
போற்றுதற்குரியவர்களே என்று

புகழ் மாலை சூட்டிய
புலவர்களின் பரந்த உள்ளத்திற்கு

ஈடு இணையென
எதைத்தான் காட்டிட இயலும்!

பண்பாட்டுக்கு ஊனம் எனில் பார்க்கவும் விரும்பார்!

கட்டிளங் காளையாக இருந்த போதே
கயவராம் சில பகைவர் மூட்டிய தீயில்

கணுக்கால் தீய்ந்து காவலையறுத்து விடுபட்டவன்
கல்லணையால் புகழ் பெற்றுக் காவிரிக்கும் கரை அமைத்தவன்

உறையூர் பூம்புகார் என
ஒப்பிலாத் தலைநகர் இரண்டு

கொண்ட கொண்டலாம் சோழன்
கரிகாலன் புதல்வி கட்டழகுச் செல்வி

ஆதிமந்தியார் அவளும் ஓர் கவியரசி
அரங்கில் ஆடுகின்ற நாட்டியப் பேரரசி

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என
மூன்று பேர் உடன்பிறப்புகள் அவளுக்கு ;

கரிகாலனுக்குப் பின் அவரிடையே
கலக மேதும் உருவாகக் கூடாதென்று

ஆதிமந்தி அரும்பாடுபட்டும் பயனில்லை ;
தமிழ் வழியை அவர்கள் தடமாகக் கொண்டாரெனினும் ;

தமிழர் வழி சென்று ஒற்றுமையின்றித்தான் செயல்பட்டார்.
தன் வழியைக் காதல் வழியாய் அமைத்துக் கொள்ள

தமிழ்க் கலையரசி ஆதிமந்தி ; தடந்தோளான் சேர மன்னன்
தழைக்கும் ஆடற்கலை வல்லான் ஆட்டனத்தி அன்பில் வீழ்ந்தாள்.

அரண்மனையில் அந்த உண்மை பூட்டிக் கிடந்ததால்
அணிமையிலும் தொலைவிலுமுள்ள இளவரசர் பலர் – அவளைப்

பெண்பார்க்கக் குவிந்திட்டார் ; எவரையும் தன்
கண்பார்க்க விரும்பாது எனத் தோழியிடம் தொடங்கி ;

விண் பரப்பை விஞ்சுகின்ற புகழ் பெற்ற கரிகாலன்
வேறு யாரை விரும்புகிறாய் எனக் கேட்டதற்கு

"வீரர்கள் கூத்தாடி மகிழும் விழாக்களிலும்
விலை மகளிரைத் தழுவியாடும் துணங்கைக்
கூத்துகளிலும்
அவனை நான் கண்டதில்லை.
ஆடற் கலை வல்ல பெண் தான் நானும் ;
அஃதேபோல்
இந்த வளையல்கள் நெகிழுமாறு என்
இதயம் கவர்ந்த ஆடவனும்
அக்கலையில் வல்லவனேயாகும்"

எனப் பொருள் தரும் பாடல் ஒன்றை
"மள்ளர் குழீஇய" என்று துவங்கி
மனப்பாடம் போல் சொல்லி முடித்தாள்.

அது கேட்ட கரிகாலன் ; ஆதிமந்தி–ஆட்டனத்தி மணவிழாச்
சேதிதனை அனைத்து மன்னர்க்கும் அனுப்பிவைத்து
நடத்திவைத்தான்.

பாதியில் முடிக்க வேண்டும் அவர்தம் காதல் வாழ்வையென்று
பஞ்சுக்காய் வெடித்தது போல் திகைத்துப் போய் – பல நாள்
காத்திருந்த

பாதகர் ஓரிருவர் கூடித் திட்டம் வகுத்தார்.
பக்கத்து வீட்டில், எதிர்வீட்டில் ;

பலாச்சுளை தின்னும்போது – எப்படிப்
பார்த்துக் கொண்டிருக்கும் எட்டிக்காய் இதயங்கள் ?
அதனாலே ;

தேள் கொடுக்கு போன்றோர் ; அவர் காதல்தனை
வாள் கொண்டு வெட்டுதற்கு

நாள் பார்த்துவிட்டார் ; நரி வேலை செய்து விட்டார்.
நடனக் கலைப் பயிற்சி முடித்து விட்டு

காவிரியில் புதுப் புனல் விழா நிறைவுறும் வரையில்
காதலரிருவரும் ஆடிக் களித்து விட்டு, பின்னர்

நள்ளிரவுப் பள்ளியறைக் காவியமும் படித்து விட்டு – அந்த
முள்ளில்லா ரோஜாவை முத்தமிட்டவாறு

அணைத்துத் தழுவி அயர்ந்துறங்கி விட்ட போது ;
ஆட்டனத்தியைக் கயிறு கொண்டு கட்டித் தூக்கி

ஆதிமந்தி விழித்துத் துரத்தியும் கூட
அவளையும் உதைத்துத் தள்ளி விட்டு ; "ஓ" வென

ஆர்ப்பரித்து ஓடுகின்ற காவிரியாற்றில்
அந்தோ ; அவனைக் கயிற்றில் ஆடும் பந்தாக வீசி விட்டார்.

அடையாளம் தெரியாத அற்பப் பதர்கள் ;
தரையாளும் மன்னன் மகளைத் தவிக்க விட்டுத் தப்பி விட்டார்.

குறையேதுமில்லாத குளிர் நிலா முகத்தினாள்
அலை மோதும் ஆற்றின் கரையோரம் ஓடுகின்றாள்

அனலாகக் கொதித்தபடி "அத்தான், அத்தான்" என
அழுதழுது உள்ளம் வெடிக்கின்றாள்.

அவனோ ஆற்றின் சுழலில் கயிற்றுக்குள் அகப்பட்டு
புயல் காற்றில் சிக்கிய துரும்பாகத் துடிக்கின்றான்.

கரிகால் மன்னன் காதுக்குச் செய்தி எட்ட ; தன்
கண்மணி ஆதிமந்தியைத் தேற்றுவதறியாது திகைக்கின்றான் –

அவளோ, ஆளனைக் கூவி யழைத்தவாறு
ஆற்றோரம் ஓடுகிறாள், ஓடுகிறாள்.

ஆவேச நடனம் ஆடுகிறாள், ஆடுகிறாள்.....அனல் வீழ்
அல்லித் தண்டாய் வாடுகிறாள், வாடுகிறாள் – அந்தப்

பாதி ராத்திரி வேளையில் ஆற்றில்
படகோட்டிடும் படுகிழவி ஒருத்தி

பதைத்தோடிக் கரையில் வீழ்ந்திட்ட
பாவை ஆதி மந்தியின் முகம் திருப்பிப் பார்க்கின்றாள்

“பளீர் பளீர்” என மின்னல் தாக்குகிறது
“சுளீர்” சவுக்கடி போல சுழன்றொலிக்கிறது இடியோசை.....

அரை விழி திறந்து நோக்கும்
ஆதிமந்தியிடம் அக்கிழவி ;

“நீ தானே யம்மா – என் பேத்தியாம், உன்
தோழி நிலவழகியிடம் – உனைப்
பெண் பார்க்கப் பலரும் வந்த போது ;

“மள்ளர் குழீஇய விழவினானும்,
மகளிர் தழீஇய துணங்கையானும்,
யாண்டும் காணேன் மாண் தக்கோனை ;
யானும் ஓர் ஆடுகள மகளே, என் கைக்
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த
பீடு கெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே.”

என்று கவி பாடியவள் ?” எனக் கேட்டதும் ;

தன் பாட்டு, தனித் தமிழ்ப் பாட்டினை
தள்ளாத கிழவி ஒப்புவித்தது கண்டு வியந்து
விம்மியழுது அவள் விழிகள் வடித்த கண்ணீர்
வெற்றி கொண்டது காவிரியை எனலாம்.

பரிதாப மேலிட்டுப் படகோட்டிக் கிழவி
பாசமுடன் தன் பெயரும் “காவேரி” என்றுரைத்து

பல்லில்லா பொக்கை வாயில் புன்னகை மலர ;
பத்திரமாய்ப் பாதுகாத்து தன் குடிலில் ஆட்டனத்தியை

படுக்க வைத்திருக்கும் செய்தி கூறி
பக்க மிருக்கும் அனைவரையும் மகிழ வைத்தாள்.

பாராளும் கரிகாலன் மருமகன் ஆட்டனத்தியை – தமிழ்ப்
பாட்டாளும் ஆதிமந்தியிடம் ஒப்படைத்தாள்.

இருவரும் ஆடி மகிழ்ந்து –
படகுக் கிழவியைப் பாடித் தொழுதார்.

கலையும் காதலும் அந் நாளிலேயே
நிலை பெற்ற பண்பாடு தமிழர்க்கு என

அறிவிக்கும் காவியமே
ஆட்டனத்தி – ஆதிமந்தி!

★ ★ ★

குறிப்பு : ஆதிமந்தியாரும் – ஆட்டனத்தியும் ;
ஒழுக்கமுடையோர் என்பது மட்டுமல்ல ;
அதற்கு ஊனம் விளையும் இடத்தைக் கூடக்
காண விரும்பார் என்பதே நமது பண்பாடு.

“பிறகேன் வினா?
என்பதே என் வினா!”

நான், நான், நானேதான்
முன்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன்

நான் நான் நானேதான் என்று
நா வளைவதும் நிமிர்வதும்

ஆணவத்தோடு அல்ல –
அடக்கத்தோடு – வெகு அடக்கத்தோடு –

இந்த ‘‘நான்’’ எப்படி வந்தேன்?
எங்கிருந்து வந்தேன்?

இந்தக் கேள்விக்கெல்லாம் மேலாக
அடிப்படையான கேள்வி ஒன்றுண்டு –

அது தான் ‘‘ஏன் வந்தேன்?’’ என்ற கேள்வி!
வந்ததால்தானே ‘ஏன் வந்தேன்’ என்று கேட்க முடிகிறது –

கேட்பதால் தானே விடை கிடைக்கிறது.
அதனால் கேள்வி முந்தியதா?

விடை முந்தியதா?
‘ஏன்’ என்றால் ‘இதனால்’ என்று விடை!

‘எப்படி’ என்றால் ‘இப்படி’ என்று பதில்!
முதலில் தோன்றியது முட்டையா? கோழியா?

இதற்கு விளக்கம் ஏற்கனவே வழங்கப்பட்டாகி விட்டது;
இப்போது எதிரேயிருப்பது; வினாவா? விடையா?

வினா இல்லாமல் விடை எழுமா ?
இதற்குப் பெயர் என்ன ?

இது வினா ?
பிரபஞ்சம் ; இது விடை !

இந்த விடை ஏற்கனவே இருப்பதால்தானே ;
அல்லது இருந்தது என்பதால் தானே –

எதையோ ஒன்றைப் பார்த்து இது என்ன என்று
வினவ முடிந்தது !

எதுவுமே இல்லாத போது வினா எழவில்லை.
வினா எழாததினால் விடை தோன்றவில்லை. எனவே

வினா – விடை எதுவுமே தேவையற்ற ஒரு நிலை –
அந்த நிலையிலேயே நானிருந்ததாகவும்

அந்த நிலையோடு நிழலாக ஒட்டிக் கொண்டு
ஒன்றல்ல – இரண்டல்ல – ஓராயிரமல்ல –

லட்சமல்ல – கோடி கோடி என
ஐநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு

இந்த உலகம் தோன்றியதென்றும் –
அதில் எண்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பு

உயிர் தோன்றியது என்றும் கண்டு பிடித்துக்
கூறப்படுகிறதே – அப்படித் தோன்றியதில்

முதல் உயிர் நான்தான் என்று கற்பனை செய்து
கொண்டு அந்த எண்பது கோடி ஆண்டுகளாக

நான் காற்றோடு காற்றாக மிதந்து கொண்டும்
நீரோடு நீராகக் கலந்து கொண்டும்

வெப்பத்தோடு வெப்பமாகவும் ;
குளிரோடு குளிராகவும் ;

இருளோடு இருளாகவும் ;
வெளிச்சத்தோடு வெளிச்சமாகவும் ;

விண்ணொடும் மண்ணொடும் விளையாடிக் கொண்டு
ஊர்ந்தும், நெளிந்தும், மண்டியிட்டுத் தவழ்ந்தும்,

நடந்தும் முன்னேறிக் கொண்டிருக்கிறேன்.
என் முன்னேற்றத்துக்கு முற்றுப் புள்ளி
வைக்கப்பட்டதாக யாரால் சொல்ல முடியும் ?
என்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பு கூட

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாகி” என்று
உயிரின வளர்ச்சியை உருகி உருகிப்

பாடியிருக்கிறாரே ; மாணிக்கவாசகர் –
அப்போதே முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருந்தால்

உமக்கும் எனக்குமிடையே இந்த உரையாடல் ஏது ?
என் பயணத்தில் ; இதனை நடைபயணம் என்பதா ?

நகரும் பயணம் என்பதா ? ஊர்ந்திடும் பயணமா ?
பறந்திடும் பயணமா ? பொதுவாகப் பயணம் என்பதே

பொருந்தும் என்பதால் ; பல கோடி ஆண்டுகளாக நடைபெறும்
என் பயணம் என்று மட்டும் சொல்கிறேன் – 500 கோடி

ஆண்டுகள் – அதில் முதல் உயிராக நான் ; எண்பது கோடி
ஆண்டுக்கு
முன்பு தோன்றினேன் என்பதை எப்படி யாரிடம் நிரூபிப்பது ?

அப்போதுதான் உம்மில் யார் இருந்தார் ; இனி
இப்போதுதான் யார் இருப்பார் ?

அதனால் பல கோடி ஆண்டு என்பது
ஒரு சமரச உடன்பாடு அல்லவா ? –

சரியான கணக்கில்லையே தவிர ; ‘கணக்கற்ற
ஆண்டுக் காலம்’ என்பது ஏற்கக் கூடிய கணக்குத் தானே!

பகவத் கீதையில் பரந்தாமன்,
“எல்லாம் நானே” என்று எடுத்துக்காட்டுகளை
அடுக்கிக் காட்டியது போல இந்த ‘நான்’ என்பதை
யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது –

படிமுறை வளர்ச்சியில் பின்னோக்கிச்
சென்று பயணத்தைப் பாதுகாப்பாக நடத்திக்
கொள்ளத்தான் முதலில் “புழுவாகி” எனப்
புறப்படுக என்கிறார்போலும் மாணிக்கவாசகர்!

இந்தப் பல கோடி ஆண்டுகளில்
என் பயணத்தில் எத்தனை எத்தனை படிம வளர்ச்சிப்
பட்டியல்களைப் பார்த்து விட முடிந்திருக்கிறது –

கி.மு. 12,000 ஆண்டு வரையில் இருந்ததாகக்
கூறப்படும் வட அமெரிக்காவையும் கிழக்கு
ஆசியாவையும் இணைத்திருந்த ஒரு பால அமைப்பு,
பனியூழியினால் மூழ்கிப் போனதையும் ; அந்நாள் வரையில்
வட அமெரிக்காவுடன் கொண்டிருந்த
கிழக்கு ஆசியத் தொடர்பு காரணமாக
அங்கே மாயா நாகரிகம் பரவியதற்கான
அடையாளங்களையும் என் பயணத்தில் ஒரு கூறாகவே
காண முடிகிறதே!

குரங்கிலிருந்து மனிதன் என்கிற வரையில்
படிம வளர்ச்சியின் தாத்பரியத்தை நான் புழுவாக இருந்த
காலந் தொட்டு ; உணர்ந்து தெளிந்து, உங்களுக்கும்
தெரிவிப்பதற்குப் பயணம் நடத்துகிறேன் ; ஊன்றுகோல்கள்
ஒன்றிரண்டல்ல ; பலவற்றின் துணைக் கொண்டு!

உலகு உள்ளிட்ட எண்ணற்ற
கோள்கள் உலவிடும் பிரபஞ்சம் ;
குடும்பக் கட்டுப்பாடு கடைப் பிடிக்காமல்
இன்னும் எத்தனை கோள்களைக்
குழந்தைகளாக உடைத்து உருவாக்கிடப்
போகிறதோ! பயணம் நிற்காமல்
போகப் போகத்தானே தெரியும் –

இதுவரையில் இத்தனை கோடி கோடி
ஆண்டுகள் நடத்திய பயணத்தில் ;
மண்ணில் நெளியும் புழுக்களையும் –
விண்ணில் சிறகு விரிக்கும் பறவைகளையும் –
வனத்தில் திரியும் விலங்குகளையும் –
ஊர்வன – நீந்துவன எனும் உயிரினங்களையும்
வயதால் இவற்றுக் கெல்லாம் இளைய
முழுமையானது என நம்மளவில் கருதிக்
கொள்கிற மனித இனத்தினையும் –
அந்த இனத்தின் பாகுபாடுகளையும் –
அவற்றில் ஒவ்வொன்றும்
போற்றும் பண்பாடுகளையும் ;

கண்டும்
களித்தும்
கவலைப்பட்டும்
கர்வமுற்றும்
கண்ணீர் வடித்தும்

பல்வேறு உணர்வுகளைச் சுமந்து கொண்டு
பயணம் நடத்துகிறேன் ; உம்மோடும் கூட!

முன் நோக்கிச் செல்லும் பயணத்தில் சற்றுப்
பின் நோக்கித் திரும்பிப் பார்க்கிறேன் –

இதைத் தான் "அரிமா நோக்கு'' என்பர் அறிஞர் –
அடியேன் நோக்கு அறியா நோக்காகக் கூட இருக்கலாம் ;

இதில் தன்னல நோக்கு இல்லை,
தமிழர் வரலாற்று நோக்கும் இருப்பதால்,

குறுகிய நோக்கென்க் கொள்ளாமல் ; என்
கொள்கை நோக்கெனக் கொள்வீர்!
நோக்கின் காரணம் ; விடையாக
விரிந்து நிற்கிறது –
"பிறகேன் வினா?'' என்பதே என் வினா!

பெண்ணியத்தின் திண்மை கூறும் குண்டலகேசி!

வணிகப் பெருவேந்தன் கோவலன் ; அவன் காதல் துணைவி
வாய்மை நிறை நடனவல்லி மாதவி ; வாழ்வின் திருவிளக்கென

வாய்த்ததிரு கண்ணகியாம் பெண்ணரசு ; இம்மூவரின்
வழித் தோன்றலாய் வந்துதித்த, வற்றாப் புகழ்

மொழிக்குல மங்கை நல்லாள் ; மன்பதையில் எவர்
பழிப்புக்கும் இடம் தராத பற்றற்ற துறவி மணிமேகலை –

இவர்களை இணைத்து ஒலிக்கும் சிலம்பும் மேகலையும்,
இணையென ஒளிரும் சீவக சிந்தாமணியும்,

அருந்தமிழ் இலக்கியப் பனுவல் வளையாபதியும்,
ஆணாதிக்கம் வீழ்த்திய ஆரணங்கு பற்றிய குண்டலகேசியும்,

சமணம், பௌத்தம், சைவம், வைணவமென்று – பெருஞ்
சமர்கள் விளைந்த நிலையில் சங்கம் கண்ட புலவர்களும்

சகல கலை யுணர் சான்றோர் ஆன்றோர்களும்
சமத்துவம் போற்றிடக் காலம் தேவைப்பட்டதெனினும்

அதற்குள் அய்ம்பெருங்காப்பியங்களில் இரண்டை
அந்தோ ; தமிழ் நிலம் இழந்தது விந்தையே!

‘வளையாபதி’ வளைந்தது எங்ஙனம் ?
‘குண்டலகேசி’யின் வடிவு குலைந்தது எவ்விதம் ?

காலமெனும் கரையான் தின்றதோ ; தமிழரின்
கவனக் குறைவுதான் காரணமாய் நின்றதோ ?

அறுபது ஆண்டுகளுக்கு மேலிருக்கும் ;
அடியேன் அயராது தேடித் திரிந்து –

அதன் பின்னர் அகப்பட்டது கிழிந்த ஏடொன்று – அதில்
அரண்மனை குருநாதரின் ஆசை மகன் ஒருவன்

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல் அனைத்தும்
கலையாக வாழ்வில் கொண்டு காலங் கழித்தவனைச்
சிறை பிடித்துக் காவலில் வைப்பதற்குக் கை கால்
விலங்கிட்டு வீதியிலே இழுத்துச் சென்ற போது, கண்டாள் ;

குன்றிரண்டை மார்பில் சுமந்த மங்கை
குண்டலகேசி யெனும் குணவதி 'பத்தரை' யென்பாள்.

அவளை ; அவர் தந்தை அமைச்சர் பெருமான்
அமுதம் என்றே அழைப்பார் அன்பு பொழிந்திட !

அந்த அமுதம், விஷத்தின் மீது விருப்பம் கொண்ட கதையாக ;
விலங்கொடு சென்ற விலங்கின் அழகில் வீழ்ந்து தொலைத்தது.

தந்தையாம் அமைச்சரின் தாளைப் பணிந்து – அவர்
தயவு பெற்று அரசனின் தண்டனையைத் தவிர்க்கச் செய்து ;

பாம்பின் பளபளப்பில் மனம் பறி கொடுத்த பத்தரை – அவன்
பள்ளியறைப் பாவையாகி அள்ளிச் சுவைத்தார் ; இருவருமே
இன்பரச பானத்தை !

கட்டிலறை ஊடலில் ஒருநாள் கட்டித் தழுவியிருந்தவள் ;
"கள்வன் தானே நீ !" என்று கடுமொழியல்ல ; காதல் மொழி தான்
பேசினாள்.
கடுங்கோபம் கொண்டவன் அதனைக் காட்டிக் கொள்ளாமல் –
அவளின்
கனதனங்கள் அழுந்த அணைத்துக் கொண்டு ;

அன்பே வா ; அருகில் உள்ள மலையுச்சி கண்டு வரலாமென்றான்
அழைத்தவுடன் அவளும் ஒட்டிக் கொண்டாள் ;

சிறகடித்துப் பறவை யிரண்டும்
சிகரத்தை எட்டியவுடன் –

"சீ! சீ! நீ என்னைக் கள்வன் என இகழ்ந்தாய், அதனால் ;
சிகரத்திலிருந்து தள்ளப் போகிறேன் – சிதறப் போகிறாய்"
என்றான்.

சில நொடிகளிலே உண்மை புரிந்து கொண்ட அந்த
சீதளப் பூ மாலை உள்ளத்தினள் ;
வஞ்சகத்தை, சூழ்ச்சிதனை வாள் கொண்டல்ல ;
வஞ்சகத்தாலேதான் வீழ்த்த வேண்டுமென –

"ஆருயிரே! அருமருந்தே! என் ஆவியினை நீ
அகற்று முன்னர் ; கொழுநனைத் தொழுதெழ

கொஞ்ச நேரம் கொடு" எனக் கேட்டாள் –
கொடுத்தான் அந்தக் கொள்ளைக்காரன் – குணக்கேடன்!

பற்றுக் கொண்டவள், பக்தி கொண்டவள், பதியின் மீது – எனும்
பாசாங்கு நாடகத்தைத் திறமையுடன் நடித்துக் காட்டி

பாதி சுற்றி முடிந்தவுடன் ; அந்தப்
பாவியின் ஆவி போக்கிடத் திட்டமிட்டு

மறு பாதி சுற்றுக்கு அவன் காத்திருந்த போது ;
மலைப்பாறை உச்சியிலிருந்து தள்ளிவிட, அந்த

மாபாவி மடிந்து போனான் –
மமதை கொண்ட ஆணாதிக்கத்திற்குப்

பெண்ணியத்தின் திண்மை சொன்ன
குண்டலகேசி இலக்கியம் இன்றில்லை எனினும் ;
இலக்கணமாய் எஞ்சி இருக்கின்றாள் ;
இந்தக் குண்டலகேசி – இவள்,

புத்தமதக் கொள்கையினைப் பரப்ப
எத்தனையோ வாதங்களில் வென்று

பின்னர் ;
முற்றுப் பெற்றாள் வாழ்க்கையிலே அன்று!

ஈராயிரம் ஆண்டின் முன்னே இந்தத் தமிழ் நிலம்!

சற்றொப்ப இரண்டாயிரம் ஆண்டுக்கு முந்தைய
சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தால்

சரவிளக்கு கொளுத்தியது போல சமுத்திரத்தில்
சகல நாட்டுக் கப்பல்களும் வரிசையாக நிற்கின்ற

காட்சி தெரிகிறது, கண்ணிரண்டும் ஒளிர்கிறது –
கலை, நாகரிகம், பண்பாடு இவற்றி லெல்லாம் ;

காதும் குளிர்கின்ற தமிழகத் தகவல்களையும் தருகின்றேன்.
கடல் வாணிபம், கடல் கடந்த வெளிநாட்டுறவு, கலை இலக்கியம்,

களம் பல கண்டு வாகை சூடுகின்ற ஆட்சியும் மாட்சியும்,
கனிக் குலையாகக் குலுங்குவதை நானும் உம்மோடு
ரசிக்கின்றேன்!

கண்ணகியின் கற்பும் மாதவியின் மாண்பும் கவிஞர் பெருமான்
காரிக் கண்ணார் வாயிலாக பாண்டிய சோழ மன்னரிடை வளர்ந்த

பற்றும், பாசமும், நட்பும், நாட்டுறவும்
முற்றும் அறிந்து மகிழ்ந்துள்ளோம்.

காவல் அரண் – கட்டுப்பாட்டுத் திறன் – இவையெதிலும்
காவிரிப்பூம்பட்டினத்தில் இல்லை முரண் ;

கலைச்செல்வமெனிலோ கற்பனைக் கெட்டாப் புகழ் மாதவி ; நாம்
மலைத்திடுமளவுக்குப் பூட்டியிருந்த அணிமணிகளின்

பட்டியலைப் பார்த்தாலே மயக்கம் வரும் ; அவற்றில்
சிலவற்றையாவது சிலப்பதிகாரத்தில் காண்போமே!
இதோ ;

நிலவு, அணிமணி பூட்டித் தன்னை அலங்கரித்துக் கொண்டு
நிற்கிறது நிலைக்கண்ணாடி முன்னால் என்று ;

கற்பனை செய்து கொண்டு காணுங்கள் ஒளிந்து கொண்டு!
காலுக்குப் பொருத்தமாகப் பரியகம், சிலம்பு, பாடகம்

அரியகம், சதங்கையெனும் அணிகலன்களுடன்
அழகிய தொடைகளில் இறுக்கமுறக் 'குறங்கு செறி'யாம்!

முப்பத்திரண்டு விரிசிகையுடன் முத்துக் கோவை ;
முன்னெழிலைக் காட்டி இடையில் ஒளிரும் உடையில் மேகலை

தோளில் தூயமணி சேர் வளையுடன், கண்டிகையாம் ;
தோடு ; மாணிக்கத்தில்! சூடகம், வைரம் பதித்து!

மயிரொழுங்கமைந்த முன் கையில் வளைகள் பல வகை –
வயிர வளையலுடன், சங்கவளை, தங்கவளை, நவமணி வளை

பவள வளையெனப் பலவித வளைகள் அணிந்தவளின்
பொன்னகை அனைத்தையும் மிஞ்சும் புன்னகை முகத்தில்!

வாளை மீனின் வாய் பிளந்தன்ன முடக்கு மோதிரம் –
வண்ணத்தில் சிறந்த செந்நிறம் மிளிரும் மாணிக்கக் கணையாழி ;

காந்தள் விரல் கவின் நிரம்ப, கதிரொளி வீசும்
பாந்தமுள்ள வைரங்கள் சூழ் "மரகத்தாள் செறி"

திண்ணியதும் நுண்ணியதுமான சங்கிலிகள்
பூணும் கரமும், பூ வேலை நிறைந்த சவடி, சரப்பணியும் –

முத்தாரக் கழுத்தில் வித்தாரமாய்ப் பின் தொங்கும் கோவை,
கொத்தாகத் திரண்டு திகழும் சந்திரபாணி வைரக் குதம்பை,

இந்திர நீலத்துடன் இடையிடையே காணப்படும் எழிலார் சங்கும்
மந்திரமோ மாயமோ என மாதவியின் அழகுக்கு அழகான

தொய்யகம், புல்லக மெனத் தொடரும் அணிமணிகள்
மெய்யாகத் தமிழக நாகரீகத்தின்

மென்மையை உணர்த்துகின்ற அடையாளச் சின்னங்களன்றோ!
மெல்லிய பூங்காற்றை நுகருகின்ற உணர்வன்றோ ; நம் நெஞ்சில்!

அது மட்டுமா ?

அந்த அழகரசி மாதவி ஆடிய
அரங்கின் அமைப்பு எவ்வாறு இருந்தது ?

சிற்ப நூலோர் கூறும் இயல்புகளிலிருந்து
சிறிதும் வேறுபடாத இடமாகத் தேர்வு செய்து

பொதிய மலையில் பிறந்து வளர்ந்த மூங்கிலை ;
கணுவுக்கு கணு இடையிடையே

சாண் அளவு விட்டுச் சரியான
அளவாக வெட்டிக் கொணர்ந்து,

கைப் பெருவிரல் இருபத்து நாலு எண்ணிக்
கணக்கெடுத்து கச்சிதமாக நறுக்கி ;

அரங்கம் அளக்கும் கோலாக
அதனையே பயன்படுத்தி

ஏழு கோல் அகலம்,
எட்டுக் கோல் நீளம்

ஒரு கோல் உயரம் உள்ளதாக
நான்கு கோல் நல்ல இடைவெளியுடனே

‘நிலை விளக்கு’, ‘உருவு திரை’ இத்தனையும்
கலையழகு குறையாமல்

அமைத்தனர் ஆடலரங்கு என்பதாக,
அதிகாரம் அறிவிக்கின்றது ; ஆம்

சிந்தை கவரும்,
சிலப்பதிகாரம் ; அறிவிக்கின்றது!

அடடா ; அரங்கேறுவதற்குத் தான்
ஆடல் ஆசான் என்றும், இசை ஆசான் என்றும்,

இயற்றமிழ் ஆசான் என்றும், இன்னும்
குழலாசான், யாழ் ஆசான் என்றும்

குறையொன்றுமிலா ஆசான்கள்
நிறை கலை வல்லுநர்கள் எத்தனை பேர்!

கலை வளர் தமிழகமாய் இருந்ததற்கும் ; தனது
நிலையில் தளரா நேர்மை கடைப்பிடித்ததற்கும்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் எனும்
உயர் தனிக் கொள்கைக்கும் –

ஓர் எடுத்துக்காட்டாக மாதவியாள்
விளங்கியது மட்டுமல்ல ;

கலைத்துறை யொன்றும் கற்புக்குப் பகையல்ல எனும்
நிலையெடுத்து வென்றதற்கும் –

ஆளன் தனை விடுத்துச் சென்ற பின்னர்
துறவு பூண்டு தனியாக நின்றதற்கும்,

மகள் மணிமேகலையைத் தன்னைப் போலவே
மனத் தூய்மை கொள் மாதரசாக வளர்த்த மேன்மைக்கும்,

எடுத்துக்காட்டு மட்டுமல்ல இந்த இலக்கிய வரலாறு ;
ஈராயிரம் ஆண்டின் முன்னே ;

எத்தனையோ நாடுகள் இருளில் மூழ்கிக் கிடந்த போது ;
அத்தனை நாட்டுக் கடலோரங்களிலும் ஒளி காட்டி

கலை இலக்கிய நாகரிகப் பண்பாடு பரப்பும் கலங்கரை விளக்கமாய்
நிலை பெற்றிருந்தது தமிழ்நாடு என்ற கருத்தினை
உணர்த்துவதுமாகும்!

கண் உறங்கும் தமிழனின் முகத்தில்
கண்ணீர் தெளித்து எழுப்புவதுமாகும்!

★ ★ ★

பரியகம் = பாத கிண்கிணி
பாடகம் = காலணி
அரியகம் = காற்சரி யெனும் அணிகலன்
குறங்கு செறி = தொடை அணி
விரிசிகை = மாதர் இடையணி
கண்டிகை = கழுத்து நகை

கலாச்சாரத்தின்மீது கண்ணகி காட்டிய அழுத்தம்

கண்ணகி என்றால் கடுகளவு இன்பமும்
கடுகின் தோல் அளவு இன்பமும்

வாழ்வில் காணாத கவலையின் வடிவம் என்றும்
வாட்டம், வேதனை, வருத்தம், துன்ப, துயரம்

இவற்றைத் தவிர இல்வாழ்வின் சுகம் என்றால்
என்னவென்றே தெரியாமல் இறுதிவரை இருந்தாள் என்றும் ;

இன்ப அருவியில் மாதவியுடன் நீந்திக் களித்து
இதழ்கள் ஒட்டிக் கிடக்கும் முத்த இனிமைதனை

இடைவிடாது அனுபவித்தவன் கோவலன் தானென்றும் ;
இடை குலுங்க, நடை குலுங்க, இரு கனி குலுங்க

காம இன்பம் தானும் சுவைத்து, தன் காதலனும்
தாபம் தீரச் சுவைப்பதற்குத் தனையீந்த தளிர்க்கொடி

மாதவி தான் அத்தகு மாதவம் செய்தவள் என்றும்
மகளிர் ஆடவர் பலரும் எண்ணுகின்றோம் –

இலக்கியத்தைப் புராணமாக ஆக்கியோர் ; அமுதத்தில்
கலக்கிய விஷத்தினால் ஏற்பட்ட களங்கமிது –

பின்தூங்கி முன் எழும் பாவையாக விளங்கி
எந்நேரமும் அழுதழுது விழியிரண்டும் வீங்கி,

கொழுநனைத் தொழுதுஎழுந்து கோலமிட்டு வீடு கூட்டி
கோவலனின் இல்லில் ஒரு கொத்தடிமை என்பதன்றி ;

கொஞ்சிடவோ – குலவிடவோ – கூடிடவோ –
எஞ்சியதுண்டோ கணப் பொழுதேனும் கண்ணகிக்கென்று ;

‘சம்பூர்ணக் கோவலன்’ கூத்து கண்ட “ஜனங்கள்” எல்லாம்
சஞ்சலப்படுவதுண்டு அக்காலத்தில் – அதிலும்

பெண் குலத்தார் பெரும்பாலோர்
பெருமூச்செறிந்தும் பார்த்துள்ளோம் – அந்தச்

சேதியனைத்தும் அடியோடு தவறானவை என்பதற்குச்
சிலப்பதிகாரமே தக்க சான்றாக நம் முன் நிற்கிறது!

கண்ணகி ; தனது மணாளன் கோவலனிடம்
கட்டிலறையில் கூடிக் களிக்கவில்லையா ?

காம நோய்க்கு மருந்து தேடும் காரியத்தில் – அந்த
இளம்புறாக்கள் ஈடுபடவே இல்லையா ?

எட்டாண்டுகள் இல்வாழ்க்கை நடத்திய பிறகே
விட்டுப் பிரிந்தான் கோவலன் கண்ணகியை யென்று

கட்டுக்கதையல்ல ; முனைவர் ச.வே. சுப்பிரமணியனார்
சுட்டிக் காட்டியுள்ளார் ஓர் உரைநூலில்!

காப்பியம் தந்த பெருமகனாம் இளங்கோவடிகள்
கண்ணகி கோவலன் காதல் இன்பத்தை

கரும்பு பிழிந்து சாறெடுத்து, கற்கண்டுப் பொடி தூவி,
கனி மூன்றின் சுவை சேர்த்துக் கசிந்துருகி

சிறப்பிக்கின்றார் சிலப்பதிகாரத்தில்! –
புறப்பாட்டும் அகப்பாட்டும் ஒன்று கலக்கும்

புதுமை போலக் கவின் பதுமை கண்ணகியும் – காதல்
போதையில் கோவலனும் கட்டித் தழுவிக்

களிப்புற்று மெய் மறந்து கிடந்த காட்சியினைக்
காட்டுகின்ற வெண்பா காணீர்!

“தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என ஒருவார்
காமர் மனைவி எனக் கை கலந்து – நாமம்
தொலையாத இன்பம் எலாம் துன்னினார் மண் மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று”

சினங் கொண்ட பாம்புகள் இறுகச் சேர்ந்து
இணையாகத் தோய்ந்திடுதல் போல –
காமனும் ரதியும் என
கோவலனும் கண்ணகியும் கலந்து ;
இந்த உலகம் நாளைக்கு இருக்குமா என்ற
நிலையாமையை எண்ணிக் கொண்டு,
அனுபவிக்க வேண்டிய இன்பம் அனைத்தையும்
அன்றைக்கே துய்த்து மகிழ்ந்தனர் என்கிறது
இந்த வெண்பா!

இதற்குப் பிறகும் கண்ணகி
இல்லற சுகமே காணாதவள்
என்றுரைத்திடல் இயலுமோ?

“மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
மலையிடைப் பிறவா மணியே!
அலையிடைப் பிறவா அமிழ்தே!”

என்றெல்லாம் கண்ணகியைப் புகழ்ந்த கோவலன் ;
அவளை வாரியணைத்து மடியிலிட்டுக் கொண்டுதானே
மகிழ்ந்து குலாவியிருப்பான்!

வானத்து நிலவை நோக்கி ;
வையத்திலிருந்து ஒரு கவிஞன்,
வர்ணிப்பது போலவா தொலைவில் நின்று,
வார்த்தைகளைப் பொழிந்திருப்பான்?
நெஞ்சை நெகிழ வைக்கும் அந்தச்
செழுஞ் சொற்களை, கண்ணகியும்,
கோவலன் தோளில் சாய்ந்து கொண்டுதானே
கேட்டுச் சுவைத்திருப்பாள் –
தூமப்பணிகளாக ஒன்றித் தோய்ந்த பிறகு ;
சொல்வதற்கு வேறு என்ன செயல் தானிருக்கிறது?
அந்த இணையினைப் பிரிந்து விடுகிறான் கோவலன்
தனக்கு வாய்த்த வேறு துணையினால்!
வாடிக் கிடக்கிறாள் வடிவழகி கண்ணகி – ஆம் ;
மாசறு பொன் ; மண் மீது!
வலம்புரி முத்து ; மனப் புண் மீது!
கண்ணகி நிலை கேள்வியுற்று ;

அவள் தோழி யொருத்தி ஆரிய மாது –
சாத்தன் என்பானின் மனைவி ;
தேவந்தி ஆறுதல் கூறிட வருகிறாள்.

“ கவலைப்படாதே, கண்ணகி ;
காவிரி கடலுடன் கலக்குமிடம் –
நெய்தல் நிலச் சோலையில்
சோமகுண்டம், சூரிய குண்டம் என
இரு பொய்கைகள் இருக்கின்றன.
அவற்றில் மூழ்கி அங்கிருக்கும்
ஆலயத்தில் மன்மதனை வணங்கினால் – உன்
ஆளன் உடனே வந்திடுவார்” என்றாள்.

ஆரிய மங்கை – அவளுக்கு அருமைத் தோழி தான் எனினும் ;
அவ்வழிபாடு தமிழ்ப்பண்பாடு, ஏற்காத ஒன்று என்பதால் ;
பூம்புகார்ச் செல்வி அதனைப் புறக்கணித்து,
“அது பெருமையாகாது!” எனப்
பட்டெனப் பதில் சொல்லி விடுகிறாள்.

இச்செய்திகள் நம் செவிகளில்
நுழையுமளவுக்குப்
புழக்கத்தில் இல்லையெனினும் ;
கலாச்சாரத்தின் மீது கண்ணகி கொண்ட
அழுத்தத்திற்கும் பற்றுதலுக்கும்
அசைக்கவொண்ணா சான்றுகளாம்!

★ ★ ★

“சோமகுண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பார், யாம் ஓர் நாள்
ஆடுதும் என்ற அணிஇழைக்கு அவ் ஆயிழையாள்
‘பீடு அன்று’ என இருந்த பின்னரே.....”

(சிலப்பதிகாரம் – கனாத்திறம் உரைத்த காதை)

குறிப்பு :– ‘துறை மூழ்கித் தெய்வந்தொழுதல்
எங்கட்கு இயல்பன்றென்று சொல்லி’ –
(என்பது அடியார்க்கு நல்லார் உரை)
(உ.வே. சாமிநாத அய்யர் வெளியிட்ட நூலில் உள்ளபடி)

விரிந்ததுறுதி;
இதோ செம்மொழி விடியல்!

தமிழக வரலாறு எழுதி முழுமையாகத்
தந்து விட்டுப் போனவர் யாருமில்லை.

உலகில் எந்த நாட்டிலும் நடக்காத
ஒரு கூத்தாக ஓலைச்சுவடி இலக்கியத்தில் ;

எவரோ மன்னர் செதுக்கிய கல்வெட்டில்
எவனோ வழிப்போக்கன் சொன்ன கதையில்,

எலும்புகளைப் பொறுக்கி எடுத்து நடத்திய ஆய்வில்,
என்றோ தாழியில் வைத்த உடலின் மண்டையோட்டில்....

கண்டு பிடிக்கும் ரேகைக் கோட்டில் மாத்திரமே
பண்டைக்கால சரித்திரம் படித்திட முடிந்தது.

கலை, நாகரிகம், வாழ்க்கையென்று கணிக்க முடிந்தது.
காலத்தின் கோலமும் அறிய முடிந்தது – அல்லால்

கற்காலம் முதல் கனிந்து வந்துள்ள
தற்காலம் வரையில் ; காரிருள் ஆதிக்கம்தானே!

★ ★ ★

எக்காலத்தில் எப்படி வாழ்ந்தனர்
எம் மூதாதையர் என்ற நிலை தெரியாமல்,

திக்குமுக்காடியிருப்போம் ; இந்தத்
திருநாட்டின் பெருமையினை உலக ஏட்டில்,

தீட்டுதற்கு இயலாமல் வரலாற்றுத்
தீப ஒளி ஏற்றுதற்குப் பயன்படாத

தீக்குச்சியாக நனைந்து போய்க் கிடந்திருப்போம்.
ஈக்களுக்குப் பல் இல்லை ; பண்டத்தில் மொய்ப்பதில்லையா ?

நாக்கில்லை முதலைகளுக்கு ; அவை பசியாறுவதே இல்லையா ?
நண்டுக்குத் தலையில்லை – தவளைக்குக் கழுத்தே இல்லை.

நாட்டு வளப்பம் அறியாத கிணற்றுத் தவளைகளும்
நண்டு போல் தலையில்லா முண்டங்களும் வாழும்போது,

நாம் மட்டும் "வரலாறு" இல்லாமல் வாழ்ந்தால் ;
நாட்டுக்கும் நமக்கும் என்னதான் கேடு வந்து விடும் ?

தலையில்லாமல் கழுத்தில்லாமல் பல்லில்லாமல் நாவில்லாமல்
வாழ்வது சரிதான் என்று வாதிட்டால் ;

தமிழனும் 'வரலாறு' இல்லாமல் வாழ்வது பொருத்தம்தானே !
தரமும் தகுதியும் நமக்கு நாமே வகுத்துக் கொள்வதுதானே !

தன்மான மின்றி சில தமிழர்கள் வாழ்வதற்குத் தம்மை
தயார்படுத்திக் கொண்டார் எனினும் தமிழச்சியர் எவரும்

தாளம் போட்டதில்லை ; தமிழை அழிப்பதற்கு ! அதற்குத்
தக்கச் சான்றாக விளங்கியோர் பட்டியல் தருகின்றேன் ;
காண்பதற்கு !

தந்தையையும் தன் கணவனையும்
தமையனையும் போரில் இழந்த தாயொருத்தி

பள்ளிக்குச் சென்றிருந்த பிள்ளையையும் அழைத்து
துள்ளியெழும் வேலொன்றைக் கையில் கொடுத்து

சென்று வா மகனே செருமுனை நோக்கி எனவும்
வென்று வா பகையை எனவும் விடை கொடுத்து

அனுப்பி வைத்தாள் எனப் பாடியது மாசாத்தியார் எனும்
பெண்தானே ;
அப்படிப் பாடப்பட்டவரும் மானமரபு வந்த ஒரு பெண் தானே !

"ஏனம்மா ; மகன் எங்கே ?" என்று கேட்டவனிடம் ;
"புதல்வன் போர் முனைக்குச் சென்றுளான்" என்பதை

"புலி போன இடம் குறிப்பாகத் தெரியாது ; ஆனால்
புலியிருந்த குகை இதோ இருக்கிறது" என

அவனைச் சுமந்திருந்த வயிற்றைக் காட்டினாள் ;
அன்னையொருத்தி யென்று பாடியதும் பெண்தானே!

★

தன்னோரன்ன இளையர் இருப்பத் தன் மகனிடமே
தணியாத அன்பு வைத்தான் தலைவன் ; அந்த மகன்
களம் புகுந்து நடத்தும் கடும்போரில் மாளாமல்
கால்கழிக் கட்டிலிலேறிக் கல்லறைக்குச் செல்லாமல்

காலங்கடத்துவதேன் என்று கவலையுறுகின்ற
அன்னை யொருத்தியை அவ்வை காட்டுகிறாரே ;

அவளும் பெண் தானே – அவர்களிருவரையும் பெற்றதும்
இந்த மண் தானே!

புதைக்கவில்லை எங்கள் பிள்ளைகளை ;
விதைத்திருக்கிறோம் அந்த வீரர்களை யென்று

வாளொலி வார்த்தைகளால்
சூளுரை மொழிந்தோரும் பெண்கள்தானே!

முறங் கொண்டு புலி விரட்டிய தமிழச்சி ;
“புறங்காட்டி வீழ்ந்தான் புதல்வன் போரில்” எனும்

பொய்யுரை கேட்டுப் புலம்பித் தவித்து
மகன் ; பால் குடித்த மார்பை அறுத்தெறிவேன் என்று

களம் சென்று மீண்டாளே உண்மை உணர்ந்து ; – அதைக்
கவிதையாக்கித் தந்தவர் யார்? காக்கைபாடினியன்றோ?

இத்தகு பெண்பாற்புலவர் இத்தரை மீது
பத்தரை மாற்றுப் பொன்னெனத் திகழ்ந்து – தமிழ்

மூவேந்தர் வியப்புறும் வண்ணம் முன்னாளில்
முப்பதுக்கு மேற்பட்டோர் வாழ்ந்தார்களாம் –

பாவையர் திலகங்களாம் அவர்கள் எழுதிய
பாடல்களும் தமிழக வரலாற்றுப் பக்கங்களாம்.

பட்டியலாகத் தருகின்றேன் பெயர்களை ;
பாட்டன்மார் பாட்டிமார் பெருமிதங் கொள்வதற்கல்ல ;

வருங்காலப் பேரன் பேத்திமார் வைர நெஞ்ச
வீரர்களாய், வீராங்கனைகளாய் விளங்குவதற்காக!

★ ★ ★

இதோ :–

அவ்வையார், அள்ளூர் நன்முல்லையார்
காக்கைபாடினியார், காவற்பெண்டு,
நக்கண்ணையார், வெண்ணிக்குயத்தியார்,
குறமகள் இளவெயினி, குறிஎயினி,
தாயங்கண்ணி, பூங்கணுத்திரையார்,
பொன்முடியார், போந்தைப் பசலையார்,
பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப்பெண்டு
பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்,
பாரி மகளிர், பேய்மகள் இளவெயினி,
ஒக்கூர் மாசாத்தியார், நல் வெள்ளியார்,
ஆதிமந்தியார், நெட்டிமையார்,
நப்பசலையார், வெள்ளி வீதியார்,
காமக்கணிப் பசலையார்,
கழார்க்கீரன் எயிற்றியார்,
கச்சிப் பேட்டு நன்னாகையார்,
ஊண்பித்தையார், மாற்பித்தியார்,
பூங்கண் உத்திரையார்,
வெறிபாடிய காமக் கண்ணியர்,
அஞ்சி அத்தைமகள் நாகையார்

★ ★ ★

அரிவையர் ஆடவர் அருங்கவிஞர்களாகி
அருவித் தமிழால் ஆக்கிய இலக்கியங்களே – தமிழர்
ஆதி வரலாறு போதிக்கின்ற ஆதாரங்களாம் –
அற்றை நாள் கல்லில் செதுக்கிய எழுத்துக்களே – நமது

அறிவு, ஆற்றல், காதல், வீரம், பண்பாடு அனைத்துக்கும்
அழிக்க வொண்ணாச் சான்றுகளாம் –

விரிவாக்குவோம், அப்பணியை வாரீர் ;
விழித்தெ ழுவதற்கு ; இதோ ‘செம்மொழி’ விடியல்!

வழிகாட்டும் வண்ணம்; நிறக்கப்படுவது தின்னம்!

நடை தளராமல் நமது வரலாற்றுப் பயணம் தொடரும்போது
இடையில் சற்று இங்கே அமர்ந்து இதுபற்றியே பேசுவோம்.

காலப் பேழையில் நிறைந்துள்ள கருவூலங்களை
கவிதைச் சாவி கொண்டு நான் திறந்து காட்டி ;

கனவிற் கண்ட காட்சிகள் நினைவுத் திரைக்கு மீண்டும் வராதா
என

கவலை கலந்த களிப்பில் ஆழ்ந்திருக்கும் நமக்கு ;
நினைவில் வருவது மட்டுமல்ல ; நிகழும் வரலாறாகவே
நிலைத்து விட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு!

அதனால்தான் இதுவரையில் இருபத்தி ஆறு கவிதைகள் தீட்டி ;
அந்நாள் மனிதன் தோன்றிய காலம் அதற்கு முந்தைய காலம் –

அனைத்துயிரும் தோன்றிய விதமும் படிம வளர்ச்சியும் பற்றி
அளித்த விளக்கங்களுடன் ; அடுத்தடுத்துக் கடந்து வந்துள்ள

ஆயிரமாயிரம் ஆண்டுகளில் அனைத்து நாடுகளுடன் நமது
அருமைத் தமிழகம் பெற்றிருந்த நட்புறவு, நாகரிக தொடர்பு,
கலைப்பிணைப்பு

கலாச்சாரக் கைகோப்பு – கடல் வாணிபம் – களம் பல கண்ட
வாய்ப்பு ; எனக்
கருவூலம் தருகின்ற கனிச் சுளைகள், கசப்பு மாத்திரைகள்,
அனைத்தையும்

அடியேன் நான் ; அபாரப் படிப்பினாலோ – அஷ்டமாசித்தி
பெற்றதாலோ –
அளிக்கின்றேன் என்று எவரும் அவசர முடிவுக்கு வந்திடாதீர்! –

ஆதாரங்களைத் திரட்டுகின்றேன் ; அம்முயற்சியிலே அடிப்படைப்
பணியாக ;
அன்பர் மதிவாணன் நூல்களைப் போற்றுகின்றேன் – கண்ணின்
மணியாக !

அவருந்தான் எத்தனை மேற்கோள்கள் காட்டுகின்றார் –
ஆய்வாளர், அறிஞர் பெருமக்கள் கருத்துக்கள் பலவற்றை
எடுத்து நிறைத்துள்ளேன் இப்பேழையில் என்றாலும்
தொடுத்திடத் தொடங்கியது முதல் தோன்றாத் துணை நிற்பது
இவர் கருத்தே !

மணிகள் கோப்பதற்குத் தங்கச் சரடு வேண்டுமன்றோ ; கற்றவராம்
மற்றவர் கருத்துக்களையும் அந்தச் சரட்டோடுதான் இணைத்துக்
கொண்டேன்.

இதுவரையில் நம் தரணியில் உயிர்கள் முளைத்தது முதல், இங்கே ;
இந்தியத் திருநாட்டில் ஆரியர் வருகைக்கு முன்பே திராவிடர்
வரலாறும்,

வடக்கே, தக்கணம், சிந்து, கங்கைச் சமவெளிகளில் குடியேற்ற
நகரங்களை
வகையாக அமைத்தனர் கி.மு. ஆறாயிரம் ஆண்டின் முன்பே
என்பதையும்,

காடு கொன்று நாடாக்கி நாகரிகம் கொழிக்கும் நகரங்களை
அமைத்தும் ;
கட்டமைப்பு கட்டிடக் கலைகளிலே காண்போர் வியக்கும்
திறனைப் பெற்றும்
திகழ்ந்தனர் திராவிடத் தமிழர் என்பதையும் கண்டு
வெகுண்டவராம் ஆரியர்கள் ;
தீய நோக்குடன் திராவிடரைத் ‘தஸ்யூக்கள்’ என அழைத்து ;

“அந்த தஸ்யூக்களின் அரண்மனைகள் பொன்னாலும்
மணியாலும்
அழகு பெற்று விளங்குகின்றன ; அவர்களின் வலிய
கோட்டைகளும்

வானைத் தொடும் மதில் அரண்களும் மனதைக் கவருகின்றன.
வாழ்க்கைத் துணைவி இருவர் 'கோவன்' எனும் குயவருக்கு ;
அவர்கள்

பாலில்தான் குளிக்கிறார்கள் என்பதால் ;
பாவிகள் ; சிபா நதியில் வீழ்வார்களாக!''

ஆரியர்களின் 'ரிக் வேதம்' இவ்வாறு சாபமிடுகிறது – அதனை
ஆராய்ந்திடும் போது தான் ; ஆரியர் வருகைக்கு முற்பட்ட

இந்திய நாகரிகம், திராவிட மொழியாளர்க்கே உரியது என்று
இம்மியும் அய்யத்திற்கிடமின்றி இறுதியாக அறுதியிடப்படுகிறது.

இவ்வாறு
வளர்ந்த நாகரிகம், வாழ்க்கை முறை, வையத்து நாடுகளுடன்
வாணிபத் தொடர்பு – கலையுணர்வு – காதல் உறவு

களம் காணுதல், மானம் காத்தல், மனித நேயம் போற்றுதல்
கலாம் விளைக்கும் மத பேதம் அகற்றுதல் எனப் பல்வகை
அணிமணி நிறைந்த அற்புதப் பேழையாக அமைந்த – இந்தக்

காவியப் பேழையைக்
கவிதைச் சாவி கொண்டு

திறக்கும் போதெல்லாம் ;
திராவிடர் தமிழர் வரலாறுகள் எனும்

அணிமணிகள் காண்பதாலேயே – இது
அரசியல் பேழை எனக் கருதாமல் ;

அரசியலுக்கு அப்பாற்பட்ட
வரலாற்றுப் பேழை தான் என்று

வரித்துக் கொள்வீர் இதயத்தில் – உயிர்களின்
உதயத்தில் அல்ல ; உதயத்திற்கு முன்பே

உலகு உள்ளிட்ட கோள்களின்
உலாவலில் இருந்தே தொடங்கி

எத்தனை இனத்தினர்
எத்தகை மனத்தினர்

எத்துணை அரசர்கள்
எவ்வகை ஆட்சிகள் –

முடிந்தது ; முடியாதது!
விடிந்தது ; விடியாதது!
விளைந்தது ; விளையாதது!
வளைந்தது ; வளையாதது!

இமயம் முதல்
காவிரி வரையில் அல்ல –

காவிரிக் கரையிலிருந்து
கங்கைக் கரை வரையில்

நீண்டு கிடக்கும் நிலப் பரப்பில்
ஆண்டு முடித்தோர் சரித்திரமும்,

வாழ்ந்து முடித்தோர் வரலாறும் – இனி
வாழ்ந்திடவும் ஆண்டிடவும் ;

வழி காட்டும் வண்ணம்
தொடர்ந்து காலப் பேழை,

கவிதைச் சாவி கொண்டு
திறக்கப்படுவது திண்ணம்!

பாய் முழுதும் பரவிய பழம்பெரும் நாகரிகம்!

தேய்க்கத் தேய்க்கச் சந்தனம் மணப்பது போல் – பட்டை
தீட்டத் தீட்ட வைரம் ஒளி விடுவது போல் ;

திரும்பத் திரும்ப திராவிட இனத் தொன்மை பற்றிச்
சொன்னால்தான்
தென்னங் கன்றுகள் தேக்கு மரங்களாக உயரும்!

வாழைக் கன்றுகள் வாகை மரங்களாக வளரும்!
முருங்கை அரும்பு முல்லையாகி ; முள்ளில் ரோஜாவாக மலரும்!

தாழை மடலை எதிர்த்துத் தடவ முடிகிறதா ?
தமிழனை மட்டும் மிதித்துத் தள்ள முடிகிறதே!

வங்கக் கவிஞர் தாகூர் தேசிய கீதம் வழங்கியவர் ;
சிங்கத் 'திராவிடர் தந்த செழிப்பும் வலிவும் தான்

ஆரிய நாகரிகத்தின் நலிவு போக்கி அதன்
அடிப்படையை அலுங்காமல் காத்தது' என்கிறார்.

சோவியத் நாட்டு மொழி அறிஞர் 'சாகிரப்' என்பார் ;
வட இந்திய திராவிட மொழிகள், தென்னக திராவிட மொழிகளை

வரிசைப்படுத்தி ஒப்பிட்டுப் பேசுபவர் ;
வடக்கு நோக்கித் தமிழர் தெற்கிலிருந்து பரவினர் என

வன்மையாக வாதிட்டு அதனை நிலைநாட்டுகின்றார் ;
வட புலம் தமிழர் வென்றதை அறிவோம் ; தமிழ் சென்றதை
அறிவோமா ?

"On the contrary linguistic data indicate that the
Dravidian Languages spread from South to North
rather than from North to South"

G. Zograf
Soviet Indologist in a
Survey of Languages of
India, Pakistan, Ceylon and Nepal.

காஷ்மீரில் இன்றும் சில மலை வாழ்வோர் பேசும் மொழி
கன்னட வரலாற்றாசிரியர் ஒருவர் கூற்றுப்படி

திராவிட மொழிப் பிரிவின் கிளை மொழிகளில் ஒன்றெனத்
தெளிவுபடுத்தியுள்ளது ; வெறுங் கற்பனையல்ல !

பீகார் ராஜ்மகால் குன்றுகளில் வாழும் குருக்கர் என்போர்
பெரிதும் பயன்படுத்தும் நாட்டுப் பாடல், பழங்கதைகளில் – அவர்கள்

தென் முனைப் பகுதி வாழ்ந்த திராவிட மக்களே எனத்
தெரிவிப்பதைத் திரையிட்டு மறைத்தார் இலர் !

இந்திய நாகரிக அடையாளமான புடவையும் வேட்டியும்
இனிய திராவிட நாகரிகத்தின் கொடையே யாகுமெனப்

பேராசிரியர் எஸ்.கே. சாட்டர்ஜி பேசுகிறார் ;
"இந்தோ ஆரியன் – இந்து" என அவர் எழுதிய நூலில் (பக். 134)

"ஆரப்பா" புதை பொருள் ஆராய்ச்சியில் தாய்த் தெய்வ வழிபாடும்,
அமெரிக்கா கொலராடோ ஆற்றின் கரையில் சிவனுக்குக் கோயிலும்,

ஆதிச்ச நல்லூரின் "மண்டையோடு" சிந்து வெளியுடன்
ஒத்திருப்பதும் ;
ஆரப்பா, மொகஞ்சதாரோ ஆய்வின் வெளிப்பாடுகளும் ;

அன்றைக்கே திராவிட நாகரிகம் அனைத்து நாடுகளிலும் "ஆதி"
உரிமை பெற்று,
அகன்று படர்ந்தமைக்கு ஆணித்தரமான ஆதாரங்கள் என்போம்.

ஆரியரால் கேலி செய்யப்பட்ட சிவலிங்க வழிபாடும் ;
'அசுரர்' என அழைக்கப்பட்ட திராவிடர் பண்பாடே !

உலகின் பழைமை மிகு நாகரிகங்களின் எண்ணிக்கையில் ; மூன்றில்
ஒரு பங்கினைப் பிற இனத்தவர்க்கும் ; இரு பங்கினைத்
திராவிடர்க்கும்

உரியதாக்குவதே உண்மையான பங்கீடு என்று கண்டறிந்து,
உரைக்கின்றார் ; சோவியத் நாட்டுப் பேராசிரியர் 'காந்திரதோவ்' –

ஆஸ்திரேலியாவும் ஆப்பிரிக்காவும்
அந்நாளில் குமரிக் கண்டத்துடன் இணைந்திருந்த

வரலாற்றையொட்டி ஆண்டவன் வழிபாடும் – பகை
வளைப்பதற்கு ஆயுதங்கள் அறிமுகமும்

அய்யாயிரம் ஆண்டின் முன்னே திராவிடர்க்கும்
ஆரம்பமான பொது நாகரிகமெனப் புகல்வதும் உண்டு.

எழுத்து முறையில் எகிப்தியரின் தனித் தன்மை போற்றி
எப்படி அந்தச் சிறப்பினை அவர்கள் திடுமெனப் பெற்றார் எனக்
கேட்டு ;

வாணிபத் தொடர்பால் தமிழர், அவர்க்கு ;
வழங்கிய கொடை யென்பர் வரலாற்று அறிஞர்கள்!

பாபிலோனிய மதகுரு ஒருவர் எழுதியதாம்
பழங்கதை யொன்றில் ; மெசபதோமியர்க்கு,

நாகரிகம் கற்பித்த நல்லவராம் "ஒனசு" என்பார்,
நன்கு பயிற்சி பெற்ற குழுவினர் சூழ்ந்திட ;

'எரிது' எனும் நகருக்கு வந்து நாகரிகம் பயிற்றுவிக்க –
ஏர் உழவுக் கருவிகளைக் கொடுத்தார் என்றும்,

அறிவியல் கலை, கட்டிடக் கலை, ஆண்டவன் வழிபாடு
அனைத்தும் கற்பித்தார் என்றும், கூறப்படுவதால் ;

அந்த நாகரிகம் படிப்படியாகப் பரவிடாமல்
அடித்தவுடன் எழும்பிடும் பந்து போல –

எப்படிப் பரவியதென்பதற்கு ஏற்ற விடையாகத் தான்
கூறப்படுகிறது ; அது குமரிக் கண்டத் தமிழர் உறவினால் என்று!

அக்கண்டமும் ஆழ்கடலின் அகன்ற வாய்க்கு
அப்போதே இரையாகிப் போனது –

அதன் பின்னரும் அங்கிருந்த திராவிடப் பண்பாட்டு இனம் ;
அனைத்து இந்தியப் பெரு நிலத்தின் பேரினம் ஆனது!

அப்பேரின மெனும் பெருந்தருவின்
பெருமை சேர் கிளைகளாகத் தமிழ் இனம் போன்ற

தகைமையுறு இனங்கள் பலவும்,
தகுதி மிகு மொழிகள் பலவும் ;

தழைத்துச் செழித்து, தக்காராம் தமிழ்ப் புலவர்களும் – அப்
புலவர்கள் வாழ்த்திய புரவலராம் புவியாண்ட மன்னர்களும் – அந்த

மன்னர்களாண்ட இந்த மண்ணின் வளமும், அந்த வளம் பெருக்கிட
வலிமை பெருக்கி ; வையம் போற்றிட வாழ்வாங்கு வாழ்ந்த

வரிப்புலியனைய வீரர்களும், அவர்கள் வழி வழி வந்த சூரர்களாம்
தமிழ்க் குலத் தீரர்களும், பகை நாடுகளை எப்படிப் பந்தாடினர் –

வெற்றி சிந்து பாடிட எங்ஙனம் வீரம் விளைத்தனர் –
இவற்றுக்கான சான்றுகளை எல்லாம் எங்கிருந்து தேடிக்
கொணர்வது ?

‘அதற்கேற்ற காலம் சங்க காலம் தான்’ என்று ;
ஆன்றோர்கள் கூறிடுவர் ; அறிவேன் யான்!

இந்தக் காலக் கணிப்பிலே கூட கருத்து வேறுபாடுகள் இருப்பினும்
இராகவ அய்யங்காராம் தமிழ் அறிஞர் காட்டிடும் சான்றுக்கேற்ப ;

கி.மு. நான்காம் நூற்றாண்டுதான் தொடக்கக் காலம், எனக்
கொண்டால் ;
கிழக்கிலிருந்து திசைகளை மேற்கு தெற்கு வடக்கு எனத்
துவங்குவது போல் ;

சேர, சோழ, பாண்டியர் என்று மூவேந்தரை வைத்தே
துவங்கியுள்ளோம் ;
தொடர்ந்திடுவோம் இடையில் துவளாமல் அவ்வாறே!

தாயே தந்திடு எமக்கு தன்மானச் செல்வங்களை சுடரே!

‘தலையாலங்கானம்’ எனும் ஊரின் பெயரைக் கேட்கும்போதே
தஞ்சைத் தரணியில் ‘தலையாலங்காடு’ நினைவு மட்டுமல்ல ;

சங்க இலக்கிய காலப் போர்களிலேயே
தலை சிறந்த போர் நடந்த பூமியென்ற சரித்திர நினைவும் எழுமாம்.

இரு முனைகளிலும் நின்று போரிட்டவர்கள் – இந்தத்
திருவிடத்தார் தமிழ் இனத்தார் தான் –

இரண்டாம் நெடுஞ்செழியன் ; வயது வரா இளைஞன்
மிரண்டானில்லை போருக்கு ; வந்து விட்டான் களத்திற்கு!

பேரரசர்கள் இருவர் சேரர், சோழர் குல தீரர் ;
பெரும்படையுடன் ஐந்து வேளிர், அவர்கள் படைகளில்
அளவிலா வீரர்!

இரும்பொறையாம் இணையற்ற வீரன் சேர மன்னனும் –
வரும் பகை மோதிட வல்லவனாம் சோழன் கிள்ளிவளவனும் –

வெகுண்டெழுந்த வேளிர் குலத் தலைவர்களாம்
வேண்மான், பொருநன், எழினி, எருமையூரன்

திதியன் என்போர் அய்வரின் படையும் கண்டு
திகைத்துப் போவான் நெடுஞ்செழியன் என்றும் ;

சிறுபிள்ளை விளையாட்டுப் போல செருமுனையில்
பெரு வெற்றி பெறலா மென்றும்

எண்ணி வந்த திண்ணியர்கள் என்ன ஆனார் ?
கண்ணியமாய்த் தோல்விதனை ஏற்றுக் கொண்டு – “நல்ல

புண்ணியம் நாம் செய்ததாலே புனர் ஜென்மம் எடுத்துப்
போர்முனையை விட்டுப் போகின்றோம் உயிரோடு'' எனக் கூறி ;

நண்ணினார் அவரவர் நாடும் வீடும்! களத்தில்
கண்ணினால் பேசிக் கொண்டார் பாண்டியர்கள் ;

''நெடுநாள் தவமிருந்தாலும் 'காலன்' என்போன் எங்கள்
நெடுஞ்செழியனை வெற்றி கண்டிட முடியாதெ''ன்று!

★ ★ ★

களத்திலும் சரி ; வாழ்வெனும் கடலிலும் சரி ;
வீரமெனும் படகில் ஏறி – துணிவு எனும்

துடுப்பு கொண்டு பயணிக்கும் உறுதி கொண்டார் –
தலையாலங்கானத்து நெடுஞ்செழியனைப் போல்

தவமிருந்து வரம் பெறாமலே ;
தமிழ் உள்ள வரையில் வாழலாம் என்று – அவன்

தளிர் விரல்களைத் தடவிக் கொடுத்து,
தடந்தோள்களில் முத்தமீந்து,

தமிழ்ப் புலவர்கள் வாழ்த்தினர்.
தமிழ் நிலமே தலை நிமிர்ந்து வாழ்த்தியது!

தலைசிறந்த புலவர் ஏறுகளாம் நக்கீரரும், மாங்குடி மருதனாரும்
கலை மணங் கமழும் காப்பியப் பாடல்கள் போல நிலை பெற்று
வாழும்

'நெடுநல்வாடை'யும் 'மதுரைக் காஞ்சி'யும் இயற்றிய
திருநாளைக் கொண்டாடிட ஒரு நாள் வரும் என ;

இந்தத் தமிழ் நிலமே ;
இதயமார வாழ்த்தியதாம்! இப்போதும் வாழ்த்துகிறதாம்!

புறம்பாடிய புலவர் குடபுலவியனார் ; இப்போரினைப்
புகழ்ந்துரைக்கும் போது குறிப்பிடுகிறார் –

இருபுறமும் தமிழர்களே அணி வகுத்த போர்க்களத்தில்
இடையே எருமையூர்ப் பகைவர் படைகளும் கலந்த போதும் ;

பாண்டிய நெடுஞ்செழியன், பார் புகழும் வெற்றியைப் பெற்று
தூண்டிற் புழுக்களாய் பகையைத் துடிக்க விட்டுத்

தோல்வியை அவர்தம் தோளில் சுமக்க விட்டுத்
துரத்தி விட்டான்! மீனக் கொடியை வானில் உயர்த்திவிட்டான்.

தமிழ் மானக் கொடியைத்
தன் கையில் பிடித்து விட்டான்.

போர் முனைக்குப் புறப்பட்ட போது அவன் புலிக்குட்டி –
போர்க் களத்தில் பகை ; அவனுக்குப் பூனைக்குட்டி!

இதனை

இடைக்குன்றூர் கிழார் எனும் புலவர் ஏறு
எப்படிப் பாடுகிறார் ; எழுச்சியுடன் என்பதுதான் –

இங்கே நாம் காண வேண்டிய காட்சி ;
கண்டு மகிழ வேண்டிய மாட்சி!

“கிண்கிணி களைந்தகால், ஒண்கழல் தொட்டு ;
குடுமி களைந்த நுதல், வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து ;
குறுந்தொடி கழித்தகை, சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன் –
யார் கொல்?”

(புறம் . 77)

அதாவது ;

கிண்கிணி அணிந்து விளையாடும் மழலைக் குழந்தை ;
அதனை அவிழ்த்து விட்டு,

வீரக் கழல் பூட்டிக் கொண்டு –
தலையில் சிறு குடுமியைக் களைந்து விட்டு,

வேம்பு மாலை சூடி ; அத்துடன்
அமர்க்களத்துக்கான ஆரமும் பூண்டு,

காப்பு இருந்த கையில் கணையும் வில்லும் தாங்கி,
தேரின் முகப்பில் நிற்கிறான்

பாலகன் பாண்டியன் நெடுஞ்செழியன்
என்கிறார் பாவலர் ஏறு!

அது மட்டுமா ?

வளர்நிலா போன்ற பாண்டியன் – ஒரு
வஞ்சினமும் கூறுவதாக ; அவனே

இயற்றிய புறப்பாடல்
எழுச்சிப் பாடல் ; இதோ கேட்போம்!

"நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்!
இளையன் இவன் என உளையக் கூறி....

சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு

ஒருங்கு அகப் படேஎன் ஆயின் – பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது

'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!.....

புலவர் பாடாது வரைக என் நிலவரை!.....
இரப்போர்க் கீயா இன்மை யான் உறவே!"

(புறம் 72)

அதாவது ;

பகைவர்களைச் சிதற வைத்து அவர்தம்
முரசுகளை ஒலிக்காமல் முடக்குவேன்!

இல்லையேல் என்னைக் கொடுங்கோலர் பட்டியலில்
இவ்வுலகம் இணைக்கட்டும்!

இரவலர்க்கு எதுவும் ஈயாதவன் என்ற
இழி சொல் என்னைத் தாக்கட்டும்!

இந்தப் புலவர்கள் எவரும் என்னை
ஏற்றிப் பாடாதிருக்கட்டும்!

இப்படியொரு மானமிகு இளைஞனை, மறக்குல மைந்தனை,
தமிழ்ப் பாண்டியர் குலத்தில் கண்டது போல் –

இந்தத் தமிழகம் எங்கும்
கண்டிட வேண்டுவோம் தமிழன்னையை!

தாயே ; தந்திடு எமக்கு அத்தகு
தன்மானச் செல்வங்களை ஈன்று!

ஆற்றலின் அளவுகோல்; அவன் செங்கோல்!

கி.மு. அய்ந்தாம் நூற்றாண்டுக்கும்
கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும்

இடைப்பட்ட காலம் எண்ணூறு ஆண்டுகளும்
இங்கே தமிழகத்தின் சங்க காலம் என்போம்.

மூவேந்தராம் முடியுடை வேந்தர் – தமிழில்
பாவேந்தர்களின் பாமாலை சூட்டப் பெற்று

படிம வளர்ச்சியின் பல படிகளைத் தாண்டிய
பல்வேறு நாடுகளின் நாகரிக மேம்பாட்டுக்குத்
தாயகமாக விளங்கிய இந்தத் தமிழகம் – கடல்
நாயகமாகவும் வாணிபத்தில் திகழ்ந்து

சேரர், சோழர், பாண்டியர் என
வீரர் நிறைந்த பூமியாகவும் நிமிர்ந்து

கற்புடைய மகளிர் பொற்புடைய மறவர்
வெற்புடைத்து வெற்றி கொள்ளும் மரபினர்;

என உலகம் போற்ற உயர்ந்து நின்றபோது
எழுஞாயிறாக ஒளிர்ந்தது முதலில் சோழ நாடாம்!

முதலிரண்டு கரிகாலன்கள், கிள்ளி வளவன் – இந்த
மூவரையொத்த செங்கணான், நலங்கிள்ளி எனும்

அய்வரும் தான் ஆதிகாலச் சோழ அரசர்களாம்
அவர்களிலே இரண்டாம் கரிகாலன்தான் திருமாவளவன்

அழுந்தூர் வேளின் மகளுக்கும், இளஞ்சேட் சென்னிக்கும்,
அன்பு மகனாய்ப் பிறந்து உறையூரில் இருந்து ஆண்டவனாம்!

அருளாளர், ஒளியர் என்பார் ஆரம்பத்தில் எதிர்ப்பு காட்டி
அவனாட்சியினை இறுதியில் ஏற்றுப் பணிந்தனராம்.

ஆக்கப் பணிகள் பல புரிந்தான் என்றும்,
அமைதி தவழ நாட்டை நடத்தினான் என்றும்

வளநாடு தமிழகம் என்று வையம் வாழ்த்திட
உளமகிழ்ந்து கவிஞர்கள் பாடிட ஆட்சி நடத்திப் பின்னர் ;

ஆழ்கடல் தாண்டி அயல்நாடு உறவுகள் கொண்டிட
அடுத்தொரு தலைநகராய் பூம்புகாரை ஆக்கிக் கொண்டான்

அனைத்துலகச் சிறப்படையும் வண்ணம்
அவன் செங்கோல் ; சோழர் ஆற்றலின் அளவு கோலாயிற்று!

அந்த மாமன்னன் புகழ் அனைவரும் பாடுதல் கண்டு
வெந்து நொந்து போன வடநாட்டார் சில மன்னர் ;

வாலாட்டிப் பார்த்ததினால் – வளவன் ;
வாளெடுத்துக் கிளம்பினான் ; பகை வீழ்த்திச் சாய்த்திட!

வணங்கி யேற்றிட வந்து விட்டோம் என்று
வச்சிரம், அவந்தி, மகதம் முதலிய நாடுகளில்

வணங்கா முடியாய் இருந்தோர் அனைவரும் ;
வளைந்து குனிந்து பல பரிசுகள் வழங்கினர்.

மகத நாட்டான், பட்டி மண்டபமும்,
வச்சிர நாட்டான், கொற்றப் பந்தரும்,
அவந்தி நாட்டரசன் தோரண வாயிலும்,
பரிசாக அளித்து அன்பைப் பகிர்ந்து கொண்டனர்.

மணிமுடி மாமன்னன் கரிகாலன்
மதிப்பைக் குலைத்திடத் – தன்
மண்டையில் உதித்த யோசனை யொன்றை,
மந்திரம் போட்டான் ‘‘முகரி’’யெனும் வட நாட்டான்.

‘‘காவலனே ; கரிகால் மன்னவனே
காவிரிக்குக் கரை உயர்த்திக் கட்ட

இலங்கைக்குப் படையெடுத்து வென்று
ஏராளமான கைதிகளைக் கொண்டு வரலாமே?’’ என்றான்.

படையெடுத்தான் கரிகாலன் – இலங்கை வீரார்
பன்னீராயிரவரைச் சிறை பிடித்து வந்து ;

பாசனத்துக்குப் பயன்படும் வண்ணம் ; காவிரி
பாய்ந்தோடும் வகையில் கரை அமைத்தான் மன்னன்!

சூழ்ச்சி மிகு தன் ஆலோசனையினால் – மேலும்
மாட்சியன்றோ வந்தது கரிகாலனுக்கென்று ; முகரி

அடுத்தொரு சதி நடத்த ஆயத்தமானபோது ;
எடுத்தனன் கரிகாலன் ஈட்டியினை ;

அழுத்தினன் அதன் முனையால் ;
கொழுத்த 'முகரி'யாம் கொடியவன் நெற்றியிலே!

அதுவரை 'முகரி' முகத்திருந்த
அவலட்சணமாம் மூன்றாம் கண்ணொன்று ;

முரசமொன்று போர் முனையில் கிழிந்ததுபோல்
முற்றாகக் கிழிந்து புண்ணாகிப் போன கதையை
வற்றாத தமிழ்க் கவிஞர் ஒட்டக் கூத்தரும் –
எக்காள முழக்கமிட்டு ஜெயங்கொண்டாரும் ;

கவிதைகளாக்கித் திருமாவளவன் கரிகாலனைப்
போற்றிப் பாடியுள்ள நேர்த்தி ;

சாகாப் புகழ் பெற்றத் தமிழர்
சரித்திரத்தின் சீர்த்தியாம்!

இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு
இவற்றையே நாம் வரலாற்றுக்

குறிப்பாகக் கொள்ள வேண்டியுளதால்
குழப்பம் சற்று விளையத்தான் செய்கிறது ;

இரு கரிகாலர்களில் இவர்
எவராயினும் – வரும் புகழ்

தமிழர்க்குத் தானே என்று கருதி
தணித்துக் கொள்வோம், தாகம்!

துடைத்துக் கொள்வோம் ;
முழுமை வரலாறில்லா சோகம்!

மாண்பு நிறை தாயும் மாசற்ற மகளும்!

இயற்கையின் எழில் அனைத்தும்
இருளும் ஒளியுமாய் ;

வானும் முகிலுமாய் ;
கதிரும் நிலவுமாய் ;

கடலும் நிலமுமாய் ;
இவ்விதம் இணையாக –

இரண்டிரண்டாய்த் தோன்றி ; அவை
இரண்டறக் கலந்தது என –

பேருரு எடுக்காமல்
சீருரு எடுத்துச் சிரிப்பது போல ;

அலையாடும் அழகு கொண்டு
அருவியென நீண்ட கூந்தலும்,

மொட்டிரண்டு உடல் முகப்பிலும்
பட்டுப் போல் மேனியும்,

பவளச் செவ்வாயும்,
பற்கள் முத்தாரமும்,

அவள் அழகுக்கு அழகு செய்ய
இன்னும் என்னென்ன அழகுண்டோ ;

அத்தனை அழகுகளும் அணி வகுத்துப்
படைத்த பெண்ணுருவே தான் ;

பைங்கிளி மாதவி என்கிற போது ; உயிரில்
பாதியாய் அவளைப் பகிர்ந்து கொண்ட

பல்கலை வித்தகன் கோவலனுடன் கூடி
பாவை அவள் பெற்ற பெண்ணாம்,

மணிமேகலையின் அழகுதனை சிறப்பிக்க,
அணிஅணியாய்ப் புலவர்களை அழைத்தாலும் –

அவர் மட்டுமல்ல ; அவர் கற்ற தமிழும் திகைக்கும்
அத்துணைப் பேரழகை வர்ணிக்க வார்த்தை ஏதென்று!

★ ★ ★

நீர்வீழ்ச்சியென ஆனந்தம் பொழிந்த – அந்த
சீர்மிகு இல்லத்தில் ;

மாதவி கோவலனிடை இந்திர விழாவில் எழுந்த ஊடல் ;
மறுபடியும் அவர்கள் வாழ்வில் மனைவி கணவனாய்க் கூடுதற்கு –
இடமின்றி இற்றுப் போன நிலையால் – மாதவி
இரவியில்லா உலகமாகி,

துறவியானாள் உளமுடைந்து!
இல்லறம் இனி இல்லையென முடிவெடுத்த பிறகும்,

முள்ளொன்று அவள் நெஞ்சில் குத்தியது போல்
கள்ளொத்த காதல் வயப்பட்ட காளையொருவன் ;

மாதவி மகள் மணிமேகலை வாழ்வில் குறுக்கிட்டான்
ஏது செய்வதெனப் புரியாது வாடினாள் மாதவியாள்!

இதயமார மணிமேகலையைக் காதலிப்பதாக,
உதயகுமாரனாம் சோழ இளவரசன் ; “நான்,

வந்திக்கும் வண்ணச் சிலையே! வானமுதே! உனைச்
சந்திக்க மாலை வருகின்றேன் என்றும்,

வேரிலே பழுத்த பலாவே ; உனக்கு
நேரிலே கோரிக்கை வைக்கத்தான்’’ என்றும்,

மேகலைக்கு மடல் தீட்டி அனுப்பினான் –
மேகலையோ உடல் நடுங்கினாள்!

அவன் வருவதற்குள் ; தன் வடிவழகை
அறவே மாற்றிக் கொள்ளத் துடித்து ; அவ்வாறே
காய சண்டிகை யெனும் காளி நிகர்த் தோழி போல
மாயத் தோற்ற ஒப்பனையுடன் உதயன் முன் வந்து நின்றாள் ;

ஓர் இருட்டு மண்டபத்தின் உட்புறத்தில் –
உணவு பரிமாறும் தாழ்வாரத்தில்!

ஆய கலைகள் கற்றிருந்தும் அரசர் மைந்தன்
அவசரத்தில் காய சண்டிகைக்கும் மேகலைக்கும் –

அடையாள வேறுபாடுகளை அறியாமலே ;
அங்கு ஆதரவற்ற மக்களுக்கு
அன்னம் அளித்துக் கொண்டிருந்த மேகலையின்
அருகில் நெருங்கி ; அன்பே என்றான், அமுதே என்றான்.

அலங்கோலமாய் ஏன் ஆனாய் என்றான் –
அப்போது காய சண்டிகையின் உண்மைக் கணவன்

அங்கே வந்து விடவே ; எதிர்பாரா விபரீதமாக
அவள் கணவன் வித்யாதரன், தன் மனைவிதான்

தவறான பழக்கம் இளவரசனுடன் கொண்டதாய் எண்ணி
தரதரவென இழுத்துப் போட்டான் மணிமேகலையை ;
தயாராய் இடுப்பில் கட்டியிருந்த வாளை எடுத்து ; இளவரசன்
தலையை வெட்டி எறிந்தான் – எவரும்

தடுப்பதற்குள் தப்பித்து ஓடி விட்டான் ;
தன் மனைவி காய சண்டிகை கற்போடு விளையாடிய

கயவனாம் உதய குமாரனின் கதையை முடித்தேன் எனக்
கர்ச்சித்தான் ; பாவம் ; மணிமேகலை மூர்ச்சித்தாள்!

செய்தி கேள்வியுற்ற செம்பியன் நெடுமுடிக்கிள்ளி
ஒரே மகன் உயிர் இப்படிப் பிரிந்ததே யென்று, உளம்
துடித்தானில்லை

“நானே தந்திருக்க வேண்டிய தண்டனையை
நாடே தந்தது போல யாரோ தந்து விட்டா’’ரென்று ஆறுதல்
கொண்டான்.

அத்துடன் நில்லாமல் ;
இத்தனைக்கும் காரணம்

மணிமேகலை தானே யென்ற
மனத் தடுமாற்றத்தில் ;

அவளையும் அடைத்தான் சிறையில்! அதற்கு
மனைவியின் சொல்லும் காரணமாம் ஒரு வகையில்!

அப்போது அறவண அடிகள் என்பார்
அறிவு நிறை ஆன்றோர் சான்றோர்

அனைவருமே போற்றித் தொழும் சீலர் ;
அவர் அறிவுரை கேட்டு மன்னன் ;

மணிமேகலையை விடுவித்தது மட்டுமின்றி
மறுபடியும் மக்கள் பசி தீர்க்கும்

மனித நேயப் பணியைத் தொடரச் செய்தான்.
கருணைத் தாயென மாறிய மேகலையை

காஞ்சியரசன் இளங்கிள்ளி வரவேற்று – அவள்
கனவாக இருந்த புத்த பீடிகையும் அமைத்துத் தந்தான்.

மாதவி, மேகலை யெனும்
மாண்பு நிறை தாய் மகள் வரலாறு

மானமிகு தமிழ் நிலத்தின் பெருமை கூறும்
மாசற்ற புகழ் மிக்க வரலாறன்றோ ?

கோவூரார் கேள்வியும் - சூனிங்கிடும் தலையும்

தமிழ் மொழியின் இலக்கண நெறியும் ;
தன்னேரில்லா இலக்கியச் செறிவும்,

தமிழர்களின் நல்லொழுக்கத்தையும்
தகுதிமிகு நாகரிகப் பண்பாட்டையும்

விளக்கி நிற்கும் விளக்குகளாம் என்று
வித்தகராம் ஔவை. துரைசாமி ; விளக்கியுள்ளார்.

அது வெறுங் கருத்தல்ல ; விழுமிய கருத்து –
அறிவார்ந்த நறுங் கருத்து என்பதற்கு

ஒன்றிரண்டு சான்றுகள் மட்டும் உரைக்கின்றேன்
நன்று நன்றென்பீர் ; நமது பீடும் பெருமையும் கண்டு!

★ ★ ★

கவிஞர்கள் புலவர்கள் என்றால்
கவி புனைவதில் பண் இயற்றுவதில் வல்லவர்கள் –

பொதுவில் எல்லார்க்கும் நல்லவர்கள்
புறமா ? அகமா ? போர்க்களப் பரணியா ?

குருதியிற் கலந்த குளிர் தமிழ் எடுத்துக் குயிலெனவும்
கூவிடுவர் ; சிலவேளை புலியெனவும் பாய்ந்திடுவர்!

உறுதி பூண்டு, தம் உதிரப் புனலில் நீந்திச் சென்று ;
இறுதி வெற்றி தமிழர்க்கே வாய்த்திடத் தடந்தோள் தட்டுவர்!

அத்தகு கவிஞர்கள் இந்நாள் – எண்ணிக்கையில்
மெத்தவும் குறைவு எனினும் ; அந்நாள் அவர்கள்,

எண்ணிக்கை ; எண்ணம் இரண்டிலுமே ஏற்றம் பெற்றிருந்தனர்.
கண்ணிமைக்கும் நேரத்தில் பண்ணமைத்துத் தரும் பாவலர்கள் ;

வண்ணமிகு தமிழில் வடித்தளித்த பாடல்கள் ; நம்
எண்ணமெலாம் எரிதழலாக்கி எதிரிகளை ஓடவிடும்.

தலையாலங்கானத்துப் போருக்குத் தலைமையேற்ற
இளையோன் நெடுஞ்செழியன் ; இயல்பாகவே கவிஞன்
என்பதால் –

எத்தகைய வஞ்சினம் கூறினான் ; அவன்
இறவாப் புகழ் என்றும் மறவாதிருப்பதற்கு!

“எதிரிகளை இப்போரில் வீழ்த்தி – நம்
இனமான மேன்மைக்கு வெற்றி மகுடம்

சூட்டாவிடில் ; என் குடையின் கீழுள்ள மக்கள் ;
கொடியவன் எம் கொற்றவன் எனக் கூறித்
தூற்றுவாராக!

அறிஞர் பெருமக்களாம்
புலவர் பெருமக்கள் ; நான்

ஆளும் நிலப் பரப்பை வியந்து
அதனைப் பாடாது விட்டு விடுவாராக!

‘இல்லை’ என்று வந்தார்க்கு
இல்லை என்று சொன்ன

ஈயாக் குணத்தினன் என
இந்நாடு எனை இழித்துரைத்திடுமாக!”

புழுவையும் புலியாக்கும் இந்தப்
புறப்பாடல் முழங்குதற்குப்

புவியாண்ட நெடுஞ்செழியன் – தன்னைக்
கவியாகவும் ஆக்கிக் கொண்டான்.

★ ★ ★

போர் மூண்ட போது மட்டுமல்ல
பொதுவில் அரசர் குல அண்ணன் தம்பிகளே ;

பொருதுகின்றார் களத்தில் என்றால்,
புலவர் கோவூர் கிழார் அங்கிருப்பார்!

உடன்பிறப்பாம் நலங்கிள்ளியும்,
நெடுங்கிள்ளியும் ஒருவரோடொருவர்,

மோதுவதை முதலில் தடுத்திட்ட பெரும் புலவர் ; அந்த
முத்தமிழ் வித்தகர் தானே!

இளந்தத்தன் எனும் கவிஞனை ;
இனம் புரியாமல் நெடுங்கிள்ளி

ஒற்றன் எனக் கருதி – அவனை
ஒழித்துக் கட்ட அவசர ஆணை பிறப்பித்தபோது ;

நெடுங்கிள்ளி ஆட்சியின் நீதியையும் ;
நெடுங்கிள்ளியையும் தலை சாயாமல் – தற்காலிகமாக

நிலை பெறச் செய்த பெருமை – அரசியல்
கலையும் கற்றுணர்ந்த அறிஞர் கோவூர் கிழாருக்கே உரியதாம்!

★ ★ ★

மலையமான் திருமுடிக் காரியை வென்று – அவன்
மக்கட் செல்வங்களை மதயானை காலிலிட்டுக் கொல்வதற்கு ;

மன்னன் கிள்ளிவளவன் ஆணையிட்ட போது
மின்னலாய் விரைந்து குறுக்கிட்ட கோவூரார் தான்

கன்னலாம் தமிழர்க் கென்றும்
இன்னமும் வரலாற்றில் வாழும் கவிஞரென்றும்

ஏற்றப்படுகின்றார் ; எம் போன்றோரால்!
போற்றப்படுகின்றார் ; என்றென்றும் வாழ்க என்று!

★ ★ ★

அடுத்தடுத்து நடந்த போர் ஒன்றில் எதிர்த்திட அஞ்சி நடுங்கி
ஆவூர்த் தலைநகரிலிருந்து, ஓடினான் நெடுங்கிள்ளி
உறையூருக்கு!

அடித்து விட்ட பாம்பாக வஞ்சகத்தை விட்டு விடல் ஆபத்தென்று
அனுபவ அறிவு கூற ; அதனையேற்று நலங்கிள்ளி அவனைத்
தொடர்ந்தான்.

முற்றுகையிட்டான் கோட்டையை ஒரு சோழன் ;
முத்திரையிட்டான் கோட்டைக்கு இன்னொரு சோழன்!

இரு படைகளுக்குமிடையே
திருமலியும் தமிழ்ப் புலவர் கோவூர் கிழார் ;

கோட்டைக்கு வெளியிலேயும் பேசினார்
உள்ளேயும் தூய உளம் திறந்தார்!

என்ன பேசினார்
என்ன வாதம் வைத்திட்டார், என்பதுதான் ;

இதோ இந்தப் பாடலாக ஒலிக்கிறது!
இதமாக ஒலித்து

இருவர் பகையையும்
ஒழிக்க முனைகிறது!

“இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்பிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப் பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித் தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை, செய்யுமிவ் விகலே”

இதன் பொருள் :

"எதிர் எதிரே போர் முனையில்
இருவர் நிற்கின்றீர் –

இருவரில் ஒருவர் பனம்பூ மாலை அணிந்த
அரசன் சேரனல்ல!

வேப்பம் பூ மாலையணிந்த
வேந்தனாம் பாண்டியனுமல்ல ;

இருவருமே ஆத்தி மாலை தான்
ஒருவரைப் போல் ஒருவர்

அணிந்து வந்துள்ளீர் –
அணி வகுக்கப் போகின்றீர் –

இருவரில் ஒருவர் தோற்பினும்
தோற்பது சோழர் குடி தானே!

இருவருமே போரில் வெல்வது
இயலுமா ; சொல்வீர் ?"

கோவூரார் கேள்வியால் குனிந்தன இரு மன்னர் தலைகளும் –
குனிந்தன எனினும் ; தணிந்ததா அவர்களின் போர்வெறி என்றால் ;

நனைந்தது மீண்டும் தமிழர் பூமி ; அவர்தம் குருதிப் புனலால்!
அமைந்தது குறுகிய காலமே ; அமைதிக் காலமாக!

"ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே" எனும்
கோவூர் கிழாரின் குரலுக்கு ; அந்த

"மனித நேய உணர்வு"க்கு
மதிப்பளிக்க மறுக்கும் வரையில் ;

மக்கள் சமுதாயத்தில்
போர் நிறுத்தப் பேச்சுக்குப் பொருளே இல்லை என்போம்!

"செருப்பாழி எறிந்த" என்பது சிறப்புப் பட்டமா?

சோழர் வரலாறு தமிழக வரலாற்றில்
முதன்மை பெற்றதாகவும் – மிகச்

சுவை நிறைந்ததாகவும் – அதற்கொப்ப
சோகம் மிகுந்ததாகவும் – தமிழ்

மொழியைப் புகழ்ந்து போற்றியதாகவும் – பின்னர்
தம்மொழியைத் தள்ளி வைத்துப்

பிற மொழியை ஏற்றியதாகவும் –
கலை, நாகரிகம், காத்ததாகவும்,

நீதி நிர்வாகம் சிறப்புற வழங்கி வழிகாட்டியதாகவும்
வடபுலத்து மன்னர்கள் வாரித் தந்த பரிசுகளை

வெற்றிக் களிப்புடன் ஏற்றுக் கொண்டதாகவும்
கடல் கடந்தும் களங்கள் கண்டதாகவும் – அந்தக்

களங்களில் எல்லாம் வெற்றிக்கனி உண்டதாகவும் ;
ஆண்டுகள் பல கொண்ட ஆட்சிகள் ; புகழுடன்

அமைந்து சிறந்ததாகவும் ;
அறிஞர் பெருமக்கள் வியந்து மகிழ்கின்றனர் ;

தமிழக வரலாற்றில் நிமிர்ந்து நின்ற
தகைசால் சோழப் பேரரசுகளை!

★ ★ ★

நாவலர் சோம சுந்தர பாரதியார், வரலாற்று
வல்லுநர் நீலகண்ட சாஸ்திரியார் –

வழங்கியுள்ள சிறப்புரைகளுடனே
வரைந்துள்ள முனைவர் மா. இராசமாணிக்கனாரின்

சோழ வரலாறு படித்திடும் வாய்ப்பு பெற்றேன்.
ஆதிகாலச் சோழ மன்னர்கள் ஆண்டிருந்த காலம்

தொல்காப்பியர் காலத்துக்குத் தொடர்புடைய
கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பார்.

முதல் வரிசையினராக கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு
முற்பட்ட சோழர்கள் சிபி, முசுகுந்தன், கடந்தன், செம்பியனும்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் "செருப்பாழி எறிந்த
இளஞ்சேட் சென்னி" என்பானும் ஆண்டனராம்!

கி.மு. இரண்டாம் நூற்றாண்டை
மனுநீதிச் சோழனுக்கும், முதல் கரிகாலனுக்கும்

ஒதுக்கியதை ஒப்புக் கொண்டு ;
முதல் நூற்றாண்டுச் சோழன் இரண்டாம் கரிகாலன் என்றும் ;

மூன்றாம் நூற்றாண்டுச் சோழன் முடியுடை வேந்தன் ;
செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்றும்,

அதனைச் சேர்த்திணைந்து வரும் கி.பி. 1 முதல் கி.பி. 150 வரை
நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி போன்ற சோழர்க்கு

உரியவை என்றும் அவர் உரைத்திடுவது கண்டு ;
ஓர் அய்யப்பாடு மட்டும் எனக்கெழுந்ததுண்டு!

அஃதென்ன அய்யப்பாடு என்பீரேல் ;
அப்படியொன்றும் பெரிதில்லை ; ஆனால்

அடியேனுக்கு வந்த நினைப்பு ; அடுத்து யாருக்கும்
வரக் கூடாதென்பதற்காக அதனை விளக்குகின்றேன்.

அடைமொழிகளுடன் அனைத்து மன்னர்களும் பெருமை பொங்க
அழைக்கப்படுகிறார்கள் என்கிற போது ;

அதென்ன ; இளஞ்சேட் சென்னி சோழனுக்கு மட்டும்
அருமை சற்று குறைந்ததாக "செருப்பாழி எறிந்த"

எனும் பட்டப் பெயரைத் திட்டமிட்டு இணைத்துள்ளனரே ;
இது சற்று இறக்கம் போல் "சரிவாக"த் தெரிகிறதே –

இளஞ்சேட்சென்னியை "இழித்தல்" போல் பொருள்படுகிறதே
என்றெல்லாம் மனக் குழப்பம் ஏற்பட்டதெனக்கு –

பின்னர் அகராதி பார்த்து என் குழப்பம் தீர்த்துக் கொண்டு – அதற்கு
முன்னர் உம் குழப்பம் தீர்ப்பதற்கு ஓடோடி வந்தேன்.

"செருப்பாழி எறிந்த" என்பதால் சிறு குழப்பமும் தேவையில்லை.
"செருப்பு + ஆழி" என அச்சொல்லைச் சிந்திக்கக் கூடாது ; மாறாக

"செரு" என்றால் "போர்" என்று பொருள்படும் அல்லவா ;
அதனையும்
"பாழி" என்பதற்குப் 'பாசறை' என்று அகராதி கூறும்
அர்த்தத்தையும் ;

"எறிந்த" என்பதற்கு "வென்ற" என்று தமிழில் வழங்கும்
விளக்கத்தையும்
இணைத்துப் பார்த்திடில் செரு + பாழி + எறிந்த,
இளஞ்சேட்சென்னி என வரும் ;

இதனை உணர்ந்து நான் கொண்ட இன்பம் ;
இன்னுயிராம் நம் தமிழில் கண்ட இன்பமன்றோ!

இந்தியத் திருநாட்டுச் சரித்திரம் – அதிலும் குறிப்பாக
இடையிலே தொடங்கிய காரணத்தால் ; இன்னும் குறிப்பாக

தமிழகத்தில் தொடங்காது தவறி விட்ட காரணத்தால் ;
தண்டிலும் வேரிலும் படாமல் ; மரத்தின் கிளை நுனியில்

தண்ணீர் ஊற்றி வளர்த்திடக் கருதிய கதையாகப் போயிற்று!
அல்லது
வெந்நீர் விட்டு வேரினை வேக வைத்த நிகழ்வாகவும் ஆயிற்று!

★ ★ ★

இளஞ்சேட் சென்னி காலத்திலேதான் ; சோழர் படை
களம் காண வேண்டியிருந்தது மோரியரை எதிர்த்து!

சந்திரகுப்தன் வீரத்தையும், சாணக்கியன் சாதுர்யத்தையும்
சாதகப் பின்னணியாய்க் கொண்டு சாய்த்து விடலாம்,
தமிழகத்தையென்று, தமக்குள்ளே கனவு கண்ட மோரியர்கள்,
அதற்குத்
தடையாய் நின்ற மலைகளைக் கூடத் தகர்த்து முன்னேறினர் ;
மோகூரை நோக்கி!

தென்னாற்காடு மாவட்ட ஆத்தூர் கணவாய்க்கு அண்மையில்
அமைந்ததே
திறன்மிகு சோழர் படையின் பாசறை இருந்த மோகூராம்!

'பாழி' யென அமைந்த அந்த ஊரை 'எறிந்து' வென்றால்
பகைவராம் மோரியர் பணிந்து ஓடுவர் எனக் கண்ட சோழன்,

படையுடன் வந்த எதிரிகள் கூட்டத்தைப்
பள்ளம் போய் வீழுகின்ற வெள்ளம் போல்

பாய்ந்து சென்று ; பல முனைகளில் தாக்கிடவே –
பணிந்தனர் மோரியர் ; பதுங்கினர் படையுடன்!

ஒதுங்கினர் மோகூர் பாசறை விட்டே ;
ஓடினர் பிடரியில் பாதம் பட!

இளஞ்சேட் சென்னி ஈட்டிய அந்த வெற்றி கண்டு தான்
எழுச்சி மிகு விருதாக "செருப்பாழி எறிந்த சென்னி" எனும்

சிறப்பு மிகு பட்டத்தை செந்தமிழ்ப் புலவர்கள் கூடி ; அந்தச்
சிங்கத் தமிழனுக்குச் சூட்டி மகிழ்ந்தனர் ; ஆனந்தப் பள்ளுப்பாடி!

மறையவில்லை; மறுமலர்ச்சி பெற்றது!

கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு
முற்பட்ட சோழர்களின் பொற்காலம் ;

ஆதிகாலச் சோழர்களாம் 'சிபி' மன்னரில் தொடங்கி ;
கி.பி. 350 முதல் முடியிழந்து முடங்கி,

வருந்த வேண்டிய நிலைமைக்கு
வந்து சேர்ந்தது.

முடிசூடி அவர்கள் அரசமைத்து வாழ்ந்த
ஒளி மிக்க காலத்திலே தான்;

முதல் இரண்டு கரிகாலர்களும்
கிள்ளி வளவன் கோப்பெருஞ்சோழன் – எனப்

பேரரசர்கள் பலரும் ஆண்டு முடித்து – புகழ்
ஆரவாரப் பேரொலியை அவனி முழுதும் பரப்பினர்.

அதன் பிறகோர் இருண்ட காலத்தைச் சோழர்
சந்திக்க நேர்ந்தது எனினும் – அவர்கள் காலம்

ஒளியுமிழ் காலமாக மீண்டும் உறையூரிலிருந்து
கி.பி. 850ஆம் ஆண்டு முதல் தொடங்கியதாம்.

இடையிடையே ஒளிக் கீற்றுக்களாக மின்னல்கள் தோன்றினாலும்
இருண்ட காலமாக அய்ந்து நூற்றாண்டு கழிந்தது என்பதே
வரலாறு!

ஆனால் அதற்கு முன்பு கரிகாலன் காலத்து சோழப் பெருநாடு,
ஆரம்ப எல்லை வட பெண்ணையாறு

அடுத்த எல்லை கன்னி முனையென்பார்.
அத்துடன் காஞ்சி மண்டிலமும் இணைந்ததுவாம்.

ஆட்சியின் பரப்பும், அதற்கேற்ற வண்ணம்
அநேகக் கோட்டங்கள் பிரிப்பும் –

அவை ஒவ்வொன்றும் ஏற்ற பொறுப்பும்
நிர்வாகத்தில் வலிமையும் செழுமையும் வழங்கின.

ஆனை படுக்கும் அளவுள்ள இடத்தில் விளையும் பயிர்
அமுதூட்டி ஏழு பேர் பசியாற்றும் வள நாடு சோழநாடு என

ஆவூர் மூலங்கிழார் எனும் புலவர்,
அகமகிழ்ந்து பாடியுள்ளார் – தமிழ்ப்

பாவூராய்த் தமிழகம் திகழ்ந்ததற்கு எடுத்துக் காட்டுத்தான்
பண்புடைப் புலவர்கள் எழுநூறு பேர் சங்க காலத்தில் என்பதும் –

பெண்பாற் புலவர் அவர்களில் சுமார் அய்ம்பது பேரும்
கண் போல் தமிழைக் காத்ததினால்தான்

இமயம் வரை சென்று வென்ற நம் வரலாற்றை
இமைகள் விழியைக் காப்பது போல் காத்தளித்துள்ளார்.

திருமலியும் வளமைமிகு சோழப் பொன்னாட்டில்
திருவள்ளுவர் குறளுக்கேற்ப அரசு நடாத்திட அவாவிருப்பினும்

இருளில் ஒளிந்து கரும் பூனையாக வடமொழியாளர் நுழைந்த
தருணம் அதுவாக அமைந்தது தமிழகத்தார்க்கு – எனவே

அரசின் சார்பில் அமைந்த "அய்ம் பெருங்குழு''வில் ;
அமைச்சர், தளபதி, புரோகிதர், தூதுவர், சாரணர் இடம் பெறவும் –

கரணத்தியலவர், கருமவிதி, கனகச் சுற்றம், கடைகாப்பாளர்,
நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகிய

எண்மர் கொண்ட "எண் பேராயம்'' அமைந்திடவும் –
அனைத்தையும்
இணைத்ததாக "ஊரவை'' கூடி அரசின் ஆக்கப் பணி
ஆற்றிடவும் –

சீர் மன்றமாய்ச் செயல்படத் திட்டமிட்டு நீதி வழங்கிட ;
“ஊர் மன்றங்கள்” உருவாக்கிடவும் ;

விதிகள் இயற்றி வினையாற்றினர் அரசினர் என்று
விளக்கிடும் விதம் காணும் நிலையில் ;

முறை செய்து இறையெனும் அரசு இயங்கியது என்பதை
முடிமன்னன் கோப்பெருஞ்சோழன் மாண்ட போது ; “மன்னா!

மன்றத்தில் நீ வீற்றிருந்து அரசியல் செய்த அழகே அழகு” எனப்
புலவர் பொத்தியார் கலங்கியது கவிதையாகியிருப்பதிலிருந்தே ;
புரிகிறது!

ஊராண்மை நடத்தும் உறுப்பினர்களும் தலைவர்களும்
ஊரவையார் பங்கு பெறும் குடவோலை முறை மூலமே

தேர்வாயினர் என்பதற்கும் அந்நாள் சான்றுண்டு! பல துறைத்
திறன் பெற்றார்க்கு ‘ஏனாதி’ ‘காவிதி’ ‘எட்டி’ எனும் பட்டங்கள்
வழங்கலுண்டு!

உயர்வு நவிற்சியற்று உள்ளதை உள்ளபடி
உரைத்திடும் ஓங்கு புகழ்ப் புலவர் பெருமக்களுடன்

ஊராளும் மன்னன் ஓய்வு நேரங்களில்,
ஒரு பெரும் பகுதியைக் கழிக்கும் வழக்கமும் உண்டு!

சான்றாகக் கோவூர் கிழார் பற்றி அறிந்திருப்பதே போதுமென்பேன்.
ஆன்றோர்கள் அத்தனை பேர் அரசர் விரும்பும் கவிஞராய்
அமைந்திருந்தார்!

புகார்ப் பட்டினம் போன்ற பெரு நகரங்களில்
பொலிவு மிகு மாடமாளிகைகள் – பூஞ்சோலைகள் –

ஆழமற்ற கிணறுகள், அழகான நீச்சல் குளங்கள்
இன்ப விளையாட்டுக்கான எழில்மிகு பளிங்கு மண்டபங்கள் –

மணமுறை பற்றியும் சோழ வரலாற்றில்
மனந்திறந்து சொல்லுகிறார் ; பி.டி. சீனிவாச அய்யங்கார்!

இருவகை மணமுறை பழந்தமிழர் மணமுறையாம்
இசைக் கருவி ஒலித்து, இறையை வணங்கி, மலரும் அரிசியும் கலந்த

மங்கல நீராட்டி – அன்றிரவே மணமக்களை இல்லறப்படுத்திடுதல்.
இஃதோர் மண முறை! இன்னொன்று என்னவெனில் ;

“மணமேடையில் எரி வளர்த்தல் இல்லை, தீ வலம் இல்லை –
தட்சணை பெறப் புரோகிதர் இல்லை, இது முற்றும்

தமிழர்க்கே உரிய திருமணம் என்கிறார்”
சீனிவாச அய்யங்கார் ;* சிலப்பதிகாரத்து மண விழாவில்!

மறைவழி காட்டிட மாமுது பார்ப்பான் வருவதையும் –
வலியுறுத்திக் கவனப்படுத்தாமல், தமிழனின் பழைய

வழக்கத்தை மாத்திரம் சுட்டிக் காட்டி விட்டுத் தம்
வழியில் சென்றுள்ளார் எனும் வாய்மையைப் போற்றலாமல்லவா?

இளங்கோவடிகள் தீட்டியுள்ள
பூம்புகார் இலக்கிய வர்ணனை மட்டுமே

வளங்கொழித்த தமிழகத்தின்
பழம்பெரும் நாகரிகச் சிறப்புக்குச் சான்றென

நவின்றிடுவேன் ; இதன் வாயிலாகத்
தமிழ் நிலத்தின் வளம், தமிழர்களின் உளம் – அவர்கள்

பெற்றிருந்த காதல், வீரம், கடமை உணர்வு,
கற்றிருந்த புவியறிவு, வானறிவு – அடடா ;

இதனைச் சிந்தித்துக் கொண்டே யிருக்கும்போது ;
புதிய பூம்புகார் உருவாக்கிடப் பாடுபட்டு வெற்றி கண்ட நமக்கு ;

அந்தப் பழைய பெருமைகளையல்லவா
எருவாக்கி ; இந்தப் பூஞ்செடியை நட்டுள்ளோம் ; இது

பூந்தோட்டமாகிப் பூத்துக் குலுங்கும் மலர்களை நாம் பறித்து, தமிழன்னையின்
பொற்பாதங்களில் குவித்து மகிழ்வது எப்போது

என்றல்லவா ஏங்கிட வேண்டியுள்ளது! – நம் கனவு
வென்றிட, இன்னும் எத்துணை சுமைதனை நம் தோள் தாங்கிட
வேண்டியுளது ?

மேலும் ;

கடைச்சங்கம் முடிவுறும் காலத்தில்
கங்கையாறு வரையில் ஆண்டிருந்த

சாகவாகனராம் ஆந்திர மன்னர்களும்,
அவர்களுக்கு அடங்கி பல்லவ மன்னர்களும்

கோலோச்சிய காலமும் மாற்றமுற்று ;
பாலாற்றுக்குத் தெற்கே பல்லவராட்சி பரவிடத் தொடங்கி ;

பழம்பெரும் நகர் காஞ்சி ; அதன் தலைநகர் ஆயிற்று! அங்கிருந்து
நாடாண்ட முதல் பல்லவ வேந்தன் – கி.பி.

நான்காம் நூற்றாண்டு தொடக்கத்தில்
சிவஸ்கந்த வர்மன் என்பவனாம்!

திரண்டு வரும் மேகங்களால் – வான்
இருண்டு ஒளி குன்றுவது போல் ;

சற்றொப்ப அய்நூறு ஆண்டு – ஒளி
அற்றிருந்த சோழவம்சம் ; மீண்டும்

எழுச்சி பெறத் தொடங்கியது – கி.பி.
850ஆம் ஆண்டுக்குப் பிறகு!

அப்போது ஆட்சிப் பொறுப்பேற்று ; உறையூரில்
அரசு கட்டிலில் ஏறி அமர்ந்தவன் ;

வீரன் ஆதித்தனை மகனாகப் பெற்ற
விஜயாலயச் சோழ மன்னன்!

மகத்தான அந்த உதயம் ; மறையவில்லை சோழர் பெருமை ;
மறுமலர்ச்சி பெற்றுள்ளது என்பதை மன்பதைக்கு வரலாறாகத்
தீட்டியது!

சோழர் நாடு சோர்வுற்றதற்கும் – பின்
சோர்வு நீங்கி எழுந்ததற்கும்

இடையே அய்நூறு ஆண்டு இடைவெளிதான்
ஆனால் அதற்குள்,

செங்குட்டுவன், கரிகாலன் – இளஞ்
சேட் சென்னி எனும் தமிழ்ப் பெயர்கள் மறைந்து

விஜயாலயச் சோழன் எனும் வடமொழிப் பெயர்
விரைந்து வந்ததற்கு என்ன காரணம் எனும்

வினாவுக்கு விடை அறிவீரே!
விளக்கம் பெறுவீரே!

* (Vide his "History of the Tamils" - Page 80)

உயிரினும் மேலான உயர்ந்த நட்பு!

அறிவுடைநம்பியாம் பாண்டியன் அறிவு விளக்காக அமைந்திட்ட
செறிவுடைச் செந்தமிழ்ப் பேரொளியாம் பிசிராந்தை ;

சோழ நாட்டு வேந்தன் கோப்பெருஞ்சோழன்பால்
சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக் கொண்டிருந்தார்

பிறந்த இடமாம் பிசிர் எனும் ஊரில் – நிழல்
அடர்ந்த தோப்பில் நெறியுடைக் கவிஞர் ஒருநாள் ;

ஆருயிர் நண்பன் சோழனைக் குறித்துப் பாடலொன்று ;
யாத்திடும் ஆசை நிறைவேற வேண்டுமென்று,

அன்னச் சேவலை மையமாய் வைத்து – அழகுறப் பாடல்
கன்னல் தமிழில் கற்பனையூற்றாய் எழுதினார் புலவர்!

“அன்னச் சேவலே! அன்னச் சேவலே!” என அழைத்து
இன்னலுற்றுள்ள தன் நெஞ்சைத் திறந்து காட்டி,

மன்னவன் பெருங்கோ கிள்ளியெனும் கோப்பெருஞ்சோழனை
இன்னமும் காணுகிற வாய்ப்பினைப் பெறவில்லையே யென்ற

மனப்புயல் ஒருபுறம், அடக்கிக் கொண்டு – அவன்
மாப்புகழ்பற்றி எடுத்துரைத்தார்!

“அன்னச் சேவலே! அன்னச் சேவலே! நீயோ
கன்னிக் குமரியின் முனையிலேயிருந்து

அயிரை மீனைக் கொத்திய அலகுடன் – வெகு
உயரம் விண்ணில் பறந்தவாறு,

பனிமலை நிறைந்த வடக்கு திசைக்குப்
பயணம் செய்கிறாய் ; நின் பயணம் வெல்க!

கடக்கும் வழியில் என் கண்மணிச் சேவலே! பகை
அடக்கும் சோழன் தலைநகர் உளது!

வழியில் நீயும் நின் பெடையுடன் சென்றால் – சோழன்
விழியில் அன்பின் ஒளியினைக் காண்பாய்!

ஆந்தையார் எனும் புலவர் வாழ் பிசிர் எனும் ஊரைச்
சார்ந்தோர் நாங்கள் எனச் சாற்றுவாயாகில்;

அரசனே ஓடி வந்துமை வரவேற்று வாழ்த்தி
அணிமணி பலவும் நின் பேடைக் களிப்பான்!''

★ ★ ★

ஆந்தையார் சொற்கேட்டு அன்னச் சேவலார் – சோழ
வேந்தனிருக்குமிடம் சென்றாரோ இல்லையோ;

ஆருயிர் நண்பன் சிறப்பைச் செதுக்கிய மனநிறைவுடன்
அன்பு மனைவியிடம் புலவர் அதனைப் பாடிக்காட்டி மகிழ்ந்தார்!

''அன்னச் சேவல் கற்பனை மிக அருமை'' என்றுரைத்தவாறு
அன்னம் படைத்திட்டாள் துணைவி; அவருக்கும் பேரக்
குழந்தைகட்கும்!

''முல்லை வரிசை இரண்டிங்கே சிரிக்கின்ற காட்சி பாராய்''
என்றார்!
வில்லையொத்த புருவம் விரித்து ''எங்கே?'' எனக் கேட்டாள்
துணைவி!

''பாவையுந்தன் பாளைச் சிரிப்போடு – இதோ
பச்சரிசிச் சோறின் சிரிப்பையுந்தான் முல்லையென்றேன்'' என்றார்!

''பார்த்துப் பேசுங்கள்; பக்கத்தில் குழந்தைகள்'' என்றாள்! –
''நமது மகன்;
வார்த்தெடுத்த வைரச் சிலைகளுக்கு இம்மொழி புரிய வயது
போதாது!

வளர்ந்த மகன், மனைவியுடன் வயலுக்குச் சென்றுளான்
– அவர்கள்
வருவதற்கு நேரமாகும் ; அஞ்சாதே!” என்றார்.

“வந்துவிடுவார் இப்போது கொஞ்சாதீர்” என எச்சரித்தாள்! – உடன்
வாய் மூடிக் கொண்டார் புலவர் ; அவள் வடித்திட்ட சோறாலே! – அது
போய்த் தொண்டையிலே அடைத்ததாலே
புரையேறிப் புலவர் தவித்தார்!

தையலோ தாவிப்பாய்ந்து கணவன் தலையிலே ஒரு தட்டுத்
தட்டிக்
கையினால் நெஞ்சைத் தடவிக் கொடுத்தபோது தழுவினார் ;
நழுவிவிட்டாள்!

கலகலவென ஒலிக்கின்ற சதங்கைப் போலக் காதல் முதியோர்
களிப்புமிகக் கொண்டவாறு சிரித்துவிட்டார்!

கரும்பின் அடிப்பாக இனிப்பைப் போல மழலைக் கொட்டி –
பிஞ்சுக்
கைகளையே தட்டிக்கொண்டு பேரன் பேத்தி சிரிக்கலுற்றார்!

மடையுடைத்தாற்போல் பொழிந்த மகிழ்ச்சிக்குத் திடுமென
தடைவிதித்தாற் போல் செவியில் விழுந்தது ஒரு செந்தழல்
செய்தி!

உறையூர் வேந்தன் கோப்பெருஞ்சோழனை எதிர்த்து – அவன்
உயிராய்ப் போற்றிய மைந்தர்கள் படை எடுத்தனர் என்றும்,
கிள்ளை மொழித் தமிழால் கவிபுனையும் சோழ மன்னவனோ
பிள்ளைகளின் செயலால் பெருந்துயரில் ஆழ்ந்திட்டான் என்றும்

வெள்ளை மலர் உள்ளத்தான் வேறு வழியே இன்றி
வீர வாளைக் கரமேந்திக் களம் காண எழுந்திட்டான் என்றும்

தந்தைக்கும் மைந்தர்க்கும் மூண்டு விட்ட போராட்டம் குறித்த
விந்தைச் செய்தியினைக் கேட்டுப் பிசிராந்தைப் புலவர்

சந்தையில் தொலைத்துவிட்ட பொருளாயிற்றே தமது மகிழ்ச்சி
எனக் கூறி
சிந்தை மிக நொந்து புறப்பட்டார் சோழ நாடு!

★ ★ ★

கோப்பெருஞ்சோழன் அமைத்திட்ட ஊர்ப் பொது மன்றமொன்றில்
கூடியுள்ளனர் அவ்வூர்ச் சான்றோர் எனக் கேள்வியுற்று

வார்த்தையில் அடங்காப் பரபரப்புடனே இதயம் துடிக்கப்
போர்ப்புகை அணைந்ததா என்றறிய அங்கு சென்றார்.

பொத்தியார், பூதநாகனார், நத்தத்தனார் மற்றும்
புல்லாற்றூர் எயிற்றியனார் எனும் புலவர் பெருமக்கள்

மன்றத்திலிருந்து குதித்தோடி வந்து, பிசிராந்தையாரை
மார்புறத் தழுவி "வருவீர் வருவீர்" என வாழ்த்திக் களித்தனர்!

"அங்கம் பதறி அகம் பதறி வந்துள்ளேன் அய்யா
சிங்கத்துக்கும் அதன் குட்டிகட்கும் மூண்ட போர்

என்ன ஆயிற்று?" என வினாக்குறியாய் நின்றார் புலவர்!
"ஏதொன்றும் தீங்காய் முடிந்திடவில்லை கேளீர்!

இன்னலொன்று தோன்றிற்று அதனை இந்தப் பெருமகன்
மின்னலெனப் பாய்ந்து சென்று தடுத்து விட்டார்

குஞ்சுகள் மிதிப்பதாலே கோழியும் பதைக்கலாமோ எனக்கேட்டு
கொஞ்சு தமிழ்க் கவிதையாலே கோப்பெருஞ்சோழனையே
குளிர்வித்துப்
போர் நிறுத்தம் செய்வதற்குக் காரணமான
புல்லாற்றூர் எயிற்றியனார் இவர்தான்" என்று

பொத்தியார் அறிமுகம் செய்து வைத்தார்!
பூரிப்பால் பிசிராந்தை துள்ளலானார் – பின்னர்;

உவகை மலர்ந்திட ஊர் திரும்பலானார் – அவர்
உள்ளம் புயலாகும் ஓர் செய்தி அங்கு காத்திருந்தது!

★ ★ ★

கிழக்குதித்த சூரியன் போல் நாடாண்ட சோழ மன்னன் ;
தனக்குதித்த பிள்ளைகளின் எதிர்ப்பாலே உடைந்த மனம்
ஒட்டாமல் ;

வடக்கிருந்து உயிர் விடுவதற்குச் சென்றான் என்று
மடற்கத்தி போல ஓலையொன்றைக் கண்டார் கவிஞர்!

“ இக்கணமே புறப்பட்டு இல்லம் சென்று விடைபெற்றுத்
திரும்புகின்றேன்
இலக்கணமாய் நட்புக்கு வாழ்ந்த நாங்கள் இறப்புலகில்
பிரிவதில்லை!

வடக்கிருக்கச் சென்றுள்ள சோழனிடம் கூறிடுவீர்! – அவன்
அருகிருக்கப் பிசிராந்தை விரைவில் வருவானென்று!”

இதைச் சொல்லிப் புலவர் ஏறு இலையினின்றுதிர் பனிநீர் போல
இமை இரண்டில் விழி நீர் சொட்ட ; பயணமானார்!

★ ★ ★

ஆண்ட நாள் ஆண்ட செந்தமிழ்ச் சோழன் – மைந்தரால்
மூண்ட போரினையெண்ணி மூடுபனி நெஞ்சு கொண்டு ;

வடக்கிருந்து மாண்டிடவே விழைந்தான் என்றும் – மன
வாட்டம் அறவே தீர அதுதான் மார்க்கமெனத் தேர்ந்தான் என்றும்

தமிழகம் வாழ்புலவர் கேள்வியுற்று – தங்களுயிர்
அமிழ்தல்ல என்றுரைத்து அவனோடு சென்றமர்ந்தோரில் சிலர்
வெல்லமெனக் கருதாமல் வேந்தன் பிரிவதற்குத் துணிந்த உயிர்
மெல்லக் கரைந்து மேனிமுற்றும் தளர்ந்த போது – சிலர் ;

கோப்பெருஞ்சோழப் பெருமகனை நோக்கி “மன்னர் மன்னா!
பாப்புனையும் பைந்தமிழ்ப் பேராசான் பிசிராந்தையார்,

காணாமலே அகம் கோணாத நட்பு கொண்டவர் என்பாய் – உன்
வாணாளும் முடியப் போகின்றதே ; அவர் வாராத காரணம்
என்ன?” என்றார்!

“அருகிருந்து உயிர் விடுவதாய்ச் சூளுரைத்துப் போனவர் –
திரும்ப
வருகின்றேன் என்ற வார்த்தை என்ன ஆயிற்று?’’ எனும் கேலி
ஒலித்திடவே ;

சாவதற்கு வந்த இடத்திலும் நண்பரது சான்றாண்மை குறித்துச்
சந்தேகம் எழுப்பியவர்பால் மன்னன் சீற்றம் கொண்டான்.

“பாண்டி நாட்டுப் பழகு தமிழ்ச் சிற்றூராம் பிசிர் எனும் பதியில்
தோண்டியெடுத்திட்ட தங்கமாய்த் தோன்றிய ஆந்தையார்
நட்போ ;

வாழுங்கால் வந்து தலைகாட்டி ஆடாவிடினும்
தாழுங்கால் தயங்காது ஓடிவந்து துணை நிற்கும் தூய நட்பு!

ஆன்றோரே! இதனை அறிவீர்!” என்றே விடையிறுத்த மன்னன்
;
ஆவிதனை அடுத்த மறுநாள் விடுத்தே நடுகல்லாய்
ஆகிவிட்டான்!

தாமதமாய் வந்தார் எனினும் பிசிராந்தை ; ஆங்கு
தமது நண்பரது பக்கத்தில் வடக்கிருந்து உயிர் நீத்த
நிகழ்ச்சியினை ;

கண்ணகனார் எனும் புலவர், கண்ணீரை மலராக்கி
கவிதை மாலை தொடுத்து அந்த நடுகற்களுக்கே சூட்டுகின்றார்!

அது ; இது!

“சான்றோர் என்றுமே சான்றோர் அருகிருப்பர்.....
சான்றாண்மை இல்லாதார், வரலாற்றில் சருகாகி உதிர்ந்து
போவார்!”

உயிரினும் மேலான உயர்ந்த
நட்பன்றோ ; இந்த உத்தமர்கள் நட்பு!

இளையவள்; அவள் ஒரு தமிழ் மகள்!

துள்ளி வரும் வேல் கொண்டும் – ஆவேசத்தை
அள்ளிவரும் வாள் கொண்டும்

பள்ளி செல்லாப் பருவத்து இளங்கொழுந்தும்
கிள்ளி எறிவேன் பகையை என்று

கிளர்ந்தெழுந்த காலம் அது – தமிழர்க்குத்
தங்கமென வாய்த்த காலம் – புலவர் பலர்

சங்கம் வளர்த்த காலம்! வீரர்
பொங்கும் புலியெனப் போர்க்களம் சென்றனர்

மங்கல மங்கையர் அவரை வாழ்த்தியே நின்றனர்
காற்றடிக்கும்போதும் – அதில்

தமிழ் வீரம் வந்து மோதும்! கடலின்
அலை உயர்ந்து கிளம்பும்– அதில் தமிழன்

நிலை உயர்ந்து விளங்கும்!
அகிலின் புகை மணக்கும் – அதிலும்

தமிழின் புகழ் மணக்கும்!
முகிலிடை எழில் மதி தோன்றும் – அதில்

முத்தமிழ்க் காவிய நிதி தோன்றும்!
அவனி புகழ் பெருநிலத்தை ஆண்டிருந்த

அசோக மன்னன் கூட தன்
ஆட்சிக்கு உட்படாதோர்

ஆற்றல்மிகு தென்புலத்தார் என்று சொன்ன ;
தென்னகத்துத் திண்தோள் இனத்தாரில்
தீரம் நிறை கோசர் எனும் ஒரு பிரிவு!

வீரம் விளைவிக்கின்ற திறன் படைத்தோர்,
தூய்மை சேர் வாய்மைக்குப் பேர் பெற்றோர்,
துளுநாடு நீங்கிக் கீழ்க் கடல் வரையில்
அலைந்து திரிந்த போக்கினை நிறுத்தி

“ நியமம்’’ “செல்லூர்’’ பகுதியிலே நிலைத்ததாய் வரலாறு!

“● செல்லூர்க் குணா அது
பெருங்கடல் முழக்கிற்றாகி, யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்’’

★ ★ ★

அகநானூறு இலக்கியம் அறிவிக்கும் செய்தி இது.
‘அன்னி’யென்றும், ‘மிஞிலி’ யென்றும் அகப்பாட்டு ;

அடலேறுத் தமிழ் வீரர் இருவரை அறிமுகம் செய்யும்.
இருவீரர் பெயர் இணைத்து இளையவள் ஒரு தமிழ் மகள்

புருவத்தை விழியைப் போர்க் கருவியாக்கிக் காளையரை
வீழ்த்துகின்ற
பருவத்தாள் எனினும், பண்புடைய திருக்குமரி!

தழுவத்தான் பலர் துடித்தார்– கோசர் சிலர் அவர்
தந்தையிடம் பெண் கேட்டார். மறுத்துவிட்டார்.

‘அன்னிமிஞிலி’ எனும் அழகு நங்கை
அமர்க்களத்தில் உயிர் நீத்த அன்னி யெனும் வீரன் போல்

அனல் உமிழும் கற்புடையாள்!
‘ஆய் எயினன்’ எனும் வீரனை வென்று வீழ்த்தி

நன்னனது ஊரினையும் தனதாக்கிக் கொண்ட
‘மிஞிலி’ எனும் வீரனைப் போல் உறுதிமிக்காள்!

“நிலவுச் சித்திரம் போல் – நீரில்
உலவு நீள் விழிக் கெண்டை போல்

குலவிடும் கிள்ளைப் பெண்ணாள் – நற்
கலவிக்கு ஏற்ற கண்ணாள்–”

என நினைத்து இளித்து வந்த சில கோசர்களை
என்ன நினைத்தாய் என் மகளை எனக் கேட்டு

கன்னலடா என் செல்வி அதைக் கடுங்குரங்கின்
கையில் தரச் சம்மதியேன்! அவள்

எண்ணமெலாம் அழுந்தூரான் மீது அறியீரோ?
திதியன் எனும் அவ்வூர்க் காவலனே அவளுக்கும் காவலனாம்!

அடுத்தொரு முறை வருவது கூடாது– நான்
எடுத்துச் சொன்னதைப் புரிந்து கொண்டு நடந்திடுக உடனே
என்றார்!

வாய்மை நிறைக் கோசரிலும் வன்னெஞ்சம் கொண்டோர் சிலர்
வாழ்ந்திட்டார் என்பதுதான் வரலாறு! அவர்

வகுத்திட்டார் ஒரு திட்டம் வஞ்சிதனைக் கைப்பற்ற!
பயற்றம் பயிர் விளையும் பாங்கான நிலங்கள் பல

நியமத்தில் நிலைத்திட்ட கோசர்க்கு உரிமைச் சொத்து!
பசுவொன்றே அன்னி மிஞிலியின் அன்பான குடும்பச் சொத்து!

பயங்கரத் திட்டத்தால் அப்பசுவை விரட்டியடித்துத் – தங்கள்
பயற்றம் பயிர்க் காட்டில் மேய விட்டார் சில கோசர்!

பசித்திருந்த பசுவுக்குப் பயிர்க்காட்டு மேய்ச்ச லென்றால்
பாய்ந்து சென்று தின்னாமல் பயந்து கொண்டா ஓடிவிடும்?

பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பையெல்லாம்
கூட்டாகச் சேர்த்துத் தின்று உப்புகின்ற

கொடும் ஆதிக்க வர்க்கத்தின் தொப்பையைப் போல்
இனியில்லை இடமென்ற அளவுக்கு உப்பியது அந்தப் பசுவின்
வயிறு!

கன்னியில்லை என்று சொன்ன கிழவனது
கண்ணில்லை என ஆக்கிவிட்டால் – பின்னர்

துணையில்லை தோகைக்கு! எல்லோரும் அந்த
இணையில்லாப் பேரழகைப் பகிர்ந்து கொள்வோம்

இப்படித் திட்டமிட்ட இழி குணத்தார் ;
செப்படி வித்தை காட்டிச் செயல் புரிந்தார்.

அன்னி மிஞ்லியின் அப்பனைக் கூண்டிலேற்றி
அன்றந்தப் பயற்றங்காட்டில் பசுமேய்ந்த கதையைச் சொன்னார்

ஊர் மன்றக் கோசர்களும் உண்மை என்ன உரைப்பீர் என்றார்!
கார்கொண்ட வானம் போல் முகம் கறுத்து அக்கிழவர் ;

“யார் கண்டது என் பசு மேய்ந்ததை என நான் கேட்கமாட்டேன் ;
பார் எதிர்ப்பினும் பொய் சொல்லாப் பரம்பரை நான்
பயற்றம் பயிரை என் பசு மேய்ந்தது உண்மையே!” என்றார்.
குற்றத்தை ஒத்துக் கொண்டான் – அதனால்

குத்திப் பெயர்த்திடுக அவன் கண்ணையென்று
கோசர்களின் மன்றத்தில் தீர்ப்புச் சொன்னார்.

அடுத்த கணம் அன்னி மிஞ்லியின் தந்தையை இழுத்துச் சென்றார்
பழுத்த கிழம் – பாவம் ; அவர் கண் இரண்டும் பெயர்த்துச் சென்றார் ;

“பார்வையினை இழந்தீரோ அப்பா நீங்கள்!
பழிவாங்காமல் விட மாட்டேன் பாவிகளை!”யென்று

போர் முரச ஒலியெழுப்பி மகள் அழுதாள்!
“கண்ணை அழித்து விட்டு உன்னைக் களவாட

எண்ணி விட்டார்! கற்பெனும் வாளேந்திய என்
பெண்ணை நெருங்கிட எவனுக்குத் துணிவுண்டு?”

தந்தை பேசி முடிப்பதற்குள்
தணலில் நின்றவள் பதில் சொன்னாள்.

“உயிர் போன்ற தந்தையினைக் குருடாக ஆக்கியவர்தம்
உயிர் போகுமட்டும் – நான்

உண்கலத்தில் உண்ண மாட்டேன்,
உடை மாற்றம் செய்ய மாட்டேன்,
பழி வாங்கித் தீரும் வரை பசி தூக்கம் எதுவுமில்லை!
பகை முடிப்பேன்! பார்வையிழந்த தந்தைக்குப்
பலி கொடுப்பேன் எதிரிகளை!”

அன்னி மிஞிலியின் சூளுரை – அடுத்த நாளே
அழுந்தூர்த் திதியனுக்கு எட்டியது.

கன்னியவளுக்கு உற்ற துயர் கேள்விப்பட்டுக்
கவலை கொண்டான் – அவளைக் காணத் துடித்தான்.

செவியில் செய்தி நுழைந்ததைத் தொடர்ந்து
செந்தீப் பிழம்பென தன்னெதிர் நின்ற “அன்னி”யைக் கண்டான்.

“கண்ணுக்கினியவளே! கருத்துக்கு ஏற்றவளே! உன் இதயப்
புண்ணுக்கு மருந்திட வகையறியேன், வழியறியேன்” என்று
நொந்தான்.

“குதிரைப் படையுண்டு, உன் கோட்டையில் மன்னா!
குன்றனையத் தோளுண்டு உனக்கு என் கண்ணா!

அன்னி மிஞிலியாம் என்னை நீ காதலிப்பது உண்மையெனில்
அட்டியின்றிப் புறப்படுக போருக்குக் கோசர் மீது!
அந்தகராய் ஆக்கி விட்டார் தந்தையினை – அந்த
அநியாயக்காரர்களை வீழ்த்த வேண்டும்.

கண்குத்திப் பாம்புகளைத் துண்டாடும் கீரியென்று
திண்தோள் திதியனைத் தேடி வந்தேன்” என உரைத்தாள்.

“வாளுறை விட்டு எழுந்தது பார்! என்
சூளுரை யொன்றும் அறிக அன்பே!

உன் தந்தையாம் – என் மாமனுக்கு ஊனம் விளைத்தோர்
உயிர் போக்கித் திரும்பிய பிறகே

உனைத் தீண்டும் என் கரங்கள்”
ஆர்ப்பரித்தான் அழுந்தூரான்!

போர்ப்படை கிளம்பிற்று!
பொல்லாக் கோசர் உடல் நொறுங்கிற்று –

நில்லா நெடுஞ்சுவர் போல் வீழ்ந்திறந்தார்.
விரும்பியவாறு சூளுரை முடித்தாள்

திரும்பிய திதியனின் தோளில் சாய்ந்தாள்!
அரும்பிய காதல் அன்றே மலர்ந்தது!
அகநானூறு பாடல் இதற்கு அடிப்படையானது.

★ ★ ★

குறிப்பு:– (பரணர் பாடிய அகநானூறு பாடல் 262. இந்த வரலாற்று நிகழ்ச்சியில் வரும் பாத்திரங்கள் கற்பனையல்ல – கால முரண்பாடும் – இடங்கள் வேறுபாடும் இருக்கலாம். இலக்கியச் சான்றுகளை ஒப்பிடும் பொழுது ; உண்மையில் நிகழ்ந்த உருக்கமிகு சோழர் கால சரித்திரப் பகுதியேயாகும்)

அன்பால் அவனை விலைகொள்ள முடியுமோ?

கற்கண்டுத் தமிழில் கவிதைகள் வடிக்கும்
நற்கண்ணை என்றொரு பெண்பாற் புலவர்,

இகம், பரம் என்று பாடல் இயற்றிக் கொண்டிராமல்
அகம், புறம், நற்றிணை எனும் சங்கத் தொகுப்பில்

கனகமணிகளாய்ப் பதித்திட்ட பாடல்கள் ஆறு – அவை
காதற்கனிகளைப் பிழிந்திட்டக் கவிதையின் சாறு!

அந்த ஆறு பாடலுடன்,
காவற்பெண்டு எனும் மறக்குலத் தாயொருத்தி

களம் சென்ற மகனைப் பற்றி வினவிய கன்னியிடம்,
புலியிருந்த குகையிதோ எனப் பூரிப்பு பொங்கக் கூறி,

புறப்பாட்டு ஒன்றைப் போர்ப் பாட்டாய் இசைத்ததையும்,
அந்தத் தாய் தான் பெருநற்கிள்ளி யெனும் சோழப் பெருமகனைச்

சொந்தத் தாய் போல வளர்த்த செவிலித்தாய் என்பதையும்,
கிள்ளியின் அழகு, ஆற்றலில் மயங்கி – நற்கண்ணை; அவனை

அள்ளிப் பருகுதல் போல் கனவுலகில் மிதந்ததையும்,
பெருநற்கிள்ளியின் பேராண்மையினை – கவிப்

பெருமான் சாத்தந்தையார், பீடு நடை போடும்
புறப்பாட்டாய்த் தீட்டிப் புகழ் மாலை சூட்டியதையும் – சற்று

ஆழமாய்ச் சென்று ஆய்ந்து படித்ததாலே
ஆலுக்கு விழுதெனவே தோன்றிற்று ஒரு கற்பனை!

★ ★ ★

நற்கண்ணைக்கு நற்கிள்ளி மீது தாவியெழுந்த காதல்,
பொற்கிண்ணத்துப் பாலாய்ப் பொங்கித் தரையில் வழிந்த
கதையை,

“ஒரு தலைக் காதல்” எனும் உருக்கமிகுத் தொடரோவியமாய்க்
குறுங்காதல் காவியமாய்ப் படைத்திட்டேன் ; அந்நூலினைப்

படித்துச் சுவைத்திடு முன்னர் ; ‘முரசொலி’ “காலப்பேழை” யில்
கடித்துச் சுவைக்கும் கரும்பாக ; அதன் முதல் பகுதி இப்போது
காண்பீர்!

இதுவும் சோழர் கால முற்பகுதியின் சரித்திரத்தைச் சுட்டுவதால்
இதையும் அச்சரித்திரச் சங்கிலியின் கரணையெனக் கருதிடுவீர்!

★ ★ ★

பச்சைப் பட்டாடை உடுத்திக் கச்சையுடன்
பரதமாடும் பருவமயில் போல – கழனியிலே

பயிர்கள் ஆடும் வளமிகு சோழநாட்டின்
பழங்காலத் தலைநகராம் உறையூரின்கண்

வீரைவேண்மாண்வெளியன் தித்தன் என்பான்
வெண்கொற்றக் குடையின்கீழ் வீற்றிருந்து,

தாரை வார்த்தபடியிருந்தான் ; அரசின் பெருஞ்செல்வத்தைத்
தபோதனர் நடத்துகின்ற வேள்விக்கும் யாகத்திற்கும்!

“தமிழ் மரபுக்கு இது ஏற்றதல்ல” என்று அவன் மகன்
தடுத்து நின்று அதனைத் தொடர்ந்து எதிர்த்தும் வந்தான்.

சோழவேந்தன் தித்தனோ ; தன் மகன் பெருநற்கிள்ளி
சொல்லுகின்ற கருத்தையெல்லாம் புறக்கணித்து

அறியாக் குழந்தை ; நோய் போக்கும் கசப்பு மருந்தின் அருமை
தெரியாமல்
அதனை அருந்திட மறுத்துத் தட்டுதல் போல நற்கிள்ளியளித்த

நல்லுரை எதனையும் ஏற்றிட மறுத்து,
நாட்டின் செல்வம் வாரியே இறைத்தான்.

“அரசு கருவூலத்தை நிரப்புவது குடிமக்கள் வேலை! அவர்
வாழ்வைத்
தரிசு நிலமாக்கி இதயத்தில் சொருகுவதோ வேலை?
கொற்றவர்க்கு அழகு; குடி தழுவிக் கோலோச்சுதல்;
கொள்கை அற்றவர் செயலோ நல்ல குறிக்கோளுக்குக்
கொள்ளிவைத்தல்!

பாலும் தேனும் பசுநெய்யும் குடம் குடமாய்த் தீயிலூற்றிப்
பலியாக ஆடு, மாடு, குதிரையெலாம் வெட்டி வீழ்த்தி,

அவிர்ப்பாகம் பெறுவதற்கு யாககுண்டங்கள் வளர்த்துத்
தவமிருத்தல்
‘அன்பே கடவுள்’ எனும் தத்துவத்தின் அடிபீடம் ஆட்டுகின்ற
செயலன்றோ?”

எனக் கேட்டுத் தடுத்தான் கிள்ளி!
“நாடாளும் மன்னன் நான் எனை எதிர்த்து என்மகன் நீயே

நாத்தழும்பேறி நாத்திகம் பேசுவதோ? உன்
நாவை அறுத்து நாய் நரிகளுக்கிடுமுன்

நடந்திடுக நாட்டை விட்டு” என ஆணையிட்டான் தித்தன்!
“இன்றே பிரிகின்றேன் எனைப் பெற்ற உறையூரை; ஆனால்
மன்னா;
ஒன்றே தெய்வமென்றும் அதற்கு உயிர்ப்பலி வேண்டாமென்றும்
நான் கூறியதை நாத்திக மென்கின்றீர் – நீரோ;

வான் மீது தொங்குவதாய்க் கூறுகின்ற சொர்க்கம் காண
வையகத்தை நரகமாக்கி வதைக்கின்றீர் உயிர்களையே!

பித்தனையும் தெளிவிக்கக் கூடும்; ஆனால் என் தந்தையாம்
தித்தனை இனித்திருத்தல் இயலாதென்ற முடிவோடு
போகின்றேன்” என்று

பொற்கோவாம் பெருநற்கிள்ளி உறையூர் விட்டு
முக்காவல் நாட்டு ஆமூர் சென்றான்! அக்கணமே

சொற்கோவாம் சாத்தந்தையெனும் புலவர் பிரானும் சோழன் முன்
நிற்காமல் கிள்ளியினைப் பின் தொடர்ந்தார்.

அரசிளங்குமரனே கொண்ட கொள்கைக்காக அரியாசனம்
துறந்த பின்னர்,
அவைப் புலவர் பதவியது அற்பமென எட்டித் தள்ளி,

தமிழ்க் குலத்தின் மானம், வீரம், பண்பாடு, மரபு
தாழாது காப்பதற்குச் சூளுரைத்துக் கிள்ளியின் அருகிருந்தார்.

★ ★ ★

முக்காவல் நாட்டு ஆமூரில் ஒரு நாள்
முரட்டு மல்லன் ஒருவன் தோள்தட்டி ஓடிவந்து,

"என்னை வென்றிடுவார் யாருண்டு இவ்வூரில்?"
என முழக்கி அறைகூவல் விடுத்ததோடு – தன் முன்னே
நிற்க முடியாமல் அவ்வூரார் தோற்று விட்டால்
முக்காவல் நாடு முழுமையும் தனக்குரிமை ஆகுமென்றான்!

நாட்டுடைத் தலைவன் அதுகேட்டுப் போர்நடை போட்டு
முன்வந்து – அந்தக்
காட்டெருமை மனிதனை மற்போரில் வீழ்த்த முயன்று
தோற்றுவிட்டான்!

"ஆமூர் இனிமேல் வெற்றி பெற்ற தனக்குத் தான் உரிமையென்று
ஆகா! ஊகு!" என்று கத்திய மல்லன் முன்னே,
விண்ணில் நட்சத்திரமொன்று வீழ்கின்ற வேகத்தில்
மண்ணில் ஓங்கி உதைத்தவாறு குதித்து ;

"மல்லனே ; நில்லடா!" என மார் தட்டிக் கொண்டு
மறவர் குல மாவீரனொருவன் அந்த மனித மிருகத்தின் மேல்
பாய்ந்தான்!

யார் அது? யார் அது? என ஆமூர் அதிர்ந்தது!
பார் அது ; உறையூர் தித்தன் மகன் பெருநற்கிள்ளியென்று

கையொலி செய்தது ஒரு கூட்டம்! என்ன ஆகுமோ என,
கண் கலங்க நின்றது மற்றோர் கூட்டம்!

ஆழூர் தலைவனுக்கே கிட்டாத வெற்றி,
அகவையிற் குறைந்த இளைஞனுக்குக் கிட்டுமோ என்று

மூக்கின் மேல் விரல் வைத்து
முக்காவல் நாட்டு மக்கள் திகைத்து நின்றார்!

“ஊதினால் துரும்பெனப் பறந்திடுவாய் ;
உனக்கு இத்தனை ஆணவமா?” என்று

மோதினான் முரட்டு மல்லன் கிள்ளியின் மேல்!
சண்டமாருதச் சுழற்சிபோல் நடந்திட்ட மற்போர் நிகழ்ச்சியை

சாத்தந்தையார் வழங்கிய பாடலெனும் பலகணி மூலம்
சற்றுத் தொலைவிருந்து காண்போம் நாம்!

மல்லன் மீது துள்ளிப் பாய்ந்த நற்கிள்ளி
ஒரு காலை மார்புக்கு மேல் மடித்து

மற்றொரு காலால் மாற்றானின் தாக்குதல் தடுத்து,
முரடனது முதுகின்கண் இறுகப் பிணைத்து ; பசியால்

மூங்கிலைத் தின்ன முயலும் யானை ;
அதனை வளைத்தும் முறித்தும் மிதிப்பது போல

மல்லனின் தலையும் காலும் மோதியும் முறித்தும்
மண்படத் தரையில் வீழ்த்தி மாண்டிடச் செய்த சோழமகனை

“போரவைக் கோப்பெரு நற்கிள்ளி” எனப்
புகழ் விருது வழங்கி வாழ்த்திய புலவர்,

புதல்வனது வீரத்தைக் காண்பதற்கு – உறையூர்ப்
புவியாளும் தித்தன் வந்திலையே என மனமிக நொந்தார்.

நற்கிள்ளி போர் புரிந்த வேகத்தை
சொற்சுவை நனி சொட்டச் சொட்ட

உயர் தமிழ்க் கவிஞர் சாத்தந்தை,
உவமை கூறி விளக்குகின்றார் ; இதோ :–

★ ★ ★

“சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ ;
ஊர்கொளவந்த பொருநனொடு,
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!”

(புறநானூறு – பாடல் – 82
பாடியவர் : சாத்தந்தையார்)

இதற்கு உற்ற பொருள் நான் கற்ற தமிழில் அளிக்கின்றேன்.
இந்த உவமை நயத்தின் இனிமையை நீவிர் உணர்ந்திடுவீரே!

“ கட்டில் பின்னும் கடைநிலைப் பாட்டாளியொருவன் – அதனை
விற்றுப் பிழைக்கத் திருவிழா தொடங்குமுன்
விரைந்தோடிட வேண்டும் – அவ்வேளையில்

கட்டிய மனையாள் பேற்று வலியால் பெரிதும் துடிப்பதாய்ச்
சேதி வந்து செவியினைத் துளைத்திட ; தன்

செயல் முடித்துப் புறப்பட அவன் படபடக்க – வான
வீதியில் கதிரோன் மேற்கே வீழ்ந்து கனமழைக்கான
அறிகுறியும் கண்டிடவே

கட்டில் பின்னும் அவன் கையூசி எத்தனைக்
கடுமையாய் விரைந்து வாரைச் செலுத்துமோ – அந்த
ஊசியினும் வேகமாய்ப் போரை முடித்து – எதிரியைத்
தூசியென வீசி விட்டான் வீரன் கிள்ளி!”

இவ்வாறு

முத்தமிழ் வித்தகரின் பாமாலைக்கும்
முக்காவல் நாட்டு மக்கள் பூமாலைக்கும்

தலை வணங்கி நன்றியினை ; நற்கிள்ளி தெரிவித்தபோது,
கலைவண்ண மங்கையொருத்தி ஆங்கே – காதல்

அலைபாயும் நெஞ்சுடனே தோழியிடம் ; – அன்பால் அவனை
விலை கொள்ள முடியுமோ என்று விழியால் கேட்டாள்!

நிலை கொள்ள முடியாமல் தவித்திட்ட அம்மங்கை ;
மலை முகடு ஏறியிறங்கப் பெருமூச்செறிந்திட்ட
நற்கண்ணையெனும் நங்கை!

நன்றியுடையோர் நெஞ்சில் வாழ்வோன்!

“சோழநிலா” முத்தொளி பொழிந்து புகழ் பரப்பி ; பின்னர்
பாழும் பல்குழுக்கள் பகை பெருகி ஒற்றுமை குலைந்து ;

தாழும் நிலை தோன்றி “இருள் நிலை”யை எதிர்கொள்வதற்கு முன்பு
ஆளும் பொறுப்பேற்றுப் புகழ் பெற்றோர் இருவர் உண்டு!

அவ்விருவர் ஆட்சிக்குப் பின்னர் பெரிதாக ஒப்பிடுதற்கு ;
எவரொருவர் மாட்சியும் இல்லாத காரணத்தால்,

கோலேந்திக் குடிமக்கள் காத்திட்ட கோப்பெருஞ்சோழர்க்
கிணையாக ;
வேலேந்தி வீரப் போர் பல புரிந்த வேந்தன் கிள்ளிவளவன் பற்றிக்
கூற – எழுது

கோலேந்துவதில் இன்பம் காணுகிறேன் ; துன்பத்தை நெஞ்சில்
சுமந்தவாறு!
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனக் குறிப்பிடுவது ;

சேரனையும், பாண்டியனையும் ஒரு சேர எதிர்த்துச் சென்று ;
வீரனாக செரு முனையில் விழுப்புண் பெற்ற கிள்ளிவளவன் –

வீழ்ந்த இடத்தின் பெயரே ‘குளமுற்றம்’ என்பதாகும் – சோழ
வரலாற்றில்
குளமுற்றத்தான், கோப்பெருஞ்சோழன் இருவர்க்கும் பிறகு ;

இருண்ட காலமாய் உருண்டது இடையில் அய்நூறு
ஆண்டுகளாம் ;
இதற்குப் பிறகே பிற்காலச் சோழர்கள் வருகின்றார் வரலாற்றில்!

இங்கே இப்போது கிள்ளியாம் குளமுற்றத்துத் துஞ்சியவனை
இலக்கியத்தில் ‘‘வாழும் வரலாறாக’’ நிலைத்தவனைச்
சந்திப்போம்.

★ ★ ★

புறநானூறுக் கருவூலத்தில் இவன் பெருமைதனைப் பாடுகின்ற
புகழ்க் கவிதை பல உண்டு! பாடிய புலவர்களும் பலராவர்!

‘பசுவின் காம்பை அறுத்திடும் பாவிகளுக்கும்
பாவையின் கருவை மிதித்துச் சிதைத்தோர்க்கும்

பாசமிகு பெற்றோரை வதைத்தோர்க்கும் மன்னிப்பு
உண்டெனினும்
பார் முழுதும் தலைகீழாய்த் திசை மாறிக் கவிழ்ந்தாலும்

பாதகராம் நன்றியினைக் கொன்றோர் வாழ்வு
பாழ்பட்டே நாசமாகு’ மென்று – அவன்பால்
பரிசு பெற்ற ஆலத்தூர்கிழார் எனும் பாவாணர்
பரிவுடனே நன்றி கூறி நல்வாழ்த்துச் சொன்னார்.

கருவூரைக் கிள்ளி மன்னன் முற்றுகையிட்ட போது,
‘‘காவல் மரங்கள் சாய்கின்ற ஒலி கேட்டு ;

அரண்மனைக்குள் ஒளிந்து கொண்டு அஞ்சி நடுங்கும்
ஆண்மையற்ற கோழையினை வெற்றி கொளல்
பெருமையாமோ ?’’ என

கிள்ளிவளவன் முன் சென்று அந்த ஆலத்தூர்கிழார்
அள்ளிப் பொழிந்த அறிவுரைப் பாடல் கேட்டு

துள்ளி வந்த படையுடனே திரும்பிச் சென்றான் –
கொள்ளி மீது வீழ்ந்த புழு மீண்டது போல் மீண்டான் கருவூர்
மன்னன்!

‘காலனும் காலம் பார்ப்பான், உயிர் மொண்டு செல்ல ;
– சோழர் குலக்
காவலனே! நீயோ ; களத்தில் பகைவர் உயிரை

நினைத்தவுடன் ஒரு கணத்தில் போக்குகின்றாய்!' – என்று
வினை முடிக்கும் அவன் வீரத்தை வியந்துரைக்கும்
கோவூர்க்கிழார் ;

'விறகு வெட்டச் சென்றவர்க்குக் காட்டில் பொன்
கிடைத்தாற்போல்
வேந்தன் கிள்ளியிடம் வந்தோர்க்கு பரிசு கிட்டும் என்று
கூறுகின்றார்.

'தாய்ப்புலி, தன் குட்டிதனைக் காப்பது போல்
தமிழ்க் குலம் காக்கின்ற வேந்தன் நீதான்!

கரும்பிடைத் தேனும் கடைமடை வாளை மீனும்,
கன்னியர் பறித்து வரும் செங்கழுநீர்ப் பூவும்,

கழனியில் உழுவோர் கண்டெடுத்த ஆமையும்
காவிரியின் நீர்ப் பெருக்கால்
திரும்பிய பக்கமெலாம் நெல்மணியும்
திகழ்சோழ வளநாட்டை ஆளுகின்ற கோவே!'' என்று

இடைக்காடனார் எனும் புலவர் ;
ஏற்றிப் புகழுகின்றார் ; கிள்ளிவளவனையே!

''வெயிலுக்கு மறைக்கின்ற குடையல்ல ; வேந்தே – உந்தன் குடை
;
அது,
வேதனையை விரட்டி நல்லாட்சி தருகின்ற வெண்கொற்றக்
குடையாகும்
வெள்ளப் பாழ் வறட்சியினால் பாதிக்கப்பட்டாலும்
உள்ளம் தளராமல் உழைக்கின்றார் வேளாண் குடியினர்

போர்முனையில் உன் வீரர் தீட்டுகின்ற வெற்றியெலாம்
ஏர்முனையின் துணையின்றி நடவாது என்பதாலே ;

மழவர் குலம் வாழ வைக்க
உழவர் குலம் போற்றி வாழ்க!'' என்று

வெள்ளைக்குடி நாகனார் எனும் புலவர்
வேந்தனுக்கு அறிவுரையும் வாழ்த்தும் சொன்னார்!

“இயற்கையின் சீற்றத்தால் இவ்வுலகே அழிய நேரிடினும்
எதற்கு நாம் அஞ்ச வேண்டும் கிள்ளிமன்னன் இருக்கையிலே”
என்று

எண்ணற்ற புகழ் முத்துக் கவியாரம் தொடுத்தார்;
எருக்காட்டூர்ப் புலவர் தாயங் கண்ணனார்! . . . அவர்

தஞ்சைக் குளிக்கரைக்கு அருகில் வாழ்ந்த
தமிழ்ப் புலவரேறு எனக் கூறிடுவர் ஆய்வாளர்!

★ ★ ★

சிறுகுடி யெனும் சோழ நாட்டுச் சிற்றூரில்
தருநிழல் போல ஒரு நண்பன் உண்டு கிள்ளிக்கு! அப்

பெருங்குடிக் கிழவன் பண்ணன் நிலத்தில்
அறுவடையாகும் நெல்மணி யாவும் வறியோர்க்கு

அளித்தனன் நன்கொடையாக என அறிந்து கிள்ளி ஆங்கு
சென்றான்.
அவனுக்குப் ‘பசிப்பிணி மருத்துவன்’ என்று பட்டமும் ஈந்தான்!

‘வான் போலக் கொடை வழங்கும் பண்ணனே – நீ
யான் வாழும் நாளும் சேர்த்து வாழியவே!’ என்று

புறப்பாடல் ஒன்றெழுதி அவன் கையில் கொடுத்துப்
புறப்பட்டான்; தலைநகராம் உறையூரை நோக்கி!

மாற்றார் எப்படை கொண்டு வரினும்; இவனிடம்
தோற்றார் என்றே வீர வரலாற்றைத் தீட்டிய வளவன்;

ஆவின் பாலொத்த அருள் வடியும் முகத்தழகன்,
சாவின் பிடிதனிலே ஒரு நாள் சாய்ந்து விட்டான்செருக்களத்தில்

செய்தி கேட்டு செவிப்பறை கிழிந்தது போல்
செந்தமிழ்ப் புலவர் கூட்டம் சிந்தியது கண்ணீர் அருவி!

‘இறந்தோரைப் புதைப்பதற்குத் தாழிதனைச் செய்வதிலே
சிறந்தோரைக் கேட்கின்றேன்; எம்மன்னன்

கிள்ளியினை வைத்துப் புதைக்கின்ற தாழி யெனில்
கீழ்த்திசை மேற்றிசை வானத்தை வளைத்து வைத்து
நிலவுலக முழுவதையும் குயவர் ஆழியாக அமைத்திட
நிமிர்ந்து நிற்கும் மேருமலையை குடைந்தன்றோ தாழி செய்தல்
வேண்டும்!

பூத உடல் புதைப்பதெனில் பொருந்தும் உம் தாழி – கிள்ளியின்
புகழ் உடலை வைப்பதற்கு இந்தப் பூதலமே ஏற்ற தாழி’ – என்று

சோகமுடன் ஐயூர் முடவனார் இரங்கற்பா எழுதும்போதும்
சோழனது கீர்த்திக்கு எல்லையில்லை என்று கண்டார்!

தானாக வந்தவரல்ல; தளபதியால் கொண்டுவரப்பட்டவர்!

தொல் பழங்காலந் தொட்டுத் தென்னக வரலாறு எழுதிடத்
தொடங்கின் பழம் பெரும் ஆதிகாலத் தமிழ் மன்னர்களாம் ;

சேர, சோழ, பாண்டியர்களின் பட்டியல்கள்,
நெடியவை குறுகியவை அனைத்தும் நேரில் வந்து நிற்கும்.

மூன்று கொடி கொண்டவர்கள் முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்கள்
முதல், இடை, கடை என மூன்று சங்கம் கண்டவர்கள் –
சேரன் என்றால் பேரரசன் செங்குட்டுவன் என்றும் ;
சோழன் எனிலோ திருமாவளவன், கரிகால் பெருவளத்தான்
என்றும் ;

பாண்டியன் எனும்போது கடல் கொண்ட கபாடபுரத்தைத்
தலைநகராய்க் கொண்டு, தமிழையும் வளர்த்த முடத் திருமாறன்
என்றும் ;

முச்சங்கம் வாழ்ந்திட்ட முதிர் நிலை வரையில் முடிசூடி
ஆண்டோரின்
பிடி தளராப் பேரரசுகள் பெருவாழ்வு வாழ்ந்தன !

அக்காலம் அவரவர் ஆண்டிருந்த நிலப்பரப்பை
நீட்டித்துக் கொள்ளவும் நெடும்பகை தீர்த்துக் கொள்ளவும்,

கடும் போர்கள் விளைத்தனர், கட்டித் தழுவி, காழ்ப்பும்
தவிர்த்தனர்.
தமதாட்சித் தனித்தனி பகுதிகளிலே எனினும் நட்புறவு காத்தனர்.

இவர்களில் யார் வரலாற்றையும் ஆதி முதல் அரிச்சுவடியிலிருந்து,
இறுதியாக இதுவே என அறுதியிட்டு எவரும் எழுதவில்லை ;
எழுதவும் இயலாது!

பின்னர் பிற்காலச் சோழர் ஆட்சி பிறந்து வளர்ந்து பெரு வலிமை
பெறுவதற்கு முன்பு இடைப்பட்ட காலமான அய்நூறு
ஆண்டுகளில்,

களவர் என்றும், களப்பிரர் என்றும், கங்கையாறு வரையில்
கட்டியாண்ட சாதவாகனர் என்றும் – எத்தனையோ பிரிவினர் ;
குறுகிய

கோட்டங்கள் போல் அரசுகள் அமைத்து அதற்கே கோட்டைகள்
படைத்து
கோலோச்சி வாழ்ந்திட்டார் எனினும் ; மங்காப் புகழ் பெற்ற

மகேந்திர வர்மனும் அவன் மகன் மாவீரன் நரசிம்ம வர்மனும்
பல்லவ மன்னர்களிலேயே வல்லவர்களாம் மிக நல்லவர்களாம் ;

சிம்ம விஷ்ணு மரபில் வந்த
சிங்க ஏறுகளாம் ; அவர்கள்

காஞ்சி நகரைத் தலைநகராய்க் கொண்டு
முன்னூறு ஆண்டுக் காலம் முடியாட்சி நடத்தியதுண்டு!

பாண்டிய சோழ மன்னர்களைக் கூட களங்கள் சிலவற்றில்
பல்லவ நந்திவர்மன் போன்றோர் வெற்றி பெற்று வீழ்த்தியதாக
வரலாறு!

சமண மதமே தனக்குச் சம்மதம் என்றிருந்த மகேந்திரன்
சைவ மத வேந்தனாக மாறிய பின்னர் ; சமணத்தைக் கேலி
செய்து,

‘மத்த விலாசம்’ என்றோர் நாடகம் எழுதி ; அதனை
மதப் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தியது கண்டு,

மாற்று முகாம் சென்றவுடன் மனம் இப்படியும் மாறுமா என்று
சமணரெல்லாம் கடந்த காலத்தை எண்ணி கவலை மிகக்
கொண்டனர்.

பல்லவர் தலைநகரம் காஞ்சி தானா என்பதிலே அய்யம் கூட
பல ஆய்வாளர் எழுப்பியதுண்டு ; அதற்குச் சான்றாக

ஆந்திரப் பகுதியில் உள்ள பெத்த காஞ்சி என்பதையே
பல்லவத் தலைநகரமான காஞ்சி என்றும் பெரிதாக
அறிவிக்கின்றார்!

'யுவான் சுவாங்' எனும் சீன யாத்திரிகர் கூட அந்தக் காஞ்சியைத்
தான்
உரைத்திருக்கக் கூடுமென யூகித்துச் சொல்லுகின்றார் ;
உண்மை அறியோம்!

சீன யாத்திரிகரின் சிறப்புக் குறிப்பில் நம்
சிந்தைக்குத் தேன் துளியாகச் செய்தி ஒன்றும் உளது ;

"திராவிட நாட்டில் பல தூண்களை அசோகன் நாட்டினான் ;
அவைகளில் சில தூண்கள் பழுதடைந்து நிற்கின்றன"

எப்போதெல்லாம், எத்தகைய அறிஞர்களால் எல்லாம்
'திராவிட' எனும் பெயர் உச்சரிக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணி ;

இதயம் விம்முகிறது –
இன்பம் பொங்குகிறது!

சாளுக்கிய புலிகேசி என்பான் சமருக்கு வந்தான்
மகேந்திர வர்மனைப் போரில் மண்டியிடச் செய்வதற்காக ;

பொங்கும் எரிமலையாய்ப் போரில் குதித்தனர் ;
இருபெரும் படையினரும் –
அப்போதொரு பொய்யைக் கல்வெட்டில் செதுக்கினர் ;
புலிகேசி மன்னன் ; புள்ளலூர்ப் போரிலே மகேந்திரன் ஓடி ஒளிந்து
விட்டானென்று!

அதை மறுத்தறிவித்த மாமன்னன் நரசிம்மன்
மாமல்லனும் ஆனபடியால் ; அந்தப் பெயரால் தானே

மாமல்லபுரமே உருவானது – என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் –
வருகிறாயா "நேருக்கு நேர் போருக்கு" என்று ;

அறைகூவல் விடுத்தவுடன் – ஓடி
மறையும் அறை எங்குளது என்று ;

புலிகேசி ஓடி ஒளிந்துகொண்டான் ; அதில் புகுந்து கொண்டான்!
பல்லவன் நரசிம்மன் விடவில்லை ; அந்தப் பயங்கொள்ளியை!

பரஞ்சோதியாம் தளபதியை பின்தொடரச் செய்து –
வாதாபி யெனும் புலிகேசியின் தலைநகர் வரையில் சென்று ;

அங்கே ;
புலிகேசியின் முதுகு புண்பட்டதை உலகிற்கு உணர்த்தி –
அவர்களை
வாகை சூடியதற்கு அடையாளமாக ;

வாதாபி நகரில் இருந்த அழகான யானைச் சிலை ஒன்றையும்
போரில் கிடைத்த பொருளாகத் தமிழகத்துக்கு எடுத்து வந்தான் –

வாதாபி கணபதி வாழ்த்துடன் இசை நிகழ்ச்சி இன்றைக்கும்
தொடங்குவது ;
அன்றைக்குத் தளபதி பரஞ்சோதி எடுத்து வந்த அந்த யானைச்
சின்னம்

தமிழர்க்கு அறிமுகமான பிறகே தான் ; எனவே
தானாக வந்து வரம் தருபவரல்ல பிள்ளையார் – நம்

தளபதியாம் பரஞ்சோதி போரில் வென்று ; வாதாபியிலிருந்து
தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டவர் என்பதே வரலாறு!

★ ★ ★

“ மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்தும்

பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண் ணிலகவர்ந்தே இகலரசன்
முன்கொணர்ந்தார்”

(பெரிய புராணம் – சேக்கிழார்)

காஞ்சிமண் காட்டிய கனிவும் கருணையும்

இறையினால் அனுப்பப்பட்டவர் எனப் போற்றப்படும்
இஸ்லாம் தீர்க்கதரிசி முகம்மது நபிகளார்,

மெக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற கி.பி. 622
"ஹிஜிரா" எனக் கூறப்படுவதாகும்!

அதே காலத்தில்தான் இங்கே அப்பர் எனும்
அருளாளர் திருநாவுக்கரசரும், மகேந்திர வர்மனும்

வாழ்ந்தனர் என்று 'மகேந்திரன் வரலாறு' எழுதிய
மயிலை சீனி. வேங்கடசாமி ஒப்பிட்டு உரைத்து ;

காஞ்சிப் பல்லவ மன்னனின் காலத்தைக் கணக்கிட்டுக்
காட்டுவது நமக்கெலாம் களிப்பூட்டும் ஒரு செய்தியாகும்.

அந்த மகேந்திர வர்ம பல்லவனின் மைந்தன்
நரசிம்ம பல்லவனின் நாட்டுக்கு எல்லை எது ?

வடக்கே சாளுக்கியர் ஆட்சியும், தெற்குத் திசையில்
வைகை நதிக்கரை பாண்டியர் பரிபாலனமும்

மேற்கு திசை மேவிடிலோ சேரர் பூமி யென்றும் சூழ்ந்திட
மத்தியில் அமைந்ததே எல்லை என்று வரலாறு வரைந்து காட்டும்.

அந்தப் பல்லவர் ஆட்சி வலிமை பெற்றிடக் கூடாதென்றும்
ஆழமாக வேரூன்றி விடல் ஆகாதென்றும் அசூயை கொண்டு,

அடிக்கடி படையெடுத்த ஆதிக்க வெறியன் சாளுக்கிய
புலிகேசியின்
ஆணவத்திற்கு முடிவு கட்ட ஆர்த்தெழுந்தான் நரசிம்மன் –

புய வலிமையினாலும், போர்த் திறனாலும் புலிகேசியை
புறமுதுகிடச் செய்தது காஞ்சிப் பல்லவர் படை

வாதாபி வரையில் அவனைத் துரத்திச் சென்று ; பல்லவன் ; தனது
தளபதி பரஞ்சோதியின் ஆற்றலையும் புலிகேசிக்குப்
புரியவைத்தான்.

பல்லவரின் சின்னத்தை வாதாபி ஆலயத்தில் அழகுறப் பதித்து
அது இன்றைக்கும் காணுகிற அளவுக்குச் சரித்திரச்
சின்னமாயிற்று!

நரசிம்மவர்மனின் நாடு புகழ் வெற்றியினைக் குறிப்பிடும்
கல்வெட்டுகள் ;
“பல நூறு யுத்தங்கள் நடத்தியவனும், பரியலம், மணிமங்கலம்,
சூரமாரம்

எனும் களங்களில் தோற்றோடிய புலிகேசியின் முதுகில் ;
தனது வெற்றியை எழுதியவனுமான பல்லவ மன்னன்” என ;

வியந்து பாராட்டுகின்றன வேலூர், கூரம், சந்திரமங்கலம்
பட்டயங்கள் ; இதனை வரலாறு பறை சாற்றுகின்றது!

காஞ்சியைச் சேர்ந்த தர்மபாலர் எனும் பேராசிரியர்தான்
நாளந்தா பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர் என்பதால்

பெருமையுடன் காஞ்சி வாழ் கற்றறிந்தோர் ; பேருவகையும்
பெருமிதமும் இன்றைக்கும் கொள்கின்றனர்.

திராவிடப் பகுதியாம் காஞ்சிபுரத்தில் திகம்பர சமணர் பலர்
திருவுடையார் எனத் திகழ்ந்து வாழ்ந்ததையும் –

கௌதம புத்தரே காஞ்சிக்கு வருகை தந்து
நூற்றுக்கணக்கானவரை
பௌத்தராக்கியதையும் சீனத்து யுவான் சுவாங் குறிப்பிட
மறக்கவில்லை.

இனிய நண்பர்களையும் நரசிம்ம வர்மன் கைவிட்டுப்
பழக்கமில்லை.
இலங்கையில் மானவர்மன் என்றோர் சிற்றரசன் ; அவனை

மாற்றார் தோற்கடித்துக் குடும்பத்துடன் தோணியொன்றில்–இந்து
மாக்கடலில் மிதக்க விட்டு நாட்டை விட்டே துரத்தி விட்டார்!

மனமொடிந்த மானவர்மன் ; நண்பன் நரசிம்மன் தனது
இனமில்லாவிடினும் ; நட்புக்குப் பெருமை சேர்க்கும் இனிய

குணம் கொண்டவன் என்ற நம்பிக்கையில் ;
மாமல்லபுரம் துறைமுகம் நோக்கித் தோணியைச் செலுத்தினான் ;

முகம் கோணி வரவேற்பானோ நரசிம்ம நண்பன் என
அகம் வினவ ; அங்கு வந்தடைந்த மானவர்மன் ;

அதிசயத்தால் அயர்ந்து போனான் –
ஆச்சரியத்தில் மூழ்கிப் போனான்!

அவனையும் அவன் துணைவியையும்
சொந்தச் சோதரக் குடும்பத்தினர்போல

அண்ணனாக நரசிம்மன் மாறி தன் அரண்மனைக்கு
அழைத்துச் சென்று, அணிமணிகள் அனைத்தும் வழங்கி ;

“ஆருயிர் சோதர! ஆக வேண்டியது அனைத்தையும் தந்திட
ஆதரவுக் கரம் நீட்டியுள்ளேன் – இலங்கையில் உன்

பகைவரை வீழ்த்தி மீண்டும் நீ மகுடம் புனைய, என்ன வேண்டும்
கேள் ;
தயங்க வேண்டியதில்லை ; தட்டாமல் தருகிறேன்’’என்றான்
பல்லவன்.

“வாள் முனையில் வெற்றிகளைக் குவிக்கும் வீரரே ; நண்பனாய்
நடித்த ஒரு
தேள் மனத்தான் சூழ்ச்சியாலே மண் இழந்தேன்,
மாளிகையிழந்தேன் –

மான மிழக்காமல் மானவர்மன் வாழ்வதற்கு வகை செய்க என்றே
தானம் கேட்க வந்துள்ளேன் உன் துணையை’’ என்றான்
இலங்கை நண்பன்.

எத்தனை படை வீரர்கள் தேவையெனினும் அழைத்துச் செல்க;
இதோ
எஃகனைய உளம் படைத்த பரஞ்சோதித் தளபதியிருக்கிறார்; அவர்

தேவையானவற்றையெல்லாம் செய்து தருவார் என்று; பல்லவன்;
பார்வையைப் பரஞ்சோதியின்பால் திருப்பிடவே;

பரஞ்சோதி "நான் தயார்; தங்கள் நண்பருக்குத் தேவையான
படை அனுப்புதற்கு" எனத் தலையசைத்து விடை பெற்றான்.

★ ★ ★

காஞ்சிப் படையுடன் களம் காண மானவர்மன் புறப்பட்டான்
வாஞ்சையுடன் தழுவி நரசிம்மன் நண்பனை வழியனுப்பி
வைத்தான்.

இலங்கைப் போரில் எதிரிகளுக்கே வெற்றி கிட்டியதால்
இதயம் நொறுங்கி இனிய நண்பன் காஞ்சிக்கே திரும்பி வந்தான்.

வீழ்ச்சிக்கான காரணத்தை விளக்கமாக அறிந்து கொண்டு – இனி
வியூகம் எப்படி வகுத்திட வேண்டுமென்ற வித்தையையும் கற்றுத்
தந்து

மானவர்மனை வழியனுப்ப நரசிம்மன் மாமல்லைத் துறைமுகம்
மகிழ்ச்சியுடன் கிளம்பி விட்டான்.

அங்கோர் அதிர்ச்சி காத்திருந்தது அவர்களுக்கு –
"அரசர் நரசிம்மர் இல்லாமல் நாங்கள் கப்பல் ஏற மாட்டோம்"; எனப்

படை வீரர்; அனைவருமே ஒருமுகமாய் எதிர்ப்புக் காட்டி –
"பல்லவ பூபதியும்; இலங்கைக்கு எம்முடனே வந்தால்தான்,
ஏறுவோம் கப்பல்" என்று வேண்டுகோள் விடுத்தனர் –
மானவர்மன் மனக் கலக்கம் கண்டு அஞ்சாதீர் என அமைதிப்படுத்தி;

நரசிம்ம வர்மன் அந்தக் கப்பலிலே ஏறிக் கொண்டான் –
"மன்னர் வாழ்க!" ஒலியுடன் காஞ்சிப் படை பயணம் தொடங்கியது

கடலில் கொஞ்ச தூரம் சென்றவுடன் – தன்
உடலைக் கம்பளியால் மூடிக் கொண்டு;

கப்பலின் வேறு வழியாகக் காஞ்சியின்
காவலன் இறங்கி விட்டான்; படகொன்றில்!

அவன் படை போய்ச் சேர்ந்தது இலங்கைக்கு!
மன்னன் தம்மோடு இருக்கின்றான் என்ற மனத் தெம்போடு

மாவீரர் வளைத்தனர் மாற்றார் படையை; விளைவு
மானவர்மனுக்கு வெற்றி மாலை!

மாற்றார், களத்தில் மாய்ந்தனர்;
மாமல்லை மன்னாதி மன்னன்,

நரசிம்மன்; நண்பனையும் காத்து அவன்
நாட்டையும் காத்து; இருவரிடையே – தூய

நட்பு பூத்திருப்பதை இச்செயலால்
நல்லதோர் காட்சியாக்கிக் களித்தான் –

மண்ணாளும் மகராசர் என்றால் – அவர்கட்கு
மனமென்ற ஒன்றே இருக்காது; இருந்தாலும் அதில்

மனித நேயம் துளிர்க்காது என எண்ணுவோர்க்கு
மண்டையிலடிக்கும் பதிலாக;

மானவர்மனை மீண்டும் நரசிம்மன்
மன்னராக்கிய நிகழ்ச்சி அமைந்தது –

எல்லாம் காஞ்சி காட்டிய கனிவும் கருணையும் – எனக்கூறி நட்புக்கு
நல்லான் நரசிம்மன் வாழ்க என மடல் வரைந்தான் மானவர்மன்!
அதில்;

பாறைகளைக் குடைந்து மண்டபங்கள் கண்டார் உம் தந்தை – நீயோ
பகைப் புலத்தைக் குடைந்து வெற்றிக் கம்பங்கள் நாட்டுவதால்

பனிக்காற்று பட்டது போல் குளிர்கிறது எம் மக்களின் சிந்தை!”
இனிய மடல் கண்டு மகிழ்ந்தான் மன்னன்;
எனினும், மமதை கொண்டானில்லை!

பாதுகாப்போம்; பல்லவர் தலைநகரம்!

பல்கலைக் கழக மாணவர்களுக்குப்
பாடநூல்கள் எழுதி அவற்றில் பல நூல்கள்,

மாணவர்க்குப் பாடமாகவும் இருக்கும் நிலையில்,
முனைவர் ந.க. மங்களமுருகேசன் எழுதிய

‘‘பல்லவர் வரலாறு’’ பாடநூலை படித்தபொழுது
பல்லவர் ஆட்சிக்குக் ‘‘காஞ்சி – தலைநகர் அல்ல’’ என்று

பெரிதாக வாதிட்டிருப்பது பெரும் வியப்பளித்ததினால் ;
பேராசிரியர் அன்பழகனாரிடம் அதுபற்றிப் பேசிய வேளையில்,

‘‘பல்லவர்க்குக் காஞ்சிபுரம் தலைநகரல்ல என்பதைவிட,
பல்லவரே இல்லை ; காஞ்சிபுரமே இல்லையென்று
கூறிவிடலாமே!’’ என்றார்.

காஞ்சி ; பல்லவர்க்குத் தலைநகராயிருந்ததில்லை யென்ற
கருத்தொன்று மாணவரிடையே பரவி விடக் கூடாதே என்பதற்காக ;

ஆதாரங்களை நான் தேடியதில் அறிந்தவற்றை அளிக்கின்றேன்.
ஆய்வு செய்து வரலாறு எழுதுவதில் வல்லவராம்

மயிலை. திரு. சீனி வேங்கடசாமி எனும் அறிஞர் ;
‘‘மகேந்திர வர்மனின் தந்தை சிம்மவிஷ்ணு,

காஞ்சியைத் தலைநகரெனக் கொண்டே
கட்டியாண்டார் பல்லவ நாட்டை’’யென்று ; கதையல்ல,

காசாகுடி வேலூர்பாளையம் செப்பேட்டுச் சாசனங்கள்
சான்றுகளாகி விளக்குகின்ற நிகழ்வுகளை நினைவூட்டுகின்றார்.

புலிகேசியுடன் பல்லவர் போரிட்ட புள்ளலூர் ; செங்கை மாவட்டம்,
காஞ்சிக்கு வடக்கே பதினைந்து கல் தொலைவு தான் என்பதும் ;

மகேந்திரன் நரசிம்மன் காலத்து
மலைப்பாறை சிற்பங்களும்

மனங்கவர் குகைக் கோயில்களும், குறிப்புகளும்
மாமல்லபுரமென்றும், பல்லவபுரமென்றும்,

மாமண்டூர், சிங்கவரம், மண்டகப்பட்டு என்றும்,
மகேந்திரவாடி, திருக்கழுக்குன்றம், தளவானூர் என்றும்,

பல்லவ மன்னர் அடையாளச் சின்னங்களென
மங்கள முருகேசனே சுட்டிக் காட்டுவதால் ; அவரே

மறுக்கத் தேவையில்லை ; காஞ்சித் தலைநகரை –
மாற்றி அமைக்கவும் தேவையில்லை ; ஆந்திர தேசத்திற்கு !

சீன யாத்ரிகர் யுவான் சுவாங் குறிப்பில் ; குறுக்கே
காஞ்சிக்கும் கடற்கரைக்கும் இருபது கல் தொலைவு

என்கிறபோது, அதை மறைத்தும் மறுத்தும்
காஞ்சிக்கருகே கடலே இல்லை என்று ;

மாமல்லபுரத்தை மறந்து விட்டுப் பேசுவதால், நமக்கு
மன மகிழ்ச்சி எப்படி இருக்க முடியும் ?

“மகேந்திரவர்மன் காஞ்சிக்கு அண்மையில் உள்ள
“மகாபலி’’புரத்தை கவனியாதிருக்க முடியுமா ? அங்கே

தர்மராசர் மண்டபமும், கொடிக்கால் மண்டபமும்
மகேந்திரன் காலத்தவை’’ என முனைவர் இராஜமாணிக்கனாரின்

ஆய்வினை அலட்சியப்படுத்திடல் இயலுமோ ? அவற்றை
அமைத்தவர் ஒரு பல்லவ மன்னர் என்பதில் அய்யப்பாடு
உண்டோ ?

மதம் மாறி சைவத்திற்குச் சென்ற
மகேந்திர வர்மன் “மத்த விலாசம்’’ என

நகைச்சுவை நாடகம் எழுதி, நடிக்கச் செய்து
சமண புத்த மதங்களை நையாண்டி புரிந்தபோது அந்த

மதப் பிரச்சார நாடகத்தில் மாநகர் காஞ்சியின்
மகிமையுடை கோபுரங்களில் தவழும் முகில்களை குறிப்பிட்டு ;

“கருமுகில் தவழுமாடக் கச்சி யேகம் பனீரே” எனும்
அருள் வாக்கும் அப்பர் வாக்கும் இணைந்து வருவதாக ;

மயிலை வேங்கடசாமி விளக்குவதை விலக்கி விட இயலாதே ?
மற்றவை ஒரு புறம் இருப்பினும் ;

மகேந்திரனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான
“சித்திர காரப் புலி” எனும் பட்டம் காஞ்சியில் உள்ள

ஏகாம்பரேசுவரர் கோயில் மண்டபத் தூண் ஒன்றில்,
இடம் பெற்றிருப்பது எவ்வாறு எனும் வினா எழுகிறதே!

பல்லவர்களின் ஆட்சிச் சின்னமும் அவர்கள் போற்றிய
பல்வகைக் கலைச் செல்வமும் – பரவியது

பல திசை எனினும் – காஞ்சியைச் சுற்றிலும் அதன்
பக்கமாகவும் தானே பல சான்றுகளைப்

பார்க்க முடிகிறது என்பதையும் ; அதைப்
பெயர்த்தெடுத்து ஆந்திரத்தில் அமைப்பதென்பது ;

வியர்த்தமான வேலை என்பதையும் வீணாகக்
காஞ்சியின் புகழுக்குக் களங்கம் விளைக்கும் செயல் என்பதையும்

உண்மையான தமிழக வரலாறுகள்
உலகின் கண்களில் படாமல் திரையிடப்பட்டுள்ள நிலையில்

இது மற்றோர் திரையாக ; ஆகாமல் தடுத்திட இந்தப்
பல்லவர் வரலாற்றுப் பகுதியின் விளக்கம் பயன்படுமாக!

★ ★ ★

‘காஞ்சித் தலைநகர் அல்ல’ என்று கடும் வாதமிடும் நண்பர் ;
“திருக்கழுக்குன்றத்து குடைவரைக் கோயிலில் உள்ள

வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையன் கல்வெட்டு
அந்தப் பல்லவ மன்னன் காலத்தது எனக் கருதப் பெறுகிறது” என
எழுதியிருப்பது கவனிக்கத் தக்கது ; எண்ணியதை மாற்றிக்
கொள்ள ;
ஏற்ற சான்றாக அமையத் தக்கது!

படையங்கள், பறைசாற்றுகின்றன!

வாதாபி வீழ்ச்சியைத் தொடர்ந்து
வலிமை இழந்த புலிகேசி மன்னனும்

வீழ்ந்திடவே ; அடுத்து அவன் வழித் தோன்றல்
விக்கிரமாதித்தன் வீறு கொண்டெழுந்தான்!

வீழ்த்தி நசுக்க வேண்டும் காஞ்சிப் பல்லவரையென்று,
ஆத்திரத்தில் ; சேர, சோழ, பாண்டிய சிற்றரசர்களாம்
எவர் உதவியும் தனக்குத் தேவையில்லை யென்று
எண்ணிலா வீரர் கொண்ட பெரும்படையுடனே

பல்லவச் சீமை மீது சூறாவளியாய்ச் சுழன்றான் – அது கண்டு,
பாண்டியன் அரிகேசரி நெடுமாறன் ; எரிச்சலுற்று

சேரனையும், சோழனையும் ; அவர்கள் சிற்றரசுகள் எனினும்
சேர்த்தணைத்துக் கொண்டு செருமுனையில் கூட்டாக ;

நெருப்புமிழும் படைகளுடன் அணி வகுத்து,
நெல்வேலிப் போர்க்களத்தில் ;

சாளுக்கிய விக்கிரமாதித்தனை சந்தித்த காரணத்தால்,
சமாளிக்க முடியாமல் பல்லவர் எல்லையைத் திரும்பிப்
பாராமலே அவன் ;

பயந்து, பதுங்கி ; வந்தேன் வந்தேனென்று வாதாபிக்கே
ஓடிவிட்டான் – அதனை
வியந்து சேக்கிழார் தமிழக அணி பெற்ற வெற்றிக்கு வாழ்த்துப்
பாடினார்!

நெல்வேலிப் போர் கி.பி. 675ல் என்றும், அது நிகழ்ந்த போது ;
பல்லவ மன்னனாக முதலாம் பரமேஸ்வர வர்மன்
இருந்தானென்றும் –

விக்கிரமாதித்தனுக்கு மட்டும் வீம்பு இல்லாமலிருந்தால் ;
வீழ்ந்திருக்க மாட்டான் என்றும் ;

ஆய்வாளர்கள் பலர், உண்மையினை அகழ்ந்தெடுத்து
அனைவரும் உணர்ந்திட உரைக்கின்றார் –

வீழ்ச்சியோ வெற்றியோ ; எதற்கும் இருக்கும் ஒரு காரணம் –
வீண் ஆணவமே
வீரனையும் வீழ்த்தி விடுமென்பதற்கு விக்கிரமாதித்தனே ஓர்
உதாரணம்!

★ ★ ★

தோற்றோடிய விக்கிரமாதித்தன், தோல்விப் புண்ணின் வலியை
ஆற்றிக் கொள்ள முடியாமல் ; தொடர்ந்தான் அதே ஆண்டு ;

காஞ்சித் தலைநகர் மீது பெரும்படை கொண்டு போராட்டம் –
கலங்கியது திடீர்த் தாக்குதலால் பல்லவர் சேனை!

சாளுக்கிய மன்னன் காஞ்சியில் பெற்ற அந்த வெற்றியை ;
சரித்திரச் சான்றுகளாக ; கட்வல் ; சோர, கேந்தூர்

பட்டயங்கள் தெரிவிப்பதாகப் பன்மொழிப் புலவர் கூறுவார் –
பல்லவனின் காஞ்சிக்குள் தன் பட்டத்துக் குதிரை மீதேறி

விக்கிரமாதித்தன் வெற்றிப் பவனி நடத்தியதோடு ;
வீராதி வீரன் மாமல்லன் நரசிம்மனின் பேரனான

பரமேசுவர வர்மனைத் தன் பாதம் பணியச் செய்தான் என்கிறது
பகைவன் அமைத்த அந்தப் பட்டயம் –

தனக்குக் கிடைத்த வெற்றியினால் சாளுக்கியன்
தலைகால் தெரியாமல் ஆடியதைப் பொறுத்திட முடியாமல் ;

தமிழரசர் அனைவரும் மீண்டும் ஒன்றாகக் கூடினர் – அவர்களின்
தானைகள் புறப்பட்டன பெருவளநல்லூர் போர்க்களம் நோக்கி!

எலிகள் ஏழெட்டு ஒன்று சேர்ந்தாலே ; அவற்றை
எதிர்க்க முடியாமல் பூனை திணறும் – இதோ ;

புலிகளே ஒன்று சேர்ந்து விட்டால் – இந்தப்
புவியும் அவர் வலிமை உணரும்!

தமிழகத்து அரசர்களின் ஒற்றுமையால்
சரணடையும் நிலைக்குத் தாழ்ந்தது சாளுக்கியப் படை!

துணைக்கு வந்த தமிழ் மன்னர்க்கெல்லாம்
தூய மனத்துடன் நன்றி கூறிப் பல்லவ மன்னன் ;

“பரமேஸ்வர வர்மன், ‘அரிவாரண’ மெனும் தனது
பட்டத்து யானை மீதேறிப் பவனி வந்து,

காஞ்சி வீதிகளிலே பகைப் படை வீரர்களைக் கலக்கினான்.
கந்தலாடை யொன்றினால் தன்னை மறைத்துக் கொண்டு

வீதிகள் பல கடந்து
விக்கிரமாதித்தன் ;

கால் பிடரியில் இடிபட ஓடினான் ; ஓடினான் ;
காஞ்சி நகர் எல்லையை விட்டே ஓடினான்”

(இக்கருத்தமைந்த வெற்றிப் பட்டயம்
“கூரம் பட்டயம்” எனும் பெயரால்,
பெருவள நல்லூர்ப் போர் முடிவை
அடுக்குச் சொற்களால்
அழகுபட வர்ணிக்கிறது)

அது மட்டுமா ?

(சாளுக்கியரின் ‘கேந்தூர்’ பட்டயமும் ;
பாண்டியரின் ‘சின்னமனூர்’ செப்பேடும் ;
சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரமும் ;
இதற்குச் சரித்திரச் சான்றுகளாக
பறைசாற்றுகின்றன ;
பல்லவர் பெற்ற வெற்றிக்குக்
கொடி ஏற்றுகின்றன)

திராவிட இனத்தின் தமிழர் மரபு

பகல் நேரக் கதிரொளியாய்
பரந்து விரிந்து வெளிச்சம் தந்த

பழந்தமிழ்ச் சோழர்களாம்
பாண்டியர் பல்லவர் சேரர்களாம்

பயன்விளைக்கும் ஏர் முனையாய்
பகை சாய்க்கும் வாள் முனையாய்

பாரினிலே புகழ் எய்திப் பின்னர்
தேரினிலே அச்சாணி கழன்றாற் போல்

தேயமெங்கும் ஒற்றுமை கட்டுக்குலைந்து
தேய்ந்திடும் நிலவின் கோட்டுப் பிறைகளாகி

குழுக்களாகக் குறுநில மன்னராட்சிகளும் – அவை
குருவித் தலைப் பனங்காய் எனும் காட்சிகளும் –

செங்கோல் மட்டுமே உடைமையாய்க் கொண்ட
சிற்றரசர்கள் செயல்பட்ட 'மாட்சி'(?)களும் –

இப்படிப் பல பிரிவுடனே களப்பிரர், கள்ளவரும் கலந்து,
மூவேந்தர் முத்தரையர் கூட்டும் சேர்ந்து,

முரண்பட்ட சூழ்நிலைகள் முட்டியும் மோதியும் –
முடிவாகப் பகை, படை, போர், அழிவு எனச் சிதைந்து,

" நேற்றிருந்தார் இன்றில்லை என்பது போல் – எம்மோடு
வீற்றிருந்தார் எங்கு போனார்?" என்று வினவிடும் நிலையில்,

வேற்படை, வாட்படை, வேழப்படை, புரவிப் படையிருப்பினும்
வேலைகள் அவற்றுக்குள்ளவற்றை வீரர்பால் ஒப்படைத்துவிட்டு ;

வியர்வை நீக்கிடவும் – அயர்வைப் போக்கிடவும் – ஓய்வு கொண்டு
உல்லாசம் அனுபவிக்க ஓடிவிடும் 'உத்தம' தலைவர்களை
விடுத்து ;

யுத்த களத்தில் போராட உத்தி வகுத்துச்
செயல்பட்டவர்களால் பெருவெற்றி கிட்டியது –
பெயருக்கு அரசராக இல்லாமல் – அவர்கள்
பேரரசர்களாகவே விளங்கினர் –

வீரமும் வெற்றியும் கடையில் விற்றிடும் பொருள் என்றும்
அதைப் பெறுவதற்குக் கூடக் கடவுள் அருள் தேவை என்றும்,

எண்ணுவோர், லட்சியத்தில் திண்ணியராய் இல்லாத காரணத்தால்
கண்ணியம், கடமை, கட்டுப்பாடு கெட்டுப் போய் – அந்தக்

கெடு நிலைக்கான காரணங்கள் அனைத்தையும் போக்கிட
நெடுநாள் காத்திராமல் பெருந்திறன் காட்டியதால்

இடைக்காலமென அறுநூறு ஆண்டுக் காலம் ;
எடைக்கேற்ப தராசுத் தட்டு மேலும் கீழும்

மாறி மாறி உயர்ந்தும் தாழ்ந்தும்
ஏறியும் இறங்குவதும் போல

தோன்றிய பல்லவ அரசில் துளிர்த்துப்
பாண்டிய அரசில் செழித்த – இந்தத்

தமிழகத்தின் மறு மலர்ச்சி, மீண்டும்
சங்க காலப் பெருமை பெற புத்துருக்கொண்ட சரிதத்தை ;

இங்கிருந்து தொடங்கிடுவோம்.
இருண்டிருந்த சோழக் கிழக்குச்

சங்கின் வெண்மை வானில் பரவும் ; நம்
வரலாறு, அந்த வான் மேவி ஒளிரும்!

★ ★ ★

அன்றந்தக் காலம் ஆலமரம் போல் தழைத்திருந்த
மூவேந்தர் ஆட்சி ; முடியிழந்த நிலை கி.பி. 350இல் ஆரம்பம்.

களப்பிரர் ஆட்சி சோழ நாட்டில் கி.பி. 575 வரையில்! அவர்க்குக்
கட்டுண்டே கிடந்தனர் பாண்டியரும் சோழரும்.

பல்லவர் பரிபாலனம் கி.பி. 875 வரை எனப் பதிவு செய்தால்
ஆறு நூற்றாண்டுகள் அடர்த்தியான இருண்டகாலமாகும்;
சோழர்க்கு!

அந்த நிலையைத் தான் இன்றைய முகப்புரையாக
அகமிக நொந்து வடித்துள்ளேன்.

பாண்டியர் சோழர் பல்லவர் சேரர் ; தென்னகம்
ஆண்டிருந்த ஒளி மிகு யுகத்தை இடையிலிழந்து,

அதன் பிறகே கி.பி. 850இல் உறையூர் அரசு கட்டிலில்
அமர்ந்திடும் வாய்ப்பு விஜயாலய சோழனுக்குக் கிட்டியதாம்!

அவன் முதலில் தனது முன்னோரைத் தொடர்ந்து பல்லவர்க்கு
நண்பனாக
அடங்கியே நடந்தான் எனப் பழைய வரலாறு கூறும்!

பாண்டியன் வரகுணன் என்பான் பல்லவர் மீது போர்
தொடுத்தபோது,
பல்லவன் அபராஜிதன் பக்கம் விஜயாலயன் நின்றான் – அதற்கு

வெகுமதியாக முத்தரையர் வசமிருந்த தஞ்சையை வென்று ;
அதனை
விஜயாலயன் பெற்றுக் கொண்டு ; வெற்றியைப் பல்லவர்க்குத்
தந்தான்.

பிற்காலச் சோழப் பேரரசைப் பிரசவித்த பெருமை;
பொற்காலம் படைத்த சோழனாம் ஆதித்தனுக்கும் உண்டாம் –

விஜயாலயனின் வீரப் புதல்வன் ஆதித்த சோழன்
விண்ணும் மண்ணும் அதிர நடந்த திருப்புறம்பியப் போரில் – தன்

திறமனைத்தும் காட்டி வெற்றி கண்டதைத் திசையெட்டும்
புகழ்ந்தது.
புறங்காட்ட வைத்தான் பின்னர் அபராஜிதனை என்றும்; அவனது

தொண்டை மண்டிலத்தையும் தோற்கடித்துத் தன்னைத்
தொழுதிட வைத்தான் என்றும் வரலாறு புலம்பும்!

அரசியலில் தன்னலம் தலைதூக்குங்கால்
அன்புக்கும் நட்புக்கும் நன்றி உணர்வுக்கும்;

இடமளித்தல் "இராஜதந்திரம்" ஆகாது (?) என்பதற்கு;
இதோ "ஆலங்காட்டுப் பட்டயம்" பகருவதைப் பார்ப்போம்!

பாண்டியரை எதிர்க்கப் பல்லவ அபராஜிதனுடன்
பக்கத் துணையிருந்து; தஞ்சையையும் தனதாக்கிக் கொண்டு;
பின்னர்

பல்லவனையே தோற்கடித்து ஆதித்தன் தொண்டை நாட்டைப்
பறித்துக் கொண்டான் என்பதோடு;

கன்னியாகுமரிக் கல்வெட்டொன்று கண்ணீருடன் கூறுவது;
யாதெனில்,
"ஆனை மீதமர்ந்து போரிட்ட அபராஜித வர்மன் மீது

ஆதித்த சோழன் தாவிப் பாய்ந்து கொன்று போட்டுக்
கோதண்டராமன் எனும் பெயர் பெற்றான்" என்பதாகும்!

பல்லவர் மரபு, பாண்டியர், சோழர் மரபு என்றெல்லாம்
சொல்லுபவர்க்குப் பதில் விளக்கமாக ஒரு செய்தி;

கல்வெட்டொன்றின் சாட்சியாக; ஆதித்த சோழன் மனைவி
"பல்லவர் மரபில் வந்த பாவை" யெனும் போது; திராவிட
இனத்தின்

எல்லா மரபும் தமிழ் மரபு தான் எனும் தெளிவு – வரலாற்று
வல்லார் உள்ளத்தில் தோன்றல் தேவை அல்லவா?

திருப்புத் தாணும் ரக்கனின் இறகு!

ஆதித்த சோழன் காலத்தில் அவன் மகன் என்ற நிலையில்
ஆட்சியில் அமர்ந்தவன் முதலாம் பராந்தகன்

அவனுக்கு மனைவிகள் பன்னிருவர் –
அய்வர் மகன்கள் –

இராசாதித்தன், கண்டராதித்தன்,
அரிகுலகேசரி, உத்தமசீலன், அரிஞ்சயன்.

இவர்களில் இராசாதித்தன்
இறந்து விட்டான் தக்கோலம் போரில் என்பதால்,

இவனுக்கடுத்த கண்டராதித்தனே பட்டம் பெற்றனன்.
மழவரையன் மகள் செம்பியன் மாதேவியை

மணந்து உத்தம சோழனை மகனாகப் பெற்றான்.
மதுராந்தகன் என மற்றொரு பெயரும் இவனுக்கு உண்டு.

கண்டராதித்தன் காலமான போது, மதுராந்தகன்
மழலைப் பருவத்தினன் என்பதால் ;

அரிஞ்சயன் எனும் தம்பி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான் எனினும் ;
அவனும் அகால மரணமே அடைந்தான்.

அரிஞ்சயனின் மகன் இரண்டாம் பராந்தகன்
அடுத்து, பட்டத்திற்கு வந்தான்.

இராசகேசரி எனும் விருது இவனுக்கு வழங்கினர்.
இளையவனாக இவன் இருந்த போதிலும் ; போரில்

வீர பாண்டியனை எதிர்த்துச் சேவூர் எனுமிடத்தில்
வெற்றியும் பெற்றுப் பாண்டியனை சாவூருக்கும்

அனுப்பி வைத்தான் என்று திருவாலங்காட்டில்
அமைந்துள்ள செப்பேடு ; இவன் திருப்புகழ் பாடுகிறது.

இரண்டாம் பராந்தகன் துணைவியரில் குறிப்பிடத்தக்கோர்
இருவர் –
ஒருவர் மலையமானின் செல்வி வானவன் மாதேவி –

இவர்தான் தனது கணவனுடன் உடன் கட்டை ஏறியவர்.
“ஏறுவதாக நினைத்தேன்” என்று எவரையும் ஏமாற்றியவரல்ல.

அந்தப் பழக்கம் பகுத்தறிவுக்கேற்றதில்லை யென்று நாமும்
அதனை
அன்றும், இன்றும், என்றுமே ஆதரித்தது இல்லை.

வானமாதேவியும் அவர் வாழ்க்கைத் துணைவர்
இரண்டாம் பராந்தகனும் இன்னுயிர் இழப்பதற்கு முன்பு,

சோழப் பேரரசு உருவாகக் காரணமாய் விளங்கிய
சொக்கத் தங்கமாம் ; சோழ இளவல் இராசராசன்

வானமாதேவியாம் அவன் தாய் மடியில் அமர்ந்து
வாள் சுழற்றி விளையாடிக் கொண்டிருந்தான்.

இரண்டாம் பராந்தகனின் இன்னொரு மனைவி சேரன் மாதேவி –
இவர் பெயரால் அமைந்த ஊர்தான் ; “சேரமாதேவி”யாகும்!

இராசராசனையும், ஆதித்த கரிகாலனையும், குந்தவை
நாச்சியையும்
தந்திட்ட தாயாம் வானமாதேவியின் மணி வயிறு ; சோழரின்

புலிக் கொடி புவியெங்கும் பறந்தது கண்டு குளிர்ந்தது! அதற்குத்
தன்
புதல்வர்களின் ஆற்றலே காரணம் என்பதுணர்ந்து ; “ஈன்ற
பொழுதின்

பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்''
என்ற குறளுக்கு
இலக்கணமாகத் தானே ஆனது கண்டு இறும்பூதெய்தினாள்
அந்தத் தாய்!

வானமாதேவியின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் எனினும் ;
அவன்
தனது தந்தை இரண்டாம் பராந்தகன் உயிரோடிருந்த போதே –

பாதகர் சதி யொன்றுக்குப் பலியாகி விட்டான் – அது
பாராளும் உரிமை யாருக்கென்ற கேள்வியால் வந்த வினை!

ஆதித்த கரிகாலன் கொல்லப்பட்டவுடன் அடுத்து பட்டத்துக்கு
வரவும்
முறைப்படி முடிசூட்டிக் கொள்ளவும் இராசராசன் உரிமை
பெற்றவன் என்பதால் ;

அவனேதான் ஆட்சிக்கு வர ஆவல் கொண்டு அச்சதி செய்து
கொன்றான், என்று
அவதூறுப் பழியொன்று இராசராசன் மீது கிளம்பிற்று! அப்பழியும்

ஆதவனைக் கண்ட பனி போல அக்கணமே விலகிற்று ;
ஆனால் நடந்தது என்ன என்பதை நாடு உணர்ந்து கொண்டது.

உண்மையில் இரண்டாம் பராந்தகனின் மறைவுற்ற மகன்
ஆதித்த கரிகாலன்தான் உரிமையுடையவன் ஆட்சி நடத்திட
எனினும்

'உத்தம சோழன்' எனப் பட்டம் மாத்திரம் பெற்றிருந்த மதுராந்தகன்
உயிர் பறிக்கும் வேலையை ஒரு விளையாட்டாகக் கருதி ;

தன் பெயருக்கே சற்றும் பொருத்தமில்லாமல்,
வன்முறைச் சதியை ஒரு நாள் முடித்து விட்டான் என்பர்.

செயலுக்கும், பெயருக்கும் சிலருக்குப் பொருத்தமில்லை
என்பதற்குச்
சான்றாக அமைந்து விட்டான் ; சான்றோர் அவையில் கலந்து
விட்டான்!

உத்தம சோழன் மீது ஊரார் சுமத்துவது
வீண் பழியே என்றும் – அவனது உற்றார் உறவினரே

ஆதித்த சோழன் கொலைக்குக் காரணமென்றும்
வேறு கதை புனைந்து விளக்கமளிப்போரும் உண்டு.

ஏதோ ஒன்று ஆதித்த சோழன் முடிவுக்குக் காரணமாயினும் ;
எவர் செய்தார் அச்சூழ்ச்சி என்பது மர்மமாயினும்

சூழ்ச்சி செய்தே அவன் உயிரைச் சுருட்டி விட்டார் என்பதை
எதிர்த்து வாதிட்டோர் எவரும் மறுத்ததில்லை.

இனி இராசராசன்தான் மன்னன் என எண்ணியிருந்தோர்
இனிய கனவுகளில் மூழ்கியிருந்தோர் ; ஏமாற்றத்தால் தத்தளித்தார்.

ஆனால் இராசராசன் ; அனைவரையும் அமைதிப்படுத்தி –
ஆதித்த கரிகாலன் சாவுக்கு மதுராந்தகனும் காரணமோவென
ஐயுற்றிருந்தும் ;

அந்தச் சிற்றப்பனையே செங்கோல் ஏந்திடச் செய்தான் –
அதனால்
“அருள் மொழித் தேவன்’’ என்ற பெயர் ;

அவனுக்கு எவ்வளவு பொருத்தம் பாருங்கள் – எனவே
ஆதித்தன் கல்லறையே மதுராந்தகன் மகுடம் புனைந்து

அமருகின்ற சிம்மாசனம் ஆயிற்று ;
ஆம் ; சதி வென்றது – அப்பாவி மக்களோ ;

அடடா ; விதி வென்றதே என முணுமுணுத்து
விழிநீர் பெருக்கினர் ; இத்தனைக்கும்

இராசராசன் இதயத்தில் எள் முனைச் சலனமும் இல்லை.
இரும்புத் தூண் ஈக்களின் இறகுபட்டா இற்றுப் போகும் ?

இளவரசனாக இருந்தே இந்த ஆட்சியைக் கண்காணிப்பேன் எனச்
சூளுரைத்துப் பொறுப்பேற்ற இராசராசன் ; சிற்றப்பா மதுராந்தகன்

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் –
சற்றும் கண் அயராமல் கவனித்து வந்தான் ;

முற்றும் உணர்ந்தவனல்லவா ; சிற்றப்பாவைப் பற்றி!
முடியைத் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டு ;

முடித்தவனாமே ஆதித்தசோழனின் ஆயுளை ; அதனால்
“முருகன் மயில் மீது அமர்ந்தது போல்” என்பார்களே ;

அது போல், இளவரசுப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு அந்த
மயிலாக மதுராந்தகச் சோழனையே மனத்தில் எண்ணியிருந்தான்.

பெரிய குடும்பங்களிலே வீட்டுத் தலைமைக்கே போட்டியிருக்கும்
நிலைமையில்
பேரரசுக்கான நாட்டுத் தலைமைப் பதவிக்குப் போட்டியில்லாமல்
போய்விடுமா ?
அதைத் தான்
புத்தி சாதுர்யத்தாலும் – பொறுத்தார் பூமியாள்வார் எனும்
பொன்மொழி மீது கொண்ட நம்பிக்கையாலும்

அவற்றுக்கெல்லாம் மேலாக – அரண்மனைக்குள் குழப்பமெனில்
அது அந்நியர் நுழைவுக்கு இடம் கொடுத்து விடும் என்ற
அச்சத்தாலும்,

இராசராசன் இளம் பருவத்திலேயே இங்கிதம் புரிந்து
நடந்து கொண்டான் – பின்னர் நாடும் ஆண்டான்!

தந்தை இராசராசனும், சிந்தை கவர்ந்த செல்வனும்!

குருதி கொண்டு வரையப்பட்ட
“ஆதித்த கரிகாலன் கொலை’’ என்ற

பயங்கரச் சரித்திரத்திற்குப் பின்னர்
இரண்டாம் பராந்தகன் எனும்

சுந்தரச் சோழன் “காஞ்சிப் பொன்மாளிகை’’யில்
பிள்ளைப் பாசத்தினால் மனமுடைந்து மரணமுற்ற

சோகப் பின்னணி இசை ஒலித்துக் கொண்டேயிருந்திட ;
நடந்து முடிந்த அவல நிகழ்ச்சிகளுக்கான காரணங்கள்

வினாக்குறிகளாகப் பேருருக் கொண்டிருந்த போது
மதுராந்தகன் கி.பி. 970ஆம் ஆண்டில் ஆட்சி பீடம் ஏறினான்.

ஆதித்த கரிகாலன் கொலைக்கு
அவனுமோர் காரணமென ஒரு கூற்றும் –

அவனாக இருக்க முடியாதென்ற ஒரு மறுப்பும் –
வரலாற்றுப் பக்கங்களில் வாதப் பொருள்களாயிருந்தபோது ;

அந்த வஞ்சகச் செயல்புரிந்தோரை வரிசைப்படுத்தி,
பஞ்சவன், பிரமாதிராசன், பரமேசுவரன்,

தேவதாசன், சோமன், ரவிதாசன் என
அறுவரின் பெயர் கூறி ; அவர்களில் நால்வர்

அய்யர் என்று அடையாளம் காட்டி
காட்டுமன்னார்குடிக் கல்வெட்டு கண்ணீர் சிந்துகிறது!

ஆய்வு செய்த அறிஞர் பலர்
ஆளுக்கொரு தகவல் சொல்வதால் ;

ஆதித்த கரிகாலன் கொலை என்ற
அதிர்ச்சியிலிருந்து நாமும் நம்மை மீட்டுக் கொண்டு

அதையொட்டி ஆட்சிச் சக்கரத்தை
அருண்மொழி வர்மனாம் இராசராசன் இயக்கிய

அற்புதத்தைத் தொடர்ந்து செல்வோம் – அவன்
பொற்காலப் பேரரசை அமைத்த விதம் அறிந்து கொள்வோம்.

உத்தம சோழன் எனும் மதுராந்தகன் தான்
உண்மையிலேயே ஆதித்த கரிகாலன் கொலைக்குக்

காரணம் என்றால் ;
அவன் ஆட்சி அமைத்தவுடன் அருண்மொழியாம்
இராசராசனை இளவரசனாக அறிவித்திடாமல்
தன் மகனையன்றோ நியமித்திருப்பான் என

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினர் ;
வினவுகின்றார்!

அவ்வாறு மதுராந்தகன் செய்திருந்தால் ;
அவன் புரிந்த மர்மக் கொலையை மறைப்பதற்காகத் தான்

அருண்மொழி வர்மனை இளவரசாக்கினான் ; என்று
அப்போதும் ; அஃதோர் தந்திரமென மக்கள் அம்பலத்தில்
ஏற்றுவரே!

அதனால்தான் கண் துடைப்பு நாடகமாக ;
அவன் மகனை விடுத்து அருண்மொழியை இளவரசனாக்கினான்

எனவும் கணிக்கலாமல்லவா ? அவன்
கனவும் பலித்ததம்மா என்பதே போல் ;

உத்தம சோழன் உயிராய்க் கருதிய பதவியும் கிடைத்தது – அதைப்
பாதுகாக்கும் கேடயமாக இராசராசன் உறவினரும் கிடைத்தனர்.

வஞ்சகம் புரிந்து ஆதித்த கரிகாலனை வதைத்தவர் பார்ப்பனர்
என்று
வரலாற்றுப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் தான்

வாதத்தையே ஆரம்பித்து வைத்தவர் ஆவார் – அதை மறுத்து
மதுராந்தகன் நிரபராதி என சதாசிவ பண்டாரத்தார் சான்று
காட்டுகிறார்!

இருவருமே காட்டும் சான்றுகள் ;
கல் வெட்டும் செப்பேடுகளுமே தான்.

நாம் அந்தச் சாட்சியங்களைச் சற்று நகர்த்தி
வெளியே நிறுத்தி விட்டு ; சந்தேக சூழ்நிலையில் அளிக்கும்
விடுதலையை

தீர்ப்பாக வழங்கி விட்டு ;
தென்னகம் மட்டுமன்றி இந்திய

தேசம் முழுதும் தமிழர் பேரரசு நிறுவிய
தங்க மகன் – சிங்கம் நிகர் சோழன் –

இராசராசனைப் பின் தொடர்ந்து சென்றால்,
இவன் ஆட்சியை எப்படி நிலைப்படுத்திக் கொண்டான்

என்பதை ஆராய்ந்து அறியலாம் – அடங்கா மகிழ்ச்சி
அடையலாம் –
இளவரசுப் பொறுப்பில் இயங்கும் இராசராசனுக்கு

அரசு நிர்வாகம் அரசியல் தந்திரம் –
அடுத்தாரை அரவணைத்தல் எவ்வாறு?

தடுத்தாரைத் தன் வயமாக்குதல் எவ்வாறு? எனும்
அனைத்துக் கலைகளிலும் மதுராந்தகன் பயிற்சி தந்தான் ;

ஒருவேளை ; செய்த குற்றத்துக்குப்
பரிகாரம் தேடும் செயலாகவும் இருக்கலாம்.

மறப்போம் பகை துறப்போம் சோழ
மண்டலத்துப் பலம் பெருக்குவோம்

எனச் சொல்லாமற் செயல்பட்டு
எப்பகையும் எதிர் நில்லாமல்

ஏறு நீ, ஏறு நீ, என எதிர்கால வெற்றிகளை நோக்கியே
முன்னேறி முடி சூடிக் கொண்டவன்

இராசராசன் கி.பி. 985 ஜூன் திங்கள்
இருபத்தி ஐந்தாம் நாள் –

பட்டத்திற்கு வருவதற்கு முன்பே இராசராசன்
பதினாறு ஆண்டுகள் இளவரசனாகப் பரிபாலனப் பயிற்சி பெற்று

அதற்குப் பின்னர் அவன் பட்டமேற்று முடி சூடிய
ஆண்டைக் கணக்கிட்டால் ; சற்றொப்ப அகவை நாற்பதில் தான்

அரசாட்சியை நேரடியாக நடத்தலுற்றான்!
அதன் பிறகும் முப்பது ஆண்டுகள் ஆண்டு முடித்தான் ;

அவன் மகன் இராஜேந்திரனும் அகவை அய்ம்பதில்தான்
ஆயிரத்துப் பனிரெண்டாம் ஆண்டு ஆட்சி பீடம் ஏறுகின்றான் –

தந்தை இராசராசன் உயிர் வாழ்ந்த போதே தமிழர்
சிந்தை கவர்ந்த செல்வன் இராசேந்திர சோழன் மன்னனானான் –

தந்தையின் கைச் செங்கோலின் மகிமை ; வட திசையில்
கிருஷ்ணையாறு வரையிலும் பரவியிருந்தது என்றும் –

மேற்றிசையில் அரபிக் கடல் அலையும்
தென் திசையில் இலங்கைத் தீவும் –

ஏற்றிப் பணிந்தன இவ்விருவர் ஆட்சியை என்றும் –
வானளாவப் புகழ்ந்து வணங்குகிறது வரலாறு!

முன்மாதிரியாகத் திகழ்ந்த மும்முடிச் சோழன்!

இராசராசன் ஆட்சிக் காலம் ; இன்பத் தமிழ் வளர்ச்சிக்கு,
இன நல பயிற்சிக்கு, இன உணர்வு எழுச்சிக்கு

பண்பாட்டு முதிர்ச்சிக்கு, பழம் பெருமைப் புகழ்ச்சிக்கு
சமத்துவ சமுதாய மலர்ச்சிக்கு, உழவர் தம் மகிழ்ச்சிக்கு

வழிகோலி விழி திறந்த ஆட்சி ; ஆனாலும் அது வரலாற்று ரீதியாகப்
பொற்கால ஆட்சி என்று பதிய வைப்பதிலே தயக்கமிருப்பதை
வெளிப்படுத்துவதிலும், அதற்கான காரணங்கள் பளிங்கு போல்
தெளிவாக இருப்பதைத் தெரியப்படுத்துவதிலும் – துணிவும்
தூய்மையும்

துணையாக நம் பக்கம் இருப்பதை எடுத்தியம்பும் வேளையில் ;
வட புலத்து நிலப் பகுதிகளையும் வசப்படுத்தி, கடலாதிக்கத்திலும்

கையிருப்பைக் காட்டி, குமரி முதல் இமயக் கொடுமுடி வரையில்,
பெரும் பிரதேசத்தை உருவாக்கி பேரரசு எனும் பெருமை
நிலைநாட்டி

மூன்று நூற்றாண்டுக் காலம் தழைத்துச் செழித்திருக்கப் பாடுபட்ட
முன்னோடி மன்னர்களின் சிறப்பைச் சீர்குலைக்க விழையாமல் –

அவர்கள் பெற்ற வெற்றிகள் – பெருமித் விருதுகள் – எதிலும்,
சினையினும் சிறிய பிழையும் காணாமல்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள மறந்த விவசாயி போல ;
வாய்ப்பு வந்த போது தமிழர் வாழ்வை நிலைநிறுத்திக் கொள்ள

நினையாத நெஞ்சத்தினராய் – முடியாத முடவர்களாய் –
முனையாமல்
முடித்துக் கொண்டதே தமிழ் இனம் தன் முன்னேற்றத்தை ; எனும்
முணுமுணுக்கும் சோகம் தான் ; பேரரசு அமைந்த பெருமையை –
அதனை
மும்முடிச் சோழன் அமைத்துக் கொடுத்த அருமையை

முழுமையாகப் போற்ற முடியாத நிலைமையை ஏற்படுத்தி ; இதனை எழுதும்போதே என் கையை நடுங்கச் செய்கிறது என்பதுதான்
உண்மையாம் !

சோழப் பேரரசர் ஆட்சி நடந்த காலம் –
அரசியல் துறையில் மட்டுமே அது சங்க காலம் ;

அரிய வெற்றி பல கண்ட காலம் ; ஆனால் வாழ்க்கைத் துறையில்
அது சங்க கால மாண்பை – இன மானப் பண்பை எட்டவில்லை !

வரலாற்றுப் பேராசிரியர்கள் மட்டுமல்ல – தமிழின
வாய்மை போற்றும் தன்மானமுடைய பெருமக்களும் வருந்தினர்.

பழுதொன்று மில்லாத தமிழர்தம் கலை இலக்கியப் பண்பாடு
பழங் குலுங்கும் பசுஞ்சோலைப் பூ மலராத பழங்காலத்தே ;

புகுந்து விட்ட வண்டு ; பழத்தை நாம் புசிப்பதற்கு முடியாமல்
செய்வதேபோல்
பரந்து விரிந்து தமிழர் தேசப் பேரரசு வட திசையும் சென்றதினால்,

வாரிக் கொண்டு வந்து விட்டது அந்த நாகரிகம், பழக்க
வழக்கங்களை !
வண்டு துளைத்த கனியாகியது வண்டமிழர் பண்பாடு !

உதாரணமாக ; ஒரு கொடுமையே போதும் ; இறந்த கணவனுடன்
உடன்கட்டை ஏறி உயிரோடு கருகிச் சாகும் வழக்கம்,

உண்டா என்றாவது தமிழ் நிலத்தில் ?.....
பூதப் பாண்டியன் தேவி முதல் புவியாண்ட சோழ மாதேவிகள்
வரையில்

பீடித்து விட்ட அந்தத் தொத்து நோய்க்கு மருந்து ;
இராஜாராம் மோகன் ராய்தானே தர முடிந்தது ? –

உடன்கட்டை மட்டுமல்ல ; உயர்வென்றும் தாழ்வென்றும்
உடன் பிறந்த மாந்தருக்குள் பேதம் கற்பித்து – அது

வேதத்தின் கட்டளையென்று அச்சுறுத்தி ;
“நெற்றியில் பிறந்தோரின்” வெற்றி அறுவடையாக,

சாதீயக் கட்டுப்பாடுகளும்
சதுர்வேதி மங்கலங்களும் தோன்றி

சமணம் பௌத்தமெனும் சமயங்களாம் தெளிந்த நீராறுகளும்
சமமாகக் கலந்திட முடியாமல் கட்டிய அணைகளும்

வந்து நம்மை நொந்திடச் செய்ததை
வரலாறு காட்டும்போது வாட்டம் தானே வாட்டுகிறது!

தென்னக வரலாற்றில் சங்க காலத்துடன்
திடமாகப் போட்டியிட வல்ல காலம்

சோழப் பேரரசர் ஆட்சி நடந்த காலம்.
அரசியல் துறையில் மட்டுமே அது சங்க காலம் – அதில்

அரிய வெற்றி பல கண்ட காலம் – ஆனால் வாழ்க்கைத் துறையில்
ஆரிய வாடை அப்போதே வீசியதால் வழுக்கல் துவக்க காலம்!

இதனை
வரலாற்றுப் பேராசிரியர்கள் மட்டுமல்ல ; தமிழின

வாய்மை போற்றும் தன்மானமுடையோர் அனைவருமே
வருந்தி உணர்ந்து வாயடைத்துப் போய் நிற்கின்றனர் ;

வரலாற்றில் விளைந்து விட்ட மாற்றம் கண்டு!
பழைமையா புதுமையா ? பகுத்தறிவா ? அல்லவா ? நம்

பண்பாட்டுக்கேற்றவை எவை யெனப்
பகுத்துணர்ந்து முடிவுக்கு வருவதற்கு முன்பே

பட்டத்துக்கு வந்தோர் வரிசையை இராசராசன் வென்றான்.
“பளிச்” எனப் பற்பல வெளிச்ச மின்னல்கள் உருமாறிப்

பருவ நிலவாகி – உச்சிப் பகல் உயர் சூரியன் என மாறி ;
சோழ வரலாற்றின் ஒளிக் கதிர் வட்டமென நின்றான்.

அவன், ஆண்டில் முதிர்ந்தவனுமல்ல ; அதனால் வாலிபனுமல்ல
வசீகரமானவன் – வாளேந்தி நின்றான் என்றால்

வான்பிறையைக் கறுப்பு வண்ணத்தில் தோய்த்து மீசை
வடிவத்தில்
முகத்தில் பொருத்தியது போன்ற வீர மிகு உருவப் பொலிவு ;

முத்தமிடக் கூட நெளியாத முதுகில் ஒரு கம்பீரம் – யானையின்
மத்தகத்தை எடுத்து வலிமை நிறை நெஞ்சகமாகப் படைத்திட்ட

மலைத் தோற்றம் ஒரு மனிதனாகத் தோன்றுகிறதோ – என
அய்யுறும் வண்ணம் அழகிற் சிறந்த ஆண் சிங்கம்

அமர்க்கள வேலையில்லாத ஓய்வு நேரம் அவனுக்கு
அரை நாழிகை ஒரு நாழிகை கிடைத்தாலே அரசமாதேவியர்

அய்ந்தும் ஆறும் ; அவர்களைக் காண விரைந்து வருவான்.
அப்படி வரும் வழியில் பலகணி வழியாக பெண்குரல் ஒன்று
கேட்கும்

அருண்மொழி அல்லது அருண் என்ற பெயரைக் கேட்டவுடன்
அவன் தன்னை மறந்து குரல் வந்த திசையில் செல்வான்

பாட்டி செம்பியன் மாதேவி தன் பேரனைத் தழுவிக் கொள்வாள்
பக்கத்தில் தம்பி மீது பாசம் பொழியும் குந்தவைப் பிராட்டியார்

நலம் விசாரித்தல் – நாட்டு நடப்பை விவாதித்தல் எல்லாம்
பாட்டியிடமும் சகோதரியிடமும் பணிவாக அன்பாக பரிவு மேலிட !

“வரவில்லையா இன்னமும் தேவர் ?” என்று குந்தவையிடம்
கேட்பான்.
வந்து விட்டேன் என்று வந்து கொண்டே வந்தியத் தேவன்
சிரிப்பான் –

அக்காளின் கணவன் அரசின் மிகப் பெரிய அதிகாரி ;
அவன் குந்தவையிடம் ; என்ன எனக் கேட்டு கண் சிமிட்டுவான்!

அங்கிருந்து சற்று விலகிச் சென்று
குந்தவையும் தேவனும் அந்தரங்கம் பேசுவர் –

உரையாடல் நடைபெறும்போதே மகளிர் குழு ஒன்று
மகிழ்ச்சி பொங்க அங்கே வந்து சேரும் –

மகளிர் குழு என்றால் ; அது தான்
மன்னன் இராசராசனின் மனைவியர் கொண்ட குழு –

உலக மகாதேவி, சோழ மாதேவி, நக்கன் தில்லை அழகி,
பஞ்சவன் மாதேவி, திரைலோக்கிய மாதேவி,

அபிமான வல்லி, இலாட மாதேவி, பிரிதிவி மாதேவி,
மீனவன் மாதேவி, வீர நாராயணி, வானமாதேவி

இவர்களில் வானமாதேவிக்குக் கிடைத்த பேறு ;
இராசேந்திர சோழனின் அன்னை என்பதாகும்.

அவனும் ; சோழ மாதேவி தொடங்கி ;
ஒரு சுற்று பதினோரு பேரிடமும் நலம் விசாரித்து விட்டு ;

பாட்டி செம்பியன் மாதேவி பாதம் தொழுது ;
ஈட்டி யொன்றை அவள் கையால் வாங்கிக் கொண்டு.....

அவைக்களம் நோக்கி ஆலோசனைக்குச் செல்வான்
அன்றாடம் இது அருண்மொழி வர்மனின் அரசுப் பணியாகும் –

அதற்கிடையே அவன் குடும்பத்திற்கென ஒதுக்கிடும்
நேரத்தில்தான்
அத்தனை சந்திப்புகள்! அன்பு உரையாடல்கள்! அனைத்தும்
களத்தில்

வீசப்படும் வாள்களின் வேகத்தில் ; வேல்களின் விரைவினைப்
போல்!
பரபரப்பு! சுறுசுறுப்பு! என்றோ ஒருநாள் இயற்கை அளித்தால் ;
இடைவேளை!

இப்படி இராசராசன் பம்பரமாய்ச் சுழன்றான் – பரிதியாய்க் கடமை ஆற்றினான் –
இளைய மகள் குந்தவை ; விமலாதித்தன் மனைவி, வருவாள் – அவள்

இல்வாழ்வு பற்றிப் பேச்சிருக்காது ;
இருவரும் 'ராஜ்ய பாரம்' பற்றியே விவாதிப்பர்.

வேலேந்தி விட்டால் களத்தில் அதற்குரிய வேலை தான் பார்க்க வேண்டும் ;
கோலேந்தி விட்டாலும் ; குடிகளைத்தானே கவனிக்க வேண்டும் –

குடும்பத்தையே கவனிக்க முடியுமா ?
முடியாது என்பதற்கு இந்த மும்முடிச் சோழனே முன்மாதிரியாகத் திகழ்ந்தான்.

அந்த வருங்காலமே; அருங்காலமாகும்!

எங்கேனும் கண்டதுண்டா?
எவரேனும் சொன்னதுண்டா?

இளவரசனாக பதினாறு ஆண்டுகளும்
நாடாளும் நாயகனாக முப்பது ஆண்டுகளும்

மொத்தம் நாற்பத்தி ஆறு ஆண்டுகளில் – மும்முடிச் சோழன் என்றும், செயங்கொண்ட சோழன் என்றும்,

முறையே மண்டலப் பெயர்களையும், வளநாட்டுப் பெயர்களையும் மற்றும் – சோழேந்திர சிம்மன், சிவபாதசேகரன், சிகாமணி,

ஜனநாதன், நிகரிலி சோழன், இராசேந்திர சிம்மன்,
சோழ மார்த்தாண்டன், இராசாசிரயன், இராச மார்த்தாண்டன்,

நித்திய விநோதன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன்,
சிங்களாந்தகன், இரவிகுல மாணிக்கம், தெலுங்கு குல பாலன்
என்றும்.....

இன்னும் இன்னும் எண்ணற்ற பட்டங்களும், விருதுகளும்,
சென்ற இடமெல்லாம் வெற்றியும் ஈட்டித் தந்து

தமிழகப் பேரரசு ஒன்றை முன்னூறு ஆண்டுகள் நிலைபெறச் செய்ய அடித்தளமிட்ட அந்த வீராதி வீர – வெற்றித் திருமகனுக்கு –

அவன் பிறந்த ஆண்டு எதுவென்று;
அவனுக்கும் தெரியாது – அவன் வீட்டுக்கும் தெரியாது.

நாட்டுக்கும் தெரியாது – அதை நம்பத்தான் முடியவில்லை.
நம்ப முடியாதவைகளும் நடப்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு!

களம் பல கண்ட அவன் நிகழ்ச்சிகளுக்கு
கல்வெட்டுச் சான்றுகள் கணக்கிலடங்காதவை உண்டு –

அமைத்திட்ட ஆலயங்களுக்கும்
ஆவணங்கள் பல உண்டு –

அவன் அரசு நிர்வாகம், ஆட்சி முறை
செங்கோல் சிறப்பு பற்றிக் கூற செப்பேடுகள் உண்டு.

ஆனால் அகிலத்தை உலுக்கிய அலெக்சாண்டரினும்
ஆற்றல் மிக்கவனாய் உறுதிபடைத்தவனாய்

புகழ் செதுக்கிய அந்தப் பூபதிக்குப்
பிறந்த நாள் மட்டும் குறிக்கப்படாமலே போய்விட்டது!

ஆண்டு எதுவென அறியாத நிலையில் ஐப்பசி திங்கள் சதய நாளில்
அவன் பிறந்தான் என்ற குறிப்பு மட்டுமே உள்ளது –

அந்த அடிப்படையில் இராசராசனின் சதய விழா
ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

கல்வெட்டுகள், சாசனங்களில் குறிப்புகள் வரைந்து
சோழரின் பேரரசு காலத்து நிகழ்வுகளை செதுக்கி வைத்த

மன்னவனுக்கு; அவனுடன் இருந்தவர்களோ; அவன்
மக்களாகப் பிறந்தவர்களில்

எவருமே உருப்படியாக யோசித்து, அவன் மறைந்த நாளை
எழுதி வைக்கவும் மறந்து விட்டனரே!

எதிர்காலச் சொத்தாக அவற்றை எடுத்துக்காட்டவில்லையே
என்பது
ஏமாற்றத்துக்குரியதுதான்; அதற்கு நாம் தலைகுனிய
வேண்டியது தான்!

பிறந்த நாள் குறிப்பு இல்லாமையினால் ஒருவர்
பிறக்கவே இல்லையென்று ஆகி விடுமா?

கார்காலம் கனமழை பொழிவது குறிப்பாக எந்த மேகத்திலிருந்து
எனக் கணிக்க முடிகிறதா?

நிரம்பியுள்ள – ஏரி குளங்களைக் கண்டு தானே
நிச்சயிக்கிறோம் பெருமளவு மழை பெய்ததை!

அது போலத் தான் பேரரசு ஒன்று அமைந்ததை வைத்து
இராசராசன் பெருமையைக் கணக்கிட்டுப் புகழ்கிறோம் –

அவன் நடத்திய போர்களை எண்ணி வியப்புறுகிறோம் –
அவன் பெற்ற வெற்றிகளை நினைத்து நெஞ்சுமிக விம்முகிறோம்....

மேகத்தை மறந்தாலும் மழையை மறக்காதது போல் – அவன்
பிறந்த நாளை மறந்தாலும் – பெருமைகளை மறந்தோமில்லை!

தமிழர்களைத் தனி மகிழ்ச்சி அடையச் செய்த ஆட்சியன்றோ
தரணி புகழ் இராசராசன் ஆட்சி!

நாடாள மகுடம் புனைந்த நான்காம் ஆண்டே
சேர நாட்டின் மீது படையெடுத்தது சோழ நாட்டுச் சீயம் –

அதற்குத் தலைமையேற்ற தளநாயகன்
பஞ்சவன் மாராயன் எனப் பெயர் கொண்ட

அஞ்சா நெஞ்சன் அருமைப் புதல்வன் இராசேந்திரச் சோழன்
அப்போரில் எதிர்த்து வந்தோர் சேரர் பாண்டியர்

அவர்களிருவரையும் வென்று காட்டிக்
குன்றமென நிமிர்ந்து நின்றதாம் சோழர் குலம்.

★ ★ ★

குடமலை நாட்டில் ராசராசனின் தூதன்; பெருமை குலைந்திட
நடத்தப்பட்டதாக குமுறியது சோழர் பெரும் படை –

‘மகனே; புறப்படு’ எனும் மன்னன் ஆணை கேட்டு
மாற்றாரை மண்டியிட வைத்தே திரும்புவேன் என்று

இராசேந்திர சோழன் எடுத்துப் பிடித்த வாளினைத்
தடுத்து நிறுத்த எவராலும் முடியவில்லை!

குடமலை நாடு பணிந்தது – குலுங்கச் சிரித்து ;
கோபம் தணிந்தது தஞ்சை!

★ ★ ★

கொங்கு நாடு கொடுங்காளூர் சிற்றரசர்கள்,
மேலக் கடற்கரையை ஆண்டவர்கள்

அனைவருமே அடி பணியவும் அவர்தம் முடி
தாழ்த்தவும் தயாராயினர் –

தடையின்றி அங்கெல்லாம் எங்கு
நோக்கினும் சோழர் படை! சோழர் படை!

"கீர்த்தி பராக்ரம சோழன்" என விருது பெற்று
வெற்றியும் பெற்று அந்தத் திருமகன் திரும்பினான் தஞ்சைக்கு!

★ ★ ★

அன்றைய மைசூரில் ஒரு பகுதி கங்கபாடி
அதற்கப்போது தலைநகர் தலைக்காடு –

அரசர்க்கரசன் இராசராசன் காவிரி தாண்டினான் முதலில்!
அடுத்து கங்கபாடியில் நுழைந்தான் ; படையுடன்!

அதனையும் கைப்பற்றி,
அத்துடன் தடிகைபாடியையும் தன்னாட்சிக்குக் கீழே

கொண்டு வந்து – கொடி நாட்டினான் – சோழர்
கொற்றம் தழைத்தது ஆங்கே!

★ ★ ★

கீழைச் சாளுக்கிய நாடு பெருங்குழப்பத்தில் தவித்ததாலே ;
பகையைச் சமாளிக்க முடியாமல் சக்தி வர்மன் என்பான் ;

பயந்து, சரணடைந்தான் இராசராசன் முன்னிலையில்!
படையுதவி புரிந்து வேங்கி நாட்டை வீழ்த்தி

வெற்றிக் கொடியை ஏற்றிய சோழன் ;
பற்றிக் கொள்க இதனையென்று – தன்

கருணைக் கரம் நீட்டினான்.
பற்றிக் கொண்டான் சக்தி வர்மன் –

அதன் பிறகும் இராசராசன் தனது மகள்
குந்தவையை – சக்தி வர்மன் தம்பி விமலாதித்தனுக்கு

மணமுடித்து; பலம் பெருக்கிக் கொண்டான் வேங்கி நாட்டில்!
அவன் இராசராசன் மட்டுமல்ல ; அரசியலில்

அவன் இராச தந்திர ராசனுங்கூட என்பதை
இத்திருமணம் தெரிவித்தது!

★ ★ ★

கலிங்கத்தை வென்றான் என்றும் ;
இலங்கையிலும் ஒரு பகுதியை கைப்பற்றினான் என்றும் ;

கல்வெட்டுக்கள் வெற்றிக் கவிதைகளை
விண்முட்டப் பாடுகின்றன.

★ ★ ★

இராசராசனின் வெற்றி வரலாற்றில்
இமயச் சிகரமாக ‘‘இலட்சத் தீவு’’களைக்

கைப்பற்றிய நிகழ்ச்சி அமைகிறது எனலாம் ;
கி.பி. 1013ல் அவன் கடற்படை யொன்று கண்டான்.

அப்படையைப் பயன்படுத்தாமலே ‘அத்தீவுகளை’ வென்றான்
தந்தை தொடங்கிய அம்முயற்சிதான் பின்னர்

தனயன் இராசேந்திரனின் கடற்படைப் போர்களில்
வெற்றிகளைக் குவித்திட முன்னோட்ட முயற்சி எனலாம்.

வெற்றி குவிக்கும் படை வரிசைகளும் – எதிரியின்
நெற்றிப் பொட்டில் அடித்து விரட்டும் பாசறைகளும் –

பயிற்சி பயிற்சி என எந்நேரமும்
தளர்ச்சியின்றி வீரர்கட்குப் பயிற்சி தரும்

தளகர்த்தர்களும் கொண்ட அந்தத் தமிழின சேனையில்
வேளக்காரர் படையென ஒன்றும் உண்டாம் –

அந்தப் படையினர்; தமது அயர்வால் அரசர்க்குச் சிறு
ஆபத்து விளைந்திடப் பார்த்தாலும்; தம்முயிரை மாய்த்துக்
கொள்ளத்

தயாராக இருக்கும் தற்கொலைப் படையினர் ஆவர்;
தஞ்சை மன்னன்பால் நெஞ்சம் முழுமையும் பறிகொடுத்தவர் அவர்!

★ ★ ★

தஞ்சைப் பெரிய கோயில் கோபுரம்;
தமிழகத்திற்கு இராசராசனின் நினைவுக் கொடை எனப்

புகழ்கிறோம் – போற்றுகிறோம் – நிலைத்த கொடையும்
அதுவேதான்!
அதிலும் ஒரு குறை; கோயில் கட்டினான் என்றல்ல; ஒரு

கோட்டையிலிருந்து தானே அந்தக் கோயிலைக் கட்டினான்;
கோயிலிருக்கிறது – கோட்டை எங்கே?

இந்த வினா; தஞ்சையில் மட்டுமல்ல –
தமிழக முழுவதுமே; எழுகின்ற ஏக்க வினா!

நல்லவேளை நமது மன்னர்களும் – அவர்தம்
வழித்தோன்றல்களும் – அந்தக்

கல்வெட்டுக்களையும் ஆவணங்களையும் –
அக்கால இலக்கியங்களையும்

காத்தளித்தாவது நம் வரலாற்றை அறவே அழியாது;
வைத்துள்ளனரே என்றெண்ணிப் பூரிப்போம் –

குடிமக்கள் நலனுக்கு கோவேந்தன் இராசராசன்
படிப்படியாக தீட்டிய திட்டங்கள் –

ஆட்சி முறை – அதற்கான அமைப்பு முறை – அனைத்தும்
மாட்சிமை நிறைந்தது எனினும் ; வடமொழி ஆதிக்கம்
மேலோங்கி,
தாய்மொழி தமிழ் தவித்திடும் நிலை பிறந்தது ;
இவ்வாறு தமிழ்க் குலம் தாங்கிக் கொண்ட

குறையிருந்தது எனக் கூறினாலும், அது
பாலில் மோர் கலந்தது போலத்தான்!

உழைப்போர்க்கு, உழவர்க்கு இன்னும்
நலன்பல புரிய முனைந்திருக்கலாம்

மன்னர்களுக்கு ; மகேசன் தொண்டு அதிகமானதால்
மக்கள் தொண்டு ; சிறிது படுத்துக் கொண்டது போலும்!

அது காலத்தின் குறை என்பர் ;
காவலன் குறையெனக் கூறுவதே பொருந்தும்!

“ காலத்தின் குறையையும் ஒழுங்குபடுத்தி
காவலன் நிறை காண வேண்டும்” என்பதுதானே நல்லோர்
கருத்து.

அக்கருத்து தான் மூலக் கருத்து எனினும் –
அக்கால முதல் இக்காலம் வரையில் – ஓர்

அரசின் வலிவுதான் – பொலிவுப் பட்டியலில்
ஆரம்ப வரிசையில் அமர்ந்து கொள்வதால் –

அதற்கே முதலிடம்
வழங்கப்படுகிறது வரலாறுகளில்!

இதோ இராசராசன்
அமைத்தளித்துள்ள

அந்தத் தஞ்சை ஆலயம் கூட
காட்டுகின்ற கல்வெட்டு கண்டால்,

“திருமகள் போலப் பெரு நிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்

காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்

தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிக்கமும்

முரட்டொழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை இலக்கமும்

முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்

னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்

தேசு கொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு”

இந்தப்
பன்னிரண்டு நாடுகளை வென்றான்
இவற்றைத் தன் குடைக் கீழ்க் கொணர்ந்தான்.

அவற்றின் காவலர்களாம்....
செழியன், சேரன், மகிந்தன், உதகை அரசன்,

குடமலை நாட்டு மன்னன், நுளம்பப்பாடி அரசன்,
கங்கபாடி மன்னன், தடிகைப்பாடி அரசன், சத்தியாசிரியன்,

தெலுங்க வீமன், சக்தி வர்மன், கலிங்க மன்னன்,
முந்நீர்ப் பழந்தீவுகளின் அரசன், பழுவேட்டரையர்,

கொல்லி மழவன் ஒற்றியூரன் பிருதிகண்ட வர்மன், திருவையன்
சங்கர தேவன், கொடும்பாளூர் வேளான் சுந்தர சோழன்,

நன்னமரையன், வீர சோழன் இலாடப் பேரரையன்,
இராசராச வாணகோவரையன், மலையமான்,

வல்லவரையன் வந்தியத் தேவன், விமலாதித்தன்
என்று தான் விளக்கப்பட்டியல் இருக்கிறது; அவன் விரல் நுனியில்!

எது எப்படியிருப்பினும்;
எம்மரும் தமிழகத்தில்

எல்லோரும் போற்றும் வண்ணம்;
அனைத்துக் கலையிலும் சிறந்தவனாய் –

அக்கலைகளைப் பரப்பியவனாய் –
வீரம் விளைத்தவனாய்; வெற்றிகள் குவித்தவனாய்;

வேளாண்மையில் விருப்பமுற்று
நிலவளம் செழிக்க
நீர் வளம் கொழிக்க
ஆறுகள் வாய்க்கால்கள்
ஆழமான அகலமான ஏரிகள்
அமைப்பதில் அக்கறையுடையவனாய்;
அவற்றை அடிக்கடி தூர்வாரி
சீரமைப்புச் செய்து
பயிர் விளைக்க பயன்படப்
பணி தொடர்பவனாய்,
பாழ் வெள்ளம்
புயற் காற்று
பாதிக்காமல் மக்களைப்
பாதுகாப்பவனாய்;

பல்லாண்டு காலம் ஒருவன் வாழ்ந்தான்
படை நடத்திப் பகை அகற்றினான் –

அவன் நல்லவன்

வல்லவன் –

அதனினும் ; நமக்கு மகிழ்ச்சி தருவது

அவன்

“நம்மவன்”

என்பதேயாகும்.

நம்மவர்கள் எல்லாம்

நல்லவர்களாக

வல்லவர்களாக வாழ்ந்திட

அந்த வரலாறு வழங்கிட

வருங்காலமே தமிழர்க்கு அருங்காலமாகும் –

அது வருங்காலமாகவே இருக்கட்டுமே!

அழியாத சிற்பக் கலையும், அழகிய ஓவியக் கலையும்!

இராசராசன் ; தன் தந்தையாம் இரண்டாம் பராந்தகன் இயற்கை எய்திய பிறகு ; தமையனாம் ஆதித்தனும்

சதியினால் சாய்ந்த பிறகு ; சரியாகவோ, தவறாகவோ – அதில் சம்பந்தப்படுத்திப் பேசப்பட்ட மதுராந்தகன் மகுடம் புனைந்து

மரணமுறும் வரை ஆட்சி செய்து ; அந்த மூவருக்குப் பின்னரே மன்னராக முடிசூடிக் கொண்டான் என்கிறபோது ;

என்ன இருந்தாலும் வயது அவனுக்கு கி.பி. 985இல் ; நாற்பதுக்கும் அய்ம்பதுக்கும் நடுவில்தான் இருக்க வேண்டும்!

அவனும் முப்பதாண்டு ஆட்சி நடத்திய பிறகே ; இராசேந்திர சோழன்

அரசுப் பொறுப்பு ஏற்றான் எனில் அவன் வயது, அப்போது அய்ம்பது என ;

ஆய்வு செய்து எழுதுகிறார் அறிஞர் இராசமாணிக்கனார்!
அவனுக்கும் ஆட்சிக்கு வந்த ஆண்டு – கி.பி. 1012 என்று மட்டுமே தெரிகிறது.

மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தான் – மற்ற விபரம்; அந்த

மன்னாதி மன்னர் குடும்பத்தில் எதுவுமே இல்லை!

தந்தைக்குச் சதய நாளும், தனயனுக்கு திருவாதிரை நாளும் – இத் தரணியில் ‘‘அவதரித்த’’ நாள்கள் என்று மட்டும் கண்டுபிடித்துவிட்டார்கள்!

தனயன் இராசேந்திரன் ஆட்சி பீடம் ஏறிய பிறகே; இயற்கையாகத்
தந்தை இராசராசன் மறைவுற்றான் எனினும்; மறந்தே போனது
அந்த நாளும் –

வரலாற்றில், என்கிற போது; மனம் புண்ணாகித் தான் போகிறது!
நல்ல வேளை;
வரைய மறந்தார் முன்னோர்; தேதிகளை எனினும்; சேதிகளை
மறக்கவில்லை!

மாதமும் நட்சத்திரமும் சொன்னால் மட்டும் போதுமா? ஒவ்வொரு
மாதமுந்தான், நாள், நட்சத்திரம் வரும், போகும்; பரவாயில்லை;
நமது பழைய கால

மாளிகைகள்; பிறந்த நாள், இறந்த நாளை மறந்து விட்ட வரலாற்று
மகிமை கொண்டவைகள்! மறைவாய்ப் புதைத்த
ஓடுகளாகிவிட்டவைகள்!

சரி, போகட்டும்; சரித்திரமாவது – கிழிந்த துண்டாகக்
கிடைத்ததே; அதற்கும்
தரித்திரம் வராமல் – அதனால் ஆறுதல் அடைந்து, தொடர்வோம்!

★ ★ ★

இராசராசன் காலத்து சோழ நாடு,
தஞ்சையைத் தலைநகராய்க் கொண்டு –

வடக்கில் துங்கபத்திரையும்
வடகிழக்கே வேங்கி நாடும்,

தெற்கே ஈழத்தின் மையப் பகுதியும் – இன்றைய
தென்னாற்காடு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டையென

எல்லைகளைக் கொண்ட பண்டைய சோழ மண்டலமாக அமைந்து தொல்லைகளைத் தவிர்த்திடும் வகையில் 'வளநாடுகள்' பல உருவாயின.

வள நாட்டின் உட்பகுதிகளும் நாடுகள் என வழங்களாயின –
'பாப்பா நாடு' 'உரத்த நாடு' எனப் பட்டியல் நீளும் –

அரசனுக்கு உதவி செய்திட அமைச்சர்கள் கொண்ட குழு –
'பெருந்தரம்,' 'சிறு தரம்' எனப் பிரிவுகளைச் சார்ந்த

அரசு அதிகாரிகளும் அவற்றுக்கு அடுத்த நிலை அதிகாரிகளும்
அவர்களுக்கெனத் தனி ஊதியம் பணமாகப் பெறாமல்

நிலங்களை மானியமாகப் பெற்று ; அதில் கிடைக்கும்
பயனையே அந்த ஊழியர் ஊதியமாகப் பெறுவர்.

அதிகாரிகளின் நேர்மை, நாணயம் அருஞ்செயலைப் பாராட்டி
அவர்களில் சிலருக்கு நிலத்தை இறையிலியாக வழங்குவதும்
உண்டு.

'நாடு' எனப்படும் ஒவ்வொரு பகுதியும் – ஒரு
காவல் அதிகாரியின் கண்காணிப்பில் இருந்தது.

நாடு முழுதும் எவ்வளவு நிலங்கள் என அளந்து கணக்கிட்டு,
காடு மேடு கழனி என தரம் பிரித்து நிலவரி ஒழுங்குபடுத்திட ;
உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அது உடனடியாகவும் நடைமுறைக்கு
வந்தது.
''உலகளவித்த திருவடிகள் சாத்தன்'' என அதிகாரி பெயரை
அறிவித்திடும்

கல்வெட்டு ஒன்று ; கருவூரில் காணப்பட்டதாகக் குறிப்பு உண்டு!
கடல் போல் காட்சி தரும் ஏரிகளும் சோழ மன்னர்
அருட்கொடைகளேதான்!

ஊர் தோறும் மன்றங்கள் அமையப் பெற்று நான்கு வகை
ஊராட்சி மன்றங்கள் ஆங்காங்கு தேர்வில் உருவாக்கப் பெற்று,

ஊடே புகுந்த உயர்சாதி ஆதிக்கத்தினால் – அந்த
ஊராட்சிகள்; ''சதுர்வேதி மங்கலசபை'' என்றும்,

''தேவதான மன்றங்கள்'', ''பிரமதேயச் சபை'' என்றும்
''பிராமணரல்லாதார் தேர்வான ஊர் மன்றங்கள்'' என்றும்

கதையொன்றும் கட்டவில்லை; கல்வெட்டுச் சான்றுகளைக்
காட்டுகின்றார் ஆய்வாளர் – என்கின்றேன்! இந்த

அடித்தட்டு ஊராட்சி முறையில், இராசராசனுக்கு –
அறுபது ஆண்டுக்கு முன்பே அரசோச்சிய;

பராந்தக சோழனுக்கும் பங்குண்டு என்று
'உத்திரமேரூர்க் கல்வெட்டு'ம் உரிமை கொண்டாடும்.

வாரியங்களும் அமைத்தனர் – பொதுக்
காரியங்கள் நடத்திட!

ஒழுக்கம், பண்பு, நாணயம், நேர்மையில்
ஒரு துளி இழுக்கு என்றாலும் அவர் பெயர்;

குடவோலையில் குறிப்பிடப்படக் கூட முடியாமல்
உடனடியாகத் தகுதியிழப்பர் –

தக்காரே தேர்ந்தெடுக்கப்படுவர் –
தகவிலார் தள்ளப்பட்டு விடுவர் –

ஏரி வாரியம் என்றும் கழனி வாரியம் என்றும்
கணக்கு வாரியம் என்றும் – கலிங்கு வாரியம் என்றும்

மக்கள் கடமையாற்றும் வாரியங்களில்
மாசு மருவற்றோரே பொறுப்பு வகிப்பர் –

ஊராட்சிகளை ஒன்றியமாக அமைத்து முதலில்
சீராட்சி நடத்தியவனும் இராசராசன் தான் –

எம்மதமும் சம்மதம் எனும் கருத்துடன் வாழ்ந்த
இராசராசன்; சைவ மதத்தின் பால் தனி ஈடுபாடும்

எல்லா மதத்தினரையும் அரவணைக்கும் நிலையும் எடுத்து
நல்லார் எம்மதத்தினராயினும் அவர்களை ஆதரித்து மகிழ்ந்தான்.

அவன் அக்காள் குந்தவை நாச்சியாரோ;
தாதாபுரம் எனுமிடத்தில்

சைவர், வைணவர், சமணர் என
மூன்று சமயத்தினருக்கும்

நிறைவு ஏற்படும் வண்ணம் மூன்று ஆலயங்களை அவரே
முன்னின்று எழுப்பியுள்ளார் –

★ ★ ★

தந்தை வழியை தவறாமல் கடைப்பிடித்து தமிழ் மக்கள்
சிந்தையில்
இடம் பெறுவேன் என்று சூளுரைத்து; தன் முன்னோர்

தாள் பணிந்து வாள் பிடித்த இராஜேந்திர சோழன்
தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல் – எனும்

அய்யன் திருவள்ளுவரின் இரு குறளுக்கும்
இலக்கண உருவாய்த் திகழ்ந்து

மகன் இராசேந்திரன் ஆட்சி நடத்திய காட்சி கண்டு
மாவீரன் இராசராசன் மனம் பறி கொடுத்தான்

கலை இலக்கியத்திற்கு இருவரும் வழங்கிய
மலையளவு ஆதரவு; ஒரு புறம்

ஆத்திகத்துக்கு அரணாக அமைந்தது எனினும் –
ஆடற்கலையையும் பாடல் கலையையும்

அழியாத சிற்பக் கலையாகவும்
அழகிய ஓவியக் கலையாகவும்

படைத்தளிப்பதற்கு அவர்கள் ஆற்றிய
பணியும் பார் புகழ் பணியேயாகும் –

அவைதான் தஞ்சை ராஜராஜேச்சுரமும்
அதற்கிணையான கங்கை கொண்ட சோழபுரமும் ஆகும்!

களம் பல கண்டான்;
கடற்போரிலும் வென்றான்!

தாய் எட்டடி பாய்ந்தால்
குட்டி பதினாறு அடி பாயும் – இந்தப்

பழமொழி; தந்தை இராசராசன் –
தனயன் இராசேந்திரன் –

இருவரையும் பொறுத்த ஈடற்ற
எடுத்துக்காட்டாகவே அமைந்து விட்டது!

இராசஇராசச் சோழன், தனது
ஆட்சியின் இறுதிக் காலத்தில்தான்

மகன் இராசேந்திரனுக்கு
மகுடம் சூட்டி மன்னராக்கினான்.

இராசேந்திரச் சோழனோ ;
ஆட்சியில் அமர்ந்த

ஏழாம் ஆண்டிலேயே
நாடாளும் நாயகன் பொறுப்பை

இளைய மகன் இராசாதிராசனுக்கு
வழங்கி ; வரலாற்றில் ஒரு

திடுக்கிடும் திருப்பம் ஏற்படுத்தினான்.
மகனும் தந்தையுமாக சோழ

மண்டலத்தை இருபத்தி ஐந்து ஆண்டுகள்
இணைந்தே ஆட்சி நடத்தினர் என்பது ;

இந்திய நாட்டுச் சரித்திரத்தில்
இதுவரை காணாத புதுமை!

இன்னும் சொல்லப் போனால் ;
இராசாதி இராசன் இளவரசன் பொறுப்பில்

இருந்து நடத்திய போர்களை வரலாற்றாசிரியர்கள்
இரண்டு பகுதிகளாகப் பிரித்து வழங்கிடுவர்.

இரு பகுதிப் போர்க்களங்களிலும்
தந்தைக்குத் துணையாகவும் – இணையாகவும்

ஒன்றிரண்டில் தந்தையை மிஞ்சியவனாகவும்
இளைய மகன் இராசாதிராசன் புகழ் பெற்றான்.

இடைத் துறை நாட்டுப் போர் – இது
இரு நதிகள் கிருஷ்ணா, துங்கபத்திரைக்கு

மத்தியில் உள்ள சமவெளி; இன்றைய "ரெய்ச்சூர்";
இங்கே முதல் வெற்றி இராசேந்திர சோழனுக்கே!

கங்கவாடிக்கு வடக்கே – நுளம்பாடிக்கு மேற்கே
பொங்கியெழுந்த மேலைசாளுக்கியர் படையை ;

கொதிக்கும் உலையில் நீர் தெளித்து அடக்குதல் போல
துதித்துத் தொழுதிட வைத்தான் பகையை!

ஆந்திரத்து அய்தராபாத்துக்கு வடகிழக்கில்
அன்றைய 'கொள்ளிபாக்கை' இன்று "குல்பர்கா"

சுள்ளி முறிப்பது போல் சோழன் படை முறித்துப் போட்டு
அள்ளிக் கொண்டு வந்தது அடுத்தடுத்து வெற்றிகளை!

'மண்ணைக் கடக்க'மெனும் இராட்டிரகூடர் தலைநகரை வீழ்த்தி
'மண்ணை கொண்ட சோழன்' எனும் மாப்புகழும் பெற்றான்.

கி.பி. 1017 ஆம் ஆண்டு இராசேந்திரன் படை ;
அய்ந்தாம் மகிந்தன் எனும் இலங்கை வேந்தனை –

முற்றுகையிட்டுப் போர் தொடுத்து – முன்னேறியது!
முன்பொரு முறை இராசராசனிடம் முதுகு காட்டி ஓடிய

அந்த ஈழவேந்தனை வென்று காட்டி – அவன்
பறித்து வைத்திருந்த பாண்டியரின் மணிமுடியை

மீட்டுக் கொடுத்த பெருமையும் – அவனைச் சோழ தேசக்
கைதியாகப்
பூட்டி வைத்த பெருமையும் இந்த இருவர்க்கும் உண்டு!

இவ்விதமாக ஈழப் போரில்
சோழர் படையின் வெற்றியை ;

மகாவம்சம் சுட்டிக் காட்டும் ; தமிழ்
மாவீரர் புகழை நிலைநாட்டும்!

ஈழத்தில் புலிக்கொடி பறக்க விட்ட
சோழப் பேரரசு ; பாண்டிய நாட்டின் மீதும்
படை கொண்டு பாய்ந்தது!
அரசர்க்கரசன் இராசராசன் காலத்திலே

அடிமைப்பட்டிருந்த வல்லப பாண்டியன்,
இப்போது வணங்க மறுத்தோ என்னவோ

எதிர்த்துச் செயல்படுகிறான் எனக் கேட்டு ; அவன்
இடுப்பொடித்துப் போட்டது சோழர் படை ; என்பதை

‘காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்தான்’ எனும்
கல்வெட்டு சொல்லிக் காட்டுகிறது!

★ ★ ★

போர்க்களங்கள் பல கண்ட இராசேந்திர சோழன்
கங்கை கொண்ட சோழன் என வீர விருது பெறவும் –

அதற்கு அடையாளமாக கங்கை கொண்ட சோழபுரம் என்று
வெற்றிச் சின்னம் ஒன்று அமைக்கவும் –

தலையாய காரணமாக விளங்கிடுவதுதான் – அவனது
தலையாயப் படையெடுப்பான கங்கைப் படையெடுப்பாம்!

வேங்கி நாடு தொடங்கி, சக்கரக் கோட்டத்துப் போர் முடிவில்
ஓங்கி உயர்ந்தது சோழனின் புலிக் கொடி!

நாமணைக் கோணமும், பஞ்சப் பள்ளியும்,
சிந்து நதிக் கரையில் மாசுணி தேசப் பகுதியும்,

மகா கோசலமெனும் தென் கோசலத்தின்
ஒட்டர தேசமும், மகாநதிக்கரையினை

ஒட்டியுள்ள பகுதிகளையும் வென்று ; பகைவரிடம்
பெட்டி பெட்டியாக பன்மணிக் குவியலைத்

திறை கொண்டது சோழர் படை யென
திருவாலங்காடுச் செப்பேடு செம்மாந்து பேசுகிறது.

அந்தச் செப்பேடு தான் – நம் செந்தமிழ்ச் சோழன் ;
கங்கையாற்றைக் கடந்திட

பல நூறு யானைகளை வரிசையாக நிறுத்தி
பாலமாக அமைத்து ; அதில் படையை நடத்தி –

மறுகரை சென்றான் என்றும்
மாற்றாரை வென்றான் என்றும் இன்றும் கூறும்!

பண்டாரத்தார் கூறுவார் ;
பூர்வ தேசமெனும் கோசலப் பகுதியும்
போர் முனைப் பரிசாக சோழர்க்கே கிடைத்ததென்று!

எங்கணும் வெற்றி வெற்றி எனச் சுழன்ற வாள்;
வங்காளத்து மிதுனபுரி மாவட்டத்தில்

தண்டபுத்தி நாட்டு தர்மபாலனை நோக்கியும்
சுழன்றது ; அதனால் அந்தப் பாலனின் முடி கழன்றது!

அடுத்து அடியெடுத்து வைத்தது சோழர் சேனை ;
இரணசூரன் எனும் தெக்கண லாட மன்னன் பூமியில்!

மற்றுமோர் வங்க மாநில அரசன் கோவிந்தசந்தன்
வெற்றியைச் சோழன் காலில் வைத்தான்!

இன்னொருவன் இணையற்ற வீரன் எனும் மகிபாலன் –
இவனாட்சி காசி வரை பரவியிருந்ததெனினும் ;

இராசேந்திர, இராசாதிராசர் படைகளிடம் – காற்றில்
தூசி போல் பறந்து விட்டதாம்!

வாதாபி வெற்றியின் அடையாளமாக
பல்லவ தளபதி பரஞ்சோதி

எடுத்து வந்த சிலை ;
வாதாபி கணபதியாம்!

வடபுலத்து மன்னர் பலரை
வென்றதின் நினைவாக –

சோழர் தளபதி ; கொண்டு வந்த சிலைதான்
குடந்தை நாகேசுவரர் கோயில்

கங்கை விநாயகர் சிலை எனக்
கூறிடுவார் விளக்கம்!

ராசேந்திர சோழனின் கடல் கடந்த வெற்றிகளில்
கடாரம் வெற்றியே களிப்பினில் ஆழ்த்திய வெற்றியாம்.

அதைப் பற்றிய செய்திகளை அவனது மெய்க்கீர்த்திகளும்,
திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இன்றைக்கும் கூறிடுமாம்.

தோற்றுப் போன வடபுலத்துப் படைவீரர் தலைகளில்
ஏற்றுக கங்கை நீர்க் குடங்களை யென்றுரைத்து ;

அவ்வாறே அணி வகுத்து வந்தவர்களை –
கோவேந்தர்களாம் இராசேந்திரன் – இராசாதி ராசன்

இருவருமே வரவேற்க நீட்டினர் இரு கை!
இனி தலை காட்டுமோ ஒரு பகை!

குருதிக்களமே; கொலு மண்டபம் ஆனது!

இராசராச சோழனுக்கு
இராசேந்திரன் என்ற வீரப் பிள்ளையும்

இராசாதிராசன் என்ற பேரப் பிள்ளையும்
மூவரும் ஓரணியாகவும் தனித்தனி அணியாகவும்

போர் நடத்திய நாடுகளில் – தங்கள் தோள்களில்
புதிய புதிய வெற்றிகளை மட்டும் தூக்கி வரவில்லை ;

பொன்னும் பொருளும் முத்தும் பவளமும்
மின்னும் வைரமும்

இன்னும் விலை உயர்ந்த பொருள்களாகக்
கண்ணைப் பறிக்கும் அணிமணிகளும்,

குவியல் குவியலாய்க் கொண்டு வந்தது ; தங்கள்
குடியோ கொற்றமோ உயர்ந்திட அல்ல – தஞ்சைக்

கோபுரம், உயர்ந்திட – கங்கைச் சோழபுர
ஆலயம் ; ஆகாயமளாவ எழுந்திட, மற்றும்

ஆக்கப் பணிகளுக்கே அள்ளிக் குவித்தனர் செல்வத்தை,
அருண்மொழி வர்மனும் அவன் வழித் தோன்றல்களும்!

ஆடற்கலை வல்லார்க்கும் இசைவாணர்க்கும்
அன்பளிப்புகளும் ; அரச மாதேவியர் வழங்கிடத் தவறியதில்லை.

இதற்கிடையே இராசாதி ராசன் ;
இடையூறு விளைத்தவாறு இருந்த

சாளுக்கியரை வென்று அவர்களின்
தலைநகர் "காம்பிளி"யைக் கைப்பற்றி –

கிருஷ்ணையாற்று "பூண்டூர்" போரிலும்
அவர் படையைப் பூண்டோடு அழித்தான்.

இராசேந்திரனது இறுதிக் காலத்தில் சாளுக்கிய 'ஆகவமல்லன்'
படையெடுத்துப் பார்த்து பலிக்காத காரணத்தால் ; சூது புரிந்து

நண்பனைப் போல் நடித்து நயவஞ்சகமாக
நாட்டைச் சுருட்டும் கேட்டைத் தொடங்கும்

சதிச் செயல் திட்டத்துடன் தூதுவர் சிலரை இராசாதிராசனிடம்;
மதி மயக்கும் மாயமந்திர வாதிகளென அனுப்பி வைத்து ;

அவர்களால் ஆகாத காரியம் எதுவுமில்லை யென்று கூறி – அவர் தம்
'ஆசிர்வாதம்' பெறுமாறு ஓலையொன்றும் எழுதி வைத்தான்!
வேள்வியும் யாகமுமே வெற்றிக்குக் கை கொடுக்குமென்று கருதி – தன்
வீரத்தையும் விவேகத்தையும் நம்பாதவனல்ல என்பதால் ;

சூழ்ச்சிதனைப் புரிந்து கொண்ட இராசாதிராசன்
எதிரிக்கு ஏற்ற பதில் இது தான் என்று ; தூதுவராய்

வந்தோரில் இருவரைப் பிடித்து வைத்து,
ஒருவனுக்கு 'அய்ந்து குடுமி' வைக்கச் செய்தும்
அடுத்தொருவனுக்கு "அரவாணி" பெண் வேடம் போட்டும்
அவர்களிருவருக்கும் ; "ஆகவமல்லன்", "ஆகவமல்லி" எனப்

பெயர் வைத்து ஆகவ மல்லனிடமே அவர்களை அனுப்பி வைத்தான்!
ஆத்திரமும் அவமானமும் தாங்காமல் ஆகவமல்லன்,

"போர்! போர்!" என்று முழங்கிக் கொண்டே
'பூண்டி' எனுமிடத்தில் இராசாதிராசனுடன் மோதினான்.

அதன் விளைவு ஆகவமல்லன் வீழ்ச்சியுற்று; கல்யாணபுரத்தையும்
கைப்பற்றிக் கொண்டான் இராசாதிராசன்; ''விஜய இராசேந்திரன்''
எனும்

வீரங் கொழிக்கும் பட்டத்தையும், அந்தக் களத்திலேயே சூட்டிக்
கொண்டான்.
வீராபிஷேகமும் அங்கே நடத்தப்பட்டு ; வாயிற்காவலர்
சிலையொன்றும்

வழங்கப்பட்டது வெற்றிக்கான அடையாளப் பரிசாக! அந்த
வசீகரச் சிலையின் பீடத்தில் ''கலியாணபுரம் வென்று கொணர்ந்த

துவாரபாலகர் சிலை'' என எழுதப்பட்டிருந்தது ; இன்னமும்
தஞ்சைப் பெரிய கோயிலில் அந்தச் சிலை இருக்கிறதாம்!

இதற்கு முன்பு அச்சிலை ; தாராசுரம் அய்ராவ தேசுவரர்
ஆலயத்தில் இருந்ததாகக் கூறுவர் ; ஆய்வாளர்கள்!

★ ★ ★

'விஜய ராசேந்திர' விருது பெற்ற மகிழ்ச்சியுடன் மமதையும் சிறிது
கொண்டு
பகைவன் எனினும் பண்போடு அணுகாமல்; இராசாதிராசன் ;

ஆகவமல்லனின் தூதர்களை அய்ந்து குடுமி வைத்தும்,
அரவாணி வேடமிட்டும்
அநாகரிகமாக நடந்து கொண்டது சோழர் வரலாற்றில் ஒரு 'கறை'
தான் என்பேன்!

விஜய இராசேந்திரனால் வெகுவாக அவமானமுற்ற
சாளுக்கிய 'ஆகவமல்லன்' சபதம் செய்து கொண்டு

எப்படியும் எதிர்த்துப் போர் புரிந்து, அவனை
வீழ்த்திக் கொல்வதற்கு விபரீத யோசனைகளில் ஈடுபட்டான்.

அவசரப்படாமல் ஆற்ற வேண்டும்
அந்தக் காரியத்தை என்றெண்ணி,

கி.பி. 1054ஆம் ஆண்டு வரையில்
இராசாதிராசனைப் பழி வாங்கக்

காத்திருந்த ஆகவமல்லனாம் சாளுக்கியன்
சரியான சமயம் பார்த்து சதியை மீண்டும் தொடங்கினான்.

இன்று "சித்ரா பூர்" என அழைக்கப்படும்
கிருஷ்ணா நதி வலது கரையிலமைந்த "கொப்பம்" எனும் களத்தில்

பெரும்படை தயாரிப்புடன் இராசாதிராசனாம்
விஜய இராசேந்திரனை வியூகம் வகுத்து வளைத்தான்.

இரு தரப்பிலும் இடி முழக்கப் போர்!
ஆகவ மல்லனின் படை வீரர் அனைவரும்

விஜய இராசேந்திரனையே சூழ்ந்து கொண்டு
பழி வாங்கும் பணியை நிறைவேற்றிட

அவனை மட்டுமே குறி பார்த்துக் கணைகளை ஏவினர்
வாட்களை வீசினர்; ஆகவமல்லனின் படையினர்!

பட்டத்து யானை மீதமர்ந்து போர் புரிந்த
வீராதி வீரன் வில்லில் விஜயன் எனப் புகழப்பட்ட

இராசாதி இராசன் யானை மீதிருந்தே
சாய்ந்திட நேரிட்டது; சரமாரித் தாக்குதலால்!

சரிந்தான், சாய்ந்தான், சமர்க்களத்தில்
விழுப்புண் பட்டு வீர மரணம் எய்தி; எந்நாளும்,

விழாப் புகழுக்கு உரியவனானான்.
வீரத்தின் விளை நிலமாய்த் திகழ்ந்தவனும்

வெற்றிகளின் உறைவிடமாய் உலவியவனும்
விரோதிகளின் விலா எலும்பால்.....

தலை சீவிக் கொள்ளும் தைரியம் வாய்ந்தவனும்
இந்திரஜித்தன், அபிமன்யூவுக்கு இணையானவனுமான,

எதிரிகளின் சிம்ம சொப்பனமாம் –
இராசாதிராசன் எனும் எழுச்சிப் புயலாம்;

விஜய ராசேந்திரன் வீழ்ந்தது கண்டு
விழி நீரைத் துடைக்கவும் நேரமில்லாமல் ; அவன் தம்பி

இராசேந்திர சோழ தேவன்; இடி, மின்னல், புயல்
இவையனைத்தும் இணைந்து தாக்கினாற் போல

எதிரிகள் மீது பாய்ந்து தாக்கினான் –
கர கர வெனப் பலர் கரங்களை வெட்டியும்

பட பட வெனப் படைதனை ஊடுருவி ;
பகைக் கூட்டத்தின் தலைகளை அறுத்தும்,

வெற்றி ; வெற்றி ; என்ற பெருங்கூச்சலிட்டு
சாளுக்கியரைச் சடசட வென சாய்த்துக் கொண்டே

சண்ட மாருதமெனப் போரிட்டு வெற்றி கண்டான்.
விஜய இராசேந்திரனை வீழ்த்தியவர்கள் வீழ்ந்தார்கள்

விழி ஒளி அனைய உடன்பிறப்பை
வீழ்த்தியவர்களை வீழ்த்தி,

வெற்றி கண்ட இராசேந்திர சோழ தேவனின்
உடல் முழுதும் ஒரு நூறு கணைகள்!

களத்தில் தைத்த அந்தக் கணைகளுடனே –
அவற்றைக் காண்பதில் ஒரு களிப்புடனே ;

“கொண்டு வா மகுடத்தை!” எனச் சோழர் கூட்டம்
கூவிடக் கூவிட; கொந்தளித்தது போர்க்களம்!

குருதி பொங்கும் அந்த இடத்தையே
கொலு மண்டபமாகக் கொண்டு, சோழ நாட்டுக்

கோலேந்தும் விழா நிகழ்ச்சியை
நிறைவேற்றிக் கொண்டான் ;

இராசேந்திர சோழ தேவன்! இஃதோர் புதுமை ;
இந்தியத்துப் போர்க்கள வரலாற்றில்!

இவ்வாறு வரலாறு படைத்த
இராசேந்திர சோழ தேவன் ;

அங்கிருந்து கோல்காபூர் சென்றான்
ஆங்கே வெற்றித் தூண் ஒன்று நாட்டி விட்டு

அதன் பிறகே தலைநகர் மீண்டான்! முடிசூட்டியது ஒரு
மனிதனுக்கு; அதற்காக முடிவெய்திடுவது முப்பதாயிரம்
மனிதர்களா ?

இப்படி சமர்க்களத்தின் பக்கமாக
சமணத் துறவி யொருவர் பாடிக் கொண்டே சென்ற காட்சி

இரக்கமற்றோர் கண்களையும்
ஏரி, குளமாக்கும் காட்சியாகும்!

திருமணங்களாலும் வருவதுண்டு திருப்பம்!

இராசேந்திர சோழ தேவனாம் ;
இரண்டாம் இராசேந்திர சோழன்

‘கொப்பம்’ போர்க்களத்தையே
கொலு மண்டபமாக்கிக் கொண்டு

மன்னர் மன்னனாக மகுடம் புனைந்தவுடன்
மாற்றார் படையாம் சாளுக்கிய படையின்

தளபதிகளான ஜெயசிங்கன், புலிகேசி,
தசபன்பவன், ஆரையன், அசோகமையன்,

ஆகியோர் தலைகளை அங்கேயே வெட்டி வீழ்த்தினான்.
அரச குலப் பெண்டிர் சத்தியவை, சங்கவை

இருவரையும் கைப்பற்றிக் கொண்டதோடு
இரத்த வெறிப் பழியுணர்வு அடங்காமல்,

பகை நாட்டுப் பட்டத்து யானைகளான
சத்துருபயங்கரன், கரபத்திரன், மூல பத்திரன்

மற்றும் ஒட்டகங்கள், குதிரைகள் போன்ற – சாளுக்கியக்
கொற்றவனின் உடைமைகளையும் தனதாக்கிக் கொண்டான்.

இவன் கி.பி. 1054இல் – பிணக் குவியலுக்கு மத்தியில்
இந்த மண்ணில் பேரரசுப் பட்டம் சூட்டிக் கொண்டு ;

இரண்டாம் இராசேந்திரன் எனும் பெயருடன்
ஒன்பதாண்டு காலமே உலகில் வாழ்ந்தான் என்றும்

அதன் பின்னர் 1063இல் உயிர் விட்டான் என்றும் –
தொடர்ந்து ஆள வந்தவர்கள் அவன் தம்பியர்

இராசமகேந்திரன், வீர இராசேந்திரன் என்றும் ;
அவர்களும் அதிக காலம் வாழவில்லையென்றும்

வரலாறு முற்றுப் பெறுகிறது ; ஆக ; வீர
இராசேந்திரன் 1070இல் மறைந்தவுடன் ;

அதி ராசேந்திரன் என்பான் ஆட்சிக்கு வந்து ; அவனும்
உள்நாட்டுக் கலகத்தினால் அற்பாயுளில் உயிர் விடுத்தான்.

இவ்வாறு கி.பி. 850ஆம் ஆண்டு
சுடர்க்கரம் நீட்டியெழுந்த சோழர் அரசு ;

இருநூறு ஆண்டுகள் மக்கள் பணியென்றும்,
இறை பணி என்றும், மாற்றாரைக் களத்தில்
சந்திக்கும் போர்ப்பணி என்றும், ஆட்சிப் பணியாற்றி
அதிராசேந்திர சோழனுடன் அத்தமித்தது எனினும்

அதன் பின்னர் 'சாளுக்கிய சோழர்' எனும் பெயரால்
அய்ம்பதாண்டுக் காலம் குலோத்துங்க சோழன்

கோலோச்சிய சரித்திரத்தையும் ஒளியுமிழ்
ஓவியமாகத் தீட்டித்தான் காட்டுகிறது –

> ஒளியுமிழ் ஓவியமெனினும் ; அந்தச் சோழ
> நிலவில் ''ஒளவைக் கிழவி''யாம் நிழலாக
> ஒட்டிக் கொண்ட ''சாளுக்கிய மரபு'' என்ற
> குட்டிக் குறைபாட்டினையும் ; குலோத்துங்கன்
>
> எட்டித் தள்ளி விட்டு
> ஏற்றமிகு ஆட்சி நடத்தினான்.

இரு நூற்றாண்டு சோழர் வரலாற்றில்
இவன் யார் சாளுக்கிய சோழன் ?

இந்தக் கேள்வியும் இடம் பிடித்து விட்ட பிறகு
விடையளிக்காமல் விலகிட முடியுமா ?

சமர் வெற்றிகள் மட்டுமல்ல ;
சமரச உடன்பாடுகள் –

பெண் எடுத்தல் கொடுத்தல் எனும்
கொள்வினை கொடுப்பினைகள்

மூலமும் – மூளையைப் பயன்படுத்தி
சோழ தேச நிலப் பரப்பைக்

கட்டுக் காவலுடன் காத்து நிற்பதற்கு
இராசராசனும் ஓர் இணையற்ற வழிகாட்டியன்றோ ?

அவன்தானே அன்றைக்குத் தனது
அருமை மகள் இளைய குந்தவைக்கும்

சாளுக்கிய மரபு வழித் தளநாயகன் வீரன் விமலாதித்தனுக்கும்
மரபு வழிக் கலப்பு மணவிழாவை நடத்தி வைத்தான் –

இருவருக்கும் பிறந்தவன் இராசராச நரேந்திரன் –
இவன் இராசராசனின் மகள் வழிப் பேரன்

முதலாம் இராசேந்திரனின் இரண்டாம் மகள் அம்மங்கை தேவி –
இவளும் இராசராசன் மகன் வழிப் பேத்தியாகும்.

இராசராச நரேந்திரனுக்கும் அம்மங்கை தேவிக்கும்
பிறந்தவன் குலோத்துங்க சோழன் எனில்

சாளுக்கிய சோழர் குலமெனச் சாற்றுதற்குச்
சரித்திரம் சற்றேனும் தயங்குமா ; அதுவும் நமது

சமுதாயக் கோட்பாடு வளர்ந்து வரும் விதத்தில் ?
சாத்திரக் குப்பை மேடுகள் பெருகி வரும் காலத்தில் ?

★ ★ ★

தவழும் பருவத்திலேயே குலோத்துங்கன்
தடம் பார்த்துத் தவழுவதில் குறியாக இருந்ததாலே

தாத்தா போலவே தந்திரக்காரன் என்றும்
தவறியும் தோற்கும் வழி செல்ல மாட்டான் என்றும்

இளம் வயதில் இராசேந்திரன் என்றே ஊரில்
எல்லோரும் அழைத்தார்கள் ; அவன் பெயரை!

வெங்கி நாட்டு இளவரசன் ஆன போது
விஷ்ணுவர்த்தனன் எனும் பெயரை வைத்தனர்.

வேறு சிறப்புப் பெயர்கள் எத்தனையோ உண்டு ;
விருதராச பயங்கரன், கரிகாலன்,

மனுகுல தீபன், உலகுய்ய வந்தான்,
பராந்தகன், சுங்கம் தவிர்த்த சோழன் –

பல பெயர்கள் உண்டு – பெற்ற பட்டங்களும்
பற்பல உண்டாம்!

கி.பி. 1070 சூன் திங்கள் ஒன்பதாம் நாள்
கிரீடம் தரித்தான்; சோழச் சக்கரவர்த்தியாக!

அதனால் ‘‘திரிபுவன சக்கரவர்த்தி’’ என்று
அடைமொழி கொண்ட முதல் மன்னனும் இவனேயாவான்!

கங்கை கொண்ட சோழபுரத்தில் முடிசூடிக் கொண்டு
காஞ்சிபுரத்தையும் ஒரு தலைநகரமாக்கிக் கொண்டு

பழையாறை, திருமழபாடி நகர்களைத் தமது
பரிபாலனத்திற்கேற்ற இடங்களாக மாற்றிக் கொண்டு

தனது உள்ளங்கவர்ந்த செல்வனாம் விக்ரம சோழனை
தனக்குத் துணையாகவும் தனக்குப் பின் அவனேதான் எனவும்

அறிவித்து ஆட்சி நடத்திய குலோத்துங்கன் அய்ம்பது
ஆண்டுகள் ;
அரசு நடத்தினான் எனினும் ; கலிங்கத்துப் பரணிக்குக்
காரணமான

கலிங்கப் போரில் அவன் கண்ட வெற்றியே, அவன் ஆட்சியில் பெற்ற
கடைசி வெற்றி போலும் ;

விக்ரம சோழன் ஆட்சியும் நேர்மை நியாயம் போற்றிய ஆட்சியாக – தந்தை
விட்டுச் சென்றதை இழக்காத ஆட்சியாக விளங்கிற்று எனினும்

இலங்கையில் இருந்த பிடிப்பை இழந்தது ; அதனைப்
பேரிழப்பின் ஆரம்பம் ; பின்னடைவின் துவக்கமாயிற்று எனலாம்

மன்னார்குடிப் பெருமாள் கோவில்
மன்னன் குலோத்துங்கன் எழுப்பியதே ; அதனால்

குலோத்துங்க சோழ விண்ணகரம் என்று
அழைப்பர் அதனை!

குலோத்துங்க சோழன், நாகை புத்த விகாரத்துக்கு
நிலக் கொடையும் கொடுத்த "செப்பேடு;"

'ஆலந்து' நாட்டு லீடன் நகரப் பொருட்காட்சியில்
அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

இறுதியாக ஒன்று ; முனைவர் இராசமாணிக்கனார் கூற்றுப்படி
கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரமெனும்

தகுதி பெற்ற பின்னர்
தில்லை நகராம் சிதம்பரம், சிறப்பு பெறலாயிற்று!

விஜயாலயச் சோழன் காலம் முதல்
இராசராசன் காலம் வரையில் அவர்கள்,

திருவாரூரையே
மிகச் சிறப்பாகக் கருதினர்!

அது இரு ஊர்களுக்கும் இடையே உள்ள
உறவின் காரணம் போலும்!

படையெடுப்பை முன்கூட்டியே அறிவிக்கும் பண்பாடு!

“சுற்றிச் சுற்றி வருகின்றாயே சோழர் வரலாற்றையே ;
பற்றுக் கொண்டோர் நாங்கள் பாண்டியர் வரலாற்றில் ;

முற்றுப் பெற்றவுடன் பல்லவர் சோழர் வரலாறுகள் ;
சற்று விரைவில் வருக பாண்டியர் பக்கம்” என,

வேண்டியவர், வேண்டாதவர் என்றில்லாமல்; என்
விருப்பத்துக்குரியோர் பலரும் விரும்பி அழைத்தனர் –

பாவேந்தி வருகின்ற பழைய வரலாறுகளில்
பாண்டியரையே முதலில் வைத்து நான் வடித்த கவிதை

1945ஆம் ஆண்டிலேயே அய்யாவின் ‘குடியரசு’
அலுவலகத்தில் பணியாற்றிய போதே வெளிவந்ததைப்

படித்துப் பார்க்க வேண்டுகிறேன்; பாசமுள்ள நெஞ்சங்களை!
நொடிக்குள் உணர்வீர் ; என்னுள்ளத்துக் கொந்தளிப்பை!

“காவிரியின் கரையினிலே
பெண்ணையின் பாய்ச்சலிலே
சரிதமில்லை ; சரிதமில்லை!
அய்யகோ தமிழ்நாடே ;

ஆரம்பம் கங்கையிலாம்! பாண்டியர்
ஆண்டதை யார் கண்டார் ?

சேரர் செழிப்பைச் செதுக்கியதெவர் ?
சோழர் வளப்பம் சொன்னதும் உண்டோ ?”

இப்படியொரு கவிதையும்
இன்னும் வேகமுடன்;

"சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே ?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது ?

சோழர் உலவிய சோர்விலா நாட்டில்,
கோழைக் கொள்கை குவிந்தது எவ்விதம் ?

வெடித்தன வினாக்கள் ;
வெதும்பிய மனத்தில்.....

நாட்டு வெறி பிடித்த காளைகளே !
கிலி பிடித்த மனிதர்களை ; கீழே தள்ளுங்கள் !
புலி வாழ்வின் உச்சியிலே புதுமைதனைப்
பொறித்திடுவோம் !"

இப்படியும் ஒரு கவிதை எழுதியவன்
எப்படி மறப்பேன் மூவேந்தர்களில் ஒருவராம் முத்தமிழ்ப்
பாண்டியரை ?

★ ★ ★

எங்கிருந்து தொடங்குவது பாண்டியர் வரலாறு.....
எவரைப் பற்றி முதலில் தொடங்குவது அந்த வரலாறு ?

முச்சங்கம் முளைத்ததற்கும் – அது ;
முதல், இடை, கடை என முகிழ்த்ததற்கும்

மூலப் பொருளாக இருந்தவரும் –
மூளைப் பொருள் வழங்கியவரும் ;

முன்னாள் பாண்டிய மன்னர்களாம் ; அவர்களில்
முதல்வராக இருப்பவன் முடத்திருமாறனாம் –

முதல் சங்கம் நிறுவி நடத்தியோர் ; என
'காய் சின வழுதி' முதல் 'கடுங்கோன்' ஈறாக

பாண்டிய மன்னர் எனப் பட்டியல் இருப்பினும்
வேண்டிய ஆதாரம் ஏதுமில்லை அந்த வரலாற்றில் !

இடைச் சங்கம் பற்றிய இறையனார் களவியலுரையில்
இதனை நடத்தியோரில் முடத் திருமாறன் தவிர்த்து முன்னோர்
குறித்த

விபரங்களை ; வெளிச்சத்தில் தேடியும் கிடைத்தபாடில்லை!
பளிச்செனக் கிடைத்தது பாண்டியன் முடத் திருமாறன்,
கடைச் சங்கம் நிறுவிய செய்தி! அக்காலம் தான் இரண்டாம்
கடற்கோள் நிகழ்ந்து ; குமரியும் பஃறுளியாறும் அடியோடு

அழிந்து விட்ட காலமென்றும் வரலாற்று அறிஞர் கூறுகின்றார்.
ஆர். இராகவ அய்யங்கார் ; முடத் திருமாறனே நிலந்தரு
பாண்டியன் என்பார்!

“ இவனுக்கடுத்த பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி’’
இவ்வாறு குறிப்பெழுதி உரைப்பவர் உ.வே.சா. அய்யராவார்.

இம்மன்னர் மீது காரிகிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார்
எனும்
புலவர் பிரான்கள் போற்றிப் பா எழுதியுள்ளனர் – அதில் ;

“முற்றுகையிட்டு ஒரு நாட்டைத் தாக்கிடப்
படையுடன் வரும் மன்னன் ;

முதலிலே அந்நாட்டு அப்பாவி மக்கள் அறிவதற்குப்
படை வருவதைப் பறையொலி மூலம் தெரிவிப்பானாம் –

என்னே ; போர் முறையில் பண்பாடு –
இன்னே ; எங்கு ஒளிந்தது அந்தப் பண்பாடு ?’’

★ ★ ★

புராணம் போல ஒரு வரலாறு உண்டு பொற்கைப் பாண்டியனுக்கு!
புகலுகின்றேன் சுருக்கமாக ; புரிந்து கொள்வீர்!

நாள் தோறும் மாறு வேடம் பூண்டு
நள்ளிரவில் கூட நகர் சோதனைக்கு வரும்

மன்னன் பாண்டியன் ஓர் இரவு
மறையவர் ஒருவர் தன் மனைவியிடம்

வெளியூர் சென்றிட விடைபெற்றிடும்போது ;
வேந்தனிருக்கிறான் நமக்கெல்லாம் காவல் என

விளம்புவதைக் கேட்டு விடுகிறான் – பின்னர்
திங்களொன்று கடந்து திரும்பி வந்த

கணவனுடன் வீட்டில் மனைவி பேசுவதை
கதவோரம் நின்று கேட்டுவிட்டு ; கணவன் மனைவியென்று
கருதாமல்

கள்வர் எவரோ வந்து விட்டதாக எண்ணி மன்னன்
கதவைத் தட்டி விட்டான் – அதன்பின் கணவன் மனைவி எனத்
தெரிந்து

அங்கிருந்தே மன்னன் விரைந்து நடந்து விட்டான் –
அய்யர் வீட்டில் சந்தேகம் – அம்மாமி மீது!

யாரடி அவன் கதவைத் தட்டியது எனக் கேட்டு – அவள்
கற்பின் மீதே கடும் அய்யமுற்றார் கணவர்.

அய்யர் வீட்டில் தன்னால் குழப்பமா எனக் கவலையுற்ற மன்னன் ;
அய்யப்பாடு நீக்க, அனைவரது வீட்டுக்கதவுகளையும் தட்டி
விட்டுப் போய் விட ;

மறுநாள் மாளிகைக்குச் சென்று ஊரார் மன்னனிடம்
நள்ளிரவு கள்வன் வந்து கதவைத் தட்டிய கதை சொல்லவே ;

மன்னன் அந்தக் கள்வனுக்கு என்ன தண்டனை தரலாமெனக்
கேட்க ;
கதவு தட்டிய கள்வன் கையை வெட்டலாமென்றனர் அமைச்சர்
குழுவினர் –

அக்கணமே வாளை ஓங்கித்
தன் கையை ; தானே மன்னன் வெட்டிக் கொண்டு –

மன்றத்தினரிடம் ; நடந்த கதையை
மனந் திறந்து சொன்னான்.

ஒடிந்த கரத்துக்கு உபரிக் கரமாக
ஊர்மக்கள் பொற்கரம் செய்து பூட்டினர் மன்னனுக்கு

அன்று முதல் அவன் பொற்கைப் பாண்டியன்
எனப் புகழப் பெற்றான்.

புராணங்களை ஓரளவு ஒழுங்காக எழுதினார்கள் –
புதையல்களாக வரலாறுகளைத்தான் புதைத்தே விட்டார்கள்.

★ ★ ★

கடைச் சங்கக் காலத்துப் பாண்டியரில் அறிவுடைநம்பியும்,
ஒல்லையூர் தந்த நல்லிசைப் புலவர் வரிசையில்

ஒப்பற்ற கவிஞன் பூதப் பாண்டிய மன்னனும் –
கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியும்,

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் –
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனும் –

நன்மாறன் வெற்றி வேற் செழியன் என
நாடாண்ட பாண்டியர்களும்

என் எழுத்தோவியங்கள் பலவற்றில்
ஏற்கனவே இடம் பெற்றுள்ளனர் என்பதால் ; மீண்டும் விரிவாக்கி

அந்தப் பாண்டியர் வரலாறு கூறுவது விடுத்து
கடைச் சங்க காலத்தும் அதற்குப் பின்னரும்

தங்க காலம் உருவாக்கிய பாண்டியர்
வரலாறு தொடர்வோம்.

★ ★ ★

காலத்தால் மூத்த காப்பியம்
கடவுள் வாழ்த்துடன் தொடங்கிடாத காப்பியம்

நிலந்தரு திருவில் பாண்டியன்
நலந்தரு அவையில் ஆன்றோர் சான்றோர்

ஆசிரியர் அதங்கோட்டாசானின்
அன்பு தவழ் இனிய வாழ்த்துக்களுடன்

அரங்கேற்றப்பட்ட அறிவுக் கருவூலம்
அறிஞர்கள் ஏற்றிப் போற்றும் அரிய நூல்

தொல்காப்பியம் ; அரங்கேறிய காலம்;
விழைந்து நான் ; அக்காப்பிய பூங்காவில்

நுழைந்தவன் மட்டுமல்ல உம்மையும் வருக எனக்
குழைந்து அழைத்துச் சென்று ; "கோடையல்ல இது ;

குற்றால அருவியின் குளிர்" எனக் காட்டியவன் – எனவே
பொற்றாமரைக் குளம் கொண்ட மதுரை முதல்

மற்ற பாண்டிய நாட்டுப் பகுதிகளையும் ஆண்ட
மாவீரர் பற்றி உரைத்திடுவேன் ஒரு தொடராக!

கடற்கோளில் தப்பிய தமிழ்; கடைச் சங்கம் கண்டது!

இந்தியத் திருநாடு இன்றைய குமரிமுனைக்குத்
தெற்கே எழுபது காதம் தொலைவு பரவியிருந்ததாம்!

எல்லை அரணாகக் குமரி மலைத்தொடர் காவலிருக்க
அகழிகள் என குமரியாறு, பஃறுளியாறு இரண்டும்

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போல
கெட்டியாகப் பாதுகாத்துக் கொண்டிருக்க ;

தென்கிழக்கே சந்தாத் தீவுகள் தொடங்கி
அதன் மேற்கே ஆப்பிரிக்காவை அடுத்து

கீழக்கரை ஒட்டிய மடகாஸ்கர் தீவு வரையில்
அகன்றதொரு நிலப்பரப்பே ; ஆழ்கடலின்

அகோரப் பசிக்கு இரையாகி, கடற்கோள் பேரழிவு எனும்
கவர்ச்சிப் பெயரை சூட்டிக் கொண்டு தமிழர் நிலம், நலம்,

வளம், பலம் அனைத்தையும் அடியோடு கவிழ்த்ததாம் –
வரலாற்று வல்லுநர்களின் ஆய்வுதான் இந்த முடிச்சினை
அவிழ்த்ததாம்.

தொலைதூரம் பரந்துகிடந்த தொல்பழங்காலத் தமிழர் பூமியில்
பசுமை குலுங்கிடப் பஃறுளியாறு வெட்டி வைத்தவன் ;

பாண்டியன் நிலந்தரு திருவினான் என்பது நெஞ்சுக்கினிய
செய்தியாம்!
பல்லாயிரம் லட்சம் கோடியென இறந்து புதைந்த மனித
உடல்களின் மேல்தான்

பிறந்து வளர்ந்து நாம் புதுவாழ்வு தேடுகிறோம் ; எதிர்கால
இளைஞர்கள்
சிறந்து விளங்கிட எருவாக நம் வரலாறு நாடுகிறோம்.

சூரியன், சந்திரன், சுக்கிரன், ராகு, கேது, கோரசனி
கும்பம், மகரம், ராசி பார்த்தோம் –
பிரபவ, விபவ என ஆண்டுக் கணக்கு அறுபது வருஷம்
என்றோம் –
பிறந்தன பிள்ளைகளாய் நாரதர் கிருஷ்ணன் இருவருக்கு
மென்றோம் –

எல்லாம் சரிதான் ஏமாந்து மறந்து விட்டோமே ; நம் வரலாறு!
சொல்லாமல் எழுதாமல் விட்டுவிட்டோமே – அதனால் இன்று,

கல்லான பூமியிலன்றோ கடப்பாறை போட்டுக் கெல்லி
எடுக்கின்றோம்
நல்லோர்கள், வல்லோர்கள், சரித்திரத்தை!

★ ★ ★

பஃறுளி ஆற்றோரம் நெடிய வீதியொன்றில் புரவிகள் பூட்டிய
தேரில்
புயல் வேகத்தில் நிலந்தரு திருவின் பாண்டிய மன்னன்
வருகின்றான்

வீதியில் அவன் எதிரே வந்த குதிரையிலிருந்து இறங்கி
பாதுகாப்புப் பணியாள் பணிந்து குனிந்து வணங்குகின்றான்.

மன்னன் கேட்கிறான் ; ‘‘மண்டபத்தில் எல்லோரும்
குழுமி விட்டனரா?’’

‘‘அரசே; அத்தாணி மண்டபத்தில் அத்தனை புலவர்களும்
காத்திருக்கிறார்கள் –’’

‘‘அரசியார் புறப்பட்டுவிட்டாரா?’’

‘‘அவர் மன்னருக்காக மாளிகையில்
எதிர்பார்த்து அமர்ந்திருக்கிறார்!’’

“அப்படியா’’

அதன்பிறகு அந்தத் தேர் ஓடவில்லை – தெருவில் பறந்தது.

சினத்தினால் சிவக்கா விட்டாலும்
சிரிப்பின் செழிப்பில்லை, முகத்தில் அரசிக்கு!

புரிந்து கொண்ட பாண்டியன் –

“நேரமாயிற்றே – புறப்படலாமா?’’

“பரவாயில்லை; இவ்வளவு தாமதமாகவாவது!’’
சாந்தமாகத்தான் பேசினாள் அரசி; ஆனால் சலிப்பு மிகுதி!

ஏறிக்கொண்டாள் எழில் குலுங்கத் தேரில்

“பஂறுளி ஆற்றுப் பணி முடிய, சற்று
காலம் தாழ்ந்து விட்டது’’

“ஓ! அதற்கு அடுத்த பணிதானா;
தொல்காப்பிய அரங்கேற்றப்பணி?’’

“இரண்டும் ஒரே பணிதான்!’’

“ஓலைச் சுவடியை வெளியிடுவதும்
ஓடும் நதியை ஒழுங்குபடுத்துவதும்
ஒன்றுதான் என்கிறீரா?’’

“ஒன்றல்ல; ஆனால் நீ சொல்வது போல்
இரண்டுமல்ல!’’

“பணி வெவ்வேறல்லவா?’’

“ஒன்றைப் புரிந்து கொள் தமிழரசி;
வெளியிடப்போவது
ஓலைச்சுவடியல்ல – அது
உலகச்சுவடி! –
பணி ஒன்று போல் தெரியும்;
ஆனால், பயன்கள் வெவ்வேறு!

பம்ஃறுளி ஆறு மக்கள் வளத்துக்கு வகை செய்வது –
தொல்காப்பியம் மக்களின் வாழ்க்கைக்கே
வழி காட்டுவது –
முன்பு வந்ததை முதல் கடற்கோள்
என்றார்கள் – எனினும் குமரி ஆறும்
பம்ஃறுளியும் பாதுகாப்பாக இருக்கிறது –
அடுத்தொரு கடற்கோள் வந்தால்
தடுத்திட முடியுமோ பம்ஃறுளி, குமரி ஆறுகளின் பேரழிவை
யென்று
தவிக்கிறது என்னுள்ளம்!''

அரசி பெருமிதமுடன் பதில் சொன்னாள் –

"எத்தனை கடற்கோள் வரினும் ; இன்று அரங்கேறும்
தொல்காப்பியத்தை அணுகித் தொடக் கூட முடியாது –
ஆறுகள் கடல்கள் நாடுகள் கூட திசைமாறும்
ஆனால் தொல்காப்பியம் போன்ற தமிழ் ஏடுகள்
அழியா வலிமை பெற்றவை – எவராலும், எதனாலும்
அழிக்க முடியாது; என்றும் 'சிரஞ்சீவி'!''

அளவிலா மகிழ்ச்சியுடன் முடத்திரு மாறனாம்
நிலந்தரு திருவின் பாண்டியன்
அவளை ஆரத்தழுவிக் கொண்டு
நன்றியை செயல்படுத்த நினைத்தான்
எனினும் நகரின் நடுவீதி
என்பதால் கண்களால் மட்டும்
அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

★ ★ ★

அணிதேர்ப் புரவிகள் அரச குடும்பத்தின்
அவசரம் புரிந்தது போல –
அரங்கேற்றம் நடைபெறும்
அத்தாணி மண்டப வாயிற்புரம்
அதற்குள் வந்தடைந்தன.

“இன்னொரு கடற்கோள் வரக்கூடுமாம்” ;
இந்த அச்ச உணர்வு அவைப் புலவரிடையே
இருந்ததையும் உணர முடிந்தது அவர்களின் உரையாடல் கேட்டு!

அரச குடும்பத்தினர்க்கு அவைப் புலவர்களை
அறிமுகப்படுத்தினார் அதங்கோட்டாசான் ;
ஆசிரியர் என்றே அவரை அனைவரும்
அழைப்பர், அன்பு பொங்கிட!
தொல்காப்பியர், அகத்தியர், இருந்தையூர்க்
கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன்
சிறுபாண்டிரங்கன், திரையன்மாறன்,
துவரைக் கோமான், கீரந்தை
இவர்கள் எல்லாம் இடைச்சங்கப்
புலவர்களாக வீற்றிருந்து,
இணையிலாக் காப்பியமாம் தொல்காப்பியத்தை
நிலம்தரு திருவின் பாண்டியன் முன்னிலையில்
அரங்கேற்றம் செய்து கொடுத்துவிட்டு
அதங்கோட்டாசான் வாழ்த்தையும் வழங்கச் செய்து,
அங்கிருந்து இனிது கலைந்தனர்.

இன்னும் சில மாதங்களில் இன்னொரு கடற்கோள்
வரப்போவதை அறிந்து கொள்ளாமலே!

இந்நாள் பொன்னாளாய்த் திகழ்ந்தது எனினும்
பொல்லா நாளொன்று விரைவில் வந்து புகுந்து
அந்நாள் தான் அடுத்தொரு அழிவினைக் கொண்டுவரும் –
என்பதை
இடைச்சங்கப் புலவர்கள் அறிந்து கொண்டிருந்தால்
இசைப் பாடல்களாம் கலியும், குருகும், வெண்டாளியும்
வியாழ மாலை அகவலும் எனப் பாடல்கள் பல பாடிக்
களித்திருப்பாரா ?
இயற்கையோடும் போராடும் இயல்பினர் – அவர்கள் ;
எஃகு இதயத்தினர் –
இதை மட்டுமல்ல ;
எதையும் சந்திப்பர்!

வீரமிக்க விற்பன்னர்களும் கூட
அந்தத் தமிழ் வித்தகர்கள்!

அவர்தம் களிப்பு நீடிக்காமல்
அறைகூவல் விடுப்பது போல் – ஆறு திங்கள் கழித்து
இயற்கையின் வெறிக் கூத்து
கவாடபுரத்தில் ஆரம்பமாயிற்று! 'பேய்' பிடித்த இயற்கை;
பிரமாண்டமான இரும்புக் கரம் கொண்டு
பெருங்கடல் அலைகளின் மீது கடுந்தாக்குதல் நடத்த,
இருள் காடாயிற்று அந்தப் பகுதி முழுதும் –
இடியாக ஒலித்து, மின்னல்களாக இறங்கி –
பூகம்பமாகக் குலுங்கி, கடலுக்குள்
நிலநடுக்கமாகப் புகுந்து
குமரியாறு – பஃறுளியாறு இரண்டும் ஒன்றாகி
எங்கே போயின என்று தடம் மாறி – இடம் பெயர்ந்து –
இல்லாமலே மறைந்து விட்டன எனில்;
இயற்கைச் சீற்ற விளைவை யார் தான் கணிக்க இயலும்?
அழிவு வேலைகள் அனைத்தையும் முடித்துவிட்டு
கடற்கோள் ''பைசாசம்'' ஆடி அடங்கிய பிறகுதான்
அமைதி 'தலை'காட்டியது – ஆம்
அகன்று நீண்ட பெருவெளியில்
அங்கு நடந்த 'கெடுதலை'க் காட்டியது!
மக்கள் நடமாட்டமே இல்லை
எங்கே போயினர் எல்லோரும்?
திகைப்பு – திகைப்பு! எங்கெங்கு
காணினும் சாவின் நகைப்பு!

அன்றொரு நாள் ஆறேழு திங்கள் முன்னே
தொல்காப்பியம் அரங்கேறிய அத்தாணி
மண்டபம் மட்டுமே – அங்கு
எஞ்சியிருந்திட;
மற்ற எல்லா மாட மாளிகைகளும்
கூட கோபுரங்களும் மண்ணுக்குள் புதைந்து போயின!

“அடியார்க்கு நல்லார்” வழங்கிய
சிலப்பதிகார உரையின்படி ;
“தென்பாலி முகத்துக்கு வட எல்லையாம்
பஃறுளிக்கும் குமரியாற்றுக்கும் இடையே
எழுநூற்றுக் காவத தூரம் இவற்றின் நீர்மலிவான்
என மலிந்த ஏழ் தெங்கநாடும், ஏழ் மதுரை நாடும்,
ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும்,
ஏழ் குறும்பனை நாடுமென
மொத்தம் நாற்பத்தி ஒன்பது குறு நாடுகளை
மூழ்கச் செய்து முடிவுரை தீட்டப்பட்டது ;
மூர்க்கத்தனமிக்க அந்தக் கடற்கோளால்!

தனது ராணி தமிழரசி எங்குற்றாள்
என முடத்திருமாறன் தேடியலுத்து ; அவள்
கடற்கோளில் காணாமல் போய்விட்ட
குடிப்படைகளில் ஒருத்தி என்று குறித்துக் கொண்டு
கண்ணீர் வடித்தான் எனினும் ;
“தமிழரசிதானே தப்பவில்லை; என்
தமிழ் தப்பியதே” எனத் தகதகவெனக்
குதித்து “தப்பிய தமிழை தக்கவைப்போம்”
என்று சூளுரைத்து – இரண்டாம் தமிழ் சங்கமாம்
இடைச் சங்கத்து எஞ்சிய புலவர்களுடன் இவனும் இணைந்து
முனைந்தனன் உடனே மூன்றாம் தமிழ்ச்சங்கமாம்
கடைச் சங்கம் கண்டிட!
இயற்கைச் சீற்றத்துக்குள்ளான இடைச்சங்க
இறுதிக் காலத்திலும் – கடைச் சங்க துவக்கக்
காலத்திலும் – இருந்த பெருமை ;
முடத்திருமாறனாம் நிலந்தரு திருவின் பாண்டியனுக்குக்
கிடைத்தது ; என்பதை உணர முடிகிறது! உவகை கொள்ளவும்
முடிகிறது.

★ ★ ★

குறிப்பு:

இலங்கை பௌத்த வரலாறு
“இராஜாவளி” நூல்
கி.மு. 265க்கும் 161க்கும்
இடையே இலங்கையை அடுத்துள்ள
பகுதியில் கடற்கோள் நிகழ்ந்ததாகக் கூறுகிறது.
மற்றொரு வரலாறு ;
“மகாவம்சம்” 60 ஆண்டுகள் வித்தியாசம் என்கிறது.
எனவே இடைச் சங்க காலத்து இரண்டாம்
கடற்கோள் ; கி.மு. 150ல் நிகழ்ந்ததாக
ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்றான்!

“என் எழுத்தோவியங்கள் பலவற்றில் பாண்டியர் சிலர்
ஏற்கனவே இடம் பெற்றுள்ளனர் என்பதால் மீண்டும் விரிவாக

அந்தப் பாண்டியர் வரலாறு கூறுவது விடுத்து
கடைச் சங்க காலத்தும் அதற்குப் பின்னரும்

தங்க காலம் உருவாக்கிய பாண்டியர்
வரலாறு தொடர்வோம்’’ எனக்

குறிப்பிட்டிருந்ததைப் பார்த்துக்
கோபங் கொண்ட தம்பியர் சிலர் ;

“பரவாயில்லை எத்தனை முறை எழுதினாலும்
படிக்கத் தெவிட்டுவதில்லை பழந்தமிழர் வரலாறு!

ஆண்டு பலவாயினும் மீண்டும் எழுதுக –
வேண்டுகோள் தாண்டிச் செல்லாதீர்’’ என்று ;

தொலைபேசி வாயிலாகத் துளைத்தெடுக்கவே – அந்தத்
தொல்லையிலும் ஒரு சுகம் கண்டு தொடங்குகின்றேன்

★ ★ ★

இளமைக் காலத்திலேயே எனக்கு அன்பழகன்
நெடுஞ்செழியன் எனும் பெயர்கள் மீது ஒரு மயக்கம் –

இயக்கத்தில் அவர்கள் நேரடியாக ஈடுபடாத காலம்
இளைஞனான நான் ஈடுபட்டிருந்ததாலே – ஆரூரில்

துண்டு வெளியீடாம் “முரசொலி’’ ஆண்டு விழா அழைப்பையேற்று
கண்டு நிகர் உரையில் எனைக் கவர்ந்தார்கள் இருவருமே அன்று!

நெடுஞ்செழியன் அன்பழகன் போல என் பெயரும் மாற்றி
நெடுநாள் ஆசை நிறைவேற்றிக் கொள்ள ;

அருமை அண்ணன் அண்ணல் தங்கோ ஆலோசனையேற்று
“அருட்செல்வம்’’ என மாற்றிக் கொள்ள அண்ணாவின் ஆணை
வேண்ட ;

அவர் சொன்னார்; “ஏற்கனவே அறிமுகமாகிப் பரவிவிட்ட பெயர்
அதனாலே இப்போது மாற்ற வேண்டாம்’’ என்று!

எண்ணிப் பார்த்தேன் நானும்
எல்லா மதத்தினர்க்கும் என் பெயர் பொதுவாக இருப்பதாலும்

குறிப்பிட்ட ஒரு சாமி பெயராக இல்லாத காரணத்தாலும்
குறுக்கிட்டு இப்போது மாற்ற வேண்டாமென

“கருணாநிதி’’ மாறாமலே இருந்து; கழகத்திலும் மாறாமல்
இருந்து விட்டேன்.
கருத்திலும், வலுவாக – தெளிவாக; ஈரோடு காஞ்சிப் பாசறையில்

போராடும் குணத்தையும் பெற்று “நிரந்தரப் போராளி’’
ஆகிவிட்டேன்.
வேராக இருந்து கட்சி வளர்த்தோர் வேறுபட்டுப் போனாலும்
அவரைச்

சீரோடும் சிறப்போடும் வாழ்க என வாழ்த்தியிருக்கின்றேன் – என்
சிந்தை கவர் நெடுஞ்செழியனாரின் நட்பும் அவ்வாறே – அவர்

மறைந்து விட்டார் எனக் கேட்டு டெல்லித் தலைநகர் விட்டு –
அன்றிரவே
உடைந்து விட்ட உள்ளத்துடனே ஓடிச் சென்றேன் அவர் இல்லம்
நாடி –

கொள்கையற்ற கூட்டமொன்று வாசலில் சூழ்ந்து நின்று என்னைக்
கொச்சைப்படுத்தி கூச்சல் எழுப்பி இப்போது வந்து விட்டாயா
என்று –

குடிலனைப் போல் குரோத உள்ளங் கொண்ட குள்ள மனிதர்கள்
குக்கல்களாய்க் குரைத்துப் பார்த்துக் கடிக்கப் பாய்ந்தனர்.

எங்கள் நட்பின் ஆழம் தெரியாமல் நன்றி கெட்டுக் கூவிப்
பிதற்றினர்.
அங்கும் பொறுமை காட்டி இறுதி மரியாதை செலுத்தி வந்தேன்.

நேர்ப்பகைவர் முகாமுக்கு நாவலர் சென்று விட்டாலும்
நெடுஞ்செழியன் என்ற தனி நண்பர் மீதும் – அந்தத் தமிழ்ப் பெயர்
மீதும்

நிகரற்ற பாசம் கொண்ட என் நெஞ்சம்; தமிழக
வரலாற்று ஏடுகளிலும் நெடுஞ்செழியன், கரிகாலன்,

செங்குட்டுவன் எனும் பெயர்கள் வரும் போதெல்லாம் – என்
செம்மொழிக் கவிதையில் அவர்கள் திருப்பெயர் இடம் பெறவே

விருப்புற்று தம்பிமார்கள் வேண்டுகோளை நிறைவேற்றுகின்றேன்
'மீண்டும் வரட்டுமென்று' மீட்டிய வீணைக்குப் பதிலாக ;

நீட்டிடும் கவிதை வரிகள், இதோ ;
காலப் பேழையில் இரு பகுதிகளாக!

★ ★ ★

சேரனும், சோழனும், எழினியும், திதியனும்
இருங்கோ வேண்மான் எனும் ஐவருடன்
பொருநனும், மற்றும் எருமையூரனும் இணைந்த
போர்முனையில் எழுவர் படையை மோதிடவே,
இளங்காளை நெடுஞ்செழியன் புறப்பட்டான்
களங்கண்டான், வென்றிட்டான் என்றும் – பகைவர்
முரசு கவர்ந்து முடித்திட்ட சூளுரையால்
அரசர்க்கரசனாய் ஆனான் என்றும்,
அகமகிழ்ந்து கூறுகின்ற செய்தி ஒன்றை
அகநானூறில் பாடுகின்றார் அரும்புலவர் நக்கீரர்!

''கதிரவனும் நிலவும் சேர்ந்து மண்மீது வீழ்ந்தாற்போல்
களம் பட்டார் சேர சோழ மாமன்னர்'' என்று
புலவர் கல்லாடனார், புறப்பாடல் ஒன்றின் மூலம்
பலமிக்க பாண்டிய இளவல்தனைப் போற்றுகின்றார்!

“ஒருவரோடு ஒருவர் போரிடுதலும் – அந்த
இருவரில் ஒருவர் வீழ்தலும் இயற்கை!
எழுவரை ஒருவன் மடக்கி அடக்கிடப்
பழுதறப் போர் புரிந்தான் என்பதும்
எழுவரும் தோற்றார்
இவன் ஒருவனே வென்றான் என்பதும்
இவ்வுலகிலோர் புதுமை என்பேன்’’ என்று,
இடைக்குன்றூர்க்கிழார் எனும் புலவர்,
எழுத்தில் வடித்தார் பாண்டிய இளவலின் வெற்றியை!

தமிழ் மன்னர்களே தங்களுக்குள் முட்டி மோதியதைத்
தாங்கொணாக் கவலையுடன் குடபுலவியனார் எனும் புலவர்,
“தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானம்’’ என்றார்!

தடந்தோள் பாண்டியனே இறுதியில் வென்றான் – எனவே
தழுவிடத் துடித்தார் அவனை உடனே!
வேட்டுவர்கள் புலி பிடிக்கும் பொறியைப் போல்
விரிந்து பரந்த செழியனின் வீர மார்பை
விரைந்து சென்று தழுவிட விரும்புகின்றேன் என
வித்தாரத் தமிழ் முழக்கும் அப்புலவர்; அவனது
முத்தார மார்பைத் தழுவிக் கொண்டார்!

தலையாலங்கானத்துப் போர்க்களத்தை – அத்
தமிழ்ப் புலவர் வர்ணிக்கும் விதம் பாரீர்!

கடும்பகை எதிர்த்துக் கணைகள் பறந்திட
திடுமெனச் சாய்ந்தன எதிரியின் யானைகள்!
வீழ்ந்த யானையின் துதிக்கையை அதன் வாயுடன்
வீர மறவர் வாளால் வெட்டிட; அவை துண்டாகிக்
களத்தினில் பரவிக் கிடந்திட்ட காட்சி;
கழனியோரத்துக் கலப்பைகள் போல் விளங்கிற்றாமே!
படைத் தலைவர் பல்லோர் மாண்டு மடிந்திட – அவர்
பக்கத்தே தம்புதல்வர் மரணமெய்திக் கிடந்தது கண்டு,
நெற்றித் தோலும் சுருங்கிய மூதாட்டியர் பலர்
சுற்றி நின்று அழுது புலம்பினர் எனினும்

வெற்றி இதனினும் வேறொன்று உளதோ என
வீர மைந்தரைப் பெற்றதற்குப் பெருமையுமுற்றனர்!

நெடுஞ்செழிய பாண்டியனின் அவைக்களத்துப்
பெரும்புலவர் மாங்குடி மருதனார் என்பவரோ ;
கடும் போரிட்டுக் களவாகை சூடி வரும்
காளையாம் பாண்டியனின் திறம் வியந்து
களிப்புற்றார் எனினும் – அவன்
களம் காணும் ஆசையிலே சுழல்வது கண்டு
சலிப்புற்றார்!
மாவீரன் பாண்டியனின்
போர்த்தாகம் குறைக்க
“மதுரைக் காஞ்சி” யெனும் நூல் செய்தார் – அந்த
மாங்குடி மருதனார் பாடிய புறப்பாட்டில் ;

“கடலைக் கிழித்துச் செல்லும் மரக்கலம் போல்
களத்தில் ஊடுருவும் யானைப்படையின் பின்னே
வேல்கொண்ட வீரர் அறுத்தெடுத்த
கோல் கொண்ட மன்னர்தம் தலையை அடுப்பாக்கி
குருதிநீர் பொங்குகின்ற உலையில் – போரில்
கொலையுண்டோர் தசையினைக் கொதிக்க வைத்து
தோள்களாம் துடுப்பு கொண்டு துழாவிய உணவால் – கள
வேள்வி நடத்துகின்ற பாண்டியனே!” என்று,
பலபடப் பாராட்டிவிட்டு – அவனது
பகைவரையும் புகழ்கின்றார்!

மாற்றார் எனும் பெயர் பெற்று – உன்னிடம்
தோற்றார் எனினும்,
விழுப்புண் பெற்று வீழ்ந்ததாலே ;
வீரர் உலகில் என்றும் அவர் வாழ்கின்றாரே! என
எதிர்த்தோர்க்கும் ஏற்றம் தந்து
உதிர்த்தார் கவி முத்துக்களை!

“வேந்தன் இனிப் போர் விடுத்து
வாள்வீரர் வாழ்த்த வாழ்க!” என்றார்!

“வள்ளலாய் நின்று இல்லாதார்க்கு வாழ்வளித்திடுக!’’ என்றார்!
“வளையல் அணி மகளிர் தரும் தேறல் உண்டு,
வாழ்வெலாம் இன்பமும் அமைதியும் கொண்டு,
வையம் போற்றிடத் திகழ்க!’’ என்றார்!
“ஒழுக்கம் காப்பவரே உயர்ந்து வாழ்வோர் என்றும், அஃதிலார் ;
உலகில் வாழ்வோர் எனப்படார் – என்றும்
அறிக!’’ என்றார்!

தமிழ்ப் புலவர் கூட்டம் புகழ,
தமிழ் எழுத்து ஒவ்வொன்றும் போற்ற,
தலையாலங்கானத்தான் வாழ்ந்தான்!

மருதனார் இயற்றித் தந்த
“மதுரைக்காஞ்சி’’ பெற்று – அந்த
மாமன்னன் வாழ்ந்தான்!
“நெடுநல்வாடை’’தனை நக்கீரர் பாடி வழங்க
நெடுஞ்செழிய இளவல் நெடிதுநாள் வாழ்ந்து
நீள்புகழைத் தமிழ் நிலத்தில் நட்டானே!

★ ★ ★

குறிப்பு:

அகநானூறு – பாடல் 36 – நக்கீரர் பாடியது.
புறநானூறு – பாடல் 25 – கல்லாடனார் பாடியது.
புறநானூறு – பாடல் 76 – இடைக்குன்றூர்க் கிழார் பாடியது.
புறநானூறு – பாடல் 19 – குடபுலவியனார் பாடியது.
புறநானூறு – பாடல்கள் 24, 26 – மாங்குடி மருதனார் பாடியது.

(இப்புலவர் பெருமக்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறித்து இயற்றிய பாடல்கள் அடங்கியுள்ள கருத்துத் தொகுப்பே; பாண்டியர் வரலாற்றுத் தொகுப்பில் ஒரு பகுதியுமாகும்.)

நெடுஞ்செழியனும் நெடுநல்வாடையும்!

“தமிழ்ச் சங்கங்கள் மூன்று கண்டு,
தமிழுக்குப் புரிந்தனர் நல்ல தொண்டு – எனப்

பாராட்டப் பெற்ற பாண்டியர் வரலாறு பற்றி
பல ஏடுகள் படிக்கத் துடித்த போது

“பாண்டிய நாட்டுத் தலைநகரம் எது?” என்ற அய்யத்தைப்
போக்கியவர்
அறிஞர் “அய்யம்பெருமாள்” கோனார் என்பேன்.

அவர் எழுதிய நூலில்; முதற் சங்க காலத்தில்
இன்றைய மதுரைக்குத் தெற்கே

பல காதம் தொலைவில் பழங்காலத் தென்மதுரை
பாண்டிய நாட்டின் தலைநகராய் விளங்கியதாம்.

முதற் கடற்கோளால் தென்மதுரை அழிந்த பின்னர்;
முகிழ்த்த தலைநகரம் கவாடபுரமாம் –

அங்குதான் இடைச் சங்கம் இருந்ததெனவும்;
அதுவும் கடற்கோளால் அழிந்திடவே – அதன் பின்னர்

அதில் மூழ்கி மடியாதிருந்த மன்னன் முடத்திருமாறன்
அமைத்த தலைநகரே இன்றுள்ள மதுரை மாநகரம் ஆகும்!

அத்தலைநகரில் அரியணை ஏறி; பாண்டிய வேந்தர்கள்
ஆட்சி நடத்திய காட்சியையும் மாட்சியையும்; காண்போம்
இப்போது!

★ ★ ★

அகமென்றும் புறமென்றும் வாழ்க்கையினை
அழகாக வகுத்துக் கொண்டு

அன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற இனம்
அருமைமிகு நம் தமிழ் இனம்தான் என்று

ஆயிரங்காலத்துப் பயிராக நமக்கு வாய்த்த
ஆன்றோர் செய் இலக்கியங்கள் சான்று கூறும்!

★ ★ ★

அதற்குப் பற்பல எடுத்துக்காட்டுகள் உண்டெனினும்,
ஆரம் போல் கோத்தளித்தார் நக்கீரனார் ;

பத்துப் பாட்டுள் – ஒரு
முத்துப் பாட்டாய்த் திகழ்கின்ற

“நெடுநல்வாடை” எனும் தமிழ் அமுதம்! அது ;
நெடுஞ்செழிய பாண்டியனின் வீரம் சொல்லி,

நீண்ட நாள் அவன் பிரிவால் ஏங்குகின்ற
நேரிழையாள் கோப்பெருந்தேவி மனம் ;

நெருப்பாகச் சுடுகின்ற நிகழ்வைக் கூறி,
அகம், புறம் எனும் வாழ்க்கை

அந்நாள் தமிழகத்தில்
இகம், பரம் என்ற கூற்றுக்கே

எதிரிடையாய் இருந்த நிலை
எடுத்தியம்பும் நூலாகும்!

★ ★ ★

தலையாலங்கானத்துப் போர்க்களத்தில்
தனிமையில் ஓர் இளைஞன் சிக்கினான் என்று

தவறாகக் கணக்கிட்ட ஏழு மன்னர்
தடந்தோள் புழுதிபடத் தோற்றே போனார்!

அதன் பின்னர் நெடுஞ்செழியன்
அன்றிலென வாழ்வோமென்று

அழகு மணிப்புறாவொன்றை
அரசியென ஏற்றுக்கொண்டான்....

இளவயதில் போர்முனையில்
எழுவர் படை வீசிய வேல்வாள் பட்ட

விழுப்புண்கள் ஆறிப்போய்
வடுக்களாய் மாறிப்போயிருப்பினும் – அவை ;

பாண்டியன் மார்பகத்தில் – தங்கப்
பதக்கம் போல் மின்னுவதாய்

எண்ணிக்கொண்டு எழிலரசி ;
எண்ணாமலே கொடுத்திட்டாள் முத்தம் ; நித்தம்!

மணமுடித்து மஞ்சத்தில்
மனங்கவர் அஞ்சுகத்தை

கணநேரம் பிரியாமல் இரவெல்லாம்
கட்டிய கட்டுக் குலையாமல் இருப்பதற்கு

காலம் இடம் தரவில்லை.... போர்க்
களங்களின் அழைப்போ பெரும் தொல்லை!

தலையாலங்கானப் போருக்குப் பின்னும் – அவன்
தலைமையேற்று வென்றிட்டான் ;

“வேள் எவ்வி”யெனும் மன்னவனின் மிழலைக் கோட்டம்!
வாள்வீரர் முத்துவேளிர்க்குரிய

முடியினைப் பறித்து – அவர்தம்
முத்துக் கூற்றமும் கவர்ந்திட்டான்!

“சேரமான் யானைக்கட்சேய் இரும்பொறை” என்னும்
வீரமா மன்னன் படையழித்து, அவனைச்

சிறைதனில் அடைத்துப் போட்டு விட்டான்!
இவ்வாறு

மலை மலையாய் வெற்றி மாலை குவித்திடவே
அலை அலையாய்ப் படைகொண்டு ஆர்ப்பரித்துக் கிளம்பியதால்

குலை குலையாய்ப் பழமிருந்தும் உண்ண முடியாமல்
நிலைகுலைந்து துடிக்கின்ற பறவையைப் போல்

பாண்டிமாதேவியவள் பதைத்திட்டாள்....
பகல் இரவுப் பொழுதுகளை நகர்த்த முடியாமல் கண்ணீர்
வடித்திட்டாள்!

வாடையெனில் குளிர் காற்று தாக்குமன்றோ!
ஆடை போர்த்தாவிடினும் ஆண்மகனின் மேனி போர்த்தி

ஆரணங்கும்; ஆரணங்கின் மேனி போர்த்தி
ஆடவனும்; அக்குளிர் காற்றை வெல்வாரன்றோ!

இங்கென்ன நிலையென்றால் பாண்டி மன்னன்
பொங்குற்றே சென்றுவிட்டான் போர்முனைக்கு!

வீரம் விளைக்கின்ற வெம்மையிலே வாடைக் காற்றின்
வீண்மிரட்டல் பலிக்கவில்லை வேந்தனிடம்!

ஆனால் அரசியின் நிலையோ; அந்தோ! பரிதாபம்!
பாட்டுப் புலவர் நக்கீரனார் பாடுகின்றார் ;

வாடைக் காற்றின் குளிர் தாங்க மாட்டாமல்
வீட்டுக் கோழிகள் படும் பாட்டைப் பாரீர் என்று!

பெட்டையும் சேவலும் பெருவெளியில் திரிந்து
இட்டமுடன் இரைதேடித் தின்று மகிழ்ந்து

இன்பமாய்க் கழித்த நாளெல்லாம் சென்று ; இன்று
இரவெது பகலெது எனத் தெரியாது திகைத்து

அடைத்திருக்கும் பலகைக் கூண்டுகளுக்குள்ளே
அடுத்தடுத்துக் கடுக்கும் கால்களை மாறி மாறி வைக்குமாம்!

இவ்வண்ணம்
கொல்லுகின்ற வாடையிலே – நெஞ்சில்

துள்ளுகின்ற காதலுடன்
புள்ளிமயில் புரளுகின்றாள் ; படுக்கையிலே! – யாரும்

வெல்லவொண்ணா தமிழ் எடுத்து – "நெடு
நல்வாடை" தீட்டுகின்றார் நக்கீரனார்!

கொடுமுடியன்ன உயர்ந்த கோபுரம் – அதில்
கொடிகளோ வானவில்லென வண்ணங் காட்டும்!

திண்ணிய நீலமணி நிறம்படர்ந்த தூண்களிலே
வெள்ளியைத்தான் வெண்சாந்தாய்ப் பூசினரோ ?

செம்பினால் படைத்திட்ட மதில் சுவரோ எனும்படி
செப்பரிய வலிவுடனே அமைத்திட்ட

செழியனது அரண்மனையைச்
செந்தமிழால் சித்தரிக்கும் நக்கீரர் ;

சிந்தையெலாம் அவன் நினைவால் துவளுகின்ற
செம்பருத்தி இதழ்ப் பெண்ணாள் பாண்டிராணி ;

படுத்திருக்கும் மஞ்சத்தைப்
பாட்டாலே காட்டுகின்றார் பார்த்திடுவீர்!

முரசுபோல் கால்கள் கொண்ட
முரட்டுப் போர் யானையொன்று

முற்றாக நாற்பது வயது சென்று
போர்த்தொழில் புரியுங்கால் இறந்துவிட – அதன்

கூர்த் தந்தம் இரண்டெடுத்து கோலச்
சீர் தந்து அழகூட்டி அமைத்த கட்டில் – அதில்,

சூல் கொண்ட மகளிர் கொங்கை
பால் கொண்டு வீங்கியது போல்

நாற்புறமும் திரண்டுருண்ட
நல்லழகுக் கலசங்களாம்!

முத்து மணிமாலைத் தொங்கல்களாம்!
முல்லை மல்லிகை மலர் ஓவியமாம்!

அரிமா வேட்டையினைச் சித்தரிக்கும்
அரிய கலை நுட்பம் திகழ்கின்ற போர்வையுடன்,
அன்னத்தின் இறகெடுத்து செய்திட்ட
அணை, தலையணை, சாயணை அனைத்தும் கொண்ட
பஞ்சணை! ஆனால்

"அணை'' என்று சொல்லத்தான் அவனில்லை ; அதனாலே
அணையுடைத்துப் பெருகிற்று அரசியாரின் துன்ப வெள்ளம்!

அடி வருடினர் செவிலியர்கள்
"அம்மையே உறங்குக'' எனக் கூறி!

"அடி போடி வேலையில்லை உங்களுக்கு'' – என
அலறினாள் அரசியவள் மிகச் சீறி!

அங்கிருந்த வானவெளிச் சித்திரத்தில்
அருகருகே சந்திரனும் ரோகிணியும்

அகலாமல் இருத்தல் கண்டு
அப்படி நான் நற்பேறு பெற்றேனில்லை

இப்படி ஏன் நலிகின்றேன் வீணேயென்று ;
நீள் இமைகளிலே எட்டிப் பார்க்கும்

நீர்த்துளியை விரல் கொண்டே அவள்
வழிந்தெறிந்தாள் எனினும்; கவலைதனை

அழித்தெழுத முடியாமல் அல்லற்பட்டாள்!
இவ்விதம்,

மதுரையின் மாளிகையில் அரசியார்
மது சுமந்து வண்டுக்கெனக் காத்திருக்கும்

மலர்க்கொடியாய்த் தவிக்கும்போது ;
நெடுஞ்செழிய பாண்டியனின் நிலை என்ன ?

"நெடுநல் வாடை''யிலே காண வாரீர்!

காதலொன்றும் பாண்டியனின்
கடமை உணர்வுக்குத் தடையாயில்லை!

கோப்பெருந்தேவியின் நினைவாலே – அவன்
கொண்ட குறிக்கோள் தவறவில்லை!

வாடைக்காற்று அவன் பாசறைக்கும் வந்ததுண்டு! அதனாலே
அவன்;
வாளேந்தும் போர் முகத்தை மறந்துவிட்டு,

வளையலேந்தும் கரம் நாடி ஓடவில்லை!
இங்கு;

பாண்டியன் நள்ளிரவில் புறப்பட்டான் ; எதற்காக ?
பஞ்சணையில் பரதவிக்கும் பத்தினியைப் பார்ப்பதற்கா ? இல்லை!
இல்லை!

குன்றும் நடுங்குகின்ற கூதிர்காலத்தில்
வடக்கிருந்து வீசுகின்ற குளிர் காற்றால்

தெற்கு நோக்கிச் சுடர் சாயும் தீவட்டி எனினும்
வடக்கிலோர் பாசறையில் இருக்கும் மன்னன்

வாஞ்சைமிகு பாண்டிமாதேவிக்காகத் தெற்குத் திசை
திரும்பவில்லை!

வாடிக்கைப் பணியினை ஆற்றுதற்கு
வாளேந்தும் மறவர் சுடரேந்தி சூழ்ந்து வர

இடத்தோளில் இருந்து நழுவி விழும் மேலாடைதனை
இடப்புறக் கையால் தூக்கி அணைத்தவாறு,

வலியதோர் வாள்வீரன் தோளில் – தன்
வலக்கையினைத் தோழமையுடன் போட்டுக் கொண்டு,

மழைத்துளிகள் வீழ்கின்ற நள்ளிரவில்
மாவீரர் பலர், காயமுற்றுப் படுத்திருக்கும்

பகுதியெலாம் சென்று பார்த்தான் – அவரைப்
பரிவுடனே நலம் கேட்டு நன்றி கூறி அரவணைத்தான்!

பகல் போரில் பகைவர்களின் படையழித்து விரட்டும்போது
பழுதுபட்ட கால், கை, உடல்களுடன் படுகின்ற துயரமெலாம்

பறந்தனவாம்; தம் தலைவன் பனிப்பார்வை பட்டதாலே!
காதலனைத் தேடிப் பேரரசி கலங்குகின்றாள் ; அவனோ,

கடமையினை ஆற்றுதற்குக்
கால்கடுக்கச் சுற்றுகின்றான் ; பாசறையை!

அகமென்றும் புறமென்றும் வாழ்க்கையினை
அழகாக வகுத்துக் கொண்டு

அன்று தொட்டு வாழ்ந்து வரும் இனம்
அருமைமிகு நம் தமிழ் இனம்தான் என்பதற்கு

ஆதாரம் வேண்டுமெனில்
அடடாவோ! "நெடுநல்வாடை" ஒன்று போதாதா?

★ ★ ★

(தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சிறப்பித்து சங்கப்புலவர் நக்கீரர் இயற்றிய "நெடுநல்வாடை" எனும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டது, இது!)

பற்று கடந்தால்,
பற்றி எரியும் வெறியே!

கடல் கொண்ட முதல் தமிழ்ச் சங்கம் மதுரையில்
நடத்தியவர்கள் பாண்டிய மன்னர்களாம்

காய்சின வழுதி தொடங்கி, கடுங்கோன் ஈறாக
ஆய்வுரையாளர் எண்பத் தொன்பதின்மர் என்பார்!

முதல் சங்கமும், சங்கமிருந்த தென் மதுரையும்
மூழ்கி விட்டக் காரணத்தால் இரண்டாம் சங்கமெனும்
இடைச் சங்கத்தை வெண்டேர்ச் செழியன் முதல்
முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர்

தொடங்கி நடத்தினர்; கவாடபுரத்தில்; தொடர் அதிர்ச்சியாக
கடற்கோள்; கவாடபுரத்தையும் விழுங்கிவிடவே; அப்போது

அந்தப் பெரும் அழிவிலிருந்து மீண்டும் பிறந்தது போல
பாண்டியன் முடத்திருமாறன் உயிர் பிழைத்தான்!

கடற்கோளின் கடுந் தாக்குதலில் காலிழந்து முடமான மன்னவனை
முடத்திருமாறன் என்றே சங்கத்துச் சான்றோர்களும்
ஆன்றோர்களும்

சரித்திரமும் கூட அழைக்கத் தொடங்கியது அன்போடு, மிகப்
பண்போடு!
நிலந்தரு பாண்டியனுக்கு நிலமும் கடலும் தந்த பரிசன்றோ
அந்தப் பட்டம்

சங்க காலப் பாண்டியருள் முடத்திருமாறனுக்கு அடுத்தவன்
பல வேள்விகளை நடத்திய முதுகுடுமிப் பெருவழுதியாவான்

“பல்யாகசாலை’’ எனும் அடைமொழி பெற்று, ஆரிய நாகரீகம்
பல நூற்றாண்டுகட்கு முன்பே படையெடுத்து விட்டமைக்கு
சான்றாம் அவன்!

முதுகுடுமி முடிந்து போட்டுக் கொண்டே யாகசாலைகளில்
அசுவ மேதம், இராஜசூயம் வேள்விகளைச் செய்த மன்னனை
காரிகிழார்; நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார் – எனும்
கவிஞர் மூவர் வாழ்த்திப் பாடியுள்ளார் என்பது வரலாறு.

காரி கிழார்; தொண்டை நாட்டில் காரி எனும் ஊரினர் ;
இப்போது ‘இராமகிரி’ என அழைக்கப்படும் இடமாம்!

நெடிய இமை கொண்டதால் நெட்டிமையார் என்றழைக்கப்பட்ட
கவிஞரும் ;
நெடும் பல்லியத்தனாரும் காரணப் பெயர்களே; கலை பல கற்று

இசை முழங்கும் வல்லவர் என்பதால் ; இவர் இப்பெயர்
பெற்றாராம் –
இவர்கள் அந்த முதுகுடுமிப் பெருவழுதியை நோக்கி,

“ உன் புகழ் வடக்கே பனி மூடிய இமயமலை தாண்டியும்
தென் திசையில் குமரியாறு கடந்தும் –

கீழ்த் திசையில் சகரர் தோண்டிய சாகரம் மீறியும் –
மேல் திசையில் பழங்கடலுக்கு மேற்கிலும்; உன் ஆட்சி,

மேம்படுவதாக எனவும் வாழ்த்துகின்றனர் –
மேலும் அவர்கள் கடற் படை கொண்டவர்கள் என்றும்
போற்றுகின்றனர்’’

அவைப் புலவர்கள் பொழிந்த வாழ்த்தினையும்
அவற்றில் பொதிந்திருந்த “நின் முடி நான்கு வேதங்கட்கும்
உரிய’’

எனும் வார்த்தைகளையும் கண்டு
அய்யம்பெருமாள் கோனார் ;

“அவ்வரசர் காலத்தே வைதீகம் பரவி விட்டது என அறியப்படும்’’
என்று

அறுதியிட்டுக் கூறியுமுள்ளார்!

முதுகுடுமிப் பெருவழுதி ஒரு போரினை முடித்து
வெற்றி கண்ட பிறகு ; எவ்வாறு வெறி கொண்டு

பகைவர் நாட்டைப் பாழ்படுத்துவான் என்பதை
'நெட்டிமையார்' பாடக் கேட்போம்.

"குடை நிழலில் குஞ்சரம் ஊர்ந்திடும் குடுமியே!
படை கொண்டு நீ பிறர் மண்ணைக் கவர்ந்த பின்னர்,

அம்மண்ணை அவரிடமிருந்து பறித்து, உன் நாட்டுப்
பாணர்கள் பொற்றாமரை சூடவும் – யானை கட்டி ஓட்டும்

தேர்களைச் செலுத்தவும்
பயன்படுத்துவது நியாயமாகுமா?"

எனக் கேட்டுப் பாடலைத் தொடருகிறார்!

"தேர்கள் ஓடியதால் குழிகள் தோன்றிய தெருவில்
ஏர் பூட்டி உழுவதற்குக் கழுதைகளைக் கட்டி ;

எதிரிகளின் எழில்மிகு மணி மாடங்களை
எதற்கும் பயன்படாது பாழ்படுத்தி விட்டாய்!

புள்ளினங்கள் ஒலிக்கும் அவர்தம் விளை நிலங்களில்
புரவிகளின் குளம்படிகள் ஒலித்திடச் செய்து விட்டாய்!

பரந்த பாதமும், பயங்கரத் தந்தமும் படைத்த
பகைவர்தம் யானைகளை களம் விட்டு குளம் வீழச் செய்து
விட்டாய்!"

பாடிய புலவர்களும்,
பாடப்பட்ட மன்னர்களும்

சைவ சமயப் பற்றுடையார் என ஒரு புறம் ;
வரலாற்றுக் குறிப்பும் வரைந்து விட்டு –

பகைவர்களை அவர்கள் பழி வாங்க கையாண்ட
பல்வேறு கொடுமைகளையும் எண்ணிப்பார்த்தால் ;

மண் பற்றையும் மதப் பற்றையும் கடந்து
மண் வெறியும், மத வெறியும் கொண்டோர் ;

மத நல்லிணக்கம் விரும்பாத
மனித நேயமற்றோரே ஆவர் என்பது,

மலையின் மேலிட்ட விளக்காக
ஒளிர்வது உணரலாம்!

★ ★ ★

மற்றுமொரு பாண்டியன் மதிவாணன் எனும் பெயரில்
பற்று மிகக் கொண்டிருந்தான் நாடகத் தமிழ் மீது என்பது ;

அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரைப் பாயிரம்
வாயிலாக அறியும் வாய்ப்பு கிடைத்துள்ளது!

மதிவாணன் ; பாண்டிய மன்னரில் ஒருவன்; அவன்
கடைச் சங்கம் நிறுவியோர் வரிசையில் உள்ளவன்.

தமிழ்ப் புவி மெச்சக் கவியரங்கம் ஏறியுள்ளான் –
அமிழ்தத் தமிழ் வெண்பா, நூற்பாக்களினால்

மதிவாணனின் நாடகத் தமிழ் பொலிவுற்றுப் புகழ் பெற்றதாம்!
பல்லவ மகேந்திரன் வடமொழியில் நாடகம் தீட்டினான் ; அதற்கும்

பழங்காலத்திலேயே பாண்டியன் மதிவாணன்
அருந்தமிழ் நூல் ஒன்று; நாடகத் தமிழ் என எழுதித்

தமிழன்னைக்குக் கணையாழியைச் சூட்டினான்.
அடியார்க்கு நல்லார் காலம் வரை அக்கணையாழி – தமிழ்

அன்னையின் விரலை விட்டுக் கழலவுமில்லை ;
அதனை யாரும் கழற்றவும் இல்லை.

ஆம்; அக்காலம் வரையில் அந்த நாடகத் தமிழ்
வழக்கில் இருந்ததாக இலக்கிய வரலாறு கூறும்!

உவமை அழகுக்கு உரிய பரிசு என்னவாம்!

போர் புரியப் படைகளுடன் புறப்படும் வேந்தன்
பகைவனது தலைநகரக் கோட்டை அரணை,

முற்றுகையிடுவதற்கு "உழிஞை" எனப்பெயராம்–அரணைப்
பற்றி விடாமல் எதிர்த்து நின்று போரிடுதல் "நொச்சி"யாம்.

எதிரும் புதிருமாக இருபடையும் போரிடும் செயலை "தும்பை"
என்பர்.
எவர் வெற்றி பெறினும் அதனை 'வாகை' எனக் கூறிடுவர்!

மூவேந்தர் காலத்துப் போர்முறையில் – ஒவ்வொரு கட்டத்துக்கும்
பாவேந்தர்கள் இட்டழைத்த பெயர் இவைதான் என்போம்!

பாண்டியன் உக்கிரப் பெருவழுதி யெனும் ஒரு மன்னன் ;
'காளையார் கோயில்' கோட்டைக்கு வாளையுருவிய படை
வீரருடன்

முற்றுகைப் போரிடச் சென்ற நிகழ்ச்சியையும்–அதற்கு
முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதெவ்வாறு என்ற நிலையினையும்

பாண்டியரின் இந்த வரலாற்றுப் பகுதி விளக்குதல் காண்போம் ;
பகைவரின் வியப்பா ? பாவலர் வியப்பா ? படித்தபின் உணர்வோம்!

★ ★ ★

சின்ன மருது, பெரிய மருது சிவகெங்கைச் சீமை ஆண்டு ;
சிவந்த மண்ணின் வரலாற்றில் செங்குருதி மலராய்ப் பூத்த

சிங்க நெஞ்ச மாவீரர் இருவருக்கும் சிலைகள் இருக்கின்ற,
காளையார்கோயிலுக்குப் பழங்காலத் தமிழகத்தில் ;

‘கானப்பேர்’ என்று பெயர் உண்டு ; இன்றும் அது,
மானப் போர் தொடுக்கின்ற மறவர் பூமி–அங்கு;

வேங்கை மார்பன் எனும் குறுநில வேல் வேந்தன்
ஓங்கு புகழ் கொண்ட அரண் ஒன்று அமைத்து–அதனை

வெற்றி கொள்ள யாரால் முடியுமென அறைகூவல்
விடுத்திருந்தான்.
அணுவைத் துளைத்து அதற்குள் நுழையவும் கூடும்–
ஆனால் அந்த

அரணுக்குள் நுழைதல் இயலாதென்று
அடலேறு வீரரெல்லாம் திகைத்து நின்றார்!

அப்போது பாண்டி நாட்டை ஆண்ட மன்னன் உக்கிரப் பெருவழுதி!
அரிமா தான் போர்க்களத்தில்!

ஆனைகளைத் தூக்கிப் பந்தாடும் பலமுடையான்!
அவன் வாளுக்குத் தப்பிப் பகைவர் உயிர் வாழ்தல் அரிதரிது!

ஆற்றல் பெருக்குடனே அறிவார்ந்த கலையுள்ளம் கொண்டதாலே ;
அகநானூறு பாடல்களைத் தொகுத்தளித்துப் பெருமை பெற்றான்.

அணையாச் சுடர் விளக்காம் திருக்குறளின் நலம்பாடும்
அரங்கேற்றுவிழா அவன் முன்னிலையில்தான் நடந்ததென்பார்!

ஒளவை ஒருநாள்; அவனும், சோழன் பெருநற்கிள்ளியும்
அவர்களுடன் சேரமான் மாரிவெண்கோவும் வீற்றிருந்த காட்சி
கண்டு,

அருந்தமிழ்க் கவியாரம் தொடுத்துச் சூட்டி,
அங்கு மூவேந்தர் ஒற்றுமைக்கு வாழ்த்துரைத்தாள்.

கயற்கொடி கொண்ட மன்னன் உக்கிரப் பெருவழுதி
கயல் விழி மங்கையொருத்திக்குக் காதலனாம் – அந்தக்

காதற்கிழத்தியுடன் ஒருநாள் கட்டிலறைக்
காவியம் படித்தபோது ; அவள்

கடைவிழியோரம் வினாக்குறியைத் தொங்கவிட்டு,
“கண்ணாளா! எனக்கோர் ஐயம் போக்கிடுக” என்றாள்.

“என்ன கண்ணே ; உனக்கு ஐயம் ? அதோ நீந்துகின்ற
அன்னத்தின் தூவி போல் மென்மை உனக்கு

எப்படி வந்ததென்று என்னைக் கேட்கின்றாயா ?–அல்லது
வண்டுகள் கொண்டு வந்து கொட்டாமலே உன் வாயிதழில்

மொண்டு குடிக்கின்றேனே தேன் ; அது
வந்தவிதம் தெரிந்து கொள்ள விரும்புகின்றாயா ?

செந்தாமரையைப் பார்த்துச் செய்யப்பட்டது உன் முகமா ? அல்லது
செல்வமே ! உன் முகம் பார்த்துத் தான் செந்தாமரை உருவானதோ
என்ற அய்யமா ?

செண்டு இரண்டும் தாங்காமல்–குளத்தில்
கெண்டைக்குப் போட்ட தூண்டிலில் நெளிகின்ற புழுப் போல

நெளியும் இடை நிலைக்குமா ? அல்லது
ஒளியுமிழும் உன் தந்தத் தொடைகள் அதனைத் தூக்கி
நிறுத்துமா ?

உன் மனத்தில்
விளைந்த ஐயமெல்லாம் இதுதானே ?’’ எனக் கேட்ட
வழுதியின்முன் ;

வளைந்த கதிர்போல தலை நாணிக் கொண்டு அவள் ;
“என் மீது கவிதையெழுதிப் பரிசு பெறக் கேள்வி எழுப்பவில்லை
நான் !

“எயில்’’ என்றால் இன்பத் தமிழில் பொருள் என்ன சொல்லுங்கள்’’
என்றாள் !
“அட, மட மயிலே ! இது தெரியாதா ? அயலார் படை தடுக்க ;

அரண் கட்டுகின்றோமே தலைநகரைச் சுற்றி –
அதற்குப் பெயர்தான் “எயில்’’ என்றான் மன்னன் !

“எனக்கும் தெரியும் அது; ஆனாலும் ஒன்று !
எவராலும் உடைக்க முடியாத “எயில்’’ ஒன்று இருக்கிறதாம் ;
அதனை

இவராலும் நெருங்கொணாது என ஒரு வேந்தன்,
இறுமாப்பு துள்ளப் பேசுவதை அறியீரோ?'' எனக் கேட்டு

''இவராலும்'' என்ற போது ; வழுதியைச்
சுட்டிக்காட்டிக் கட்டிக் கொண்டாள்!

''காதுவழி எனக்கும் எட்டியது அச்செய்தி
கானப் பேர் எனும் நகரில் கட்டியதாம் அந்த அரண்!–நமது

அவைப் புலவர் அய்யூர் மூலங்கிழார் அது குறித்து
அரியதோர் வர்ணனையே செய்துள்ளார்!

அதை நான் உனக்குச் சொல்லுகின்றேன் கேள் ;
அரண்களின் வரிசையில் அதற்கு முதலிடமே பொருந்தும்!

நிலத்தின் ஆழத்தையும் கடந்த நெடியதோர் அகழியும்,
நீலவானை நிமிர்ந்து தொடுகின்ற நிலையில் உயர்மதிலும்,
அவ்வானில்

நிறைந்து கிடக்கும் விண்மீன்கள் போன்று
விரைந்து செயலாற்றும் ஏவறை உச்சியும்,

கதிரவனின் ஒளிபுகவும் இடமின்றி மரம் செறிந்த காவற்காடும்,
கணக்கிலாச் சிறுசிறு துணை அரண்களும் சூழ்ந்ததே

களிறுகள் ஆயிரம் முட்டினும் அசைந்திடாத கானப்பேர் எயில்!
அதனை நம் புலவர் ;

கவித் தமிழால் கூறக் கேட்டு நான் பல முறையும்
களிப்பற்றுருக்கின்றேன்'' என்றான் மன்னன்!

முற்றுகையிட்டு எதிர்ப்பை மீறி அரணைச்
சுற்றியுள்ள அகழியில் இறங்கி விட்டால்

மதில் மேலிருந்து கவண் கற்கள் அம்பு
மழை பொழியும்–அதனையும் கடந்து விட்டால் ;

காய்ச்சிய எண்ணெய் ஈயக் குழம்பு
கடகடவெனக் கீழ் நோக்கி வரும்!

எல்லாவற்றையும் சமாளித்து அரண் உச்சி
ஏறும்போது ஏணிகளை நொறுக்கி விடுவர்.

ஏறிய பிறகும் உலோகப் பறவை இயந்திர அலகுகளால்
உச்சந் தலை குத்தப்படும்–

அவையனைத்துக்கும் தப்பித்தான்
அரணுக்கு அடுத்த பக்கம் கோட்டைக்குள் இறங்கவேண்டும்.

‘பாண்டியர்க்கு நெடுந்தூரம் இருக்கின்ற பகையெல்லாம்
தெரிகிறது ;
கூண்டிலிட்ட புலி போல எதிரிகளைக் கொண்டு வருகின்றீர் ;
ஆயினும்

பக்கத்தில் கானப்பேர் எனும் நகரில் அரண் அமைத்து
படை கொண்டு எவராலும் நெருங்க முடியாதென்று

உடைவாளை ஓங்கிக் கொண்டு
ஊர் அதிர ஒலிக்கின்றான், வேங்கை மார்பன்!

நமது வீரத்தை மறைமுகமாய்ப் பழித்த பின்னும்
நமக்கென்ன என்றிருத்தல் நாணத்தகும் செயலன்றோ?
–என் இதய

ஆழத்தின் அடியிற் கிடந்த பல நாள்
அய்யத்தை இன்றிழுத்துப் போட்டுவிட்டேன் ; மதங் கொண்ட

வேழத்தைக் கூட எதிர்த்து மத்தகத்தைப் பிளந்தெறியும்
மன்னருக்கு ;
வேங்கைமார்பன் கட்டியுள்ள மதில் சுவரென்ன ; விந்திய மலைத்
தொடரா? அவன்

தோண்டியுள்ள அகழியோர் ஆழக் கடலாயினும் ; என்
பாண்டியர்க்குத் தாண்டும் தொலைவு தானே!

பின் எதற்காக

அறைகூவல் விடுக்கின்ற வேங்கை மார்பன்
ஆணவங் கண்டும் அடங்கிக் கிடக்க வேண்டும்?

அரசர் இந்த அய்யத்தைப் போக்கிடுக– அதன் பிறகு
சரசமாடிடலாம்'' என ஊடினாள்! – பாண்டியனோ,

எட்டிச் செல்ல முயன்றவளைக்
கட்டியணைத்துக் கால்பின்னி நெய்தவாறு,

"காலை மலரட்டும் கானப் பேர் எயில் நோக்கிக்
காலாட் களிறு புரவியுடன் தேர்ப்படை புறப்படக்

கட்டளையிடுகின்றேன் ; கவலையை விடு! இப்போது தடுக்கின்ற
கையினை எடு'' என்றான்– எடுத்து விட்டாள்!

கண்ணிமைக்கும் பொழுதுக்குள் ஊடல் பறந்தது–
கதிர் விரியும் நேரம் வரை கூடல் தொடர்ந்தது!

மறுநாள்

வாக்குறுதி தந்தவாறு பாண்டிமாதேவியின்
நோக்கு நிறைவேறக் கிளம்பியது படை வரிசை!

கானப்பேர் எயில் என்னும் காவல்நிறை அரணை மோதி,
கடுமைப் போர் நடத்திப் பின்னர் முற்றுகையை முடித்துவிட்டான்.

உக்கிரப் பெருவழுதியின் உறுதிமிகு தாக்குதலால்
உருக்குலைந்து போயிற்று வேங்கை மார்பன் கோட்டைக் காவல்!

நெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வைத்த அரசிக்கு,
வெற்றிச் சேதி சொல்வதற்குப் பாண்டி மன்னன் திரும்பி வந்தான்.

குத்துண்டு புண்பட்ட கோவேந்தன் மார்பகத்தில்
ஒத்தடங்கள் ஓய்வின்றிக் கொடுத்திட்டாள் ; உடல் மேட்டால்!

ரத்தம் கசிந்துருகும் விழுப்புண்கள் எல்லாம்– அவள்
முத்தங்கள் பெற்று முழுமையாக ஆறினவே!

★ ★ ★

சில நாள் சென்று
அய்யூர் மூலங்கிழார் பாண்டியன் அவைக்கு வந்தார்.

அரசே! மதியாத பகைவரெல்லாம் உமை மதித்துப் புகழ்கின்ற
பெருமை என்னே!
களம் சென்றால் வெற்றியன்றி வேறொன்று அறியாத வேந்தே!
இன்று முதல் உம்மை ;

“கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி” என
காவியங்கள் பாடட்டும்! கவியரங்கம் புகழட்டும்!

கதிர் உள்ளளவும் அப்பெயரே நிலைக்கட்டும்”
எனப் புகன்றார்.

“நன்றி புலவரே!” எனப் பணிந்த வேந்தன் ; அவரைப் பார்த்து
இப்போரில்
குன்றிவிட்ட வேங்கை மார்பன், கோபக் கனல் உமிழ

கானப்பேர் எயிலை மீட்பதற்கு மீண்டும்
களம் அமைக்கப் போகின்றானா ? எனக் கேட்டான்.

அதற்கு அய்யூர் மூலங்கிழார் சொன்ன பதில்
அரியதோர் உவமையினை அன்னைத் தமிழுக்கு வழங்கியது!

அஃதென்ன ?

உலைத் தீயில் கொல்லன் காய்ச்சிடும் இரும்பில்
ஒரு துளி நீர் பட்டால் அந்நீரை மீட்டிடல் முடியுமா ?
(அவ்வாறே)
உக்கிரப் பெருவழுதி வென்று விட்ட கானப்பேர் எயிலும்
உலைக்களத்து இரும்பு உறிஞ்சிய நீர்த்துளியாய் ஆனது என்று

உமது பெருமையைப் பேசி– வேங்கை மார்பன்
உளம் நொந்து நிற்கின்றான் என்றார்! – அந்தத்
தங்கப் புலவர் தந்த உவமை அழகுக்குத்
தக்க பரிசு என்ன தருவதென்று புரியாமல்

தவித்திருப்பான் பாண்டியன் என்கின்றேன் நான் ;
தவறுண்டா என் கருத்தில் ?

தமிழின் சுவை அறிந்தோரே! கூறிடுவீர்!

பகைவாள் முனை மழுங்க;
நாள் எல்லாம் உழைப்போம்!

ஒளி மிகு புகழுடன் ஒப்பற்றதோர் ஆட்சி
நடத்தியவன் முதலாம் குலோத்துங்கன் – எனும்

முத்திரையை வரலாற்றில் பெற்ற மன்னவனாக
சீன நாட்டுடனும் நட்பு கொண்டு, நாடாண்டு

கி.பி. 1077இல் 72 பேர் கொண்ட தூதுக்குழுவை
சீனப் பேரரசுக்கு அனுப்பிச் சிறப்புற்றவன் என்றும்,

மாமன்னர்களாகவும் மாவீரர்களாகவும் இருந்த
கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன் எனும்

மூவேந்தர்களின் அறிவுக்கும் திறனுக்கும் வீரத்துக்கும்
முற்றிலும் நிகராக ஆற்றல் நிறை ஆட்சியினை

நடத்தினான் என்பதை விட ஒரு படி மிஞ்சியும்
நிர்வாகத் திறன் கொண்டவன் என்பதை

நிரூபிக்குமளவுக்கு நில அளவை முறை,
சுங்கம் தவிர்த்த ஆணை போன்ற மக்கள் நலத்

திட்டங்களில் ஆர்வமுடையனாகவும் விளங்கி
தீராதி தீரனாகத் திகழ்ந்த குலோத்துங்கன் ;

சோழப் பேரரசை செழிக்கச் செய்த பின்
சோடையாக ஓர் அரசு அமைந்தது –

இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மற்றும்
மூன்றாம் இராசேந்திரன் என ஏழு பேர் சோழ மன்னர்
ஆண்டபின்னர் ;

எழுவரில் மூன்றாம் இராசராசனே ஆட்சியில் சோடையாகி ;
சோழப் பேரரசு வீழ்வதற்குக் காரணமானான் என முடிகிறது அந்த
வரலாறு !

இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சியிலேயே 1132இல்
பட்டத்துக்கு வந்த பாண்டிய மன்னன் மாறவர்ம சீவல்லபன்,
திருவாங்கூரையும் வளைத்து, பாண்டியப் பேரரசுக்கு, வித்திட்டான்.
பாண்டியப் பேரரசின் முடிவும் பதினான்காம் நூற்றாண்டிலேயே
வந்துற்றதாம்

மூன்றாம் இராசராசனே சோழர்களில் வலிமையற்றவன் என்பதை
முன்னரே குறிப்பு காட்டியிருப்பதால் ;

மாவீரனாம் மானவர்மன் சுந்தரபாண்டியன் 1219லேயே
தாவினான் தஞ்சைப் பக்கம் படை கொண்டு – பாண்டியனின்

தாக்குதலால் பதறிப் போன மூன்றாம் இராசராசன் ;
தீக்கு இரையாக்கித் தஞ்சை உறையூரைத் தரைமட்டமாக்கி விட்டு,

தலைமறைவாக ஓடி ஒளிந்து கொண்டான் ; தப்பிய வரையில்
போதுமென !
தஞ்சை அபிடேக மண்டபத்தில் பாண்டியன் வெற்றி விழா
நடத்திக் கொண்டான் !

பொன்னமராவதியெனத் தற்போது வழங்குகிற நன்னகரில்
மன்னன் சுந்தரபாண்டியன் ஓய்வு கொண்டுள்ளான் எனும் செய்தி ;

செவியில் விழுந்ததும் சோழன் சீறிக் கிளம்பி எதிர்த்துப்
போரிட்டான் என்றில்லாமல்,
புவியாளும் பொறுப்பைப் பிச்சையாகத் தருக என இருகரம்
கூப்பிக் கேட்க ;

பொன்னமராவதிக்குப் புயல் வேகத்தில் ஓடினான் –
என்ன செய்தி ? எதற்கு வந்தீர் ? எனப் பாண்டியன் வினவ ;

பாராண்ட சோழன் குனிந்து பணிந்து
கும்பிட்டு வீழ்ந்து சொன்னான்

பாண்டிய மன்னா ; பார் புகழும் தலைவா!
வேண்டுதல் ஒன்றுண்டு விருப்பத்தை நிறைவேற்றிடுக –

ஈண்டு வந்துளனளே என்னோடு என் மனைவி ;
இருவரும் உம் தாள் வீழ்ந்து கேட்கின்றோம் –
எம்பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருதி இரக்கம் காட்டிடுக –
பிடித்த எம் நாட்டைக் கொடுத்தாலே போதுமானது!

பறித்த சோழர் நிலம் திரும்ப ஒப்படைப்பதே சிறப்பானது – மேலும்,
இதில் இழிவொன்றும் எமக்கில்லை – உமக்கும் இருக்கத்
தேவையில்லை.

தலை வணங்காத் தமிழன் இராசராசனின் வழி வந்த ஒரு மன்னன்
தலை குனிந்து வளைந்து வணங்குதல் கண்டு ;

“தமிழ்த் தாயே; அந்தோ சுயமரியாதை இழந்து விட்ட
சோழ மன்னனை மன்னித்து விடு” என்று சொல்லி

தனக்குத் தானே தன் நெஞ்சில்
சுந்தர பாண்டியன் சூடொன்று வைத்துக் கொண்டான் ;

தன்மானம் பற்றியும், தமிழ்மானம் பற்றியும்
அவன்தான் கவலைப்பட்டான்!

இந்த நிலையே அடுத்தடுத்து தொடர்ந்தும் –
அண்ணன் தம்பி சோதரர்களுக்குள்
மூவேந்தர் முட்டி மோதிக் கொண்டும் –
பிற இனத்தார்க்கு இடம் கொடுத்து –

பின்னடைவைச் சேர்த்திட்டார் – தமிழ் இனத்துக்கு
அதனாலே பேரரசுகளாக இருந்த மூவேந்தர் பூமிகள் ;

சிற்றரசுகளாகி – பின் சின்ன சின்ன அரசுகளாகி
இறுதியில்
சிற்றெறும்பு அரசுகளாயின –

எழுச்சியுற்றிருந்த தமிழக வரலாற்றை
எழுதி எழுதி மகிழ்ச்சியுற்ற எனக்கும்

படித்துப் படித்து உணர்ச்சி பெற்ற உங்களுக்கும்
இனியும் இதனைத் தொடராமல் இருப்பதே நலம் –
நம்மை நாமே எண்ணிப் பார்த்து
நமக்குள் ஒற்றுமையும் உறவும் வலுப்பெற

நாளெல்லாம் உழைப்போம் – பகைவர்
வாளெல்லாம் முனை மழுங்க வெற்றி குவிப்போம்!

(முதல் பாகம் முற்றிற்று)

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

